# தமிழக நாட்டுப்புறக் கலைகள்

முனைவர் ஏ.என். பெருமாள்



உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்

INTERNATIONAL INSTITUTE OF TAMIL STUDIES

# தமிழக நாட்டுப்புறக் கலைகள்

முனைவர் ஏ.என். பெருமாள்

உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்
**International Institute of Tamil Studies**
*IInd Main Road, C.I.T. Campus, T.T.T.I. Post,*
*Chennai - 600 113*

# BIBLIOGRAPHICAL DATA


| | | |
|---|---|---|
| Title of the Book | : | Tamiḻaga Nāṭṭuppuṟak kaḷaigaḷ |
| Author | : | Dr. A.N. Perumal |
| Publisher & © | : | International Institute of Tamil Studies<br>IInd Main Road, C.I.T. Campus<br>T.T.T.I. Post, Chennai - 600 113<br>Phone : 2254 2992 |
| Publication No. | : | 466 |
| Language | : | Tamil |
| Edition | : | Second; First Edition 1980 |
| Year of Publication | : | 2003 |
| Paper Used | : | 18.6 kg TNPL Maplitho |
| Size of the Book | : | 1/8 Demy |
| Printing type Used | : | 10 points |
| No. of Pages | : | 228 [xvi + 196 + 16 (photos)] |
| No. of Copies | : | 1000 |
| Price | : | Rs. 55/- (Rupees Fifty five only) |
| Printing | : | United Bind Graphics<br>101-D, Royapettah High Road<br>Chennai - 600 004 |
| Subject | : | Few thoughts about the different folk-arts of Tamil Nadu |

*இந்நூல் 1981 சனவரித் திங்கள் 4ஆம் நாள், முதல் 10ஆம் நாள் வரை மதுரையில் நடைபெற்ற ஐந்தாவது உலகத் தமிழ் மாநாட்டையொட்டி வெளியிடப்பெற்றது.*

டாக்டர் ச.வே. சுப்பிரமணியன்
மேனாள் இயக்குநர்
உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்

# முகவுரை

உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், 5-வது உலகத் தமிழ் மாநாட்டை ஒட்டித் தமிழர் தொடர்புடைய பல நூல்களை வெளியிடுகின்றது. அதில் ஒரு நூலாக 'தமிழக நாட்டுப்புறக் கலைகள்' என்ற நூல் அமைகின்றது.

டாக்டர் ஏ.என். பெருமாள் அவர்கள் தமிழ் நாடகத் துறையில் வல்லுநர், தமிழக நாட்டுப்புறக் கலைகளை முறையாகப் பகுத்தும் தொகுத்தும், செவ்வைப்படுத்தியும் சிறந்த முறையில் இந்நூலை அமைத்துள்ளார். தமிழரின் பண்பாட்டை உணர்த்துவதற்கு இந்நூல் பெரிதும் துணைபுரியும். சிறப்பாகச் சமூகச் சார்புக் கலைகள், சமயச் சார்புக் கலைகள் ஆகிய இவற்றின் இடையே அமைந்த சிறப்புகளை நுணுகிப் பார்த்துத் தெளிவாகத் தந்துள்ளார். இக்கலைகளைப் பிற நாட்டுத் தொடர்போடும் ஒப்பிட்டுக் கூறியுள்ளமை பாராட்டத்தக்கது. இந்நூல் தமிழ் மக்களுக்குச் சிறந்த விருந்தாக அமையும் என்று நம்புகிறேன்.

இந்நிறுவன செயல்பாடுகள் அனைத்திற்கும் ஊக்கமும் ஆக்கமும் அளித்து வருகின்ற **கல்வி அமைச்சர் மாண்புமிகு செ. அரங்கநாயகம்** அவர்களுக்கு எங்கள் நன்றி என்றும் உரித்தாகுக.

*ச.வே. சுப்பிரமணியன்*

# ஆக்கியோன் உரை

தமிழ்நாடு அரசின் இதழான 'தமிழரசில்' தொடர்ந்து தமிழரின் நாட்டுப்புறக் கலைகள் பற்றி எழுதிவந்ததை அடுத்து அதை ஓர் ஆய்வு நூலாக வெளியிடவேண்டும் என்ற ஆவலை நிறுவன இயக்குநர் டாக்டர் ச.வே. சுப்பிரமணியன் அவர்கள் தெரிவித்தார்கள். அதனை நிறைவேற்றும் துணிவில் இந்நூல் விரைவாக எழுதப்பெற்றுள்ளது.

நாட்டுப்புறத்தில் பிறந்து வளர்ந்த பேற்றினால் நாட்டுப்புறக் கலைகளை நேரில் கண்டுகளிக்கும் வாய்ப்பு பலமுறை கிடைக்கப்பெற்றது. மேலும் பல இடங்களில் நாட்டுப்புற மக்களின் கலை ஆர்வத்தையும் கலை நிகழ்ச்சிகளையும் கண்டு இன்புற வேண்டிய பேறும் வாய்த்தது. அண்மையில் தமிழ்நாடு அரசு மக்கள் தொடர்பு செய்தித் துறையின் அழைப்பின் பேரில் துணை இயக்குநர் திரு. கிருஷ்ணபாரதி அவர்களுடன் மதுரை, நெல்லை, குமரி ஆகிய மாவட்டங்களுக்கு நாட்டுப்புறக் கலைகளைக் கண்டு அவற்றைத் திரைப்படமெடுப்பதற்காகச் செல்லும் நல்வாய்ப்பும் கிடைத்தது. பல்லிடத்து நண்பர்கள் அவர்களிடத்துக் கலைத் தொடர்புச் செய்திகளை அள்ளித் தந்தார்கள்.

தமிழ்நாடு இயல் இசை நாடக மன்றத்தினர் ஏற்பாடு செய்யும் பல மாநில நாட்டுப்புறக் கலை நிகழ்ச்சிகள் ஒப்பீட்டு ஆய்வுக்குப் பெருந்துணையாக அமைந்தன. மேனாட்டு அறிஞரின் நூல்கள் இன்னும் விரிவாகச் சிந்திக்கும் ஆற்றலைத் தந்தன. சென்னை அருங்காட்சியகத்தின் பொன்னாகப் பேணிக் காக்கப்பெற்றுள்ள பழங்காலத்துக் கலைக் கருவிகளும், தொடர்புடைய பொருட்களும் விரிவான ஆய்வுக்கும் தெளிவான கருத்துக்கும் நற்றுணையாக அமைந்தன.

இந்நூலை அச்சுருவாக்கும் பணியில் என்னோடு இரவு பகலென்று பாராது துணைநின்று அச்சுப்படிகளை அயராது படித்துத் திருத்தித் தந்த என் அருமை ஆய்வு மாணவச் செல்வன் திரு. ராஜ் பவுன்துரை அவர்களை மிகவும் அன்புடன் நினைத்து மகிழ்கிறேன். கலைகளின் நிகழ்ச்சிப் படங்களைக் கேட்டவுடன் அருமையாகத் தந்து உதவிய தமிழ்நாடு இயல் இசை நாடக மன்றச் செயலர் திரு. டி.வி. நாராயணசாமி அவர்களையும் தமிழ்நாடு அரசு

மக்கள் தொடர்பு செய்தித்துறை இயக்குநர் திரு. எம். எஸ். கோபால் அவர்களையும் சென்னை அருங்காட்சியக இயக்குநர் திரு. ஹரி நாராயணன் அவர்களையும் நன்றி கலந்த அன்புடன் நினைக்கிறேன்.

அச்சு வாகனம் ஏற்றும் பணியை குறுகிய காலத்தில் மிகச் சிறப்பாகச் செய்து தந்த பிரி இந்தியா அச்சகத்துடன் இணைந்த அருமை நண்பர் திரு. சி. சரவணகுமார் அவர்களைப் பாராட்டுடன் வாழ்த்துகிறேன். இந்நூல் உருவாகப் பல நிலையில் உதவிய அன்பர்கள் அனைவரையும் நன்றியுடன் என் மனத்திரையில் காண்கிறேன்.

"தமிழக நாட்டுப் புறக் கலைகள்" தமிழன்னையின் திருவடிகளுக்குப் படைக்கப்படுகிறது.

அடையாறு
31-12-1980

அன்பன்
ஏ.என். பெருமாள்

முனைவர் சா. கிருட்டினமூர்த்தி
இயக்குநர்
உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்
தரமணி, சென்னை-600 113.

## அணிந்துரை

கலைகள் மனிதனை மகிழ்விப்பன; உணர்வுகளுக்கு ஊக்கம் அளிப்பன. இக்கலைகள் உணர்ச்சிகளை மட்டுமே வெளிப்படுத்துவதோடு அமையாமல் ஒரு சமுதாயத்தின் பண்பாட்டு விளக்கங்களாகவும் அமைகின்றன. மனிதன் பண்படும்போது, அவனது கலை வெளிப்பாட்டிலும் மாற்றம் நிகழ்ந்துகொண்டே இருக்கும். போட்டி, பூசல் நிறைந்த இவ்வுலகில் தன் திறமைகளுக்கேற்றவாறு கலைகளை உருவாக்கும் நிலை மனிதனுக்கு இருந்தது. இத்தகு நாட்டுப்புறக் கலைகள் பல்வேறு உணர்ச்சிகளின் வடிகாலாக அமைந்துள்ளன. உண்மை உணர்ச்சிகளின் வெளியீடாக நாட்டுப்புறக் கலைகள் அமைவதால் அவை மக்களைப் பெரிதும் கவர்ந்து வருவதை நாம் காண முடியும்.

இந்நாட்டுப்புறக் கலைகள் பல்வேறு வடிவங்களில் வெளிப்படுகின்றன. கலையின் தோற்றம், அதனை வெளிப்படுத்துவோர், அதனை வெளிப்படுத்தப் பயன்படும் பொருள்கள் போன்ற பல காரணங்களைக் கொண்டு கலைகளை வகைப்படுத்திக் காட்டுவர். இவை சமூகச் சார்பு கலைகளாகவும், வழிபாட்டுக் கலைகளாகவும், தெய்வமேறிய கலைகளாகவும், தொன்ம விளக்கக் கலைகளாகவும் , நாடக அமைப்புக் கலைகளாகவும் பல்வேறு வகையாக அமைந்துள்ளதை இந்நூலாசிரியர் தெளிவுபட எடுத்துக் கூறியிருப்பது இந்நூலிற்குச் சிறப்புச் சேர்ப்பதாகும்.

நம்முடைய பண்டைக் கலைகள் போற்றப்பட வேண்டும், பாதுகாக்கப்பட வேண்டும் என்பதில் அனைவரும் ஆர்வம் காட்டிவருகின்றனர். நம்முடைய கலைகளைப் பாதுகாப்பதால் நாம் நம்முடைய பண்பாட்டையும் பாதுகாக்கிறோம். . பண்பாட்டு விளக்கக் கருவூலங்களாக அமையும் நாட்டுப்புறக் கலைஞர்கள் தங்களுடைய வாழ்வில்

வறுமை நிலைக்கே தள்ளப்படு கின்றனர். இதனால் அரசு நாட்டுப்புறக் கலைஞர்களுக்குப் பல்வேறு சலுகைகளைச் செய்து வருகின்றது. எனவே, நாம், நம்முடைய பழம் பெருமையை மீண்டும் நிலைநிறுத்தவும், மற்றவர்களுக்கு எடுத்துக்கூறவும் இக்கலைகளுக்கும், இக் கலைஞர்களுக்கும் ஆதரவு நல்க வேண்டிய நிலையில் இன்று உள்ளோம்.

தமிழர்களின் பண்பாட்டுக் கூறுகளைப் பாதுகாக்கும் நிலையிலும், அவற்றைப் போற்றும் நிலையிலும் தன்னுடைய நோக்கங்களை அமைத்துக்கொண்டுள்ள உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், இந்நூலின் தேவை கருதி, இதனை மறுபதிப்பாக வெளியிட முன்வந்தது. இதற்கு இசைவு அளித்த பதிப்புக் குழுவினர்க்கு என் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்நிறுவன வளர்ச்சிக்கு ஆக்கமும், ஊக்கமும் தந்து வருகின்ற நிறுவனத் தலைவர் மாண்புமிகு கல்வியமைச்சர் திருமிகு செ. செம்மலை அவர்களுக்கும், தமிழ் வளர்ச்சி பண்பாடு-மற்றும் அறநிலையத்துறைச் செயலாளர் திருமிகு பு.ஏ. இராமையா, இ.ஆ.ப., அவர்களுக்கும், சிறப்புச் செயலாளர் திருமிகு தா. சந்திரசேகரன் இ.ஆ.ப., அவர்களுக்கும் என் நன்றியறிதலைப் புலப்படுத்திக் கொள்கிறேன்.

இந்நூலினை அழகுற அச்சிட்டுத்தந்த யுனைடெட் பைண்டிங் கிராபிக்ஸ் அச்சகத்தார்க்கு நன்றி.

சென்னை
நாள்: 31-10-03

இயக்குநர்

# Folk-Arts of Tamilnadu

Art is the happy offspring of the overflowing emotional faculties of man. The human disciplines such as dance, music and drama are the aesthetic representations of the intuitive urges of the "unacknowledged legislators" of the destiny of mankind. They are the "emotions recollected in tranquility" Creations become artistic, as distinguished from mechanestic when they are the spontaneous outbursts of the visionaries, prophets of human life. Those art forms in which the *live* man sings and dances and weeps to his 'heartfulness', become the shaping forces of his wholesome life as well as the 'play' of his day-to-day existence.

Emotion is common to all but its artistic representation is very rare, found only in a chosen few who are capable and talented to let out feelings copiously under certain systems which can appeal to the hearts of men. The changing time affect not only the worldly modes of man but that of arts also. What is in the beginning is only the root but now the developed forms are canopied with green foliage contused and bruised well and trimmed attractively to suit the taste of the people.

The developing stages of art may be noted in three forms as primitive art, folk-art and classical art. The free expression of man's emotions is found in primitive art which is forceful and mostly ferocious and fear inspiring. It is an uncontrolled and spontaneous expression ventilated without any stipulated rule or regulation. The swelled emotions burst out and they

find power pression in some forms of art. The aborigines and primitives give life to such arts in their seclusive abodes.

Folk-arts are milder and more refined than the wild and rough types of primitive arts. But an enquiring mind would find the embryo of every art in the emotional reactions and artistic styles of the primitives. The growth of mind and the changing conditions of life have brought forth modulations and refineness in art forms and in their mode of presentation. The source remains the same in most cases. Man fears the natural calamities like wild fire, thunder, valcano, whirl wind, epidemics etc. In his unconscious desire, he tries to satisfy them through certain magico-rituals and to purify himself from his own sins by ablution.

Man invites troubles in mind by his hallucination of evil spirits and in order to propitiate them he conducts various ceremonies which are celebrated with magical rites. In such functions man resorts to different kinds of arts in his anxiety to escape from difficulties and troubles. Naturally in such situations his emotional reactions would not be normal and ordinary. The prevailing condition of the situations saturated with frightful thoughts and anxious insights would give way to arts with dreadful reactions. Such harsh treatments in the primitive arts are made mild in folk arts. Man earns more knowledge in passing time and makes his arts polished and pleasant. But the aims of the primitive arts remain int act with most of the folk arts. The educated and the civilized people want more developments and so ordain rules and regulations for art becomes classical and urbanized.

The rural population patronized folk arts in which it finds real life and vigour. The whole world allows them to live long in villages to make the people live long in happiness. Tamilnadu is a repertory of folk arts. Every village is a nursery of such arts but different temples grow

different seedlings. Tiraupatiyammen temple patronizes Terukkuttu, reading of paratam etc whereas cutalaimatan temple feeds kaniyan Attam, Villuppattu etc. The temple of Murukan̲ invites kāvaṭi Aṭṭam and the Māriyamman̲ temple needs karaka Aṭṭam. Everywhere art pleases the people and draws them to assemble in thousands.

Folk arts give pleasure for both the artists and the attendents. What the artists want to reveal would reach the people without fail. They are received with great appeal. The mutual understanding between the artist and the people is unquestionable and so the acceptance of the art is infallible. Nothing seems strange but everything appears artistic and attractive. Some of the imaginations are illusionary. Falsehood prevails and fantastic ideas leap but all are accepted with consious concordance. Anything grotesque and ludicrous in the folkarts is nothing to find fault with but something to be relished and enjoyed. There is nothing to curtail the free-play, of the folk-artist and there is nothing to prevent the free enjoyment of the folk audience. So everything is free and fair in the folk-arts. Real entertainment is the only criterion and real enjoyment is the only residuary value of the folk-arts.

Social and religious themes are categorical in classifying them into two which may further be subdivided according to their form and function. If any one of the arts wants to instruct the folks, their services are accepted with greater pleasure. The effect of instruction can be seen as it reverberates in many tounges. If not it has to be taken as thrown out into oblivion. Sometimes obscene elements occupy the scene of action which also would be accepted without any show of obnoxiousness.

Religion is given greater importance than anything else. The people ceremoniously conduct religious festivals and most of the folk-arts form part and parcel

of such functions. They fear to break the observances of religion for sake of anything else including their arts. The puranic and epic stories are respected and the characters in them are honoured as godsly. When those characters are exibited in folk-arts they would be allowed to maintain their divine status or else the artist would be taken to task by the people.

The artists are expected to observe strict penance before doing the performance. The people are traditional in considering the arts as something sacred and 'Polluted' persons should not perform them. Since most of the arts are to be performed in sanctifying ceremonies people might have thought that the arts should be dedicated with conscration. The religious belief of the people is the real cause of the sure survival of these folk-arts. In some temples there is no festival without kūttu or Villuppāṭṭu. Without temple festivals the people would not live with peace of mind. It would reveal their firm faith in religion. As long as such a faith continues in the mind of the people folk-arts are sure survive with all their glamour and glory.

The folk arts carry with these the culture of the people as they pass down from generation. They can serve ample materials for any anthropolegist to know about the cultural traits of the people. Moreover striking similarities are found between one set of people and another. It may open the doors for a proper knowledge to read out the facts regarding the solidarity of the human race as a whole. Facts concerning the faiths, beliefs customs, habits, practices and manners can be studied and compared with keen attention to understand the closeness of man's mind and the oneness of human feelings. The relationship between man and man may be observed. Because of various reasons, mostly outward, man has created barriers between him and his brothern which can be easily broken through a thorough study of folk lore in general and folk arts in particular.

The folks belive in the incorporation of divine power in human body. When festivals are conducted in temples some persons dance in trance as it some spirits have entered into their body and mind and certain actions to the wonder of the onlookers. They are reverenced as gods and humble obeisance is paid to them. The folks give great weight to any obiter dictum that passes through the mouth of the man in trance unmindful of the sillyness in it. Such beliefs are found in many places. Marked changes can be noted in such trance actions. Folk-dances have closes connections with such behaviours of the magicians are also to be considered in their relations with folk-arts

Man has created so many arts in correlation with natural happenings and seasonal changes. What he sees in nature he wants to imitate. When nature is bounteous in its yeild to man, he desires to be grateful to its mercy. He shows his gratitude to its mercy by performing various arts which represent the sweet relations between man and nature. They personify nature as the divine power that feeds man.

Man's mind is a bundle of contradictions and a mixture of good and evil. He has to meet both gay and woe in life. Actually he feels more and reveals less. The concealed sockets of his mind contain much more than what he really appears outwardly. The folk arts serve ample opportunities to let his inside out. An enquiring mind can learn a lot which would be of great use for the peaceful progress of humanity as a whole. Intensive research on folk arts has to be made throughout the world to arrive at valid conclusions which certainly would be of great help to mankind in solving many difficult problems which it is now facing with disparities of many kinds.

## பொருளடக்கம்


| | | | பக்கம் |
|---|---|---|---|
| 1. | கலை அறிமுகம் | ... | 1 |
| 2. | வகைப்பாடு | ... | 17 |
| 3. | சமூகச் சார்புக் கலைகள் | ... | 33 |
| 4. | வழிபாட்டுக் கலைகள் | ... | 72 |
| 5. | தெய்வமேறிய கலைகள் | ... | 106 |
| 6. | தொன்ம விளக்கக் கலைகள் | ... | 127 |
| 7, | நாடக அமைப்புக் கலைகள் | ... | 149 |
| 8. | நாட்டுப்புறக் கலைச் சிறப்புகள் | ... | 167 |


### பின்னிணைப்பு


| | | | |
|---|---|---|---|
| I | நாட்டுப்புறக் கலைகள் | ... | 173 |
| II | நாட்டுப்புறத் தெய்வங்கள் | ... | 175 |

# தமிழக நாட்டுப்புறக் கலைகள்

# தமிழக நாட்டுப்புறக் கலைகள்

## கலை அறிமுகம்

### மனிதனின் கலை உணர்வு

இன்பமும் துன்பமும் இணைந்தது மனித வாழ்வு. அவற்றை உணர்ந்து அனுபவிப்பது மனம். மனிதனின் மனத்திலிருந்து பல்வேறு உணர்வுகள் உதித்து எழுகின்றன. உணர்வின் பயனாகப் பலவகைச் செயல்களைச் செய்ய மனிதன் முற்படு கிறான். அவற்றில் நன்மையும் தீமையும் விளைகின்றன. நல்லறிவால் நன்மை செய்ய வேண்டும் என்று விரும்பும் மனிதன் தன்னுடைய நுண்ணறிவால் பிறர் வியந்து பாராட்டும் அருஞ் செயல்களைச் செய்ய முயல்கிறான். ஒவ்வொரு மனிதனும் தன்னிடம் இயற்கையாக அமைந்திருக்கும் திறமையைப் புலப் படுத்திக் காட்ட ஆவல் கொள்கிறான். நுட்பமான அறிவால் திறமையை வெளிப்படுத்தும் மனவுந்தலில் கலைமுகிழ்ப்பு ஏற்படுகிறது. ஒருவர் தன்னுடைய நல்லறிவால் ஓர் அருஞ் செயலை நுட்பமாகவும் திறமையாகவும் செய்து பிறர் வியந்து பாராட்டி அதனை விரும்புமாறு காட்டுவதில் கலைத்தன்மை அமைகிறது. கலைத் தன்மைக்கு அடிப்படையாக வேண்டியது மனிதனின் கலைவுணர்வாகும். கலைஞனும் சுவைஞனும் கலை உணர்வுக்கு ஆட்படுவதில் கலை சிறந்து வளர்கிறது.

உணர்வின் பயனாக மனவுந்தல் ஏற்படுகிறது. அத்தகைய உந்தல் புறச்செயலால் புலப்படுத்தப் பெறுகிறது. இயற்கைக் காட்சிகளை இனிதாகக் காணும் கவிஞன் இலக்கியக் கலையைப் படைக்கிறான். ஓவியன் படங்களை வரைகிறான். ஆடல் வல்லான் இன்பக் களிநடம் புரிகிறான். இசைவல்லான் இனிமையாகப் பாடுகிறான். ஒரே சூழ்நிலையில் தூண்டப்படும் உள்ளுணர்வு மனிதனின் பல்வேறுவகைத் திறமையினால் பல்வேறுபட்ட கலைகளாக உருவாகி வெளியுலகைக் கவர்கிறது. திறமையின் மாற்றத்தால் கலைகள் மாறுபட்டாலும் அடிப்படை

யான உணர்வு முகிழ்ப்பில் ஒன்றாகவே உள்ளது. அதனையே கலை உணர்வு என்று சிறப்பாகக் கூறுகிறோம்.

## அடிப்படை உணர்வுகள்

இயற்கையின் வியப்பான தோன்றலான மனிதன் மற்ற உயிரினங்களிலிருந்து பலவகைகளில் வேறுபட்டு விளங்குகிறான். ஆயினும் சில அடிப்படையான உணர்வுகளில் அனைத்து உயிரினங்கள் போன்றே மாறுபாடின்றிக் காணப்படுகிறான். உடல் வளர்க்க உணவு தேடுதல், இனம் பெருக்க துணையை நாடுதல், உயிரைக் காக்க உடல்வலிமையைக் காட்டல் போன்ற உணர்வுகள் உயிரினங்கள் அனைத்துக்கும் பொதுவானவை. இத்தகைய உணர்வுகளை இயற்கையாக உடைய மனிதன் தன்னுடைய சிறப்பான அறிவாற்றலால் சீரிய முறையில் சிந்தித்துப் பலநிலைகளில் மற்ற உயிரினங்களைக் காட்டிலும் வேறுபட்டு முன்னேறியுள்ளான். இயற்கை உணர்வுகளை மேம்படச் செய்யவும் கட்டுப்படுத்தவும் அவனுடைய அறிவாற்றலால் முடிந்தது. தோன்றிய உணர்வை நெறிப்படுத்தும் வலிமையும் அவனுக்கு இருந்தது. புலன்கள் புறப்பார்வையால் காண்பதைத் தன் அறிவுக் கண்களால் கலையாகக் காணும் அகப்பார்வையும் மனிதனுக்கு இருந்தது. அறிவுடன் மனிதன் என்று தோன்றினானோ அன்றிலிருந்து அவனுக்குக் கலையுணர்வு தோன்றியதாகக் கருதலாம்.

பட்டறிவே (exper.ence) மனித மனத்தை ஒழுங்கு செய்யும் உன்னதக் கருவியாக அமைகிறது. பிறர் சொல்லி அறிவதைக் காட்டிலும் தான் பட்டு அறிவதே மனதில் ஆழமாகப் பதிவதை ஒவ்வொருவரும் தங்களுடைய பட்டறிவின் வாயிலாக நன்கு அறிவர். தொடக்க காலத்திலிருந்தே மனிதவுணர்வு பட்டறிவால் பதப்பட்டும், பட்டை தீட்டப்பட்டும் வந்துள்ளது. அறிவு பெருகப்பெருக மனிதனின் சிந்தனை ஆற்றல் வளர்ந்து கொண்டே வருகிறது. ஆனால் அடிப்படையான இயற்கை உணர்வில் மனிதன் அன்றும் இன்றும் ஒன்றாகவே இருக்கிறான். என்றும் மாறுபடாமலே இருப்பான் என்பதும் உறுதி. இந்த உண்மையான உறுதியிலிருந்து மாறுபடாமல் கலையுணர்வு தோன்றி வளர்வதைக் கண்டு அறிதல் வேண்டும். காலமாற்றத்தாலும் அறிவு வளர்ச்சியாலும் உணர்ச்சிகளில் வெளிப்புலப்பாடு மாற்றமடைந்து தோன்றுகிறது.

காதல் உணர்வு இயற்கையாக அமைந்து இயல்பாகத் தோன்றுவது அதைத் தடுக்கவோ தவிர்க்கவோ இயலாது. இருப்பினும் கட்டுப்படுத்தவும் நெறிப்படுத்தவும் முடியும். முன்னாளைய மனிதனின் காதல் செய்கைகளுக்கும் இன்னாளைய செய்கைகளுக்கும் வியத்தகு வேறுபாடுகள் இருப்பதைக் காணலாம். அறிவுப்பெருக்கும் கால ஒழுங்கும் இத்தகைய மாற்றங்களுக்குக் காரணங்களாக அமைகின்றன. இவ்வாறே அனைத்து உணர்வுகளும் சமுதாயச் சூழ்நிலைக்குத் தக்கவாறு கட்டுப் படுத்தப் பெற்று ஒழுங்கு செய்யப்படுகின்றன. கலையுணர்வும் இத்தகைய விதிக்கு அப்பால்பட்டது அன்று.

தொடக்க கால மனிதன் உணர்ச்சிக் கொந்தளிப்பில் மனம் விரும்பியவாறு செயல்பட்டு தன் உணர்வைக் காட்டியுள்ளான் அன்றைய கால கட்டத்தில் அவனுக்கிருந்த அறிவும் அவன் வாழ்ந்த சூழலும் அவனது கட்டுப்பாடற்ற உணர்ச்சிப் புலிப்பாட்டை ஒப்புக்கொண்டன. வரம்பில்லாத நிலத்தில் காடு மேடாக வளரும் பயிராகப் பண்டை மனிதனின் கலைகள் இருந்திருக்க வேண்டும். அன்று ஆடுவதும் பாடுவதும் காட்டாற்றுப் போக்காகவே அமைந்திருக்கும். தொடக்ககால கலைகளுக்கு இயற்கையான மனவுணர்வே முழுநிலையில் உந்து ஆற்றல் கருவிகளாக அமைந்திருக்க வேண்டும். அவற்றைக் கட்டுப்படுத்தி ஒழுங்காகச் செலுத்துவதற்கு உதவும் விசைகள் ஒவ்வொன்றாகப் பின்னர்தான் பொருத்தப் பெற்றிருக்க வேண்டும். கலைத்திறனும் கலை நுட்பமும் இத்தகைய கலை ஒழுங்குக்கு வழி வகுத்திருக்கும். சுவைப்போரின் மனம் மாற்றங்களை நாடி விரும்பும் போது அவர்களின் எண்ணங்களுக்குத் தக்கவாறு மாற்றங்கள் செய்யப்பட்டிருக்கும்.

மனிதனுக்கு இயற்கையாக அமைந்த கலையுணர்வின் அடிப்படையில் தோன்றிய கலைகள் காலவுணர்வுகளினால் பலவகையான மாற்றங்கள் அடைந்து பட்டறிவால் பயன்பாட்டில் பெருகி நுண்ணறிவால் திறம்பெற்று மக்களுக்கு இன்பத்தைக் கொடுக்கும் அரும்பெருஞ் சாதனைகளாக இன்று பலுகிப் பெருகியுள்ளன. முன்னாளில் ஒன்றாக இருந்த சில கலைகள் இன்று அமைப்பிலும் வெளிப்படுத்தும் முறையிலும் மாற்றங் கொண்டு தொடர்புடைய பல்வேறு கலைகளாக உருவெடுத்து உள்ளத்தையும் அறிய முடியும். பாடிப்பாடி ஆடும் கூத்துக்கலை குறிப்பிட்ட பாடலைப் பொருந்தி நடித்து ஆடும்போது நடனமாகவும் தொடர்புடன் நீளும் கதைப்

பாடலுக்குத் தக்கவாறு நடித்துக் காட்டும்போது நாடகமாகவும் மாறி வளர்ந்துள்ளதைக் காணலாம். முழுக்க முழுக்கப் பாடலாகவே உருவான நாடகம் கால விருப்பை மதித்து உரை நடையில் உயர்வாக வளர்ந்து செழிப்பதை இன்று பார்க்கலாம். தொடர்புடைய கலைகள் குறிப்பிட்ட சில கூறுகளைத் தங்களுக்குள் பரிமாறிப் புதுப்பெயரில் வேறுபட்ட கிளைக் கலைப்படைப்புகளை உருவாக்கியுள்ளதையும் காணலாம். பாடலாக அமைந்த இலக்கியக் கலை இன்று அமைப்பு, வெளியீட்டுமுறை போன்றவற்றில் வேறுபாடுகள் கொண்டு பலவித இலக்கிய வகைகளாகப் பலுகிப் பெருகியுள்ளதைக் காணலாம்.

## கலைகளின் தோற்றம்

கலை உணர்வு மனிதனுக்கு இயல்பாகத் தோன்றும் தன்மைகளில் ஒன்று என்பதைக் கண்டு உணரலாம். மனிதனின் இன்ப துன்ப உணர்வுகள் கலை வேறுபாட்டுக்கு ஒரு சிறந்த காரணமாக அமைகிறது. விளையாட்டு உணர்வு போலச் செய்யும் திறமையும் கலையை வளர்ப்பதற்கு உதவுகின்றன அச்ச உணர்வு பலவிதமான கற்பனைகளுக்கும் நம்பிக்கைகளுக்கும் இடம் வகுத்து அதன் பயனாகச் சில கலைகள் தோன்றி வளர்ந்துள்ளன. இயற்கையுடன் இணைந்து வாழ்ந்த மனிதன் அதன் இயல்புகளைக் கூர்ந்து நோக்கி அவற்றுடன் தன்னுடைய உணர்வுகளைக் கலந்து திறமையாகச் செயல் உருவாக்கம் செய்து சில கலைகளைத் தோற்றுவித்திருக்கிறான். அறிவுத் திறனால் செயலாக்கம் பெற்று கலைகள் சிறப்புடன் வளர்ந்து படர்ந்துள்ளன. சுவைஞனின் ஆவலும் வியப்பு கலந்த பாராட்டும் கலைஞனின் அரிய திறமைகள் பெருமையுடன் வெளிப்படுத்தப் பெறுவதற்கு வழிவகுத்துக் கொடுக்கின்றன. ஊக்கமின்றி உயர்வு இல்லை. உயர்வு இன்றி சிறப்பில்லை கலைகள் உணர்வில் தோன்றி ஊக்கத்தில் வளர்ந்து திறமையில் சிறந்து காலவேகத்தில் கனிந்து இனிய பண்பாட்டுச் செல்வங்களாக நிலைபெறுகின்றன.

## நாட்டுப்புறக் கலைகள்

மனிதனின் இயற்கையான வாழ்வில் இயல்பாகத் தோன்றி விதிமுறை வகுப்பின்றி எளிமையாக வளர்ந்து உண்மையான உணர்ச்சிகளின் உறைவிடமாகப் பாமர மக்களைக் கவர்ந்து களிப்படையச் செய்யும் இனிய கலைகளை நாட்டுப்புறக்

கலைகள் என்று அழைக்கலாம். தொடக்க காலத்தில் மனிதன் இயற்கையுடன் பின்னிப் பிணைந்தே வாழ்ந்து வந்தான். வாழ்வுக்கு வேண்டிய வசதிகள் வாய்ப்பாக அமையும் இடங்களில் குடியமர்ந்து உணவுக்குத் தேவையான தொழில்களைச் செய்து மன நிறைவு பெற்று இன்பப் பொழுதுபோக்காகப் பலவிதமான கலைகளை உருவாக்கி மகிழ்ந்துள்ளான். அவனுடைய களிப்புக்குக் கட்டுப்பாடுகளோ விதிமுறைகளோ கிடையாது. போட்டியும் பூசலும் அதிகம் இருக்க இடமில்லை. மக்கள் நெருக்கம் குறைந்த காலம். தன் திறமைக்குத் தக்கவாறு கலைகளை உருவாக்கும் சூழல் அமைந்திருந்தது. கலையுடன் கலைஞன் ஈடுபட்டு தனக்கும் பிறருக்கும் இன்பம் கொடுத்தான். சிறப்பாக இன்பக் களிப்பு என்ற ஒரே நோக்கத்துடன் நாட்டுப்புறக் கலைகள் தோன்றி வளர்ந்தன.

நாட்டுப்புறக் கலைகள் மனிதனின் உள்ளத்தில் ஊறி எழும் உண்மையான உணர்ச்சிகளின் வடிகால்களாக அமைந்துள்ளன. சுருங்கக் கூறின் இக்கலைகள் மக்களுடைய உணர்ச்சிகளின் உயிரோட்டமான மாற்று உருவங்கள் ஆகும். இன்பம் பொங்கி எழும். துன்பம் துவண்டு பாயும் வீரம் விளங்கிச் சிறக்கும். சினம் கடுகடுத்துத் தோன்றும். அச்சம் நடுநடுங்கிப் பதுங்கும். இழிவரல் அருகியும் நகை பெருகியும் காணப்படும். இத்தனையும் கூடிக் கலந்து மனித மனத்தை உருவகித்துக் காட்டுவது நாட்டுப்புறக் கலைகள். புற நடிப்பை விடவும் உள்ளத் துடிப்பே சிறப்பாகப் புலப்படும்.

உண்மையான உணர்ச்சியின் வெளியீடாக நாட்டுப்புறக் கலைகள் அமைவதினால் அவை மாசற்ற மக்களின் மனதைக் கவர்ந்து காலங்காலமாக வேர்விட்டுத் தழைத்து வளர்ந்துள்ளன. பெரும்பாலான நாட்டுப்புறக் கலைகளை மக்கள் ஈடுபாட்டுடன் சுவைத்து மகிழ்வதினால் மாறும் காலத்தாலும் மயக்கும் நாகரிகத்தாலும் அவற்றை மங்கச் செய்யவோ மறைத்து விடவோ முடியவில்லை. இன்றும் நாட்டுப்புற மக்கள் இத்தகைய பழமையான கலைகளைத் தங்களுடைய வாழ்வியலின் ஒரு பகுதியாக மதித்துப் பாராட்டி உயிர்ப்புடன் வளர்த்து வருகின்றனர். நாகரிகத்தின் தாக்கம் நாட்டுப்புறக் கலைகளை நசுக்கப் பார்த்தாலும் அவற்றை ஆற்றலுடன் தாங்கி கால வெள்ளத்தைக் கடந்து அவை இன்றும் வாழ்ந்து கொண்டிருக்கின்றன. இத்தகைய உறுதியான பிடிப்பில்தான் நாட்டுப்புறக் கலைகளின் உண்மையான உயர்வை உணர முடியும். அங்கங்கே

சில கலைகள் மங்கி மறைந்து விட்டதாகத் தோன்றினாலும் உண்மையில் அவை வேறு கலைகளுடன் இணைந்து மாற்றுருவங்களாக வாழ்ந்து வருவதைக் காணலாம்.

### கலைகளின் வளர்ச்சிப் படிகள்

கலைகளின் வளர்ச்சி நிலையை மூன்று படிகளாகக் காணலாம். தொன்மைக் கலை நிலை (Primitive art) நாட்டுப் புறக் கலைநிலை (Folk art) திருந்திய கலைநிலை (Classical art) ஆகிய படிநிலைகளில் கலைவளர்ச்சி அமைவதை மிகத் தெளிவாகக் கண்டு உணரலாம். பழங்குடி மக்கள், நாட்டுப்புற மக்கள், நாகரிக மக்கள் ஆகியோருடைய கலை இயல்புகளைக் கொண்டு இவற்றை வகையிட முயலலாம். மூன்று விதமாகக் கலைக் கூறுகள் அமைகின்றன. அனைத்தும் அடிப்படை நோக்கத்தில் ஒன்றுபட்டும் நடப்பு முறையில் வேறுபட்டும் தோன்றுகின்றன. உணர்ச்சி உந்தலின் வெளிப்பாடு, இன்பத்தின் முகிழ்ப்பு ஆகிய இருநிலைகளில் அனைத்துக் கலைகளும் எக் காலத்திலும் எந்த இடத்திலும் எவரிடத்திலும் ஒன்றாகவே அமைந்து விளங்குகின்றன. ஆயினும் வெளிப்படுத்தும் முறையிலும் இன்ப நோக்கத்திலும் வேறுபாடுகள் தோன்றுகின்றன. அறிவு வளர்ச்சியால் விதிகளும் கட்டுப்பாடுகளும் தோன்றுகின்றன. விதிகளின் மாற்றத்தால் வெளியீட்டு முறைகளில் மாற்றங்கள் ஏற்படுகின்றன.

சமூக அமைப்பு காலத்துக்குக் காலமும் இடத்துக்கு இடமும் மாறுவதைச் சமூகவியல் விளக்கும். மனித மன வளர்ச்சியை மானிடவியல் கூறும். இயற்கைச் சூழல் இடத்துக்கு இடம் வேறுபடுவதைப் புவியியல் அறிவிக்கும். இவை அனைத்தும் மனித வாழ்வைப் பாதிக்கும் கூறுகளாக உள்ளன. இத்தகைய பாதிப்புகள் கலைவுலகையும் தொட்டு மாற்றமடையச் செய்கின்றன. இயற்கையோடு ஒன்றி வாழும் இயல்புடைய மிகப் பழங்கால மனிதனின் கலையாக்கங்கள் இடத்துக்கு இடம் மாறுபடுவதற்கு இதுவே காரணமாக அமைந்துள்ளது. மணிப்புரி நடனத்தின் ஆடல் முறை அந்த இடத்து இயற்கைச் சூழலை மிகச் சிறப்பாகப் புலப்படுவதை அறிஞர் கண்டு உணர்ந்து விளக்குகின்றனர்.[1]

---

1. Projesh Banerji, The folk-dances of India, Kitabistan, Allahabad, 1959, p. 4.

மணிப்பூர் அடிக்கடி சுழல்காற்று வீசும் மலைப்பாங்கான இடம். காற்று அடிக்கும் போது மரங்களில் மேற்பகுதி வேக மாகச் சுழன்று ஆடும். பல நேரங்களில் மரங்கள் வேரோடு பிடுங்கப்பட்டு கீழே சாயும். இதைக் கண்ட மனிதனின் உள்ளத் தில் இக்காட்சி ஆழமாகப் பதிந்து விடுகிறது. பின்னர் அவனது ஆட்டத்தில் புலப்படுத்தப்படுகிறது. மணிப்புரி நடனத்தின் தொடக்க கட்டத்தில் நடனம் ஆடுபவர் தங்கள் உடலின் மேற் பகுதியை சுழற்றி சுழற்றி வேகமாக ஆடுவர். கையை நீட்டி நீட்டி ஆடுவர். இறுதியில் வேகமாகத் தரையில் சாய்வர். இந்த ஆடலையும் அந்த இடத்து இயற்கைச் சூழலையும் பொருத்திக் காணின் வியப்பான ஒற்றுமை இருப்பதைக் காணலாம். சில இடங்களில் நெல் அறுவடை கால நடனங்கள் நடைபெறு கின்றன. அவற்றில் நெற்பயிர் கதிர் முற்றிக் குனிவதைப் போன்ற சாயலைக் காணலாம்.

தொன்மைக் காலக் கலைகளில் பல இவ்வாறுதான் முதன் முதலில் தோன்றியிருக்க வேண்டும். மனிதன் இயல்பாக அழகுணர்ச்சி உடையவன். அந்த உணர்ச்சியும் கலைகளுக்குத் தூண்டுகோலாக இருந்திருக்க வேண்டும். பழங்குடியினரான லம்பாடிகள் பல வண்ண ஆடைகளைக் கட்டுவதை மிகவும் விரும்புகின்றனர் மேலும் தங்கள் ஆடைகளில் நகைக் கற்கள், மணிகள், சோழிகள், கண்ணாடித் துண்டுகள், தந்த உலோக நகைகள் ஆகியவற்றை அழகுணர்வுடன் இணைத்துள்ளனர். இவர்கள் அன்றிலிருந்து இன்றுவரை நடனம், இசை ஆகிய கலைகளில் மிகுந்த ஆவலும் நல்ல தேர்ச்சியும் உடையவர் களாகக் காணப்படுகின்றனர். ஆனைமலையுள்ள (கோவை மாவட்டம்) காடர்கள் குறிஞ்சி நில இயல்புக்குத் தக்க பண்பாடு களையும் கலைகளையும் கொண்டு விளங்குவதை இன்றும் காணலாம்.

நீலகிரி மலையில் வாழும் தோடர்களும் முன் காலம் தொட்டு அழகுணர்வும் கலை முகிழ்ப்பும் உடையவர்கள் என்பதற்குச் சில அரிய சான்றுகள் கிடைத்துள்ளன. சிவப்புக் களிமண்ணி னாலான (Terracotta) ஒரு பெண்ணின் உருவத்தைக் கொண்டு அவர்களுடைய கலையுணர்வை நன்கு அறியலாம். அந்தப் பெண் ஒரு இருக்கையில் அமர்ந்துள்ளாள். அவளது ஒரு கை தலை யிலும் அடுத்த கை ஏதோ ஓர் செயலிலும் உள்ளதாக உருவம் அமைகிறது[2]. அவள் தன்னை அழகு படுத்துவதாகக் கருதலாம்.

2. நீலகிரி தோடரின் களிமண்ணுரு (Terracotta) சென்னை அருங்காட்சியகத்தில் உள்ளது.

இந்த உருவம் கி. பி. முதலாம் நூற்றாண்டைச் சேர்ந்ததாகக் கருதப்படுகிறது[3]. அவள் ஒரு கண்ணாடியைப் பார்த்துக் கூந்தலை அழகுப்படுத்துவதாகவும் கருதலாம். எப்படியும் அவள் தோன்றிய பழங்குடி அழகுணர்ச்சி உடையது என்பதற்கு ஓர் அருமையான சான்றாக விளங்குவது உறுதி. இந்தப் பழங்குடி மக்கள் கலைகளிலும் நல்ல ஈடுபாட்டுடன் இன்றும் விளங்குகிறார்கள்.

மனித உணர்வுகளையும் எண்ணங்களையும் உருவகித்துக் காட்டுவதிலும் பழங்குடி மக்கள் நுண்ணறிவு பெற்றிருந்தனர் பீலர் (Bhil) என்ற பழங்குடியினர் குதிரை ஏறிச் செல்லும் மனிதவுருவைப் புனிதமாகக் கருதி வழிப்படுகின்றனர். மனிதனுடைய உயிர் இறந்த பின்னர் மேலுலகம் செல்வதை இவ்வாறு படைத்துள்ளனர் என்று கருதப்படுகிறது[4] இந்த இடத்தில் ஹாரப்பாவில் கிடைத்த பழக்கப்பட்ட குதிரை உருவையும் சேரமான் பெருமாள் நாயனர் சுந்தரமூர்த்தி நாயனருடன் குதிரையேறிக் கைலாசம் சென்ற பெரிய புராண நிகழ்ச்சியையும் ஒப்பிட்டு சில ஆய்வு உண்மைகளைக் காண முயலலாம். தமிழ் நாட்டில் குதிரையில் அமர்ந்து காட்சி தரும் ஐயனர் சிலைக்கு இருக்கும் புனிதச் சிறப்பையும் சிந்திக்க வேண்டும். இராஜபுதனத்திலும் குதிரையில் ஏறி வரும் வீரனின் சிலைக்கு ஒரு புனிதமும் மதிப்பும் கொடுக்கப் பெறுகிறது. பீலர்களுடைய இறுதிச்சடங்கு இறந்தவரின் குதிரையின் முன்பே இன்றும் நடைபெறுகிறது. நான்மறையும் குதிரைப் பயணத்தைப் புனிதமாகக் கருதி இசைக்கிறது மிகப் பழங்காலத்திலிருந்தே குதிரைவீரன் உருவுக்கு ஒரு சிறப்புப் பொருள் இருந்ததாகக் கருதலாம். பூவுலகிலிருந்து இறப்பின் பயனாக மேலுலகப் பயணம் நேரிடுவதைக் குதிரை எறி விரையும் வீரனின் சிலை மூலம் பன்னெடுங் காலத்துக்கு முன்பிருந்தே மனிதன் உருவகித்து காட்ட விரும்பியுள்ளான் என்று நினைக்கலாம். இக் கருத்துக்குத் துணைசெய்யும் சிலசெவிவழிக் கதைகளும் பழங்குடி மக்களிடம் பரந்துள்ளன. சிந்தனை அறிவு கலைக்குள் ஊடுருவி நல்லாக்கம் பெற்றுள்ளதை இதன் வாயிலாக நன்கு உணரலாம்.

நீத்தார் வழிபாடும் அவர்களுடைய புகழைப் பாடி மகிழும் இயல்பும் நாட்டுப்புறக் கலைகளுக்கு ஆதரவு கொடுத்துள்ளன.

---

3. Stella Kramrisch, Unknown India, 'Rural Art in Tribe and Village, (Philadelphia, 1968), P. 50.

4. Ibid, P. 51.

பழங்குடிகளிடையே இறந்தவர்களைப் பலமுறை நினைத்து அடக்கம் செய்யும் வழக்கம் இருந்ததாக அறிகிறோம். இறந்தோரின் ஆண்டு விழாக்களில் அவர்களுடைய எலும்புகளைத் தோண்டியெடுத்து மறு அடக்கம் செய்துள்ள செய்திகளும் உள்ளன. ஐந்து அல்லது பத்து ஆண்டுகளுக்கு ஒருமுறை நீத்தார் வழிபாடு மிக சிறப்பாகக் கொண்டாடப்படும்[5] இன்றும் இத்தகைய வழக்கம் கேரளத்தில் அட்டபாடி மலைகளில் வசிக்கும் பழங்குடியினரிடம் உண்டு. அதேபோல் அஸ்ஸாம் நாட்டு நாகர், ஒரிஸா நாட்டு கதபர், போண்டோ போன்ற பழங்குடியினர் நீத்தார் வழிபாடு நடத்தி மகிழ்கின்றனர். இத்தகைய விழாக்களில் பலவிதமான கலைகள் நடத்தி இறந்தோரை நினைத்துப் பாராட்டி இருப்பர்.

(தென்னிந்தியப் பழங்குடியரான தோதவர், காடர், குரும்பர், இருளர், மலசர், மன்னன், முதுவன், காணிக்காரன். செஞ்சு, லம்பாடி, சோரர், கொண்டர், கோயர் போன்ற இனத்தவர்களின் ஆடையணிகள், இசைக் கருவிகள், சமயச் சடங்குக்கு உரிய பொருள்கள், மந்திரப் பாவைகள், பாவைக் கூத்தாடும் பொருள்கள் ஆகியவற்றைக் காணின்[6] அவர்களிடம் பழங் கலைகள் மிகுதியாக இருந்திருக்க வேண்டும் என்று நம்பலாம்.

இன்று அருங்காட்சியகங்களில் சேகரித்து வைக்கப் பெற்றிருக்கும் பழங்குடி மக்களின் அணிகலன்கள், இசைக் கருவிகள் ஆகியவற்றைக் காணும் போது அவர்களுடைய கலையார்வம் நன்கு புலனாகிறது. மேலும் மந்திரங்களினால் தீய ஆவிகளை மரத்தினால் செய்த மனித உருவங்களில் செலுத்தும் பழக்கமும் இருந்துள்ளது[7]. மந்திர வேலைகள் செய்யும் சடங்குகளில் கலைத் தொடர்புடைய நிகழ்ச்சிகள் பழங்குடியினரால் நடத்தப் பட்டிருக்க வேண்டும்.

---

5. பழங்கால பண்பாடும் பழங்குடி பண்பாடும், சென்னை அருங்காட்சியக வெளியீடு, (சென்னை, 1974) பக். 13–14.

6. இத்தகைய பொருள்கள் சென்னை அருங்காட்சியகத்தில் கூறுசெய்து ஒழுங்காக வைக்கப் பெற்றுள்ளன.

7. உடல் முழுவதும் ஆணிகள் அடிக்கப்பட்டு மந்திர ஆற்றலால் ஆவியைச் செலுத்திக் கடலில் தூக்கி எறியப்பட்ட ஒரு பெண்ணின் மரவுருவம் சென்னை அருங்காட்சியகத்தில் உள்ளது.

பழங்குடியினரில் கலையிலிருந்து தொடக்க காலப் பழக்கங்களையும் வழக்கங்களையும் ஓரளவு அறியலாம். கலையுணர்வு வெறித்தன்மையுடையதாகவும் கடுமையானதாகவும் இருந்திருக்க வேண்டும். முறையைப் பற்றிக் கவலைப் படாது முண்டியடித்துக் கலையுணர்வை வெளிப்படுத்தி இருப்பர். இயற்கையின் செயல்களையே பெரும்பாலும் தங்கள் கலைமாதிரிகளாகக் (Models for art) கொண்டிருப்பர். விரிவுபடாத அறிவில் ஊறிய எண்ணங்களைக் கொண்டே பல கலைகளை உருவாக்கி இருக்க வேண்டும். அறியாமை காரணமாக ஏற்பட்ட பலவிதமான அச்சங்களுக்கு விடுவாயாகவும் சில கலைகளைக் கற்பனை வாயிலாக உருவாக்கி இருக்கலாம். காலக் கடப்பால் ஏற்பட்ட அறிவு வளர்ச்சி கலைகளுக்குச் சில திருத்தங்களைக் கொடுத்ததோடு ஓரளவு பொருத்தமான முறைகளையும் வகுத்திருக்க வேண்டும். இத்தகைய சிறுசிறு மாற்றங்களுடன் சிறிதளவு சீர்திருத்தம் பெற்ற கலைகள் தொன்மை நிலையிலிருந்து வளர்ந்து நாட்டுப்புறக் கலை நிலைக்கு உயர்ந்திருக்க வேண்டும். அடிப்படை உணர்வில் இவை அதிகம் மாற்றம் பெற்றிருக்க முடியாது. ஆனால் புலப்படுத்தும் முறையிலும் செயல் தோற்றத்திலும் சிறிதளவு மாறி இருக்கும்.

பின்னர் விதிமுறைக் கட்டுபாடுகளுடன் திறன்பட்ட செயல்களுடன் கலைகள் வளரத் தலைப்பட்டன. மிக நுட்பமான அறிவுடன் செம்மைப்பட்ட கலைகள் திருந்திய கலையாக நாகரிக மக்களால் மதிக்கப்பட்டன. கலைஞர்கள் கலையோடு தன் உணர்வு கொண்டு ஒன்றுவதைவிடவும் தங்கள் திறமைகளைக் காட்டிக் கலைக் கூறுகளைப் புலப்படுத்துவதில் தான் அதிகம் நாட்டம் செலுத்துகின்றனர். எளியதாகவும் இனியதாகவும் இருந்த நாட்டுப்புறக் கலைகள் அரியதாகவும் ஆழமுடையதாகவும் மாறித் திருந்தின.

மனித உணர்விலிருந்து குழைத்து எடுக்கப்படுவதினால் அனைவருக்கும் பங்குரிமையுடைய தொன்மைக்கலைகள் எல்லோரும் ஈடுபாட்டுடன் பங்கு கொள்ளும் இயல்புகளுடன் இருந்தன. பங்குபெறுவோர் குறைந்து அனைவருக்கும் இன்பம் கொடுக்கும் பொதுச் சொத்தாக நாட்டுப்புறக் கலைகள் விளங்கின. அரிய திறமைக்குள் அடங்கி விதிமுறைகளால் கட்டுப்படுத்தப் பெற்று கலையறிவுடையோர்களுக்கு மட்டுமே உரிமையுடைய அரும்பொருளாகத் திருந்திய கலைகள் முடங்கின. அனைவருக்கும் உரிமையுடைய மக்களின் சொத்தான நாட்டுப்

புறக் கலைகள் நாகரிகத்தின் அழுத்தத்திலும் அமுக்கத்திலும் சிதையாது மறையாது இன்றும் சுவையுடன் சிறப்பாகச் சிற்றூர் களில் வாழ்ந்து கொண்டிருக்கின்றன.

## நாட்டுப் புறக் கலைகளின் இன்றைய நிலை

சுவை மிக்க நாட்டுப்புறக் கலைகளை இன்றும் நாட்டுப்புற மக்கள் உயிரூட்டி வளர்த்து வருவதைக் காணலாம். இக்கலை களுடன் இறைத்தொடர்பான புனிதத் தன்மை ஒட்டி இருப்பதி னால் மக்களால் அவற்றைப் புறக்கணிக்க முடியவில்லை. சமய நம்பிக்கையில் உறுதியுடைய நாட்டுப்புற மக்கள் இவற்றைச் சமயச் சடங்காகக் கருதி வழிபாட்டுடன் ஒட்டுறவாடச் செய்து மகிழ்கின்றனர். நெல்லை, குமரி மாவட்டங்களில் வில்லுப் பாட்டு நடைபெறாது அம்மன் கொடை விழாக்கள் முழுமை யடையாது என்ற நம்பிக்கையே உள்ளது. இசக்கியம்மன், சுடலைமாடன் கொடைகளில் கணியான் ஆட்டுக் கட்டாய நிகழ்ச்சியாக அமைகிறது. குறிப்பிட்ட தெய்வங்களுக்குக் குறிப்பிட்ட கலைகள் நடத்தப் பெறவேண்டும் என்ற வழக்க முறை இருப்பதினால் கலைநிகழ்ச்சி தவிர்க்க முடியாத விழா நடவடிக்கையாக அமைந்துவிட்டது நாகரிகத்தால் மக்களின் நம்பிக்கைகளைக் கட்டுப்படுத்தவோ தகர்த்து எறியவோ இயலாது என்பதற்கு இப்பழக்கம் நல்ல சான்றாக உள்ளது. இறையிடம் வேண்டுதலுக்குக் கடனாகவும் சிலகலைகள் நடத்தப் பெறுகின்றன. குழந்தைப்பேறு வேண்டி மீனாக்ஷி கல்யாணம், சீதா கல்யாணம், வள்ளி திருமணம் முதலிய கூத்துக்களையும் மழை பெய்வதற்காக விராடபருவம் நாடகத்தையும் மக்கள் தெய்வத்திடம் வேண்டுதலாக நடத்துவதை இன்றும் பல இடங் களில் காணலாம்

நம்பிக்கை அடிப்படையில் மாத்திரமல்லாது சுவைத்து மகிழும் நோக்கத்துக்காகவும் நாட்டுப்புறக் கலைகள் மக்களால் நடத்தப்படுகின்றன. மக்களை எளிய முறையில் இனிமையாகக் கவரும் ஆற்றல் நாட்டுப்புற கலைகளுக்கு இருக்கிறது இவற்றைச் சுவைத்து மகிழ நுட்ப அறிவு தேவைஇல்லை. நாட்டுப்புறக் கலைகள் மக்களின் இயல்பான உணர்வைப் புலப் படுத்தும் தன்மையுடன் அமைவதால் அவற்றில் சுவையும் இன்பமும் எளிதாகப் பெற மக்களால் முடிகிறது. இனியதை எளிதாகத் தரும் அருமையான நாட்டுப் புறக்கலைகளை மக்கள் அன்றிலிருந்து இன்றுவரை வியப்புடன் காத்து வருவதில் வியப்பில்லை.

நாகரிக மயக்கத்தில் கண்மூடி இருந்த நகர்வாழ் மக்களும் நாட்டுப்புறக் கலைகளை விரும்பிக் காணும் பக்குவநிலை அடைந்து வருவதைக் காணலாம். கலைகள் மங்கி மறைந்து விடக்கூடாது என்ற எண்ணம் இன்றைய கால கட்டத்தில் அனை வருக்கும் ஏற்பட்டுள்ளது. உலகம் முழுவதிலும் நாட்டுப்புறக் கலைகள் பற்றிய விழிப்புணர்ச்சி ாக்கள் மத்தியில் ஏற்பட்டுள் ளதைக் காணலாம். தூர்ந்து போன ஊற்றுக்கண்களைத் துலக் கியதும் உள்ளே அடைபட்டுத் தங்கிய நீர் விரைவெடுத்துப் பாய்வது போல் இதுவரை நாகரிக உலகால் ஒதுக்கப்பட்ட நாட்டுப்புறக் கலைகள் இக்காலத்தில் ஏற்பட்டுள்ள புத்துணர் வின் எழுச்சியால் பழமை துலங்கிப் புதுமை மூடி அனைத்து மக்களின் ஆவலைத் தூண்டும் பொலிவுடன் அரங்கமேறிக் களிப்பை மூட்டுகிறது

மக்களின் பண்பாட்டு உயர்வினைக் காலங்காலமாகத் தாங்கி வரும் நாட்டுப்புறக் கலைகளை நலிய விடக்கூடாது என்று அரசும் ஆவல் கொள்கிறது. தூரத்தில் ஒதுங்கி இருந்த கலை களை அன்புக் கரம் நீட்டி அழைத்து நகர அரங்குகளில் கொலு வேற்றி நாகரிக மக்களையும் நாட்டுப் புறக் கலைகளை விரும்பி ஏற்கும்படிச் செய்கிறது. மதிப்பின்றி குப்பை மேட்டுக் குன்றி மணிகளாக இருந்த நாட்டுப்புறக் கலைஞர்களைக் கலைமாமணி களாக்கி இன்று தமிழ்நாட்டு அரசு பாராட்டுவது குறிப்பிடத் தகும் கலைச்சேவையாகும். மங்கிய நிலையிலிருந்த நாட்டுப் புறக் கலைகள் மதிப்புடன் தலைதூக்கி எழுகின்றன. சோர் வுடன் காணப்பெற்ற கலைஞர்கள் சீருடன் திகழ்கிறார்கள். சமுதாய வீதியில் அவர்கள் கலைநடம் பயில விரும்பி வருகி றார்கள். நாட்டுப்புறக் கலைகள் நம்பிக்கை ஒளிகண்டு முன் னேற்றப் பாதையில் விரைநடையிடத் தொடங்கிவிட்டன. தமிழ் நாட்டில் அரசு சார்பில் தமிழ்நாடு இயல் இசை நாடக மன்றம், தமிழக அரசு மக்கள் தொடர்பு செய்தித்துறை, சென்னை அருங்காட்சியகம் ஆகியவை நாட்டுப் புறக்கலைகளுக்கு உயர் வூட்டும் அரிய பணியை ஆவலுடன் செய்து கொண்டு வருகின்றன.

ஆராய்ச்சித் துறையிலும் நாட்டுப் புறக்கலைக்கு இன்று உயரிய இடம் தரப்பெற்றுள்ளது. முன்பு மேனாட்டு அறிஞர் சிலரே நாட்டுப்புறக் கலைகள் பற்றிய ஆய்வு மேற்கொண்டு ஊர் ஊராகச் சென்றனர். ஆனால் இன்று தமிழ் நாட்டு ஆய்வு அறிஞர் பலர் கலையாராய்ச்சியில் முழு மூச்சாக ஈடுபட்டு தங்கள்

வாழ்வுப்பேறாக அதனைக் கருதி உழைக்கின்றனர். தமிழகப் பல்கலைக் கழகங்கள் நாட்டுப்புறவியல் ஆய்வுக்குச் சிறப்பான இடம் கொடுத்துள்ளன. பல கல்லூரிகள் நாட்டுப்புறவியலை விருப்ப பாடமாக ஏற்றுள்ளன. உலகத்தமிழ் ஆராய்ச்சி நிறுவனம் இத்தகைய ஆராய்ச்சிக்கு ஊக்கமும் ஆக்கமும் தந்து சிறக்கிறது. பேசும் படக் கலை மூலமும் நாட்டுப்புறக் கலை வளர்ச்சிக்கு நல்ல ஆதரவு உள்ளது. சில காட்சிகளில் இத்தகைய கலைகளுக்கு இடம் ஒதுக்கி இனிமையான முறையில் நாட்டுப்புறக் கலைகளின் பெருமைகளை உலகுக்கு அறிவிக்கப்பட இயக்குநர்கள் முன் வந்துள்ளனர். பத்திரிகை உலகும் நாட்டுப்புறக் கலைகளை ஊக்கும் பணியை உயர்வாகச் செய்து வருகிறது. அரசு இதழான 'தமிழரசின்' பணி இந்நிலையில் குறிப்பிட்டுக் கூறத் தக்கதாகும். இவற்றைக்காணின் ஓர் உண்மை புலனாகும் நாட்டுப்புறக் கலைகளில் உண்மையான கலைத்தன்மையும் பயனும் இருப்பதை இன்றைய உலகம் ஒப்புக் கொள்கிறது.

## நாட்டுப்புறக் கலைகளின் நோக்கம்

தமிழ்நாடு பலவகையான நாட்டுப்புறக் கலைகளின் அருங்காட்சியகமாகவே உள்ளது. விதம் விதமான கலைகள் இடத்துக்கு இடம் தோன்றி நாட்டைக் கலைக்கோலமாக மாற்றியுள்ளன. அவை மக்களின் பண்பாட்டுக் கொள்கலமாக விளங்குவதால் மானிடவியலாருக்கு ஆய்வுக்கூடமாக உதவுகின்றன. மக்களின் சமயவுணர்வு, சமுதாய வாழ்வு, நம்பிக்கைகள், பழக்கவழக்கங்கள், உறவு முறைகள், உணர்ச்சிக் கூறுகள், ஆகியவற்றைச் சிறப்பாக விலக்கும் தன்மைகள் நாட்டுப்புறக் கலைகளில் நிறைந்துள்ளன. மனிதனின் அச்சமும் அதைத் தீர்க்கும் வரையிலும் கலைகளில் காணக்கிடைக்கும் செய்திகளாகும். பலவித பரந்த முறைகளைப் பின்பற்றி பலவிதமான கலைகளை மனிதன் ஏன் அரங்கேற்றியுள்ளான் என்பதையும் அறிதல் வேண்டும். கதையரங்கேற்ற முறைகளும் ஆய்வுக்கு உட்பட்டால் அரிய உண்மைகள் தோன்றும் பல விதமான பண்பாட்டுக் கலப்பால் ஏற்பட்டுள்ள மாற்றங்கள் மனித வாழ்வை எந்த அளவுக்குப் பாதித்துள்ளது என்பதையும் காணவேண்டும். கலைகளின் வள்ர்ச்சி வரலாற்றை அறிந்து அதன் பயனாக ஏற்பட்டுள்ள பண்பாட்டு மாற்றங்களை நுட்பமாகப் புலப்படுத்துவதும் ஆய்வுக்குப் பயனாக அமையும். கலைகளின் வாயிலாக மனிதனின் அறிவுப் பரப்பையும் அளவிட்டுக் காண முயலலாம். ஒருமித்த எண்ணத்துடன் ஒற்றுமையாக வாழ்ந்து

சிறக்க நாட்டுப்புறக் கலைகள் உதவியுள்ளனவா என்பதையும் அறியலாம். முழுமையாகவும் உண்மையாகவும் பல கருத்துக்களை உணர வேண்டுமானால் கலைகளின் நோக்கத்தை நன்றாகப் புரிய வேண்டும். கலைகளின் தோற்றம், கருத்து ஆகியவற்றைச் சரியாக அறிந்து உணர்ந்தால்தான் நோக்கத்தை உறுதியாக அறிய இயலும்.

கலைகள் தோன்றி வளரும் காலகட்டத்தில் மக்களின் வாழ்க்கைநிலை, அறிவுநிலை, மனநிலை ஆகியவை எவ்வாறு இருந்தன என்பதை நன்றாக அறியவேண்டும். இயற்கையோடு இணைந்த மனதின் சமயக் கட்டுக்குள் தன்னைப் பிணைத்து கலையார்வத்துடன் பலவிதமான கலைகளை வெவ்வேறு விதமான நோக்கங்களுடன் உருவாக்கி இருக்கக் கூடும். வாழ்க்கைச் சூழலும் வாய்ப்பு வசதிகளும் மனிதனின் கலை முகிழ்ப்புக்கு எந்த அளவுக்கு துணை நின்றுள்ளன என்பதையும் காண முயலலாம். அறிவுடன்பட்டும் அறிவுக்கு அப்பால் கற்பனை உலகில் நுழைந்தும் கலைகளுக்கு உருவாக்கம் கொடுத் திருக்கலாம். அவற்றுக்குத் தக்கவாறு கலைநோக்கம் மாறுவது இயல்பு.

இன்பத்தை அடிப்படை நோக்கமாகக் கொண்டு கலைகள் முதன்முதலில் தோன்றியிருக்க வேண்டும் என்று கூறுவது பொருத்தமாக அமையும். சமய உணர்வு, அச்சவுணர்வு, நோய் தடுப்பு, பேயோட்டல், திறமை காட்டல், வலிமை பெருக்கல், பொழுது போக்கு என்று பலவிதமாகக் கலைகளின் நோக்கத் தைப் பெருக்கிக் கொண்டே போகலாம். நன்றிக் கடன், வீர வணக்கம், முன்னோர் நினைவு போன்ற பலவற்றைக் கொண்டாட விழாக்கள் அமைத்து கலைநிகழ்ச்சிகளைப் பல விதமாக நடத்தி இருக்கலாம். விழாவின் நோக்கம் சுவையாக நிறைவேற கலைகளை அதற்குத் தக்கவாறு அமைத்திருக்கக் கூடும். ஆடல், பாடல் போன்ற பலவிதமான திறமைகளைப் பிறர் விரும்பி ஏற்கும் முறையில் சில கலைகளை மனிதன் உருவாக்கி இருக்கலாம்.

உணர்ச்சி, எண்ணம், கருத்து, வாழ்க்கை முறை, பண்பாடு போன்றவற்றில் வேறுபாடுடைய பல இனங்களாகவும் குழுக் களாகவும் வாழ்ந்து வந்த மனிதன் தனக்குரியவற்றைத் தகுந்த முறையில் இனிமையாகப் புலப்படுத்த விரும்பும்போது பல விதமான கலைகள் குறிப்பிட்ட நோக்கங்களுக்காக உருவாகி

யிருக்கலாம். பருவமாற்றத்தை உணர்த்தவும், வாழ்க்கைப் பருவங்களை நினைவுபடுத்தவும், நம்பிக்கைகளை உறுதிபெறச் செய்யவும், நல்லவற்றை அறிவிக்கவும், வாழ்வை நெறிப் படுத்தவும், சமூகவுணர்வை வலிமை பெறச் செய்யும், பாரம்பரைப் பண்பாட்டுணர்வைக் காக்கவும் கலைகள் மூலம் முயன்றிருக்கலாம். காழ்ப்புணர்வும் பகையுணர்வும் மனிதனுக்கு இயற்கையாக ஏற்படுவன. இனங்கள் ஒன்றுக்கொன்று மோதி முரணாவது இயல்பான நிலைகள். இத்தகைய நிலையில் மனிதன் தான் உடல்வலிமையைப் பெருக்கிப் பேராற்றலைக் காட்ட விரும்புவது இயல்பேயாகும். இத்தகைய இயல்பிலிருந்து சில கலைகள் தோன்றி வளர்ந்திருக்க வேண்டும்.

அன்பைப் பெருக்கி மனிதவுறவை வளர்க்கவும் சில கலைஞர்கள் விரும்பி இருக்கலாம். இந்நோக்கம் உடையவர்கள் மனிதனுக்கு அடக்கவுணர்வை ஊட்டி நற்பண்பை அறிவுறுத்தி இருப்பர். கலைகளும் இத்தகைய உணர்வை மக்கள் மத்தியில் பரப்பும் அரிய நோக்கத்துடன்தான் எழுந்திருக்க வேண்டும். அறிவுறுத்தும் நோக்கம் பெரும்பாலும் கலைகளுக்குள் வெளிப் படையாகப் புலனாகாது அடங்கியே இருக்கும். ஆயினும் அறிவுறுத்தும் கருத்துகள் அழுத்தம் பெற்றுப் புலனாகக் கலைகளில் இடமிருக்கும். இன்பவுணர்வில் மிதந்தவாறே மக்களுக்கு அறிவுபுகட்டும் கருவியாக நல்ல கலைகள் விளங்குகின்றன.

தமிழ்நாட்டைப் பொறுத்தவரை சமய உணர்வை அழுத்தமாகப் புலப்படுத்தும் கலைகளே மிகுதியாக உள்ளன. பண்டைக் காலம் தொட்டு இன்றுவரை எந்தவிதமான இயக்க ஆற்றலுக்கும் அடங்காது நாட்டுப்புறக் கலைகள் மக்கள் மத்தியில் சமய உண்மைகளை எடுத்துக் கூறிக் கொண்டே வருகின்றன. மக்களின் இயல்பான மனப்போக்கு அமைவதற்குத் தக்கவாறே கலைகளின் நோக்கமும் தன்மையும் அமைகின்றன. அறிவியலுக்கு அப்பாற்பட்டவற்றையும் சமய நம்பிக்கைத் தளத்தில் நின்று உறுதிப்படுத்த நாட்டுப்புறக் கலைகள் சற்றும் தயங்குவதில்லை. அவற்றால் உணர்த்தப்படும் கருத்துக்களை அறிவுக் களத்திலிருந்து காண்போர் பொருளற்றதாகவே பல இடங்களில் காண முடியும்.

திராவிட நாகரிகம் மிக முந்தியது என்றும் அது ஆரியர்களுக்கு முந்திய பழமை விரும்பி மக்களுடையது என்றும் ஆய்வறிஞர் நம்புகின்றனர். அந்த மக்கள் தங்களது பழமையான

பழக்க வழக்கங்களைப் பேணிக் காக்கும் இயல்புடையவர்கள். ஆனாலும் அவர்களுடைய வழக்க முறைகள் இன்றைய நாகரிக எண்ணங்களின் தொடர்பால் சில மாற்றங்களை அடைந்து காணப்படுகிறது[8] இவர்களுடைய பழமை காக்கும் பண்பு கலைப் படைப்புகளிலும் காணப்படுகிறது. பெரும்பாலான கலைகளின் உண்மையான நோக்கம் காலம் காலமாக மாறாமல் ஒன்றாகவே உள்ளது. இறைவனிடம் மழையை வேண்டி முன் காலத்து மக்கள் ஆடிய ஆட்டத்தையும் நடித்த கூத்தையும் அதே நோக்கத்துடன் இன்றைய நாட்டுப்புற மக்களும் நம்பிக்கை யுடன் கையாள்வதைத் தமிழ்நாட்டில் பல பகுதிகளில் காணலாம்.

ஆடல் பாடல் போன்ற கலைகளுக்கு மிகுந்த சிறப்பு தமிழ் நாட்டில் பன்னெடுங் காலமாக இருந்து வருகிறது. குறிப்பிட்ட கலையைக் குறிப்பிட்ட சாரார் கையாண்டு தங்களுடைய திறமையை அதில் காட்டியுள்ளனர். சங்க காலத்தில் பாடற் கலைக்குப் பாணரும் கூத்துக் கலைக்குக் கூத்தரும் இருந்ததைக் காணலாம். இன்றும் கணியான் ஆட்டத்துக்குக் காணிக்காரரும் தேவராட்டத்துக்குக் கம்பளத்து நாயக்கரும் உரிமை பாராட்டி ஆடுவதைக் காணலாம். இத்தகைய குடியினரிடம் ஒருவகையான தனித்துவ ஆற்றல் இருப்பதாக மக்கள் கருதுகின்றனர். கலை நிகழ்ச்சிகளில் ஈடுபடுவதைப் புனிதமாகக் கருதினர். ஆகையினால் பலவகையான விரதங்கள் செய்த பின்னரே நிகழ்ச்சியைத் தொடங்குகின்றனர். இதிலிருந்து புனிதமாகக் கலைச் செயல்களில் ஈடுபட வேண்டும் என்ற கருத்து மக்களிடம் இருந்ததை அறிய முடிகிறது. 'இக்கலை'களின் பயனால் சில அரிய செயல்களைச் சாதிக்க இயலும் என்று நம்பி இருக்க வேண்டும். இறையாற்றலுடன் கலையை இணைத்துக் கண்டதினால்தான் இத்தகைய எண்ணம் தோன்றியிருக்க வேண்டும். இதிலிருந்து சில கலைகளின் நோக்கத்தை அறிய லாம். பேராற்றலையும் புனிதத்தையும் அடிப்படையாகக் கொண்டு பல நாட்டுப்புறக் கலைகள் தோன்றியுள்ளன.

8. Projesh Banerji, The Folk-dances of India, Kitabistan (Allahabad, 1959) P. 9.

# வகைப்பாடு

## வகைப்படுத்தும் முறை

தொடர்புடைய பலவற்றை இணைத்து ஆய்வு செய்யும் போது அவற்றின் கூறுகளை நன்கு அறிந்து வகைப்பாடு செய்தால் சில அரிய உண்மைகளை மிகவும் எளிதாக அறிய வழி பிறக்கும். ஒற்றுமைக் கூறுகளைக் கொண்டு வகையிடுவது பொருத்தமாக அமையும். ஆயினும் வேற்றுமைகள் இருக்கவே செய்யும். வேற்றுமை இல்லாதவற்றை வகைப்பாடு செய்ய வேண்டிய தேவையும் இல்லை. வகையிடும் போது சில பொருள்கள் இரண்டு வகைக்குள் பொருந்தும் சிக்கலும் ஏற்படலாம். அத்தகைய நிலையில் அதிகக் கூறுகள் இணையும் பிரிவில் அப்பொருளை இணைத்துச் சிக்கலைத் தவிர்க்க வேண்டும். ஒரே தன்மையிலுள்ள கூறுகளைக் கொண்டே வகையிடுவது முறையாகும். ஒரு வகைப்பாட்டில் சிலவற்றின் பொருள் கூறுகளையும் சிலவற்றின் செயல் கூறுகளையும் கலந்த நிலையில் வகைப்படுத்துவது தவறாகும். சில சமயம் வகையிடும் பொருள்களில் சில, எந்தப் பிரிவுக்குள்ளும் அடங்காது தனிப்படுவதும் உண்டு. கூடியவரையிலும் அவற்றுள் பொருத்தம் காண முயல வேண்டும். இல்லாவிட்டால் தனியாகக் குறிப்பிட்டுக் காட்டுவதே முறையாகப் படுகிறது.

## நாட்டுப்புறக் கலைகளின் பாகுபாடு

பெரு நூற்கள் கலைகளை அறுபத்தினாலாகப் பகுத்துள்ளன. நாட்டுப்புற இயல்புடைய கலைகளாக பாடல், (இசை) ஆடல் (நடனம்) கூத்து (நாடகம்) ஆகியவற்றை முக்கியமாகக் கருதலாம். நாட்டுப்புறத்தில் ஓவியம், சிற்பம், கட்டிடம் போன்ற கலைகள் இல்லாமல் இல்லை. கோயில் சுவர்கள் வீட்டுச்சுவர்கள் ஆகியவற்றில் அழகான படங்கள் வரைந்து வைத்துள்ளனர். அதில் இதிகாசப் புராணச் சித்திரங்கள் இடம் பெற்றிருக்கும். சீதை கல்யாணம் திரௌபதி சுயம்வரம், இராமர் முடிசூடல், வாலி வதை, நச்சுப்பொய்கைக் காட்சி, கண்ணன் தாமரைப் பொய்கையில் குளிக்கும் பெண்களின் துயில் கவரும் காட்சி, வேடன் புலியைச் சுடுதல் போன்ற காட்சிகள் ஓவியங்களாகப் பல கோயில்களில் தீட்டப்பெற்றிருக்கும் வீடுகளில் சமூக நிகழ்ச்சிகள், ஊரில் நடப்பவை முதலியன ஓவியங்களாக வரையப் பெற்றிருக்கும். இவை நாட்டுப்புற மக்களின் ஓவியக்கலைத் திறனுக்குச் சான்றுகளாக அமையும்.

, கல், சுதை, மண் ஆகியவற்றாலான சிற்பங்கள் வகை வகையாக ஊர்க் கோவில்களில் காணப்பெறும். வீடுகளிலுள்ள கதவுகள், சாளரச் சட்டங்கள், உத்திரம், தூண், கூரை விட்டங்கள் ஆகியவற்றில் மர வேலைப்பாடுகள் மிகச் சிறப்பாக இருக்கும். இறையுருவங்களும், பூக்களும், உயிரின உருவங்களும் மரங்களில் கொத்து வேலையாகவும் கடைசலாகவும் செய்துள்ளதைக் காணலாம். மண்பாண்டங்களிலும் உருவங்கள் செய்து வைத்துள்ளனர். ஐயனார் கோயில் குதிரைகள், இயக்கி, சுடலைமாடன், மாரியம்மன் முதலிய சிலைகள் ஆகியவை இடத்துக்கு இடம் வேறுபடுவதைப் பற்றியும் சிந்திக்கலாம். இவை அனைத்தும் நாட்டுப்புற மக்களின் சிற்பக்கலை அறிவைக் காணத் துணை புரியும்.

கட்டிடக் கலையிலும் பல்வேறு திறமைகளை நாட்டுப்புற மக்கள் காட்டியுள்ளனர். அவர்களின் ஆலய அமைப்பு, வீட்டு அமைப்பு ஆகியவற்றை நன்கு பார்த்து இத்திறமையை அறிதல் வேண்டும். இவ்வாறு பலவாறாக நாட்டுப்புற மக்களின் கலையறிவை காண வேண்டியது முறையாகும். முழுமையாக அவர்களுடைய கலைத்திறனைக் கண்டறிய விரும்பினால் பல ஊர்களுக்கும் நேரில் சென்று களப்பணி செய்யவேண்டும். ஒவ்வொரு கலையும் ஒரு முழு ஆய்வுக்கு உரிய பொருளைக் கொண்டுள்ளன.

வீட்டு முற்றம், சுவர்கள், ஆலய வீதிகள் ஆகியவற்றில் பலவகையான கோலங்கள் வரைவதையும் நாட்டுப்புறங்களில் காணலாம். அவையும் மக்களின் கலைத்திறனைக் காட்டும் தன்மையுடையன. ஆகையினால் அவற்றைப் பற்றியும் அறிய வேண்டியதாகிறது.

இந்த இடையையும், நடிப்பையும் ஆதாரமாகக் கொண்ட நாட்டுப்புறக் கலைகள் பற்றிய ஆய்வு விளக்கத்தைத் தரும் நோக்கத்தைக் கொண்டே எழுதப் படுகிறது. ஆகையினால் தமிழ் நாட்டில் இத்தகைய இயல்புகளுடைய நாட்டுப்புறக் கலைகளைத் தொகுத்து வகை செய்ய முயலலாம். இவைகளே ஒன்றுக்கொன்று அணுகத் தொடர்புடையனவாக அமைகின்றன.

தமிழ்நாடு பல மாவட்டங்களாகப் பிரிக்கப் பட்டிருந்தாலும் கலைமரபில் ஒன்றுக்கொன்று தொடர்பு உடையனவாக விளங்குகின்றன. வேறுபாடுகள் இல்லாமல் இல்லை. ஒரே கலை இடமாறுபாட்டால் அமைப்பு வேறுபாடு கொண்டு இயல்வதையும் பார்க்க முடிகிறது. சமுதாயத்தில் பல காலமாக வேரூன்றியுள்ள

சாதி சமய பிரிவுகளின் பயனாக மக்களின் பழக்க வழக்கத்திலும், நம்பிக்கையிலும், பண்பாட்டிலும் வேறுபாடுகள் தோன்றியுள்ளன. அவற்றின் காரணமாக அவர்களின் கலை வழக்கங்களும் கலையின் அமைப்பு முறைகளும் மாற்றமடைந்து தோன்றுகின்றன. தமிழ்நாட்டில் பழங்குடி மக்களும் வாழ்கின்றனர். அவர்களுடைய வாழ்க்கை முறை முற்றிலும் வேறுபட்டுக் காணப்படுகிறது பழங்குடியினரிலும் பல இனத்தவர் இருக்கிறார்கள். ஆகையினால் அவர்களுடைய கலைகளும் வேறுபாடுகளுடன் அமைகின்றன. அனைத்தையும் மனத்திற் கொண்டு தமிழக நாட்டுப் புறக் கலைகளைக் கணக்கிட்டு வகைப்படுத்த வேண்டிய நிலை ஏற்படுகிறது. அடிப்படை உணர்விலும் முக்கியமான நோக்கத்திலும் தமிழருடைய கலைகள் ஓரளவு ஒற்றுமை உடையனவாகக் காணப்படுகின்றன. இதனை ஆதரவாகக் கொண்டு அனைத்துக் கலைகளையும் ஒன்றாக இணைத்து அவற்றின் ஒற்றுமை வேற்றுமை கூறுகளை அறிந்து வகைப்பாடு செய்ய முயலலாம். காலவோட்டமும் பிறபண்பாட்டினரின் கலைத் தொடர்பும் தமிழ் நாட்டுக் கலைகளில் சில மாற்றங்களைச் செய்துள்ளன. தமிழருக்கே உரிய நாட்டுப்புறக் கலைக் கூறுகளைக் கொண்டு வகை செய்வதே சரியாகப் படுகிறது

**பல்வகைப் பாகுபாடுகள்**

ஈடுபடும் கலைஞர்களின் தொகையைக் கொண்டு மிக எளிதாகப் பாகுபடுத்தலாம். ஒருவரே இயற்றும் கலையைத் தனியர்கலை என்றும் ஒன்றுக்கு மேற்பட்டோர் இணைந்து நடத்தும் கலையைக் குழுவினர்கலை என்றும் கூறலாம், மயிலாட்டம், பொய்க்கால் குதிரையாட்டம், கரடியாட்டம், இன்னிசைப் பொழிவு (இசையுடன் கதை கூறல்), நொண்டி நாடகம் போன்றவை தனியர் கலைகளாக அமைகின்றன. வில்லுப்பாட்டு, தேவராட்டம், நாட்டார் நாடகம் (தெருக் கூத்து), உடுக்கடிப்பாட்டு, காமண்டி கொளுத்தல், ஆலியாட்டம், கணியானாட்டம் போன்றவை குழுவினர் கலைகளாக உள்ளன. கரக ஆட்டம், காவடியாட்டம் போன்றவை தனியர் கலைகளாகவும் சில சமயம் குழுவினர் கலையாகவும் நடத்தப்படுகின்றன. மிக அருகிய நிலையில் பொய்க்கால் குதிரையாட்டத்தை ஒரு பெண்ணும் ஆணும் இணைந்து ஆடுகின்றனர். பெரும்பாலும் இசைக்குத் தக்கவாறு ஒரு ஆணே இவ்வாட்டத்தை நிகழ்த்துவது வழக்கம். ஆகையினால் இது தனியர் கலைக்குள் அடக்கப்படுவதே குறையாகக் கருதப்படுகிறது.

கலைகளில் கலந்து கொள்ளும் ஆண்கள் பெண்கள் ஆகிய கலைஞரைக் கொண்டு ஆண்கள் கலை, பெண்கள் கலை எனவும் பிரிக்க முயலலாம். இரு பாலினரும் கலந்து நிகழ்த்துவதை இருபாலினர் கலை என அழைக்கலாம். காவடி, கடுவாய் ஆட்டம், தேவராட்டம், உடுக்கடிப் பாட்டு போன்றவை ஆண்கள் கலைகளாகும். கரகம், கும்மி, குரவை, தாயாரடித்தல் (மாரடித்தல்) போன்றவை பெண்கள் கலைகளாகக் காணப் படுகின்றன. தெருக்கூத்து, குறவஞ்சி, பள்ளு, போன்றவை இருபாலரும் கலந்து ஈடுபடும் கலைகளாகும். ஆண்கள் கரகம் ஆடுவதையும் பார்க்கிறோம். ஆனால் அது மிக அரிது. பெண் வேடமிட்டு ஆண்களே ஆடும் கணியான் ஆடலைப் புறத் தோற்றங் கருதிப் பெண்கள் ஆடல் என்று கருதுவதே பொருத்த மாகப் படுகிறது. வில்லுப்பாட்டு முன்பு ஆண்களால்தான் நடத்தப்பட்டு வந்தன. ஆனால் இக்காலத்தில் ஆண்கள் குழு, பெண்கள் குழு, இருபாலினரும் கலந்த குழு என்று மூன்று முறையாக நடத்தப் பெறுகிறது. கோலாட்டம் பெரும்பாலும் பெண்களே கலந்து ஆடினாலும் சில இடங்களில் ஆண்களும் கோலடித்துப் பாடுகின்றனர். இத்தகைய முறையில் பாகுபாடு செய்வது மிக எளிமையானதாகப் படுகிறது.

கலைகள் நடத்தப்படும் காலம், சூழல் ஆகியவற்றைக் கொண்டும், உணர்த்தும் பொருளை நோக்கியும் அவற்றைச் சமூகச் சார்புக் கலைகள், சமயச் சார்புக் கலைகள் என்று இரு வகையாகக் கூறு செய்யலாம். சிலர் இவற்றுடன் போரியல்புக் கலைகள் என்ற ஒரு பிரிவை இணைத்து மூன்றாகக் கூறுவதையும் காணலாம்[1]. மனிதனிடம் போராட்டவுணர்வு அவனுடைய சமூக வாழ்வின் அடிப்படையில்தான் தோன்றி இருக்கவேண்டும். சமூக ஏற்றத் தாழ்வும், மாறுபாடுகளும் போராட்டவுணர்வைத் தூண்டும் முக்கிய காரணங்களாகும். சமூக வாழ்வு இல்லையாயின் இவற்றுக்கு இடமே இல்லை. ஆகையினால் போராட்ட உணர்வுக் கலைகள் சமூகச் சிக்கல்களைக் கொண்டே முளையிட்டிருக்க வேண்டும். இக்காரணத்தைக் கொண்டு போராட்டவுணர்வுக் கலைகளைச் சமூக உணர்வுக் கலை களுடன் இணைப்பதே பொருத்தமாகப் படுகிறது. இந்தக் கருத்தை ஏற்று கலைகளைச் சமூகம், சமயம் ஆகிய இருபெரும் பிரிவுகளுக்குள் அடக்கப் படுவதே சிறப்பாகத் தோன்றுகிறது.

---

(1) Projesh Banerji, The Folk Dances of India, Kitabistan; (Allahabad, 1959) P. 5.

கபில வத்ஸாயாயன் நாட்டுப்புற நடனக்கலை வகைப்பாடு செய்துள்ளார்² அது கலைகளைப் பிரித்தறிய ஓரளவு உதவுவதாக அமைகிறது. அந்த வகைப்பாடு இவ்வாறு உள்ளது.

(i) வேட்டை நடனங்கள் அல்லது விலங்குப் போலிகள்
(ii) வளமை, மந்திரம்; நோன்பு முதலிய நடனங்கள்
(iii) தொழில் நடனங்கள்
(iv) பருவகால நடனங்கள்
(v) இதிகாச (தொன்மம்) நடனங்களும், நாட்டிய நாடகங்களும்
(vi) வழிபாட்டு நடனங்கள்
(vii) வழிவழி வளர்ந்த நாட்டிய நாடகங்கள்.

நடனக் கலைப் பொறுத்தவரையில் இப்பிரிவுகள் ஓரளவு பொருந்தும். மேலும் வேட்டையைத் தொழிலிலிருந்து பிரித்துள்ளது பொருத்தமாகப் படவில்லை. இரண்டாவது பிரிவும் ஆறாவது பிரிவும் ஒன்றுக்கு ஒன்று தொடர்புள்ளதாக உள்ளன. ஐந்தும் ஏழும் பிரித்தறியக் கடினமாக இருக்கும். ஒன்றிலுள்ளது இன்னொன்றுக்கும் பொருந்துவதாகக் காணப் படும். கலைகளை வகைப்பாடு செய்வது கடினமாக இருப்பினும் இன்னும் சிறப்பான முறையில் கூடியவரையிலும் பொருத்தமாக வகைப்படுத்திப் பிரிக்க முயலலாம்.

### சமூகக் கலைகள்

இணைந்து ஒரு சமூகமாக வாழும் மக்கள் தங்களுடைய வாழ்க்கை முறைகளைத் தொடர்பு படுத்தியும் இயல்புகளைப் புலப்படுத்தியும் சில கலைகளை அமைத்துள்ளனர். தாங்கள் வாழும் இடங்களின் இயற்கைச் சூழலையும் பருவ காலங்களை விளக்கியும் கலைகள் உருவாகி இருக்கின்றன. இவற்றில் சில சமூகச் சார்புடன் விளக்குகின்றன. அவற்றைச் சமூகச் சார்புக் கலைகள் என்று அழைக்கலாம்.

மனிதனின் வாழ்க்கையில் அவனுடைய பிறப்பு, திருமணம், இறப்பு ஆகியவை முக்கியமாகக் கருதப்படுகின்றன. பெண் களின் வாழ்வில் அவர்கள் பூப்பெய்தலும் மிகச் சிறப்பாகக் கொண்டாடப் படுகிறது. இத்தகைய வாழ்க்கைப் பருவ மாற்றங்களைப் பல விதமான கலைகளை நடத்திக் கொண்டாடு

(2) Kapila Vatsyayan, Traditions of Indian Folk Dance India Library. (New Delhi, 1976), P. 30.

கின்றனர். இவற்றை மனித வாழ்க்கைப் பருவக் கலைகள் என்று கூறலாம். வாழ்க்கை இயங்க ஆதாரமாக அமைவது தொழில். மனிதனுடைய தேவைகளை உணவு, உடை, உறையுள் ஆகியவற்றைப் பெற அவன் தொழில் செய்ய வேண்டும். தான் செய்யும் தொழிலின் பயனை மிக மகிழ்ச்சியாக ஏற்று மனிதன் கொண்டாடுவதை எங்கும் காணலாம், அத்தகைய கொண்டாட்டங்களில் பலவிதமான கலைகள் நடத்தப் படுகின்றன. அவை தொழில்களுடன் தொடர்புடையனவாக அமைகின்றன. அவற்றைத் தொழிற்கலைகள் என்று கூறலாம்.

போரியல்புடைய மனிதன் தன் ஆற்றலைக் காட்ட விரும்புவது இயற்கை. பெரும்பாலும் உடலாற்றலை நம்பியே மனிதன் வாழ்ந்து வந்துள்ளான். ஆனால் காலப்போக்கில் தன் நுட்ப அறிவினால் பலவிதமான போர்க் கருவிகளைக் கண்டு பிடித்துள்ளான். அவற்றை முறையாக இயக்கும் பயிற்சியைப் பெறுகிறான். அத்தகைய பயிற்சியைத் தொடர்பு படுத்தியும் சில கலைகள் உருவாகியுள்ளன. உடல் வலிமையுடன் கருவி களைத் திறமையுடன் கையாளும் பயிற்சியும் இணைந்து சில கலைகள் உருப்பெற்றுள்ளன. அவை போராடும் இயல்பு குன்றியவர்களுக்கு மன நிறைவையும் வியப்பையும் தருவனவாக உள்ளன. அவற்றைக் காணும்போது மக்கள் ஊக்கமும் உணர்வும் பெற்று மகிழ்ந்தனர். வீரக் கலைகளை வாழ்த்தி வரவேற்றனர். இத்தகைய கலைகளைப் போரியல்புக் கலைகள் எனஅழைப்பதே முறையாகும்.

சமூகத்தைச் சீர்செய்து பெருமையடையச் செய்வதை மனிதன் மிகவும் விரும்புகிறான். தான் இணைந்துள்ள சமூகம் உயர்வுடன் அமைய வேண்டும் என்று நினைக்கிறான் தனி மனித இயல்புகள் பல வித வேறுபாடுகளுடன் காணப்படு கின்றன. இத்தகைய வேறுபாடுகளை ஒதுக்கி சமூக அமைப்பு முறைகளுக்கு அனைவரும் அடங்கவேண்டும். சமூக ஒற்றுமை இறுக்கமாக அமைத்தால்தான் மனிதன் வாழ்வில் உயர்ந்து சிறக்க முடியும். நல்லது என்று பலரால் ஒப்புக் கொள்ளப் பட்டவற்றை அனைவரும் கடைப் பிடிக்க வேண்டும். இல்லை யாயின் சிக்கல்களும் சீர்கேடுகளும் முளைத்து சமூகத்தைச் சீரழியச் செய்து விடும். ஆகையினால் சமூகச் சீர்திருத்தத்தை மனிதன் மிக முக்கியமாகக் கருதி அதற்காகப் பலவழிகளில் முயல் கிறான். கலைகளும் சீர்திருத்தப் பணிக்காகப் பயன்படுத்தப் படுகின்றன. பல்வேறு விதமான கலைகள் நடைபெறும்போது அவற்றுடன் இடைநுழைப்பாகச் சமூக சீர்திருத்த உணர்வு

ஊட்டப்படுகிறது. சில கலைகள் அதையே முக்கிய நோக்க மாகக் கொண்டு நடைபெறுகின்றன. அவற்றைச் சமூக சீரமைப்புக் கலைகள் என்று அழைக்கலாம். தமிழ் மக்கள் பெரும்பாலான நாட்டுப்புறக்கலைகளில் சமூக மேம்பாட்டுக் கருத்துக்களைப் புகுத்திவிடுவதினால் அதற்கே உரிய தனிக் கலைகள் மிகவும் அருகியே காணப்படுகின்றன.

**சமயக் கலைகள்**

மனித வாழ்வு சிக்கல்களும் சீர்கேடுகளும் நிறைந்தது. இறப்பு தவிர்க்க முடியாத நிகழ்ச்சியாக உள்ளது. அச்ச உணர்வு மனிதனை ஆட்கொண்டு அசைக்கும் தன்மை உடையது பலவிதமான இயற்கை நிகழ்ச்சிகள் மனித ஆற்றலுக்குக் கட்டுப்படாது மிகவும் கொடுமையாக நடந்து விடுகின்றன. இவற்றைத் தவிர்க்க இயலாது மனிதன் தவிக்கும் போது தன்னை விடவும் மேலாற்றல் கொண்ட ஒரு பேராற்றலைப் பற்றிச் சிந்திக்கிறான். அது தன்னைப் பேராபத்திலிருந்து காப்பாற்றும் என்ற நம்பிக்கை கொள்கிறான். இயற்கை நிகழ்ச்சிகள் அனைத்தும் அந்தப் பேராற்றலுக்குக் கட்டுப்பட்டவை என்பதை முடிவாகக் கொள்கிறான். அதற்கு, இறையாற்றல் என்ற பெயரைக் கொடுத்து பணிந்து வணங்க விரும்புகிறான்.

அறிவு வளர வளரச் சில புதுக் கருத்துகள் அவனுக்குத் தோன்றுகின்றன. தன்னுடைய தீய செயல்களே கொடிய இயற்கை நிகழ்ச்சிகளுக்குக் காரணம் என்று நினைக்கிறான். ஆகையினால் நன்மைகளைச் செய்து தீமைகளைத் தடுக்க வேண்டுமெனக் கருதிப் பல அறநெறிகளை முறையாக வகுக்கத் தலைப்படுகிறான். அவையே காலவோட்டத்தில் சமயக் கோட்பாடுகளாக மலர்கின்றன. பல அறிஞர்கள் தங்கள் ஞானவுணர்வில் தோன்றியவற்றைத் திரட்டி வாழ்க்கை நெறிமுறைகளாக வகுத்துத் தர முற்படுகின்றனர். அவையே பலவிதமான சமயக் கொள்கைகள் தோன்றக் காரணங்களாக அமைகின்றன. ஒரே வகையான நெறிமுறைகளைப் பின்பற்றுகிறவர்கள் அனைவரும் இணைந்து தங்களை ஒரு குறிப்பிட்ட சமயத்தினர் என்று கூறிக்கொள்ளும் நிலை ஏற்படுகிறது.

உருவக முறையில் தெய்வங்கள் தோற்றம் பெறுகின்றன. கற்பனையாக இருந்தவற்றுக்குத் தகுந்தவாறு 'காணுருவம்' அமைக்க மனிதன் முயன்றதின் பயனாகப் பலவிதமான தெய்வ உருவங்கள் அமைக்கப்படுகின்றன. அச்சம் தரும் இயற்கை

நிகழ்ச்சிகளும், பஞ்ச பூதங்களும், இயற்கைக் காட்சிகளும் பல வித உருவமைப்பை மனிதனின் கற்பனை ஆற்றலால் பெறுகின்றன. தன்னை உயர்வாக மதித்துள்ள மனிதன் தன் உருவங்களைப் படைக்கிறான். ஒவ்வொரு உணர்வுக்கும் ஏற்றவாறு தோற்றங் கொடுத்து இறைவுருவங்கள் அமைக்கப் படுகின்றன. அச்சவுணர்வில் தோன்றிய உருவங்களைக் கண்டதும் அத்தகைய உணர்வு ஏற்படும் நிலையில் அவ்வுருவங்கள் செய்யப்படுகின்றன. இயற்கையின் சாயலும் இணைக்கப் பெறுகின்றது. தெய்வங்களை மகிழ்வித்து அமைதியடையச் செய்யும் நிலையில் விழாக்கள் பலவாறாக நடத்தப் படுகின்றன. மனித மனத்தில் பல்வேறு விதமாக எழும் சிந்தனைகளே இவ்விதமான விழாக்கள் நடத்தக் காரணங்களாக உள்ளன. சுருங்கக் கூறுவதாயின் ' சமயக் கருத்துக்களை வலியுறுத்தவும் இறையென நம்பியதை அமைதிப் படுத்தவும் ஆபத்துக்களிலிருந்து தன்னைக் காத்துக் கொள்ளவும் மனிதன் பலவகையான சமய விழாக்களை நடத்துகிறான். இத்தகைய சமய விழாக்களில் கலைநிகழ்ச்சிகள் பல இடம் பெறுகின்றன. மனிதனின் சமய நம்பிக்கைக்கு அவை பொருந்தும் தன்மையில் நடத்தப் படுகின்றன.:

கற்பனையால் உருவாக்கப்பட்ட கடவுளருக்குக் கதைகளும் கருத்துரையாடல்களும் கற்பிக்கப் பட்டன. 'இயற்கை நடப்புகளுக்குக் காரண காரியங்கள் கூறப்பெற்றன. இறப்பு காலனாகப் பெயர் பெற்று அதற்குரிய கதையாக நீண்டு உருவாகிக் கண்ணுக்குக் காட்டப்பட்டு விழாக்கள் நடத்தப் பெற்றுப் பலரால் வணங்கப் படுகிறது.' அழிக்கும் நெருப்பும், பொங்கும் கடலும், வீசுங் காற்றும், இடித்து அலறும் இடியும், கொத்திக் கொல்லும் பாம்பும் பெற்றன. 'விழாவெடுத்துக் கொண்டாடப் பட்டது. 'இத்தகைய கொண்டாட்டங்களில் நடத்தப் பெறும் கலைகளையும் சமய நெறிகளைப் புலப்படுத்துவதற்காக உருவாக்கப்பட்ட கலைகளையும் சமயச்சார்பு கலைகள் என்று அழைக்கலாம். நாட்டுப் புறத்தில் இத்தகைய சமயச் சார்பு கலைகளே மிகுதியாக நடத்தப்பட்டு வருகின்றன. சமயவுணர்வும் அச்சவுணர்வும் மிக்க பாமர மக்கள் இத்தகைய கலைகளுக்குப் பேராதரவு கொடுப்பதுடன் பெருமதிப்பையும் கொடுத்து வளர்க்கின்றனர். சமயச் சார்புக் கலைகளைப் பல பகுதிகளாகப் பிரிக்கலாம்

## வழிபாட்டுக் கலைகள்

இறைவழிபாட்டுக்கு உதவுமாறு பலவிதமான நாட்டுப் புறக்கலைகள் நடத்தப் பெறுகின்றன. அவை பெரும்பாலும்

ஊர்த் தெய்வங்களுக்கு விழா நடத்தும் போது நடைபெறு கின்றன. குறிப்பிட்ட தெய்வங்களுக்குக் குறிப்பிட்ட கலைகள் என்று வகுக்கப்பட்டுள்ளன. பெரும்பாலும் அனைத்து சமயச் சார்புக்கலைகளும் இறைவணக்கத்துக்காகவே நடைபெறு கின்றன இருப்பினும் அவைகளுக்குள்ளும் நுட்பமான வேறுபாடுகள் இருப்பதைக் கண்டு மேலும் அவை பிரிக்கப்படு கின்றன. இத்தகைய கலைகள் விழாக் காலங்களில் கோயில் மூன்றிலிலும் அல்லது தெய்வங்கள் தெரு உலாக்கள் வரும் போது தெருக்களிலும் நடத்தப்படுகின்றன. ஆலயங்களுக்குச் செல்லும் வழியிலும் ஊர்ச் சந்திகளிலும் கலைகள் நடைபெறுவது உண்டு. மனிதன் தன்னை வருத்தியும் உருமாற்றியும் இத்தகைய வணக்கக் கலைகளை இயற்றுகிறான். அதன் முக்கிய நோக்கம் இறையருளைப் பெறுவதேயாகும். இத்தகைய கலைகளை நடத்துவதற்கு முன் பலவிதமான நோன்புகள் செய்வதும் வழக்கம் கலைஞன் தன்னைப் புனிதப் படுத்துவதற்காக இத் தகைய நோன்புகளைக் கையாளுவதாகக் கருதலாம்.

வழிபாட்டுக்கு உரிய கலைகளை மூன்று விதமாகப் பிரித்துக் காணலாம். அவை மனிதவுரு, விலங்கினவுரு, பூதவுரு ஆகும். கலைகள் இத்தகைய மூன்றுவகை உரு அமைப்பில் விழா நடைபெறும்போது நடத்தப்படுகின்றன. வேறுவேறு விதமான இசைக் கருவிகளையும் ஆடல் முறைகளையும் கொண்டு இவ்விதக் கலைகள் நடத்தப்படுகின்றன. பலவிதமான திறமைகளை இந்தக் கலைகள் மூலம் மக்களுக்குக் காட்ட கலைஞன் நாடுவதினால் இவை நாளுக்கு நாள் கலைத் தன்மையில் வளர்ந்து பலவகையில் மாற்றமடைந்து உள்ளன. தொடக்கத்தில் அவைகளின் தோற்றம் மிக எளிமையானதாகத் தான் இருந்திருக்க வேண்டும்.

மனிதன் தன் உருவத் தோற்றத்தைப் பெருமையாகக் கருதி அதற்கே சிறப்பிடம் கொடுத்து நடத்தும் கலைகள் மனிதவுருக் கலைகளில் அடங்கும். சில உயிரினவுருவங்களுக்கு உயர்வு தந்து அவற்றைக் கொண்டு நடத்தும் கலைகளை உயிரினவுருக் கலைகளாகக் கருதலாம். பூதவுருவங்களை அச்சம் தரும் முறையில் அமைத்து அவற்றைத் தாங்கி ஆடுவதைப் பூதவுருக் கலைகள் என்று அழைக்கலாம். புராணக் கதைகளில் காண்பவர்களைக் கற்பனை ஆற்றலால் உருவாக்கி இத்தகைய பூத உருவங்களை மனிதன் படைத்துள்ளான். ஆயினும் இறை வணக்கமே முக்கியக் கூறாகக் காண்பதினால் இவற்றை இத்தொகுதியில் அடக்கி விளக்கம் தரப்படுகிறது.

இத்தகைய கலைகள் மிகுதியாக ஆடல் கலையாகவே நடத்தப் பெறுகின்றன. பாடல்கள் இணையலாம். கருவிகளின் இசை உறுதியான துணையாக அமைகிறது. வெவ்வேறு ஆடலுக்கு வெவ்வேறு இசைக் கருவிகள் இணைக்கப்படுகின்றன. ஆடல்களும் அவற்றுக்குத் தக்கவாறு மாற்றம் பெற்று நடை பெறுகின்றன. கலையில் ஈடுபட்டிருப்பவர்கள் தங்களுடைய கலைத்திறனால் காண்பவர்களையும் இறைபற்றுக்குள் கவர்ந்து இழுக்கின்றனர். கலைஞரும் காண்போரும் இத்தகைய கலைகளின் முக்கிய நோக்கமான இறைப்பற்றில் ஒன்றிவிடுவதே இவற்றின் சிறப்பாகக் கருதப்படும். வழிபாட்டுக்கு உரிய கலைகள் தமிழ்நாட்டுச் சிற்றூர்களில் மிகச் சிறப்பாகப் போற்றப்பட்டு வளர்க்கப்படுகின்றன,

**தெய்வமேறல்**

தெய்வமேறியதால் நடைபெறும் ஆடலையும் பாடலையும் கலைகளுக்குள் சேர்க்க முடியுமா என்பது சரியான வினாவே. கலைகள் மனிதனின் திறமையால் நடத்தப்படுவன. ஆனால் தெய்வமேறல் என்பது மனிதனுக்குள் தெய்வ ஆற்றல் புகுந்து செயல்படுவது ஆகும். நாட்டுப்புற ஆலயங்களில் தெய்வமேறிய ஆடல்கள் மிகப் பரவலாக நடைபெறுவதைக் காணலாம். மனிதன் தெய்வ ஆவேசம் கொண்டு ஆடும் போது அவனைப் பிறர் தங்களைப் போன்ற மனிதனாக மதிப்பது இல்லை. தாங்கள் வணங்கும் தெய்வம் தங்கள் முன் நடமாடுவதாகவே நம்பிப் பணிகின்றனர். ஆடுவோனைச் ‘சாமியாடி’ என்றே அழைப்பர். அம்மனுடைய அருள் ஏற்று ஆடுபவனை ‘அம்மன் கொண்டாடி’ என்று கூறி இறைப்பற்றுடன் மதிக்கின்றனர். அவன் ஆட்டம் நீங்கிச் சாதாரணமாக இருக்கும் போதும் அவனிடம் நாட்டுப்புற மக்கள் ஒரு வகையான மதிப்பு வைத்துப் பழகுவதைக் காணலாம். இவ்வகையான ஆடலைக் கலைக்குள் அடக்குவது பொருந்துமா என்பதைச் சிந்திக்க வேண்டும்.

வெவ்வேறு தெய்வங்களுக்கும் அவற்றிற்கு உரிய கதை களுக்குத் தக்கவாறு ஆடல்கள் நடை பெறுகின்றன. அதை ஊர் மக்கள் மிகவும் விரும்பிப் பார்க்கிறார்கள். ஆடலில் கலை வுணர்வு துளிர்க்கிறது. அந்தந்த தெய்வங்களுக்கு உரிய கருவி களைத் (ஆயுதங்கள்) தாங்கிச் சாமியாடிகள் ஆடும் போது ஆட்டத்தில் ஒரு முறையமைப்பு தோன்றுகிறது. அது பார்வைக் குச் சுவையாக அமைகிறது. அத்தகைய ஆடல்களில் இருக்கும் தெய்வவுணர்வை மக்களால் மாற்றிக் காண முடியாவிட்டாலும்

அவற்றிலிருக்கும் கலைத் தன்மையைப் பாராட்டாமல் இருக்க முடியவில்லை. இறையீட்டுபாட்டுடன் அந்த ஆடல் பாடல் களிலுள்ள கலைத்திறன் மக்களின் இன்பத்துக்கு வழிகாட்டியாக அமைவதோடு மட்டுமல்லாமல் கலை உணர்வுக்கு நல்ல விருந் தாகவும் அமைகிறது. ஆகையினால் தெய்வமேறலைக் கலை களில் அடக்கி விளக்கம் கூறுவது தவறாகப் படவில்லை.

## நோயகற்றல்

மனிதனுக்கு நோய் தோன்றுவது இயல்பு. அது உடல் பிணி யாகவும் மன நோயாகவும் இருக்கலாம். நோயற்ற வாழ்வையே மனிதன் விரும்புகிறான். ஆனால் நோய் பலசமயம் அவனை வாட்டி வதைக்கிறது. நோய் ஏன் ஏற்படுகிறது என்பதை அவனால் சரியாக அறிய முடியாத காலம் இறையின் தூண்டு தலால் தான் நோயுற்று வருந்துவதாக நினைக்கிறான். இறை வணக்கத்தினால் அத்தகைய அவதியிலிருந்து தப்புவதற்கு வழி பிறக்கும் என்று நம்புகிறான் ஆகையினால் கடவுளின் கோபத்தைத் தணித்துத் தன் நோயைத் தீர்க்க வேண்டுதல் செய்கிறான். வேண்டுதல் சில கலைகள் மூலம் செய்யப்படுகிறது.

பெரும்பாலும் தொத்து நோய்கள், பேய் பிடித்தல் ஆகிய வற்றிற்கே அவன் அதிகம் அஞ்சி நடுங்குகிறான். தன்னுடைய மருத்துவ ஆற்றலுக்கு அப்பால்பட்டதாக அவற்றைக் கருதி இறையுதவியை நாடித்துடித்துப் பணிகிறான். தொத்துநோயான வைசூரிக்கு 'அம்மை விளையாட்டு' என்றே பெயர் கொடுத் துள்ளான் அம்மன்சாமி கோபம் கொண்டு தன் உடலில் தீய விதைகளை விதைத்து வதைப்பதாக நம்புகிறான். இறந்தவர் களுடைய ஆவியானது அமைதியடையாது உயிருடன் இருப்பவர் களைத் தீங்கு செய்யும் ஆற்றலுடையது என்று கருதுகிறான். அத்தகைய தீய ஆவிகளின் பிடியை விலக்குவதற்குப் பலவித மந்திர தந்திரங்களை கையாள்கிறான். அவை கலையாக உரு வாகியுள்ளன.

இத்தகைய நோயகற்றும் கலைகளை இரு கூறாகப்பிரித்துக் காணலாம். ஒன்று நோய் வராது தடுக்கும் கலைகள்; இன்னொன்று நோயுற்ற பின் அவற்றை மாற்றுவதற்காக நிகழ்த்தப்படும் கலைகள். இரண்டுக்கும் மனிதனின் நோய் பற்றிய அச்சமே காரணமாக உள்ளது. இக்கலைகள் மறை வாகவே பெரும்பாலும் நடத்தப் படுகின்றன. குறிப்பிட்ட பயிற்சியுடையவர்களே இவற்றை நடத்த உரிமையுடையவர்கள்.

பலவிதமான கட்டுப்பாடுகளுடன் இவை நடத்தப் படுகின்றன. மந்திர விதிகள் கடுமையாகத் தோன்றும். இத்தகைய கலைகள் மனிதனுக்கு அச்சவுணர்வைப் பெருக்கும் தன்மையுடன் காணப்படுகின்றன.

## தொன்ம விளக்கக் கலைகள்

தொன்மம் என்பது பழமையைக் குறிப்பது. முன் னடப்புகளை விளக்கும் தரமான கலைகளைத் தொன்ம விளக்கக் கலைகளாகக் குறிப்பிடலாம். நாட்டுப் புற மக்கள் பல தெய்வங்களை வணங்கும் பழக்கம் கொண்டவர்கள். ஒவ் வொரு தெய்வத்துக்கும் தனித் தனி கதைகள் இருக்கும். முன்னோர் வணக்கமும் பல இன மக்களிடம் காணப்படுகிறது. அவர்களுக்காக நடத்தப்படும் விழாக்களில் முன்னோர் வரலாறு விளக்கப் படுவதைப் பின்னோர் மிகவும் விரும்பினர். இவை தவிர நாட்டில் பரவலாக வழங்கப்படும் இதிகாச நிகழ்ச்சி களையும் கலைகள் வாயிலாக அறிய மக்கள் விரும்பினர். இத்தகைய தொன்ம விளக்கங்கள் பெரும்பாலும் ஆடல் பாடல் முதலிய கலைகளின் மூலம் மக்களுக்குத் தரப்படுகின்றன.

இத்தகைய தொன்ம விளக்கச் செய்திகளை மக்கள் பல முறை பல வழிகளில் அறிவதால் அவை அவர்களுக்கு நன்கு பழக்கப்பட்டவைகளாகவே இருக்கும். இருப்பினும் அவற்றை மேலும் மேலும் கேட்டு இன்புற நாட்டுப்புற மக்கள் அலுப் படைவதே இல்லை. பலவிதமான கலைகளை உருவாக்கி அவற்றின் வாயிலாக வேறு வேறு முறைகளில் தாங்கள் நன்கு தெரிந்த பழங்கதைகளைப் புதிய அமைப்பாகக் கண்டு களிக்க மக்கள் ஆவல் படுகின்றனர். இதற்காக எத்தனையோ கலைகள் தமிழ் மக்களிடம் உள்ளன. அவற்றில் உயிர்ப்பும் துடிப்பும் மிகுதியாகக் காணப்படும்.

கலைஞர்கள் பலவிதமான புதிய உத்திகளைக் கையாண்டு தொன்ம விளக்கம் செய்கின்றனர். அத்தகைய புதுமைகள் மக்களால் மிகவும் சிறப்பாகப் பாராட்டப்படுகின்றன. தெரிந்ததைப் புதுமையாகப் பெறுவதில் நாட்டுப்புற மக்களுக்கு இருக்கும் மகிழ்ச்சி அளவிட்டுக் கூற இயலாது. அவர்கள் பழமை விரும்பிகள் என்றாலும் புதுமைப் பொலிவை வெறுக் காதவர்கள் என்பதை இதன் வாயிலாக நன்கு அறியலாம். புதுமை என்ற பெயரில் பழமைச் செய்திகள் சிறிது மாறுபட் டாலும் அவற்றை ஒப்புக்கொள்ள மக்களின் மனம் சிறிதும்

இடம் தருவதில்லை. ஆகையினால் தொன்ம விளக்கக் கலைஞர்கள் மிகவும் கவனமாகவே முன் செய்திகளைத் தொகுத்துத் தரவேண்டியதாகிறது.

இறைவணக்கக் கூறுகளும் இத்தகைய கலைகளில் இடம் பெறும். இருப்பினும் தொன்ம விளக்கமே இவற்றில் பெரு நோக்காக இருப்பதினால் இத்தகைய கலைகள் தனிப் பிரிவாக அமைக்கப் படுகின்றன. பலவிதமான இயற்கை இகந்த நிகழ்ச்சிகள் தனிப் பிரிவாக அமைக்கப் படுகின்றன. பலவிதமான இந்த நிகழ்ச்சிகள் இக்கலைகள் மூலம் விளக்கப்படும் மக்கள் அவற்றை எக்காரணம் பற்றியும் ஒதுக்குவதில்லை, மாறாக அவற்றை நம்பி ஏற்றுக் கொள்கின்றனர். கலை நிகழ்ச்சிகளில் அவை விளக்கம் பெற்று பாமர மக்களை மிகச் சிறப்பாகக் கவர்கின்றன. வியப்புறு செயல்களாக மதித்துப் பாராட்டுகின்றனர். கலைச் செய்திகளைப் பற்றி அறிவு ஆராய்ச்சி செய்யாது கலையுணர்வுடன் விரும்பி ஏற்று மகிழும் பொதுத் தன்மையை நாட்டுப் புற மக்களிடம் பரவலாகக் காண முடிகிறது. ஆய்வுக்கு இடமளிக்காத அசையா நம்பிக்கையுடன் நாட்டுப் புறக் கலைகளை மக்கள் அநுபவித்து இன்பம் காண்கிறார்கள்.

முன் வரலாற்றை அறியும் ஆவலும், பெரும் நம்பிக்கையும் இறை வரலாற்றைப் புனிதமாகக் கருதும் பண்பும், இசைப் பற்றும், எளிமையான கலைகளைப் பெருமையாக ஏற்றுக் கொள்ளும் இயல்பும், நுட்பமான ஆய்வுக்கு இடம் கொடாத தன்மையும் நாட்டுப் புற மக்களிடம் அதிகம் இருப்பதினால் தொன்ம வரலாற்றுக் கலைகள் அன்று போல இன்றும் மக்களிடம் நலம் சிறக்க வாழ்ந்து கொண்டிருக்கின்றன.

புதுமையை அவர்கள் ஒதுக்குவதில்லை. பழமையான முறைகளைக் கலைஞர் கையாண்டு இத்தகைய தொன்ம விளக்கங்களைத் தந்தாலும் மக்கள் அவற்றை மறுத்து ஒதுக்குவது இல்லை. பழங்கதைக்குப் பங்கு ஏற்படாது கலைஞர் நன்கு பார்த்துக் கொள்ள வேண்டியது மிகவும் தேவையாக உள்ளது. இறைவன் மனிதனுக்கு மேற்பட்டவன் என்ற நம்பிக்கை மக்களுக்கு இருப்பதினால் விளக்கத்தில் காணப்படும் மீவியல்பு செய்திகள் கதைகளில் காணப் பெறுவது போன்று மக்களால் மிகவும் சிறப்புடன் ஏற்றுக் கொள்ளப் படுகின்றன. இத்தகைய தொன்ம விளக்கக் கதைகள் தமிழ் நாட்டில் மிகவும் முக்கியமாகக் கருதப்படுகின்றன.

**நோன்புகள்**

நல்லவை நடக்கவேண்டும் என்றும் நினைத்தவை ஈடேற வேண்டும் என்றும் சில நோன்புகள் நோற்பது வழக்கம். அவைகளை நடத்தும் போது சிலவகையான கலை நிகழ்ச்சிகளை நடத்துவது உண்டு பலவிதமான மரபு முறைகளைக் கொண்டு இவ்விதமான கலைகள் உருவாக்கப்படும். இறையருளை வேண்டுவதினால் இவை சமயச் சார்புடன் இணைக்கப்படுகின்றன.

சிலம்புகழி நோன்பு பண்டைய தமிழ் இலக்கியத்தில் குறிக்கப் பட்டுள்ளது. அதில் கலை நிகழ்ச்சிகள் இடம் பெற்றுள்ளனவா என்பதைப் பற்றி அறிய முடியவில்லை. தமிழ் நாட்டின் தென்பகுதியில் முன்பு பெண்கள் காதுகளை நீளமாக வடித்துப் பொன்னாலான நகைகள் அணிவது வழக்கம். பொன்னணி பூட்டுவதற்கு முன்பு காதுகள் நன்றாக வடிந்து நீளுவதற்காக ஈயத்தாலான குணுக்குகளை (வளையம்) அணிவது வழக்கம். பெண்கள் ஒரு பருவமடைந்ததும் ஈயக்குணுக்குகளை அகற்றிப் பொன் நகைகள் பூட்டுவர். இதற்குக் 'குணுக்கு கழற்றும் நோன்பு' என்று பெயர். இதனைப் பலர் விழாவாக நடத்திச் சிலவகைக் கலை நிகழ்ச்சிகளைப் பெண்களைக் கொண்டு செய்வர். இவற்றை இவ்வகையில் இணைக்கலாம். இத்தகைய வழக்கம் இப்பொழுது காது வடிக்கும் பழக்கம் இல்லாமையால் மறைந்து விட்டது.

நவராத்திரியை ஒட்டி தஞ்சாவூர் பகுதிகளில் மகர் நோன்பு நடத்தப்படுகிறது. பண்டிகையின் பொழுது வீடுகளில் கொலு வைக்கப்படுகிறது. பின்னர் பெண்கள் தங்களுடைய குழந்தைகளுக்குப் பலவிதமான வேடம் புனைந்து நடிக்கச் செய்வர். குழந்தைகள் தாங்கள் ஏற்றுள்ள பாத்திரங்களின் உணர்வுகளுக்குத் தக்கவாறு நடிக்கப் பழக்கப்பட்டிருப்பார்கள். இளமையில் ஊட்டப் பெறும் கலையுணர்வு அவர்களுடைய பிற்கால வளர்ச்சிக்குப் பெருந்துணையாக அமையும். தஞ்சாவூரில் மகர் நோன்புச் சாவடி ஒன்று உள்ளது. அங்கு பல வீட்டுக் குழந்தைகளும் கூடித் தங்கள் கலை நிகழ்ச்சிகளை நடத்துவர். அதைப் பலர் கண்டுகளித்துச் செல்வது இன்றும் வழக்கத்தில் உள்ளது.

தாசிகள் நோன்பும் ஒரு கலை நிகழ்ச்சியாகத் தஞ்சாவூரில் நடைபெறுகிறது. அட்டகோடி விழாவின் போது தாசிகள் ஒன்று கூடி குறவஞ்சி நாடகங்களை ஒரு நோன்பாகக் கருதி நடிப்பர். இன்றைய நிலையில் அந்தக் கலை நிகழ்ச்சிகள் நாட்டுப்புறக் கலைப்பண்புகள் மாறித் திருந்திய முறையில் நடத்தப் பெறுகின்றன.

## குறி சொல்லல்

குறி சொல்லும் நிலையிலும் பல கலைகள் தமிழ்நாட்டில் நடைபெறுகின்றன. இறையுணர்வைப் பின்பற்றியே குறி சொல்லப்படுவதினால் சமயச் சார்புடன் இந்தக் கலைகள் இணைக்கப்படுகின்றன. தெய்வமேற்று ஆடுகிறவர்கள் பலர் பின்வருவது முன்னுரைக்கும் திறம் பெற்றுள்ளதைக் காணலாம். சரியாகவும் தவறாகவும் குறிகள் அமையினும் நாட்டுப்புற மக்கள் அவர்களை நாடிச் செய்கின்றனர்.

குடுகுடுப்பைக்காரர் வீடு வீடாக வந்து குறி சொல்லி பொருள் பெற்றுச் செல்வதை இன்றும் பல ஊர்களில் காணலாம். சிலர் பாடியும் ஆடியும் குறி சொல்வது கலையுணர்வுடன் அமையும். இராப்பாட்டாளிகள் என்ற ஒரு கூட்டத்தில் இரவில் வீட்டுக்கு வீடு சென்று குறி சொல்லிப் பாடுவர். அடுத்த நாள் காலையில் பணமோ பொருளோ பெற்றுச் செல்வர். இவர்கள் பெரும்பாலும் குறிப்பு அறிவதில் திறமையுடையவர்களாகக் காணப்படுவர். சோதிடம், சித்து வேலைகள் தெரிந்திருப்பர். இவர்களைச் சில இடங்களில் 'கோணங்கிகள்' என்று மக்கள் கூறுகிறார்கள். பழங்குடிகளைச் சேர்ந்தவர்களாத் தோன்றுகிறார்கள்.

## வகைப் பாட்டின் தொகுப்பு

நாட்டுப்புறக் கலைகளைச் சமூகச் சார்புக் கலைகளாகவும் பிரித்துக் காண்பது மிகப் பொருத்தமாகவும் உள்ளது. அவை தனித்தனியே பல பிரிவுகளுக்கு உட்படுவதைக் காணலாம். இத்தகைய பிரிவுகளில் அடங்கும் தமிழர் நாட்டுப்புறக் கலைகளைத் தனித்தனியாகவும் விளக்கமாகவும் அறிய வேண்டியது தேவை. சில கலைகள் அழிவுறும் நிலையில் உள்ளன. ஆனால் பல கலைகள் சீரும் சிறப்புமாக இன்றும் நாட்டுப்புற மக்களின் இனிய ஆதரவில் வளர்ந்து கொண்டு வருகின்றன. அவற்றை இப்பாகுபாட்டுள் அடக்கி விளக்கமாகக் காணலாம்.

# வகைப்பாடு


நாட்டுப் புறக் கலைகள்
சமூகம்
சமயம்
வாழ்க்கைப் பருவம்
தொழில்
போரியல்பு
சீரமைப்பு
வழிபாடு
தெய்வ மேறல்
நோயகற்றல்
நோன்பு
தொன்மம்
குறி சொல்லல்
பிறப்பு
பூப்பு
திருமணம்
இறப்பு
மனிதவுரு
விலங்கினவுரு
பூதவுரு
தடுப்பு
தீர்ப்பு
இதிகாசம்
தெய்வக் கதைகள்
முன்னோர் வரலாறு

# சமூகச் சார்புக்கலைகள்

## தமிழர் சமுதாயமும் கலைகளும்

பழமையான பண்பாடு மிக்கதாகத் தமிழருடைய சமுதாயம் விளங்குகிறது. இயற்கையுடன் பொருந்திய இயல்பான வாழ்க்கை வாழும் குடியினராகத் தமிழர் பண்டை இலக்கியங்களால் காட்டப் பெறுகின்றனர். பலவிதமான பாகுபாடுகள் சமுதாயத்தில் இருந்ததாக அறிய முடிகிறது. இத்தகைய பாகுபாடுகள் நில அடிப்படையில் அமைந்திருந்தன. பல விதமான தொழில்கள் செய்துள்ளனர். மக்களிடத்தில் பொருளாதார ஏற்றத் தாழ்வுகள் இருக்கத்தான் செய்திருக்கும். ஆயினும் அனைவரும் கூடிக் கலந்து கலைகளை ஆதரித்துள்ளனர்.

இசையும் நடனமும் நாடகமும் காலத்துக்குத் தக்கவாறு சிறப்புற்று இருந்தன. பொதுவியலாக நடத்தப்பெற்ற கலைகள் அனைத்து மக்களுக்கும் பொதுவான நாட்டுப்புறக் கலைகளாகவே இருந்திருக்க வேண்டும். குரவைக்கூத்து, துணங்கைக் கூத்து, மல்லாடல் ஆய்ச்சியர்குரவை, குன்றக் குரவை போன்ற கூத்துக்களும், வரிப்பாடல்கள், முகவைப் பாட்டு ஏர் மங்கலம் முதலிய பாடல்களும், வாலசரித நாடகம், வள்ளிக் கூத்து போன்ற நாடகங்களும் நடத்தப்பெற்றுள்ளனவாக அறிகிறோம். மேலும், கொடு கொட்டி, பாண்டுரங்கம், குடைக் கூத்து, பேடியாடல் போன்ற பதினொரு வகை ஆடல்கள் மிகச் சிறப்புற்றிருந்தன. இவற்றிலிருந்து தமிழ் மக்களுடைய கலைப் பற்று நன்கு விளங்கும். பாணர், பொருநர், கூத்தர், விறலியர் போன்ற இனத்தினர் கலைக்குழு அமைத்து பல்வேறு கலை நிகழ்ச்சிகள் நடத்திப் பரிசிலும் பாராட்டும் பெற்றுச் சிறந்துள்ளனர்.

மிகவும் நுட்பத் திறனுடன் நடத்தப்படும் சாக்கைக் கூத்து சேர நாட்டில் சிறப்புற்று இருந்ததாகவும் சிலப்பதிகாரத்தின் வாயிலாக அறிய முடிகிறது. இன்று அது பல்வேறு மாற்றங் களுடன் வளர்ந்து படர்ந்து கூடியாட்டம், கதகளி போன்ற திருந்திய கலைகளாகக் கேரள நாட்டில் நடத்தப்படுகிறது. சோழ மன்னர்களின் கல்வெட்டுகளிலும் இத்தகைய சாக்கைக் கூத்தைப் பற்றிய செய்திக் குறிப்புகள் காணப்படுகின்றன. நாட்டுப்புறக் கலைஞர்களிடம் தோன்றிய சாக்கைக் கூத்து கோயில் கலைஞர்களிடம் வளர்ந்து செழித்து இன்று கேரளக் கலைஞர்களால் சீராக்கம் பெற்று சிறப்பான கலையாக மதிக்கப் படுகிறது.

பலவிதமான கலைகளின் வாழ்விடமாகத் தமிழ்நாடு பண்டைக் காலத்திலிருந்து இன்றுவரை விளங்குகிறது. தமிழர்களுடைய வாழ்வில் கலைகளுக்கு ஒரு முக்கியமான இடம் கொடுக்கப்பட்டுள்ளது. தமிழர்களுக்கு மிகச்சிறப்பான கலை வரலாறு இருப்பது அவர்களது பண்பாட்டுச் சிறப்பை நன்கு புலப்படுத்துவதாகும். கலைகள் தமிழர்களுடைய சமுதாய வாழ்வுடன் இணைந்து வளர்ந்துள்ளன. சமயச் சார்புக் கலைகள் மிகுதியாகத் தமிழர்களிடம் காணப்பட்டாலும் அவர்கள் வாழ்ந்து வரும் சமூகத்துடன் ஒட்டிய பல கலைகள் இல்லாமல் இல்லை. அவை வீட்டுக்கு வீடும் இனத்துக்கு இனமும் நாட்டுக்கு நாடுமாக வளர்ந்துள்ளன. மனித வாழ்வை இயன்றவரை இன்பமாக அனுபவிக்க இத்தகைய கலைகள் பயன்பட்டுள்ளன. இன்றும் அவை நாட்டுப் புறங்களில் மிகச் சிறப்பாக வளர்ந்து உயிர்ப்புடன் காணப்படுகின்றன. மனித வாழ்க்கையின் பருவங்கள், செய்யும் தொழில், போராற்றல், சமூக நல்வாழ்வு ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்டு பலவிதமான கலைகள் நடைபெறுகின்றன. அவற்றுள் சமயவுணர்வுக் கலப்பு இல்லாமல் இல்லை. இருப்பினும் முக்கிய நோக்கம் கருதிச் சமூகச் சார்புக் கலைகளாகவே அவற்றை ஏற்க வேண்டியதாகிறது.

## மனித வாழ்க்கைப் பருவக் கலைகள்

மனித வாழ்க்கையின் முக்கியமான பருவங்களாக பிறப்பு, திருமணம், இறப்பு ஆகியவற்றைக் கருதலாம். பெண்ணின் வாழ்வில் பூப்பெய்தலும் சிறப்பாக மதிக்கப் படுகிறது. இப்பருவ நிலைகளைப் பலவிதமான கலைகளால் மக்கள் சிறப்பிக்கின்றனர். பிறந்தவுடன் மகிழ்வுடன் குரலை ஒலி செய்து கொண்டாடுவது இன்றும் பல ஊர் மக்களிடம் காணப்படும் செயலாகும். பின்னர் குழந்தையைப் பெற்ற தாய் தந்தையரை வாழ்த்திப் பாடுவதும் உண்டு. குழந்தைக்கு நல்ல வாழ்வு வாய்க்கவேண்டும் என்று பெண்கள் பாடுவதையும் சில இடங்களில் காணலாம்.

## தாலாட்டுப் பாடல்

குழந்தையைத் தொட்டிலில் இட்டு பலவாறாகப் பாடுவது பெண்களின் வழக்கம். முதல் நாள் தொட்டில் கட்டும்போது அந்த நிகழ்ச்சி ஒரு குடும்ப விழாவாக நடத்தப் படுவதும் உண்டு. ஊர்ப் பெண்கள் பலர் கூடித் தொட்டிலை ஆட்டிப் பாடுவார்கள்

பின்னர் தாயாரால் பாட்டுடன் தொட்டில் ஆட்டப்படும். அப்பொழுது மிகச் சுவையான பாடல்களை அவள் பாடுவதைக் கேட்கலாம்.

செல்வத்துளெல்லாம் சிறந்த செல்வம் பிள்ளைச் செல்வம் என்பது உலகக் கருத்து. பிள்ளையில்லாதச் செல்வத்தைக் கள்ளியில் சோறுக மதிப்பர். குழந்தைப் பேறு வாய்க்கப் பெறாதோர் இறைவனை வேண்டுவது வழக்கம். பிள்ளை பிறந்துவிட்டாலோ மகிழ்ச்சிக்கு அளவே இருக்காது. அவ்வாறு தவமிருந்து பெற்ற குழந்தையை ஒரு பெண் தொட்டிலில் படுக்க வைத்துப் பாடும் பாடலைக் கேட்கலாம்[1].

'கண்ணுமணி பொன்னுமணி கந்தருடைய வேலுமணி
வேலுமணி வேணுமென்று வெகுநாள் தவசிருந்தேன்
ஆத்துமணல் குவித்துவைத்து அருந்தவசு செய்கையிலே
மைந்தனில்லே என்று சொல்லி வேலவர் மடிப்பிச்சைதந்தாரோ
ஆத்துமணலில அருந்தவசு செய்கையிலே
பாத்திருந்த பரமசிவன் பாலகனேத் தந்தாரோ'

அரிதாகக் கிடைத்த குழந்தையை அந்தத் தாய் பெரிதாக மதித்துப் பாடுவதைக் காணலாம். முயன்று பெற்றதால் அந்தக் குழந்தைக்குப் பாராட்டும் பராமரிப்பும் மிக அதிகமாக உள்ளன.

இன்னொரு தாய் தொட்டிலை ஆட்டுகிறாள். குழந்தை அமைதியடையாது அழுது கொண்டே இருக்கிறது. தாய் வருந்துகிறாள். அதை அடக்கி உறங்கச் செய்ய வேண்டும். சூழ்நிலைக்கு ஏற்றவாறு பாடுகிறாள். குழந்தைக்குத் தன் பாடல் புரியுமா புரியாதா என்பதைப் பற்றி அவளுக்குக் கவலை இல்லை.

'ஆராரோ ! ஆரிரரரோ ! உன்னே அடித்தது ஆராரோ ?
அடித்தாரைச் சொல்லியழு — என் கண்ணே
ஆக்கினே கள் செய்திடுவோம் !
தொட்டாரைச் சொல்லியழு — என் கண்ணே
தோள்விலங்கு போட்டிடுவோம் !
அம்மா அடித்தாளோ அமுதூட்டும் கையாலே
பாட்டி அடித்தாளோ பாலூட்டும் கையாலே
அண்ணன் அடித்தானோ அணைத்தெடுக்கும் கையாலே
அத்தை அடித்தாளோ அதலிப்பூ செண்டாலே'

---

(1) தாலாட்டுப் பாடல்கள் குமரி மாவட்டத்துத் தாயார் களின் வாயில் கேட்கப் பட்டவை. ஏனைய மாவட்டங் களிலும் இத்தகைய பாடல்கள் உள்ளன.

இவ்வாறு பாடல் நீண்டு கொண்டே செல்கிறது. பாடல் உள்ளத்துள் எழுந்த உணர்ச்சியில் வெளிப்பாடாக ஊறிப்பாய் வதைக் காண வேண்டும். புரிந்தோ புரியாமலோ சொற்கள் ஒலிக் கோர்வையாக அமைகின்றன. பொருளும் உணர்ச்சிக்குத் தக்கவாறு பொருந்திச் சுவை கூட்டுகிறது ஆற்றொழுக்கான நடை இயல்பாக அமைவதே நாட்டுப்புறப் பாடல்களின் தனிச் சிறப்பாகக் காணப்படுகிறது.

குழந்தையை அரசனாகவும் தெய்வமாகவும் தலைசிறந்த மனிதனாகவும் மதித்துப் பாடும் பாடல்களும் உள்ளன. வருங்கால வாழ்வில் குழந்தை சிறப்புற்று வாழ வேண்டும் என்பது அனைத்துத் தாயரின் அயராத விருப்பம். குறையில்லாத அன்பும் நிறைந்த பற்றும் பாடும் பாடலில் குமிழியிட்டுப் பாய்வதைக் கண்டு இன்புறலாம். உலகத்திலிருக்கும் இனிமையான பொருட் களை எல்லாம் குறிப்பிட்டுக் குழந்தையை வாழ்த்தத் தாயுள்ளம் நாடுகிறது.

'என் கண்ணே மணியே கருத்துள்ள கண்மணியே
பொன்னே மயிலே என் கட்டிக் கரும்பே
தேனே பாலே என் திகட்டாக் கனியே
மானே மதியே என் மரிக் கொழுந்தே
குத்து விளக்கே என் கோபுரமே நீயுறங்கு'

ஒவ்வொரு சொல்லும் அன்பில் குழைத்தெடுத்த வெல்லக் கட்டிகளாக இனிக்கின்றன. நிறைந்த மனத்தில் நினைத்தவற்றை யெல்லாம் நீண்ட பாடலாக்கி மகிழும் தாயின் அன்பு உள்ளத்துக்கு இப்பாடல்கள் நல்ல சான்றாக அமைகின்றன. குழந்தையின் பேரில் தனக்கிருக்கும் தனியுரிமையை 'என்' என்ற சொல்லால் அடிக்கு ஒரு தரம் உறுதிப் படுத்த அந்தத் தாய் விரும்புவதைக் காணலாம்.

தாயின் அன்புக்கு அளவே இல்லை. தனக்கோ தன் பொருளுக்கோ எத்தகைய அழிவு நேரிட்டாலும் அதைப் பொருள் படுத்தாது தன் குழந்தையின் இன்பத்தையும் நல்வாழ்வையும் நாடுகிறாள் அருமை தாய். தாலாட்டில் இதைக் காட்டிப் பாடுகிறாள்.

'பாலும் அடுப்பதிலே பாலகனும் தொட்டிலிலே
பால் பொங்கிப் போனாலும் பாலகனை அழவிடுவேனோ
சோறும் அடுப்பதிலே சோழராசன் தொட்டிலிலே
சோறு பொங்கிப் போனாலும் சோழராசனை அழவிடுவேனோ'

இவ்வாறு பலவாறாகப் பாடும் தாயின் மனநிலையைக் கண்டு உணர வேண்டும். தாலாட்டுப் பாடல்கள் குழந்தையை அன்புப் பிடியில் சிக்க வைத்து அருமையாக வளர்க்க உதவுகிறது.

வையை வளநாடான மதுரையைக் குறிப்பிட்டு அங்கு வாழும் ஒரு தாய் தன் குழந்தையை மனமினிக்க வாய்மலர்ந்து தாலாட்டுப் பாடி தூங்க வைக்கிறாள்[2].

'வையை வளநாடு வடக்கிருக்கும் சோணாடு
சேரணாடு பார்க்க வந்தஎன் சொகுசான பசுங்கிளியே
பசுங்கிளியை யாரடுச்சா, யாரடுச்சா நீயழுக!'

அழுகையை நிறுத்த இவ்வாறு பாடிய அன்புத்தாய் தன் அருமைக் குழந்தையைப் பாராட்டிச் சீராட்டுகிறாள். பலவாறாகப் பாராட்டும் போது குழந்தையின் மாமனான தன் அண்ணனை நினைக்கிறாள். தாயின் கற்பனைச் சரடு முறுகித் தாலாட்டுக் கவிதை உருவாகி நீள்கிறது.

'வெள்ளி ஒளியோ மேகத்து மின்னொளியோ
தங்க ஒளியோ தாய்மாமன் பொட்டொளியோ
பிச்சிச் சரமோ பின்னலோடும் பூச்சரமோ
முல்லை யரும்போ வாசமுள்ள மரிக்கொழுந்தோ
அல்லி மகனோஎன் அண்ணனுக்கு ஆசைமருமகனோ
கொம்புக் கிளியோ கோதுபடாச் சர்க்கரையோ
வம்புக்கு அழுகாதேஉன் வாயெல்லாம் தேனொழுகும்!

மாமன் புகழ்பாடுவது தாலாட்டுப் பாடல்களில் மிகுதியாகக் காணப்படுகிறது. தாயானவள் தன் பிறந்த வீடு விட்டுப் புகுந்த வீடு சேர்ந்தவள். அண்ணனின் அன்பில் வளர்ந்தவள் கணவனின் இணைப்பில் வாழ்கிறாள். அண்ணனின் நினைப்பு அடிக்கடி அவளுக்கு வருவது இயல்பே. அதனைப் புலப்படுத்தும் வாயிலாகத் தாலாட்டுப் பாடல்கள் அமைகின்றன. குழந்தைக்கு மாமனைப் பற்றிக் கூறும் நிலையில் தாயின் அண்ணன் பற்று பீறிடுகிறது.

'குதிரையை அலங்கரித்துக் குதிரைமுகம் சிங்காரித்து
குதிரைக்குத் தீனிவைக்கும் கோவலரே உங்கள்மாமன்
யானையை அலங்கரித்து யானைமுகம் சிங்காரித்து
யானைக்குத் தீனிவைக்கும் அரசர்களே உங்கள்மாமன்
வாசலிலே வன்னிமரம் — என் வம்சமே இராசகுலம்
இராசகுல மாமனுக்கு—நீ இயைந்த மருமகனே'

---

(2) இப் பாடல்கள் மூன்றும் மதுரை மாவட்டத்தைச் சேர்ந்தவை.

பிறந்த வீட்டுப் பற்றும் பிள்ளைப் பற்றும் இணைந்த தாலாட்டுப் பாடலாக இது விளங்குகிறது. தாயர்கள் தாங்கள் பிறந்த குலத்தை உயர்வாக நினைக்கும் போக்கை இப்பாடலில் காணலாம். இது இயல்பானது. அதனைக் குழந்தைக்குத் தாலாட்டுப் பாடலாக உணர்த்துகிறாள்.

வீட்டுக்குவீடு தவழ்வது தாலாட்டுப் பாடல். வாய்க்கு வாய் அது மலர்ந்து மகிழ்கிறது. அன்பின் அடியாய்ப் பிறந்து பண்பின் அடியாய் வளர்ந்து இன்பக் கலையாய் இனிது நிலைத்து தமிழரின் நாட்டுப் புறக் கலையின் ஒரு மூக்கியப் பிரிவாகத் தாலாட்டுப் பாடல்கள் விளங்கி வருகின்றன.

## திருமணப் பாடல்கள்

திருமணம் ஒரு புனிதமான சடங்காக நடத்தப் படுகிறது. கருத்து ஒருமித்து காதல் வயப்பட்டு வாழ்வில் ஒன்றும் இயற்கை முறையை வாழ்க்கை நெறியாகக் கொண்ட தமிழர் காலப் போக்கில் பிறர் பொருத்தம் கண்டு திருமணச்சடங்கின் மூலம் இணைக்கும் மண வாழ்வினை முறையாக ஏற்றனர். பலர் முன்னிலையில் இறைவணக்கமும் இனியவர் வாழ்த்தும் கூடிக் கலக்க பல விதமான சடங்குகள் நடத்தி மணம் செய்யத் தலைப் பட்டனர். மணவினையின் பொழுது பலவிதமான கலை நிகழ்ச்சிகள் நடத்தப் பெற்றன. சமூகம் அவற்றைத் தேவை யாகக் கருதி ஒப்புக் கொண்டது. மண வாழ்வை 'ஆயிரங்காலப் பயிர்' எனக் கருதினர். அது காலங்காலமாகத் தொடரும் வாழ்வுக்குத் தகுந்த அடிப்படையாக அமைய. வேண்டும் என்றும் விரும்பினர். இதன் பயனாக நாளை நடப்பது நன்றாக இருக்க வேண்டும் என்று கருதினர். அதற்காக இறையருளை வேண்டினர். இன்ப வாழ்வை நினைத்தனர். சடங்குகளும் கலைகளும் சமூக கடமைகளை உள்ளடக்கி இன்பவாழ்வை நாடி இறைவனை வேண்டுவதாக அமைந்தன.

திருமண நிகழ்ச்சிகளின் ஊடே இனிமையான பாடல்கள் இறை வேண்டுதலாகவும் இன்பத் தூண்டுதலாகவும் பாடப் பெறுகின்றன. பெண்கள் மணமக்களைச் சூழ்ந்து நின்று வாழ்த்துவது பெரு வழக்காக உள்ளது. மணவினையினைச் சிறப்பித்தும் பாடுகின்றனர்[3],

(3) இந்தத் திருமணப் பாடல்கள் நெல்லை, குமரி மாவட்டங்களில் வைகுண்ட சாமியின் வணக்க முறை களைப் பின்பற்றுவோர் பாடுவதாகும்.

'மதனி கல்யாணம் மணவோல வாழ்த்தலுக்கு
சிவனே குருவான திருமேனி முன்னடவா
அய்யா நாரணரும் அம்மை உமையவளும்
தெய்வார் மனமிரங்கி திருமுகூர்த்தம் செய்யவே
அண்டரோடு தேவரும் அறியவே ஓலையிட்டு
கொண்டாடி இன்பம் குளிர்ந்தநதிபாய்து போல்
இவனிவளாம் என்றுசொல்லி இனங்குறித்துப் பெண்பேசி
கட்டுடைய பந்தலுக்குக் காலது நாட்டி
அவனி அறியவே அலங்காரம் இட்டனரே!
அனைவரும் கூடிடவே அங்கெல்லாம் இன்பமதே.
பட்டுக்குமேல் பட்டுடுத்திப் பந்தலிலே தானிருத்தி
மாப்பிள்ளையும் பெண்ணையும் மணவறையில் தானிருத்தி
தம்புராவும் கின்னரமும் வாசித்து நின்றிடவே
நடனசாலை தனைவருத்தி நாட்டியமும் ஆடிநிற்க
கலியாணப் பந்தலிலே கச்சேரியும் நடத்திடவே
அழகு கொலுவிருக்க ஆனந்தம் கொஞ்சிநிற்க
அரகரா என்றுசொல்லி அம்மையுமை தானெழுத்து
சிவசிவா என்று சொல்லி திருச்சரடு சாத்தினரே!

இப்பாடலில் மணம்பேசி, திருமணப் பந்தலிட்டு, மணமக்களை ஒப்பனை செய்து மணமேடையேற்றி மக்கள் முன்னிலையில் ஆடலும் பாடலும் இன்ப முழக்கம் செய்ய அனைவருடைய வாழ்த்துடன் மணமக்கள் திருநாண் பூட்டி வாழ்க்கையில் இணைந்த இன்ப நிகழ்ச்சி இசையுடன் விளக்கப்படுகிறது. இசை நிகழ்ச்சியும் நடனக் காட்சியும் கண்ணுக்கும் காதுக்கும் இன்பம் தருவது இயல்பாக விளக்கப்படுகிறது.

சீர்வரிசைகளைச் சிறப்பாகக் கொடுப்பதையும் பாடல் மூலம் குறிப்பிடுகின்றனர். தாய் மாமனுக்குத் திருமண விழாவில் சிறப்பிடம் கொடுக்கப்படுகிறது. எல்லாவிதமான சிறப்புகளும் செய்து மணமக்களை வாழ்த்துகின்றனர்.

'காயாம்பு மேனியர்க்குக் கட்டிலொன்று தான்போட்டு
தாயோடு தான்பிறந்த தாய்மாமன் தனையிருத்தி
கோப்புக் குண்டான குருவரிசை தான்கொடுத்து
சீதனங்களான சீர்வருசை சிறப்பாகக் கொடுத்தாரே''.
ஆல்போல் தழைத்து அறுகுபோல் வேரோடி
பால்போல் பொங்கிப் பதினாறும் தான்பெற்று
வாழ்வீர் வாழ்ந்திடுவீர் வையகத்தோர் தான்புகழ
வாழ்க வாழ்கவென்று வாழ்த்தினோம் நாங்களுமே!

பாடல்கள் மிகச்சுவையாகப் பாடப்படுகின்றன. இறையை வேண்டி இனிய வாழ்வை விரும்பி நல்வாழ்த்து தரப்படுகிறது. இத்தகைய திருமண வாழ்த்துப் பாடல்கள் பாடுவது தமிழ் நாட்டிலுள்ள பல இன மக்களின் வழக்கமாக உள்ளது. எதிர் கால வாழ்வு நல்ல முறையில் அமைய வேண்டும் என்ற அனைவருடைய நோக்கமும் இப்பாடல்களின் வாயிலாக அறிவிக்கப் படுகிறது.

இராமநாதபுரம் மாவட்டத்தில் சில இனத்தினரிடம் திருமணம் நடக்கும் போது பாடும் வழக்கம் இல்லை. ஆனால் மாப்பிள்ளை பெண்ணுக்கு ஆரத்தி எடுத்துக் கண்ணேறு படக் கூடாது என்ற கருத்தில் பாடும் வழக்கம் உள்ளது. மஞ்சள், குங்குமம் ஆகியவற்றைக் கரைத்த நீரை ஒரு தட்டில் ஏந்தி மணமக்களைச் சுற்றுகின்றனர். அப்பொழுது பாடல் எழுகிறது.

'ஆலாத்தி ஆலாத்தி
ஐந்நூறு ஆலாத்தி
முத்தாலே ஆலாத்தி
முன்னூறு ஆலாத்தி
பாக்காலே ஆலாத்தி
பலநூறு ஆலாத்தி
வெத்திலையால் ஆலாத்தி
வெகுநூறு ஆலாத்தி
குங்குமத்தால் ஆலாத்தி
கோடி கோடி ஆலாத்தி
மஞ்சளால் ஆலாத்தி
மங்கலமாய் ஆலாத்தி'

இவ்வாறு பாடிக் கண்ணேறு சுற்றித் தட்டிலுள்ள நீரைக் கொட்டி விடுகின்றனர். பாடல் கேட்பதற்கு மிகவும் சுவையுடையது. பெண்களே பாடுகின்றனர். வாழ்க்கை எந்த விதமான குறைபாடும் இன்றி மிகச் சிறப்பாக அமையவேண்டும் என்ற நல்ல நோக்கத்துடன் இத்தகைய சடங்குகள் நடத்தப்படுகின்றன.

சுற்றிச் சூழ்ந்துள்ள பெரியவர்களும், சுமங்கலியரும் வாழ்த்தினால் மணமக்களுடைய வாழ்வும் நன்றாக அமையும் என்று மக்கள் நம்பினர். வாழ்க்கையில் கேடுகளும், தீமைகளும் வருவது இயல்பு என்பதை அறிந்துள்ள மக்கள் அவை வராது இருக்க வேண்டும் என்று விரும்புகின்றனர். மணப் பாடல்களும்,

சடங்குகளும் இதனை நன்கு விளக்குகின்றன. வாழ்க்கையின் இன்பக் கட்டத்திலும் துன்பத்தைப் பற்றி அவர்களால் நினைக்காமல் இருக்க முடியவில்லை. இது நாட்டுப்புற மக்களின் வாழ்க்கை அறிவு முதிர்ச்சியைக் காட்டுவதாக உள்ளது. அன்பும் அனுபவமும் இவ்வாறு நடக்கும் கலைகளுக்கும் சடங்குகளுக்கும் தூண்டுதலாக அமைகின்றன.

## ஒப்பாரிப் பாடல்கள்

மனிதன் பிறப்பதும் வாழ்வதும் இறப்பதும் இயற்கையின் செயல்களாகும். பிறப்பது இன்பத்துடன் வரவேற்கப்படுகிறது. இறப்பது துன்பத்துடன் வெறுக்கப்படுகிறது. முன்னது தோற்றமாகவும் பின்னது மறைவாகவும் இருப்பதினுல் இரண்டும் இரு துருவ வேறுபாட்டுடன் மக்கள் மனதில் பதிகின்றன. வாழ்கை பிறப்பையும் இறப்பையும் இணைக்கும் பல்வேறு நிகழ்ச்சிகள் நிறைந்தது. வாழ்வின் தடம் மனித மனங்களை எவ்வாறு பாதிக்குமோ அவ்வாறு அவ்வாழ்வுக்கு உரிய மனிதன் மதிக்கப் படுகிருன். பிறருடன் இறந்தவருக்கு உள்ள உறவின் அளவைக் கொண்டு அவருடைய மறைவினால் ஏற்படும் துன்ப அளவைக் கணக்கிட்டுக் காணலாம். நெருங்கிய உறவு நெடுந்துயரையும், இணங்கிய உறவு இயலாத துயரையும், தூரவுறவு குறைந்த துயரையும் கொடுக்கும். பிறரின் நலம் நாடித் தன்னலம் பேணாத பெரியோரின் மறைவே மிகப்பெரும் துன்பச் சுமையாகப் பலரை வருந்தியழச் செய்யும்.

இறந்தோரை நினைத்து ஏங்கியழும் பாடல்களை ஒப்பாரிப் பாடல் என்று கூறுவர். அவற்றின் திருந்திய வடிவங்களாகக் கையறுநிலைப் பாடல்கள் அமைகின்றன. நாட்டுபுற மக்களிடையே இத்தகைய ஒப்பாரிப் பாடல்கள் மிக அதிகமாகப் பாடப் படுகின்றன. பெற்ற அன்னை இறந்து விடுகிறாள். பிள்ளைகள் அழுகிறார்கள். பாடல் நாட்டுப்புற அமைப்பில் ஊறி வழிகிறது.

**'என்னைப் பெத்த அம்மா !**
**கல்லுறுத்த மண்ணுறுத்த கானகம் போய்ப் படுத்தாயே**
**ஏந்தி யெடுத்துநீ இடது கொங்கை பாலூட்டி**
**வாரி யெடுத்துநீ வலது கொங்கை பாலூட்டி**
**வாயார முத்தமிட்டு வண்ணவண்ண திலகமிடுவாயே**
**என்னைப் பெத்த அம்மா !'**

உருக்கமான பாடலாக இது இன்னும் விரிவாக வளர்கிறது, நெருக்கமான உறவால் ஏற்பட்டுள்ள அவலம் படர்ந்துள்ளது. அருமையாக வளர்த்த அன்னையின் நினைவுகள் அலைமோதுகின்றன. இரும்பு மனத்தையும் இளகச் செய்யும் தன்மையுடையதாக இப்பாடல் விளங்குகிறது.

இறப்புச் சடங்குகளும் ஒப்பாரிப் பாடல்களில் இடம் பெறுகின்றன. 'வாய்க்கரிசி' போடும் வழக்கம் பாடலில் முளையிடுவதைக் காணலாம். தாங்க முடியாதத் துன்பச் சுமையுடன் அன்னையின் பிணத்துக்கு 'வாய்க்கரிசி' போடப்படுவதைப் பாடல் உணர்த்துகிறது.

'ஆசை அம்மா !
அள்ளித் தந்த கைமறந்து—நாங்கள்
அள்ளி விட்டோம் வாய்க்கரிசி !
சோறு தந்த கைமறந்து—நாங்கள்
சொரிந்து விட்டோம் வாய்க்கரிசி !
பிடித்து ஊட்டும் கைமறந்து—நாங்கள்
பிடித்து விட்டோம் வாய்க்கரிசி !'

இந்த உருக்கமான பாடலைக் குமரி மாவட்டத்தில் கேட்கலாம். மதுரை மாவட்டத்தில் தாயை இழந்தோரின் அவலக் குரல் இவ்வாறு கேட்கும்.

'ஏகாந்த மல்லி பூப்பூக்க கொடிமுருங்கை பிஞ்சு விட
கோவலர் பெற்ற மக்கள் கொழுந்திலேயே தாயிழந்தோம்
சீரகம் பூப்பூக்க சிறுமுருங்கை பிஞ்சு விட
சீமராசா பெற்ற மக்கள் சிறுசுலேயே தாயிழந்தோம்
மாடு மனஞ்சலித்தால் மந்தையிலே மேய்ந்தடையும்
கோழி மனஞ்சலித்தால் குப்பையிலே மேய்ந்தடையும்
மக்கள் மனஞ்சலித்தால் வையையாறு தேடணுமே.
திருச்சிக் கதவுக்கும் திண்டுக்கல் பூட்டுக்கும்
தீங்கில்லை எனறிருந்தேன்—இன்று
திருச்சிக் கதவுமில்லை திண்டுக்கல் பூட்டுமில்லை
தீங்கு வந்து நேரிட்டதே
பழனிக் கதவுக்கும் பட்டணத்துப் பூட்டுக்கும்
பழுதில்லை என்றிருந்தேன்—இன்று
பழனிக் கதவுமில்லை பட்டணத்துப் பூட்டுமில்லை
பழுது வந்து சேர்ந்திட்டதே [4]

இவ்வாறு தாயின் இழப்பு அழுகைப் பாடலாக படர்கிறது. பாடலில் அவலப் பொருளும் அருமையான கருத்தும் அழுத்தம் பெற்றுள்ளன.

---

(4) மதுரை மாவட்டப் பாடல்

கணவன் இறந்து விடுகிறான் கலங்கித் தவிக்கிறாள் விதவை யான மனைவி. தனக்கு வாழ்வுறுதியாக இருந்தவன் தன்னைத் துணையற்றவளாக்கிப் பிணமாகி விட்டதைத் தாங்க முடியாது வருந்துகிறாள். மனம் வெந்து புண்ணாகி வெடிக்கிறது, இடி விழுந்த மரமாகி விழுகிறாள். விம்மித் துடிக்கிறாள். இனிவரும் தன் நாளை நினைக்கிறாள். வேதனைக் குரலில் ஒப்பாரி பெருமாரியாகப் பொழிகிறது.

'கோட்டாற்றுக் கண்டாங்கிக் கொய்துடுக்கும் நாளையிலே
வெள்ளைப் புடவையினை வெளுத்துடுக்கும் நாளாச்சே
பூச்சூடும் கூந்தலிலே புழுதிபட நேர்ந்தாச்சே
பொட்டு வைக்கும் நெற்றியிலே புழுதிபட நேர்ந்தாச்சே
தங்கத்துரை மேனிதான் தரையில் விழுந்தாச்சே
பொன்னுதுரை மேனிதான் புழுதியில் விழுந்தாச்சே
என்னிறகும் முறிந்தாச்சே — அய்யா
நீங்கள் இறந்து போயாச்சே
இன்று கண்ட பூமுகத்தை இனிநான்
என்று காணப் போறேன் அய்யோ !'[5]

சமூகத்தின் விதிகளுக்குக் கட்டுப்படும் தான் விதவையாகி விட்டதால் ஏற்படும் தீவினைகளை நினைக்கிறாள். பட்டுடுக்க முடியாது. வெள்ளைப் புடவையைக் கசக்கியே கட்டவேண்டும் கூந்தல் முடிக்கக் கூடாது. பூச் சூட முடியாது. இனி அவளுக்கு இவ்வுலக வாழ்க்கையில் எந்த இன்பமும் அனுபவிக்க உரிமை இல்லை. கணவன் இறந்ததும் அவள் சிறகிழந்த பறவையாக மாறிவிட்டாள்.

இறப்புச் சடங்கின்போது பல நிகழ்ச்சிகள் நடைபெறும். அவை ஒப்பாரிப் பாடல்கள் மூலம் வெளிப்படுத்தப் பெறு கின்றன.

'பொய்கையிலே நீர்மோந்து பொறந்திடத்துப் பட்டுவந்து
பூந்தோப்பு மாலைவந்து பொட்டியிலே பொன்கழத்தி
குடும்பத்தார் கைகொடுத்துப்
பூவோடு தீக்கலக்கப் புண்ணியத்தைச் செய்திருந்தாள்
வைகையிலே நீர்மோந்து வளர்ந்திடத்துப் பட்டுவந்து
மாங்தோப்பு மாலைவந்து மறவையிலே பொன்கழத்தி
வளர்த்தார் கைகொடுத்து
மலரோடு தீக்கலக்க மாதவத்தைச் செய்திருந்தாள்[6].

சுமங்கலியாக ஒரு பெண் இருந்தால் இவ்வாறு பாடப்படுகிறது. ஆனால் கணவன் இறந்து மனைவி வாழும் போது பிறர்

---

(5) குமரி மாவட்டப் பாடல்
(6) இராமநாதபுரம் மாவட்டப் பாடல்.

இறந்தவரை நினைத்தும் விதவையாகி வாடப்போகும் பெண்ணை நினைத்தும் அழுவதைக் காணலாம். அவளது வாழ்வு அதற்குப் பின்னர் அவல வாழ்வாகி விடுகிறது. ஒப்பாரி ஒலிப்பதைக் கேட்டால் இவ்வுண்மை நன்கு புரியும்.

'சிந்தியிட்டா சிந்தியிட்டா சிறுவைரம் சிந்தியிட்டா
சீமைக்கமலம் சிறுவயிரம் சிந்தியிட்டா
நாட்டுக் கமலம் நல்வயிரம் சிந்தியிட்டா
பொட்டழிஞ்சா மையழுஞ்சா பொறந்தநிறம் பெயர்ந்திட்டாள்
மையழிஞ்சா பொட்டழிஞ்சா வளர்ந்தநிறம் பெயர்ந்திட்டாள்
பிறக்கயில வச்சபொட்ட அழிச்சமின்னா
பிறந்துட்டு வச்ச பூவப் பறிச்சமின்னா
வளரயில வச்ச மைய அழிச்சமின்னா
வளர்ந்துட்டு வச்ச மலரப் பறிச்சமின்னா!

இது பிறபெண்கள் விதவையாகி விட்ட பெண்ணை நினைத்து வருந்தும் பாடல். விதவை நிலை ஒரு பெண்ணின் வாழ்வில் பெரு மாற்றத்தை ஏற்படுத்தி விடுகிறது. அவளுக்கு இன்ப வாழ்வு வாழ ஏதும் உரிமை இல்லை என்றாகி விடுகிறது. ஆகையினுல் இறந்த கணவனும் வாழும் விதவையும் அடுத்தவரின் இரக்கத்துக்கு ஆளாகி விடுகின்றனர். சமூகத்தின் சமனற்ற உரிமையால் வாழ்பவளுக்காகவும் பிறர் வருந்த வேண்டிய அவல நிலை ஏற்படுகிறது. மனைவியை இழந்த கணவனுக்கு இரங்கிப் பாடுதல் வழக்கத்தில் இல்லவே இல்லை.

கணவனுக்கு முன் இறக்கவில்லையே என்று வருந்தும் பெண்ணின் அழுகையையும் ஒப்பாரியில் கேட்கலாம். பூவும் பொட்டுமாக அவளுடைய உடல் தீ வைக்கப்பட வேண்டு மென்று விரும்புகிறாள். விதவையாக வாழ எந்தப் பெண்ணும் விரும்பவில்லை. கணவனை இழந்தோரைச் சமுதாயம் சரி நிகராக வாழ அனுமதிக்கவில்லை. அவர்களும் சரியாக வாழ விரும்பவில்லை. இத்தகைய ஒப்பாரிப் பாடல்கள் நாடு முழுவதும் பரந்து நிறைந்துள்ளன. இடத்துக்கு இடம் பழக்கத்துக்கும் வழக்கத்துக்கும் தக்கவாறு மாறுபாடுகளுடன் காணப்படு கின்றன. யார் இறந்தாலும் அவரவர்களுடைய உறவுக்கும் உரிமைக்கும் தக்கவாறு ஒப்பாரிப் பாடல்கள் பாடப் பெறு கின்றன.

## தாயாரடித்தல் அல்லது மாரடித்தல்

தாயாரடித்தல் தமிழ் நாட்டில் இன்றும் பல பகுதிகளில் வழக்கத்திலுள்ள ஆடலாகும். ஒருவர் இறந்து விட்டால் அவரது வீட்டின் முன் பல பெண்கள் வட்டமாகச் சூழ்ந்து நின்று

பாடியவாறு சுற்றிச் சுற்றி வந்து தாயாரடிப்பர். வீட்டின் முன்னால் பச்சை தென்னை ஓலை கொண்டு ஒரு சிறிய பந்தலைக் கட்டுவர். அதற்குள் பல பெண்கள் தலைமுடியை விரித்துப் போட்டவாறு இந்த ஆடலை ஆடுவர். பாடிச் சுற்றும் போது குனிவதும் நிமிர்வதுமாக இருப்பர். இரு கைகளாலும் மார்பில் அடித்துக் கொள்வர். ஆகையினால் இந்த ஆடலுக்கு மாரடித்தல் என்ற பெயரும் ஏற்பட்டுள்ளது. உறவின் முறையினர் மாத்திரமல்லாது ஊரிலுள்ளோர் பலர் இந்த ஆடலில் கலந்து கொள்வர்.

ஒருவர் இறந்த ஐந்தாம் நாளிலிருந்து பதினாறாம் நாள் வரையிலும் மாலையில் தாயாரடித்தல் நடைபெறும். சிலர் மூன்றாம் நாளிலிருந்தே தாயாரடிக்கத் தொடங்க விடுவதும் உண்டு. இறந்தவருக்காக வருந்தி அழும் ஆடலாக இது காணப்படுகிறது. பொதுவாக இறந்தவர் ஐம்பது வயதுக்கு மேற்பட்டவராக இருந்தால் மாத்திரமே இவ்வாடலை நடத்துவர். இளம் வயதினரின் மரணம் பெருந்துயரினைத் தருவதினால் யாருக்கும் ஆடத்தோன்றுவதில்லை. துன்பச் சுமையால் கனத்த மனம் ஆடத்தோன்றாது அமைதியாக அமர்ந்து விடுகிறது. இதிலிருந்து மூத்தோர் சாவு துன்பம் குறைந்தது என்றும் வரவேற்கப் படுவது என்றும் புலனாகிறது. மூத்த பின்னர் இறப்பதைப் பிறர் ஒப்புக்கொண்டு தாயாரடித்து அவர்களை வழியனுப்புவதாகக் கருதலாம். இருப்பினும் பாடல்கள் துன்பச் சுவை கலந்தே காணப்படும். இறப்பை யாரும் விரும்புவதில்லை. ஆனால் யாரும் அதிலிருந்து தப்ப முடியாது. இந்த உண்மையை நன்கு தெரிந்து தாயாரடித்தல் நடைபெறுகிறது

பாடல்களை நாட்டுப் புற மக்கள் நன்கு தெரிந்து வைத்துக் கொள்கின்றனர். ஆளுக்கு ஆள் தகுந்த மாற்றங்களைக் கொடுத்துப் பாடல்களைப் பெண்கள் பாடுகின்றனர். ஒரே விதமான இசையில்தான் பாடல்கள் பாடப் பெறுகின்றன. இறந்தவரைப் புகழ்ந்தும், அவருடைய வாழ்க்கையில் நடந்த முக்கியமான செய்திகளைக் குறிப்பிட்டும் சில பாடல்கள் பாடப் படும். ஒரு தாயாரடிப் பாடலைக் கேட்கலாம்.

'காய்ச்சல் அடிச்சதென்ன தாயாரய்யா மாதாவே
கட்டிலுடன் சாய்ந்ததென்ன தாயாரய்யா மாதாவே
மண்டை யிடிச்சதென்ன தாயாரய்யா மாதாவே
மண்ணோடே சாய்ந்ததென்ன தாயாரய்யா மாதாவே
வண்ணத் தடுக்கு விட்டம் தாயாரய்யா மாதாவே
வைத்தியரைக் கொண்டுவந்தோம் தாயாரய்யா மாதாவே
வாணாள் பிரிந்தவுடனே வைத்தியரும்—கைவிரித்தான்
தாயாரய்யா மாதாவே'.[7]

---

(7) குமரி மாவட்டம் ஆரல்வாய்மொழிப் பாடல்.

இம்முறையில் பல வரிகளாக இந்தப் பாடல் நீண்டு கொண்டே இருக்கும். ஆண்களுக்குத் 'தாயாரய்யா மாதாவே' என்று ஒவ்வொரு அடியும் முடியும் பெண்களை நினைத்துப் பாடும் போது 'தாயாரம்மா மாதாவே' என்ற முடிவைக் கொடுத்துப் பாடுவர். இறந்தவர் வாழ்ந்திருந்தால் தங்களுக்கு நன்மை உண்டு என்று எதிர் பார்த்ததாகவும் இப்பொழுது ஏமாற்றத்துடன் நின்று அழுவதாகவும் பாடுவர்.

'கப்பல் வருமென்று கடல் முகத்தில்
பார்த்து நிற்போம் தாயாரம்மா மாதாவே
கப்பல் கவிழ்ந்தவுடன் கடல் முகத்தில்
நின்றழுதோம் தாயாரம்மா மாதாவே
தோணி வருமென்று துறைமுகத்தில்
பார்த்து நிற்போம் தாயாரம்மா மாதாவே
தோணி கவிழ்ந்தவுடன் துறைமுகத்தில்
நின்றழுதோம் தாயாரம்மா மாதாவே'[8]

பாடல் பலவாறாகப் பல செய்திகளைக் கூறுகின்றன. அவை நாட்டுப்புற மக்களுக்குப் பாடுவதற்கு எளிதாகவும் கேட்பதற்குச் சுவையாகவும் இருப்பதைப் பார்க்கலாம். ஒலி நயத்துக்குச் சிறப்பிடம் கொடுக்கப்பட்டுள்ளது.

இராமநாதபுரம் மாவட்டத்தின் சில பகுதிகளில் பிணத்தை எடுப்பதற்கு முன் பெண்கள் தரையில் பச்சை நெல் பரப்பி உலக்கையால் குத்துகின்றனர். இதற்குப் 'பச்சை குத்தல்' என்ற பெயர் கொடுத்துள்ளனர். இதனைக் குறிப்பிட்டும் பாடல்கள் உள்ளன.

'பிறவூரோர் வந்ததினால் எங்கையா வாசல்
பூமிவந்து சேரலையே
போரப் பிரிக்கலையே பொன்னரிசி குத்தலையே
போறவழி காட்டலையே பிறந்தமுறை செய்யலையே
மறுவூரோர் வந்ததினால் உங்க வளவில் வந்து சேரலையே
மச்சப் பிரிக்கலையே மணியரிசி குத்தலையே
மாற்றுவழி காட்டலையே வளர்த்த முறை செய்யலையே'.[9]

சென்றதை எண்ணி வருந்தி வருவதை நினைத்து மயங்கிப் பாடும் பாடலாக இது காணப்படுகிறது. அரிசி குத்துவது சிறப்பாகக் குறிப்பிடப் பெறுகிறது.

---

(8) மேற்படி.
(9) இராமநாதபுரம் செட்டி நாட்டுப் பாடல்.

பிணத்தை முற்றத்தில் ஒரு பாயில் கிடத்தி வைத்து அதைச் சுற்றிப் பெண்கள் வருவர். பாடல்களில் பல குறிப்புகள் தோன்றுகின்றன.

'போரஞ்சான் தேவியும் பிள்ளைகளும்
பூவடியைச் சுற்றி வந்தார்
வாள்விசயன் தேவியும் மக்களும்
மலரடியைச் சுற்றி வந்தார்

பிந்தி வந்ததினால் பின்னிப்பாய் சுத்தி வந்தேன்
பூவடியைச் சுத்தி வந்தேன்
பறந்து வந்ததினால் வண்ணப்பாய் சுத்தி வந்தேன்
மலரடியைச் சுத்தி வந்தேன்'[10]

சுடலையில் தீப்பற்றி எரிவதைப் பற்றியும் பாடல் உள்ளது. அனைத்துப் பொருளும் இசையும் நிறைந்து காணப்படுகின்றன. தீப்பற்றும் காட்சியை ஒரு பாடலில் காணலாம்.

'காடு மணமணக்கக் கண்டாங்கி தீப்பறக்க
செடியோ மணமணக்கச் சித்தாடை தீப்பறக்க
பூவோ மணமணக்கப் பூவாடை தீப்பறக்க'[11]

என்று பாடிக் காட்டுகின்றனர். துன்பக் காட்சிகளையும் கலை மெருகுடன் காணும் நாட்டுப்புற மக்களின் கலைத்தன்மையைப் பெருமையாகவே கொள்ள வேண்டும். எத்தகைய மன உணர்ச்சியையும் கலைச் சிறப்புடன் வெளியிடும் திறன் தமிழர்களுக்கு இருந்துள்ளதைக் காட்டும் சிறந்த சான்றுகளாக இந்தப் பாடல்கள் விளங்குகின்றன. துன்பத் தோய்வுகளான பாடல்கள் மனித மனத்தைக் கவர்ந்து உணர்ச்சியைத் தூண்டும் இயல்பை உடையனவாக உள்ளன. பாடலில் புகுத்தப் பெற்றுள்ள உணர்ச்சி பாடுவோரையும் கேட்போரையும் பற்றிக் கொள்வதில்தான் இவற்றின் கலைத்தன்மை உண்மையாக விளங்குகிறது. அவை துன்பக் கேணியாக அமைந்து பாடுவோருக்குத் துன்பத் துடைப்பாகப் பயன்பட்டுவிடுவதையும் அறிய வேண்டும். உள்ளத்தில் அமுங்கியழுத்தும் துயரை வெளியேற வைப்பதினால் மனம் ஆறுதலடைய வழி திறந்து விடுகிறது.

## பூப்பெய்தல் கொண்டாட்டம்

பெண்கள் பூப்பெய்தல் அவர்களுடைய வாழ்க்கையில் ஒரு முக்கியமான பருவநிலையாகும். அத்தகைய நிலையை அவள்

(10) மேற்படி.
(11) மேற்படி.

அடைந்துவிட்டாள் என்பதை ஊராருக்கும் உறவினருக்கும் அறிவிக்கும் பொருட்டு அதனை ஒரு கொண்டாட்டமாகச் சிறப்பிப்பது பல சமூகத்தினரிடம் காணப்படும் வழக்கம். நாட்டுப்புற மக்கள் அந்த நிகழ்ச்சியை மிகச் சிறப்பாக மதித்து ஆடல் பாடல்களுடன் கொண்டாடுவதைப் பல இடங்களில் காணலாம். ஆனால் காலப்போக்கில் அத்தகைய கலைக் கொண்டாட்டம் மங்கி மறைந்து வருவதாகவே தோன்று கிறது. பருவமெய்திய பெண்ணின் வீடு உறவினரின் வருகையால் பொலிவுற்றுக் காணப்படும். தினமும் பக்கத்துப் பெண்கள் கூடிக் கும்மியடித்துப் பாடும் பழக்கம் தமிழ்நாட்டில் பல ஊர்களில் இருந்தது. அவர்கள் ஒரு விளக்கைச் சுற்றி சுற்றி வந்து பெண்ணின் நலனைக் குறித்தும் இறையருளை வேண்டியும் பாடியாடுவர். அது இன்பக் களியாட்டமாகவே நடைபெறும்.

இத்தகைய பூப்பெய்தல் கொண்டாட்ட நிகழ்ச்சிகள் சில பழங்குடி மக்களிடையே மிகச் சிறப்பாக நடைபெறுவதாக அறிய முடிகிறது. மேல் நாடுகளிலும் களிப்பூட்டும் கலை நிகழ்ச் களுடன் கொண்டாடப்படுகிறது. அர்ஜெண்டினாவில் புயெல்சி (Puelche) துயெல்சி (Tehuleche) ஆகிய கலை நிகழ்ச்சிகள் அப்பொழுது நடத்தப் பெறுகின்றன. கிழக்குப் பிரேசிலில் புல்னியோ (Fulnio) நிகழ்ச்சிகளுடன் கொண்டாடப்படுகிறது. அந்தக் கலைநிகழ்ச்சிகள் மூலம் ஒரு பெண் தன் வாழ்க்கைக்காக அறிய வேண்டிய மிக முக்கியமான செய்திகள் குறிப்பாகத் தெரி விக்கப்படுகின்றன. கலைகள் மூலம் களிப்பை அடைவதோடு மனிதன் தன்னுடைய வாழ்க்கைக்குத் தேவையான பல முக்கிய கருத்துகளையும் அறியும் வாய்ப்பைப் பெறுகிறான் என்பது குறிப்பிடத்தகும் உண்மையாகும். பொழுது போக்காகத் தோன்றும் நாட்டுப்புறக் கலைகள் வாழ்வை வளப்படுத்தும் அறிவு ஊற்றாகவும் விளங்குகின்றன. இடத்துக்கு இடம் கலைகள் மாறினாலும் வாழ்க்கைப் பருவங்களைக் கொண் டாடும் கலைகள் நோக்கத்திலும் பயனிலும் சிறப்பான ஒற்றுமை உடையனவாக் காணப்படுகின்றன.

**கொடும்பாவி கொளுத்தல்**

மக்கள் சிறப்புற்று வாழ மழை தேவை. வானம் பொய்த்து விட்டால் மண்ணுலக வாழ்வு பாழாகி விடும். சில சமயம் கால மழை பொழியாது பஞ்சம் மக்களை வாட்டும். அதை இறையின் கோபமாகக் கருதும் மனிதன் அதிலிருந்து விடுபட சில முறைகளைக் கையாளத் தலைப்டுகிறான். அம்முறைகளில் ஒன்றாகக் கொடும்பாவி கொளுத்தும் சடங்கு நடைபெறுகிறது.

நாட்டுப் புற மக்களில் சிலர் இதனைச் செய்வர். அனைவரின் ஆதரவும் இதற்கு உண்டு. மக்கள் செய்த பாவச் செயல்களின் உருவகமாகக் கொடும்பாவியின் உருவம் செய்யப்படுகிறது. இதைச் செய்ய மூங்கில், வைக்கோல், கந்தல் துணி ஆகிய வற்றைப் பயன்படுத்துகின்றனர். அந்த உருவத்தைத் தெருத் தெருவாக இழுத்துக் கொண்டு வருவர். ஒவ்வொரு வீட்டின் முன்னரும் அது நின்று நின்று போகும். இருவர் அல்லது மூவர் கொடும்பாவியைக் கோல் கொண்டு அடிப்பர். பலர் சூழ்ந்து வருவர். அடிபட அடிபட ஊரினர் செய்த பாவம் தொலைவதாக மக்கள் நம்புகின்றனர். வீட்டுக்கு வீடு தேய்காய், நெல், பணம் ஆகியவற்றைத் தங்கள் தகுதிக்குத் தக்கவாறு கொடும்பாவி அடிப்போருக்குக் கொடுப்பார்கள். அதனை இழுத்தவாறு அடிக்கும் போது சிலர் ஆடுவர் சிலர் பாடுவர். பாடல் பாவத்தின் தொலைவு பற்றியதாகவும் மழை பெய்ய வேண்டுவ தாகவும் அமையும்.

'வரப்போ தலையணை வைக்கோலோ பஞ்சு மெத்தை
மேற்கே மழை கறுக்க கிழக்கே மழை பெய்ய
— கொடும்பாவி சண்டாளி
அத்தரசி பாஞ்சாலி கொடும்பாவி சண்டாளி
செத்தாலும் பேரெடுப்பேன் சேலைவாங்கிப் போட்டழுவேன்
—கொடும்பாவி சண்டாளி
மாண்டாரென்று பேரெடுத்தால் மாலைவாங்கிப் போட்டழுவேன்
— கொடும்பாவி சண்டாளி
பன்னிரண்டு வருடம் பாதமழை பொழியாமல்
—அத்தரசி பாஞ்சாலி
இருப்புவொரு வருடம் இருந்துமழை பொழியாமல்
— அத்தரசி பாஞ்சாலி
முன்காட்டி கொள்ளிவைக்க மூத்தமகன் நாசுவன்
— அத்தரசி பாஞ்சாலி
பின்காட்டி கொள்ளிவைக்க பிறந்தமகன் நானாகும்
—அத்தரசி பாஞ்சாலி'

இந்த முறையில் பாடல் பல அடிகளாக நீண்டு கொண்டே செல்லும். பலமுறை திருப்பித் திருப்பிப் பாடுவர். ஊர் முழுவதும் அன்று கொடும்பாவி கொளுத்தும் பேச்சாகவே இருக்கும். பாடலுக்கு இடையே,

'கொடும்பாவி செத்து நெடுந்தூரம் போயிட்டான்
இனிப்பெய் மழையே இனிப்பெய்'

என்ற அடிகள் அடிக்கடிக் கேட்டுக் கொண்டேயிருக்கும்.

ஒப்பாரிப் பாடல்களிலுள்ள சில அடிகளும் இப்பாடல்களில் இடம் பெறுவது நோக்குவதற்கு உரியது. கொடும்பாவியை ஒரு மனிதனாகப் பாவித்து உருவக நிலையில் அவன் இறப்பதாக நினைத்துப் பாடுவதாகவே இந்தப் பாடல்கள் அமைகின்றன. கொடும்பாவி இழுப்போர் சிலவகை நோன்பு முறைகள் செய்வதும் உண்டு. ஊரைச் சுற்றிக் கொடும்பாவியை இழுத்த பின் ஒரு இடத்தில் அனைவரும் கூடி அதனைத் தீயிலிட்டுக் கொளுத்துவர். அது எரிந்ததும் ஊரைச் சூழ்ந்துள்ள பாவம் எரிந்து விட்டதாகக் கருதித் திரும்புவர். மழை பெய்து ஊர் செழிக்கும் என்ற நம்பிக்கை அனைவருக்கும் ஏற்படும். இவ்வழக்கம் குமரி மாவட்டத்தில் இன்றும் சில இடங்களில் வழக்கத்தில் உள்ளது.

**ஊஞ்சலாட்டம்**

பொங்கல், ஆண்டு பிறப்பு, ஓணம் போன்ற பண்டிகை நாட்களில் பெண்கள் ஊஞ்சலாடி மகிழ்வது வழக்கம். இது நெல்லை, குமரி மாவட்டங்களில் பெருவழக்காக இன்றும் நடைமுறையிலுள்ளது. ஆட்டம் ஒரே முறையாக அமைவதினால் அதைக் கலை என்று கூறுவதைவிட ஓர் இன்ப விளையாடல் என்று சொல்வதே பொருந்தும் இருப்பினும் ஊஞ்சலாடும் போது பாடப்படும் இனிய பாடல்கள் கலைநயம் மிக்கனவாகக் காணப்படுகின்றன. கேரள மாநிலத்தில் ஓணப் பண்டிகையின் போது ஊஞ்சலாட்டம் நடைபெறுகின்றன. ஊஞ்சலைப் பற்றிய குறிப்பு குறிஞ்சிக் கலியின் முதற் பாடலில் இடம் பெற்றுள்ளது. இதிலிருந்து சங்க காலத்திலும் இந்த ஆட்டம் இருந்துள்ளதாக அறியலாம். பெரும்பாலும் பெண்களே இப்பாடலில் பங்கு கொள்வர். மிக எளிதாக ஆடக் கூடியது. ஆயினும் சில சமயம் ஆண்களும் ஆடுகின்றனர். அவர்கள் ஆடும்போது ஆட்டத்தின் வேகமும் முறையும் மாறிவிடுவதைக் காணமுடிகிறது.

வாய்ப்பான மரக்கிளைகளில் இரண்டு கயிறுகளைக் கட்டித் தொங்க விடுவர். கயிறு தாழை அல்லது பனை நாரால் முறுக்கப்பட்டிருக்கும். தொங்கும் பகுதியில் ஒரு பலகை அல்லது உலக்கையை இணைத்து இருப்புக்கு வசதி செய்வர். அதில் ஒன்று முதல் நான்கு பெண்கள் அமர்ந்து கயிற்றைப் பலமாகப் பிடித்துக் கொண்டு ஆடுவர். ஒருவருக்கு மேல் ஆடும்போது இருபக்கமும் மாறிமாறி அமர்ந்து கொள்வர். கால் உந்தலால் ஊஞ்சலை அங்கும் இங்கும் வேகங் கொள்ளுமாறு செய்வர். ஆண்கள் உலக்கையில் ஏறிநின்று

உந்தி மிக வேகமாய் ஆடுவதும் உண்டு. ஊஞ்சலை ஊசல் என்றும் குஞ்சலாம் என்றும் கூறுவர். தனிப்பட்ட நோக்கம் எதுவும் ஊஞ்சலாட்டத்துக்கு இருப்பதாகத் தோன்றவில்லை. சமுதாயக் கொண்டாட்டத்தை மிக மகிழ்ச்சியுடன் அனுபவிப்பதற்கே இவ்வாடல் நடைபெறுவதினால் இதனைச் சமுதாயச் சார்புக் கலைகளுடன் இணைத்து விளக்கம் தரப்படுகிறது.

பெண்கள் சுவையாகப் பாடியவாறு ஊஞ்சலாடுவர். அனைவரும் இணைந்தும், ஒருவர் மாறி ஒருவரும், ஒருவர் பாடியதைப் பிறர் இணைத்துத் திரும்பப் பாடியும் மகிழ்வதைப் பார்க்கலாம். ஊஞ்சல் கட்டுவதைப் பற்றியே ஒரு பாடல் பாடு வதைக் கேட்கலாம்.

'ஏல ஏலோ கிளிக் குஞ்சாலோ !
மட்டை வெட்டி நாருரித்து
எங்க மாமன் போட்ட குஞ்சால் !
கள்ளி வெட்டி நாருரித்து
எங்க அண்ணன் போட்ட குஞ்சால் !
இந்தக் குஞ்சாலம் போட்டவருக்கு
என்ன என்ன கொடுக்க வேண்டும்
கிண்ணியிலே சந்தனமும் கிளிமூக்கு வெத்திலேயும்
பொத்தாங் கண்ணிச் செரட்டையிலே கொஞ்சம்
பொன்னுருக்கிக் கொடுக்க வேண்டும்'[12]

ஊஞ்சல் கட்டித் தந்தவர்களுக்கு தங்களுக்கிருக்கும் மகிழ்ச்சியில் மங்கலப் பொருட்களாகிய சந்தனமும் வெற்றிலையும் கொடுப்ப துடன் பொன்னும் கொடுக்க வேண்டும் என்று அந்தப் பெண் கள் விரும்புகின்றனர்.

சமுதாய நிகழ்ச்சிக் குறிப்புடைய நீண்ட நெடும் பாடல் களையும் கதைபோல் ஊஞ்சலாடும் பெண்கள் பாடுவர். ஒரு பெண்ணை மறப்பதற்காக ஒருவன் வருகிறான். அதைக் குறிப்பிடும் பாடலைக் கேட்கலாம்.

' பட்டணமாம் பட்டணமாம் பாரில் நல்ல பட்டணமாம்
பட்டணத்துச் செட்டியாருக்குப் பதினாறு மக்களுண்டாம்
பதினாறு மக்களிலே ஒரு மகளாம் பத்தினியாம்
பத்தினியைக் கொள்ள வாரான் பாரில் நல்ல செட்டிமகன்'

திருமணம் முடிகிறது. அவளுக்குப் பெற்றோரைப் பிரிய மனமில்லை. கணவனுடன் செல்லவும் வேண்டும். அவளுடைய மனமில்லாத மனத்தை விளக்குகிறது பாடலின் ஒரு பகுதி.

(12) குமரி மாவட்டப் பாடல்.

'இன்றுபோ இனறுபோ என்று சொன்னால் — பத்தினி
நாளைப் போவேன் நாளைப் போவேன் என்பாளாம்
நாளைப் போ நாளைப்போ என்று சொன்னால் – பத்தினி
இன்று போவேன் இன்று போவேன் என்பாளாம்'

வாழ்வில் நடப்பதையே பாடல் நயமுடன் கூறுகிறது. நகைகள் அதிகம் போடவில்லை என்று பத்தினி வருந்துகிறாள். அவளை ஆறுதல் படுத்த அனைவரும் முயல்கின்றனர். அவள் கை கொடுத்தும் மூகங்கொடுத்தும் பேச மறுக்கிறாள். இதனை ஊஞ்சல் பாடல் விளக்குகிறது.

'கைகொடம்மா கைகொடம்மா என்று சொன்னால் — பத்தினி
கைகொடுக்க மாட்டேன் என்பாளாம்
கைவளசி இல்லாமல் பத்தினி கைகொடுக்க மறுத்தாளாம்
கைவளசி அஞ்சுபணம் கைகொடம்மா பத்தினியே.
மொகங்கொடம்மா மொகங்கொடம்மா என்று சொன்னால்
— பத்தினி
மொகங்கொடுக்க மாட்டேன் என்பாளாம்
மூக்குக்குத்தி இல்லாமல் பத்தினி மொகங்கொடுக்க
— மறுத்தாளாம்
மூக்குக்குத்தி அஞ்சுபணம் மொகங்கொடும்மா பத்தினியே'.

ஓரளவு நகைகள் கொடுத்து அவளை ஆறுதல் படுத்துகின்றனர். கணவனுடன் வாழ அனுப்புகின்றனர். அவள் ஓரளவு மனம் தேறிப் புறப்படுகிறாள்.

'வண்ணவண்ண பட்டுடுத்தி வாழப்போறாள் பத்தினியாள்
சின்னசின்னப் பூச்சூடிச் சிறக்கப்போறாள் பத்தினியாள்
வாழப்போறாள் வாழப்போறாள் பத்தினி வாழப்போறாள்
வண்ணப் பெட்டியும் கூடப் போகுது
கூடப்போறான் கூடப்போறாள் பத்தினி கூடப்போறாள்
கொட்டப் பெட்டியும் கூடப் போகுது'.

இன்பம் நிறைந்த உள்ளத்துடன் தங்கள் தங்கள் வாழ்க்கையுடன் இணைந்த அருமையான சமுதாய நிகழ்ச்சிகளை நெடும் பாடல் களாகப் பாடி ஊஞ்சல் ஆடுகின்றனர்.

பிள்ளை இல்லாத பெண்ணின் மனநோவை ஒரு ஊஞ்சல் பாடல் விளக்குகிறது, குழந்தை இல்லை என்ற மனக்குறையுடன் பிறர் தன்னை மலடி என்று கூறி ஒதுக்குவார்களே என்று வருந்துகிறாள். சமூகத்தில் நடப்பது ஊஞ்சல் பாடல் வழி ஒழுகுவதைக் காணலாம்.

'இளையண்ணன் வீட்டிலே ஏழுநாளாத் தெய்வக் கொடை
எல்லாரும் போறாங்க ஒக்கரையும் பிள்ளையுமாய்
நான்பாவி போறேனே வெற்றிலையும் கையுமாய்
தம்பிபெற்ற தாய்மார்கள் தள்ளிநில்லு மலடி என்பர்
பிள்ளைபெற்ற தாய்மார்கள் பின்னேநில்லு மலடி என்பர் !

ஒரு பெண்ணின் உணர்வு சமுதாயப் பின்னணியில் உடைத்துக் காட்டப் படுகிறது. பிள்ளை பெறாதவள் அன்னை அல்லள். அவளைச் சமுதாயம் மதிப்பதும் இல்லை. சமமாக ஏற்றுக் கொள்வதும் இல்லை.

ஒரு பெண்ணும் ஆணும் மாறிமாறிப் பாடும் பாடலும் ஊஞ்சலாட்டத்தில் இடம் பெறுகிறது. ஒரு பகுதியை ஒருத்தி பாட அடுத்ததை இன்னொருத்தி பாட அது நாடகத் தன்மை பெற்று கலைநயத்துடன் வெளிவருகிறது. பாடலைக் கேட்பதே இன்பம்.

'ஆண் : ஆற்றுக்கு அந்தப்புரம் ஆடுமேய்க்கும் பெண்மயிலே
ஆற்றிலே வெள்ளம் வந்தால் நீ என்ன செய்வாய் ?

பெண் : ஆற்றிலே வெள்ளம் வந்தால் அழகான கப்பல் செய்து
அதிலே நான் வருவேன் பாராய் !

ஆண் : அழகான கப்பல் செய்து அதிலே நீ வந்தால்
நண்டு வடிவம் நானுங்கொண்டு நறுக்கிடுவேன்.

பெண் : நண்டு வடிவம் கொண்டு நறுக்குவாயானால்
எலியின் வடிவம் கொண்டு இறப்புவழிப் பாய்ந்திடுவேன்

ஆண் : எலியின் வடிவம் கொண்டு இறப்புவழிப் பாய்ந்தா யானால்
பூனை வடிவம் கொண்டு பிடித்திடுவேன் எலியை

பெண் : பூனை வடிவம் கொண்டு எலியைப் பிடித்தாயானால்
ஊர்க்குருவி வேடங்கொண்டு உயரே பறந்திடுவேன்.

ஆண் : ஊர்க்குருவி வேடங்கொண்டு உயரே பறந்தேயானால்
செம்பருந்து வேடங்கொண்டு செந்தூக்காய்த் தூக்கிடுவேன்.

பெண் : செம்பருந்து வேடங்கொண்டு செந்தூக்காய்த் தூக்கினாயானால்
பூமியைக் கீறிக்கொண்டு புல்லாய் முளைத்திடுவேன்.

ஆண் : பூமியைக் கிறிக்கொண்டு புல்லாய் முளைத்தாயானால்
காராம்பசு வேடங்கொண்டு கடித்திடுவேன் அப்புல்லை

பெண் : காராம்பசு வேடங்கொண்டு புல்லைக் கடித்தாயானால்
ஆற்றங்கரை ஓரத்திலே அரளியாய்ப் பூத்திடுவேன்

ஆண் : ஆற்றங்கரை ஓரத்திலே அரளியாய்ப் பூத்தாயானால்
பண்டார வேடங்கொண்டு பறித்திடுவேன் அப்பூவை.'

ஆணும் பெண்ணும் எதிர்ப்பட்டால் ஏற்படும் நிலையை ஊடு பொருளாகக் கொண்டது இந்தப் பாடல். ஆண் அவளைப் பற்ற விரும்புவதும் பெண் அவனிடமிருந்து தப்ப முயல்வதும் இதில் விளக்கப் படுகிறது. பாடலை ஆணே தொடங்கி அவனே முடிப்பது நோக்குவதற்கு உரியது. அவளை வம்பில் சிக்க வைத்து தனக்கு இணங்க வைக்கும் ஆணின் ஆவலும் அவனுடைய பிடியிலிருந்து தப்ப நினைக்கும் பெண்ணின் அச்சமும் முட்டி மோதும் இந்தப் பாடல் ஊஞ்சலாடும் பெண்களின் வாயில் கொஞ்சி விளையாடுவது அரிய கலையாகும்.

நகைச் சுவையாகவும் பெண்கள் பாடுவதைக் கேட்கலாம். தங்களுடைய எளிய வாழ்வில் நடப்பதைக் கொண்டே நகைச் சுவைக் காட்சிகளைப் படைக்கின்றனர்.

'உரியரி காய்ச்சி வச்சாள் மாயேக்கி
ஊத்திக் குடிச்சான் செம்பிலிங்கம்
செருப்பைக் கழத்தினாள் மாயேக்கி
செவிட்டிலே வாங்கினான் செம்பிலிங்கம் !

இவ்விதமாக எத்தனையோ பாடல்களை இசையழகுடன் இனிது பாடி பெண்கள் ஊஞ்சலாட்டத்தில் மகிழ்கின்றனர். இது ஏழையரும் எளிதாக ஆடும் ஆடல். செல்வரும் விரும்பி ஆடும் ஆடல். நாட்டுப் புற மக்கள் மனமகிழ்ந்து ஆடும் ஆடல். நகைச்சுவையும் நல்ல கருத்துகளும் நிறைந்த பாடல்கள் ஊஞ்சல் ஆட்டத்துக்கு உண்மையான உயர்வைக் கொடுக்கின்றன.

வினாவிடையாகவும் பாடல் உள்ளது. ஒருத்தி வினாவை எழுப்ப அடுத்தவள் விடை கூறுவதாக அமையும். ஒவ்வொரு அடியாக மாறிமாறிப் பாடும் பாடலும் உண்டு.

'காச்சிக் கலக்கி வச்சான் காலேனி
ஊத்திக் குடிச்சான் செம்பிலிங்கம்
சொல்லிக் குடுத்தான் சந்தனம்
சந்தன மென்றால் நாறாதோ
நாறுவதுக்கும் கருவாடோ

கருவாடென்றால் காயாதோ
காயிவதுக்கும் கட்டையோ
கட்டையென்றல் எரியாதோ
எரிவதுக்கும் எண்ணையோ

இவ்வாறு பாடல் நீண்டு கொண்டே இருக்கும். மக்கள் கொண்டாடும் சமுதாய விழாக்களில் ஊஞ்சலாட்டத்தின் மூலம் பலவிதமான பாடல்களைப் பாடி மகிழ்கின்றனர். இதில் ஆடலை விடவும் பாடலுக்கே சிறப்பிடம் உள்ளது. கலை யுணர்வு மிகுந்த 'ஊஞ்சல் பாடல்கள் அறிவுக்கும் நல்ல விருந்தளிக்கத் தகுந்தவை.

## தொழில் தொடர்பான பாடல்கள்

நாட்டுப் புற மக்கள் பயிர்த் தொழிலையே அதிகம் செய்கின்றனர். ஆகையினால் உழவுத் தொழிலைப் பற்றிய பாடல்களும் ஆடல்களும் அவர்களிடம் மிகுதியாகக் காணப் படுகிறது. ஏர்மங்கலம், முகவைப் பாட்டு, உழத்தியர் பாடல் ஆகியவை பழங்காலம் தொட்டு தமிழ் மக்களிடம் சிறப்பாகப் பரவியுள்ளது. அதனுடைய வளர்ச்சியாகவே பள்ளு நாடகம் வளர்ந்துள்ளது. பயிருக்கு நீரிறைக்க ஏற்றம் பயன் படுத்தப் பெறுகிறது. ஏற்றமிறைக்க உழைப்பு தேவைப் படுகிறது. உழைப்பால் களைப்பும் அலுப்பும் ஏற்படுகின்றன. இவற்றைக் களைந்து இன்பவுணர்வுடன் ஏற்றமிறைக்க மக்கள் ஏற்றப் பாட்டு பாடுகின்றனர். விதைத்தல், நாற்றுநடல், களை பிடுங்கல், அறுத்தல், சூடடித்தல், தானியம் அளத்தல் ஆகிய வற்றுக்கும் தனித்தனிப் பாடல்கள் உள்ளன. நல்ல விதமாகப் பயிர் விளைந்து அறுவடையானதும் அதனைப் பலவிதமான கலை நிகழ்ச்சிகளால் நாட்டுப்புற மக்கள் கொண்டாடி மகிழ் கின்றனர். மனநிறைவும் இன்பவுணர்வும் இவ்வித கலைகளுக்கு அடிப்படைக் காரணங்களாக அமைகின்றன.

வெற்றிலைக் கொடிகளைப் பயிர் செய்யும் இடங்களில் கொடிக்கால் பாடல்கள் பாடப் பெறுகின்றன. தஞ்சாவூர் மாவட்டத்தில் இத்தகைய பாடல்கள் மிகுதியாகப் பாடப் பெறுகின்றன. நெல் குத்தல், சுண்ணும்பு இடித்தல், உப்பு வாருதல், எண்ணெய் ஆட்டுதல், ஆடுமாடு மேய்த்தல் முதலிய தொழில்கள் செய்யும் போதும் மக்கள் அவற்றுடன் தொடர் பான பாடல்களைப் பாடி மகிழ்ந்துள்ளனர். கடலிலிருந்து சங்குகளை அரித்தெடுக்கும் தொழில் பல இடங்களில் நடை

பெறுகிறது. அப்பொழுதும் சில பாடல்களைப் பாடி இன்புறு கின்றனர். வண்டி ஓட்டிச் செல்வோர், பாரம் சுமப்போர் பாடும் பாடல்களும் உள்ளன.

தொழிலைப் பற்றிய அறிவை இத்தகையப் பாடல்கள் உணர்த்துவதுடன் அந்த அந்த தொழில் செய்வோரை இன்புறச் செய்வதற்கும் தொழிலின் பழு தோன்றாமல் இருப்பதற்கும் இத்தகைய பாடல்கள் உதவுகின்றன. பாடல்கள் விதம்விதமாக இருக்கும். பாடுவோரின் மன விருப்பத்துக்குத் தக்கவாறு பாடல் அமையும். ஒரு சுதந்திரப் பறவையாக மாறி இத்தகைய பாடல்களைத் தொழில் செய்வோர் தங்கள் மனம் போல் பாடி மகிழ்வதே இப்பாடல்களின் தனிச்சிறப்பாகும்.

தொழில் பற்றிய பாடல்களும் ஆடல்களும் உலக முழுவதும் பரந்துள்ளன. தமிழ் நாட்டில் இருப்பது போன்று நெல் பயிரிடுவது பற்றிய ஆடல் கலைகள் ஜப்பான், பிலிப்பைன் தீவுகள், மடகாஸ் தீவு ஆகிய இடங்களிலும் உள்ளன. இந்தியாவில் ஆந்திரம், வங்காளம், பீகார் ஆகிய மாநிலங் களிலும் உள்ளன. இந்த இடங்கள் அனைத்தும் நெல் பயிரிடும் பகுதிகள் என்பது குறிப்பிடத் தக்கதாகும். பஞ்சாப், உத்திர பிரதேசம் ஆகிய மாநிலங்களில் கோதுமைப் பயிர் விளைவித் தலைப் பற்றிய ஆடல்கள் நடைபெறுகின்றன. தென் அமெரிக்கா வில் கம்பிளி மயிர் சேர்த்தல் பற்றியும் ஹங்கேரியில் வைக்கோல் சேகரித்தல் பற்றியும் நடனங்கள் நடக்கின்றன. பின்லாந்தில் அரிவாள் போன்ற அறுவடைக் கருவிகளுடன் அறுவடை விழா நடனங்கள் நடத்தப் படுகின்றன. எங்கெங்கு என்ன என்ன தொழில் நடை பெறுகிறதோ அதையொட்டி கலைகள் அமைக்கப் பெறும் உண்மையை அறிதல் வேண்டும்.

பயிருக்கு வேண்டியது மழை. அதனை வேண்டி பல வித ஆடல்கள் நடப்பதை உலகமெங்கும் காணலாம். தொழிடன் இணைத்த இவ்வித கலைகள் இறையருளை வேண்டும் நோக்கத் துடன் கலந்து, சமயச் சார்பாக வண்ணம் மாறியுள்ளதையும் காணலாம். தமிழ் நாட்டில் மாரியம்மன் ஆடல்கள் மெக்சிக்கோ நாட்டு அஸ்திக் பழங்குடியினர் (Aztecs) கொண்டாடும் ஷிலோனென் (Xlionen) சிந்தியோட்டில் (Cinteotle) ஆகிய விழாக் களில் ஆடும் ஆடல்கள் போன்றவை மழையையும் பயிரையும் கருதிய கலை நிகழ்ச்சிகளே ஆகும். வாழவுக்கு வளமை சேர்ப் பதைக் கலையாகக் கண்டு மனிதன் களிப்பது இயல்பாகவும்

இயற்கையாகவும் அமைவதைத் தொழில்கள் தொடர்பான கலைகளில் காணலாம். இவை பொழுது போக்காக அமைந்து தொழிற் கல்வியின் பயனைச் செய்வதாகவும் கூறலாம். தேவை கருதி சில சமயம் மந்திர நிகழ்ச்சியாகவும் அமைத்து விடுகிறது. செய்தொழிலின் உயர்வை உணர்ந்தே மனிதன் அதனை இன்பக் கலைகளாக உருவாக்கி மகிழ்கிறான்.

## வேட்டையாடுதல் தொடர்பான நடனங்கள்

மனிதன் உயிரினங்களைக் கொன்றுதின்னும் பழக்க முடையவன் மேலும் கொடிய விலங்குகள் தன்னைத் தாக்கிக் கொன்றுவிடாது காக்க வேண்டிய பொறுப்பும் உடையவன் ஆகையினால் வேட்டையாடுதலை ஒரு முக்கிய தொழிலாகக் கொண்டான். அதனைத் தொடர்பாகவுடைய சில கலைகளும் உருவானது. வேட்டை நடனங்கள் உலகின் பல பகுதிகளில் நடை பெறுகின்றன மிருகங்களை மயக்கும் ஆற்றலும், கவரும் உத்தி களும் அந்நடனங்களில் கையாளப் படுகின்றன. சில இடங்களில் மிருகங்களின் ஆவிகளை ஆறுதல் படுத்தும் நம்பிக்கையிலும் கலைகள் நடத்தப்படுகின்றன.[18] மிருகங்களைப் போன்று செயல் படல், வேட்டைக் குறிப்புகள் காட்டி நடித்தல் மந்திரச் செயல்கள் ஆகியவை கலைகளில் இடம் பெறுகின்றன. தமிழ் நாட்டிலும் பல வேட்டை நடனங்கள் நடந்துள்ளன. கலை களில் மிருக வேட்டைக் காட்சிகள் முக்கியமான இடம் பெற் றுள்ளன. குறவஞ்சி நாடகங்களில் மிருக வேட்டை ஒரு காட்சி யாக விளக்கப்படும். குளுவ நாடகம் பறவை வேட்டையை அடிப்படையாகக் கொண்டு அமைக்கப்பட்ட கலையாகும்.

ஆப்ரிக்காவில் யாமசௌக்ரோ ஆன்றிலோப் நடனம் (Yammasoukro Antelope Dance) இரு புனித வேட்டையரைக் கொண்டு ஆடுவதாகும். இதனைத் தமிழரின் குளுவநாடகத் துடன் ஒப்பிட்டுக் காணலாம். இதில் வரும் குளுவன், சிங்கன் ஆகிய இரு வேட்டைக்காரரும் புனிதத் தன்மையுடையவராகக் காட்டப்படுவது குறிப்பிடத்தக்க உண்மையாகும். தென் அமெரிக்கா நாடுகளின் சில பகுதிகளில் விசுனா வேட்டை (Viucuna Hunt) ஒரு கலை நிகழ்ச்சியாக நடைபெறுகிறது. மெக்சிக்கோவிலும் வேட்டை நடனங்கள் நடத்தப்படுகின்றன. இந்தியாவில் முண்டர்கள் நடத்தும் சாத்ரா விழாக்களிலும் இலங்கையில் வேடர்கள் நடத்தும் அம்பு நடனத்திலும்

---

(13) Maria Leach, (Ed) Folklore Mythology and Legend, New English (Library London, 1975), P. 278.

வேட்டைக் காட்சிகள் இடம் பெறுவதைக் காணலாம். சில நடனங்களில் மிருகவுருவங்களை மனிதன் தாங்கி வேட்டைக் காட்சிகளை நடித்துக் காட்டுவதையும் காணலாம். தமிழ் நாட்டிலும் இத்தகைய வேட்டை நடனங்கள் சில நடைபெறு கின்றன

## சிண்டு நடனம்

பாண்டிச் சேரியை அடுத்து வாழும் பழங்குடி மக்களான கரையர், கல்லயர், குருவிக்காரர் ஆகிய இனங்கள் விழாக் காலங் களில் சிண்டு நடனம் ஆடுகின்றனர். இது ஒரு வகை வேட்டை நடனம் ஆகும். இந்த இனமக்களின் முக்கியமான தொழில் பறவைகளைக் கண்ணி வைத்துப் பிடித்தல். இத்தொழிலை நடனக் காட்சிகளாக ஆடிக் காட்டுகின்றனர். பல விதமான இசைக் கருவிகளின் இணைப்புடன் பாடல்களைப் பாடி அவற் றிற்குத் தக்கவாறு ஆண்கள் ஆடிக் களிக்கின்றனர். பறவை களைப் பொறி வைத்தும், கண்ணி பரப்பியும் எவ்வாறு பிடிப்பது என்பதை நடனத்தின் மூலம் சுவையாகக் காட்டுகிறார்கள். காட்சிகள் ஒரே சமயம் மக்களுக்கு இன்பத்தையும் தொழில் பயிற்சியையும் அளிப்பதை அறிய வேண்டும்.

நடனத் தலைவன் பாடலின் ஒரு அடியைப் பாடியதும் பிறர் கூட்டாக அதனைப் பாடுவர். நடன அசைவு துரிதமாகவும் பல்வேறு வகையாகவும் அமையும். கால்களின் அசைவுகளை மிகுதியாக உடையது. தாளமும் இசையும் இத்தகைய அசைவு களுக்கு நல்ல துணையாக அமைகின்றன. அறிவுமிக்க ஆட்டமாக சிண்டு நடனம் தோன்றுகிறது. இதே போன்று பறவை பிடிக்கும் வேட்டைக் குறிப்புகள் நிறைந்த குளுவ நாடகத்தைப் பற்றிப் பின்னர் கூறப்படும் நாட்டுப்புற நாடகக் கலைப் பகுதியுள் விளக்கமாகக் காணலாம்.

## புலி வேடம்

தமிழ் நாட்டில் வட மாவட்டங்களில் புலி வேடம் பல இடங்களில் ஆடப் படுகிறது. ஒரு மனிதன் புலிமுகம் அணிந்து கொண்டு தன் உடம்பு முழுவதும் புள்ளிகள் பொறித்துத் தன்னைப் புலியாக மாற்றிக் கொள்கிறான். வாயில் கோரைப் பல்லும், பின்புறம் புலிவாலும் அணிகிறான். அவரைப் பார்த்தால் பிறர் புலியென்று அடையாளம் காணும் அளவுக்கு

இருக்கும். தப்பு மேளம் கொட்டப்படும். அதன் தாளத்துக்குத் தக்கவாறு அவர் தெருவில் நின்று ஆடுவார். பல சமயம் புலி போன்று உறுமிக் கொண்டு அங்கும் இங்கும் பாய்வதும் சாடுவதும் அச்சவுணர்வை ஏற்படுத்தும். இருப்பினும் இன்பக் கலையாகப் புலி வேடத்தை மக்கள் காண்பதால் துணிவுடன் பக்கத்தில் நின்று களிப்படைவர். சிறுவர்களை மிகுதியாகக் கவரும் ஆட்டமாக இது உள்ளது. வீடுகளிலும் கடைகளிலும் இவர்களுக்குத் துணிமணிகள், பணம் காசுகள் கொடுக்கப்படும்.

## கடுவாய் ஆட்டம்

கடுவாய் ஆட்டமும் புலிவேடம் போன்ற ஆட்டமாகவே அமைந்துள்ளது. கடுவாயின் முகம் போன்று போலி முகம் கட்டிக் கொள்வர். உடம்பு முழுவதும் விரிவிரியாக வண்ணக் கலவையால் வரிகள் வரைந்து தனக்குக் கடுவாயின் தோற்றம் கொடுப்பர். மகுடம் அல்லது தப்புக்கொட்டு மேளம் ஒலிக்கப் படும். இடையிடையே அலறியும் உறுமியும் ஆட்டத்துக்கு விறு விறுப்பு மூட்டுவர். வேகம் மிக்க கடுமையான ஆடலாக இது தோன்றும். இவ்வகை ஆடல் பெரும்பாலும் தென்மாவட்டங் களில் ஆண்டுக்கு ஒரு முறை குறிப்பிட்ட காலத்தில் நடை பெறும். சில சமயம் கடுவாய் ஆடுபவர் ஒரு உயிருள்ள ஆட்டைக் கடித்துக் கைகளில் தூக்கி முறித்து எறிவதையும் காணலாம். கைநகங்களில் கூர்மையான கடுவாய் நகங்களைப் பொருத்திக் கட்டியும் ஆடுவது உண்டு. பிரியாக முறுகிய ஆட்டுக் கொம்புகளைக் கையில் பிடித்து அங்கும் இங்கும் துள்ளி அடவுமுறையில் ஆடுவது கடுவாயின் பதுங்கிப் பாயும் தன்மை யைப் புலப் படுத்தும் கடுவாய் இவ்வாறு ஆடும் போது இன்னொருவர் ஒரு வெடியுடன் பாய்ந்து அதைச் சுட முயல்வது போன்று நடிப்பார். காடுவாய் வெடியிலிருந்து தப்பவும் வெடிக் காரனைத் தாக்கவும் முயல்வதாக ஆட்டம் நடை பெறும். இதனை மிகமிக உன்னிப்பாகக் கூடி நிற்போர் ஆவலுடன் கண்டு களிப்பர். கடுவாய்க்கும் வெடிக்காரருக்கும் நடக்கும் வெற்றி தோல்வி போட்டியாகவே அந்த ஆட்டம் நடக்கும்

வீடுகளுக்கு முன்னாலும் கடைகளுக்கு முன்னாலும் நின்று நின்று ஆட்டம் நடக்கும் மக்கள் அவர்களைச் சூழ்ந்து நிற்பர். அவர்களுக்கு துணிகளும், பணமும், தேங்காயும் கொடுக்கப்படும். சில சமயம் வசதியுள்ளோர் விலைவுயர்ந்த பரிசுப் பொருட் களைக் கொடுப்பதும் உண்டு. பெற்ற பொருட்களை ஒரு கம்பில் கட்டித் தொங்க விட்டு அதனைத் தூக்கிப் பிடித்தவாறு

வருவர். கூடுதல் பரிசு பெற அது ஒரு தூண்டுதலாக அமையும். புலி வேடமும், கடுவாய் ஆட்டமும் கொடிய விலங்குகளிட மிருந்து மக்கள் தங்களை எவ்வாறு காப்பாற்றிக் கொள்ள வேண்டும் என்பதற்குத் தகுந்த பயிற்சியளிக்கும் கலைகள் என்று கருதலாம். அச்சம் போக்கி வீரம் கொடுக்கும் கலையாகவும் இவை விளங்குகின்றன.

மழையில்லாத பஞ்சகாலத்தில் கடுவாய் ஆடுவதை ஒரு நோன்பாகக் கருதித் தென் மாவட்டத்து இந்துக்கள் ஆடுவதாக வும் தெரிகிறது. பல விதமாக விரத முறைகளைக் கையாண்ட வர்களே இந்த ஆட்டத்தில் பங்கு கொள்ளவேண்டும் என்று நம்பினர். இந்த ஆட்டம் நடந்த பின் மழை வரும் என்று மக்கள் நம்பினர். கொடுமையின் உருவகமாகக் கடுவாயை நினைத்து அது கொல்லப்பட்டதும் ஊர்ப்பாவம் தொலைந்து மழை பொழியும் என்று நம்பினரோ என்னவோ அறிய முடிய வில்லை. ஏதோ ஒரு நம்பிக்கை மக்கள் மத்தியில் இருந்துள்ளது. இந்த நம்பிக்கையில் இவ்வாடலை ஒரு புனிதச் சடங்காகப் பல இடங்களில் நடத்தியுள்ளனர். இந்துக்களில் இந்த ஆட்டம் ஆடுவோர் குறிப்பிட்ட பழக்கமுடன் இருந்ததாகத் தெரிய வில்லை. நோன்பு இருப்பவர் யாரும் ஆடலாம் என்ற பழக்கமே இருந்துள்ளது.

முஸ்லீம்கள் முகரம் பண்டிகை நடக்கும் போது பலவித நோன்புகள் காத்து இந்த ஆடலில் ஈடுபடுகின்றனர். அது ஒரு சமயச் சடங்காகவே மிகச் சிறப்பாக நடைபெறுகிறது. ஆட்டம் பல இடங்களில் நடைபெற்ற பின் குறிப்பிட்ட நாளில் தீக்குழி பாயும் விழா நடக்கும். அது மிகவும் புனிதச் செயலாகக் கருதப்படும். குமரியிலும் தஞ்சையிலும் முஸ்லீம்கள் இத்தகைய ஆடலை மிகவும் புனிதமாகக கருதி ஆடுவதாக அறிய முடிகிறது. தஞ்சையில் முகரப் பண்டிகை ஊர்வலத்தின் போது கடுவாய் ஆட்டத்துடன் மயிலாட்டமும் நடப்பதாகக் கூறப்படுகிறது. கவரத்தக்க ஆடையணிகளுடன் இந்த ஆடல்கள் நடக்கும்.

மெக்சிக்கோவிலும் ஜகுவர் (Jaguar) என்ற பெயரில் கடுவாய் ஆட்டம் நடைபெறுகிறது. தென் அமெரிக்காவிலும் இத்தகைய ஆடல் நடப்பதாக அறிய முடிகிறது. இவ்வாடல் மிகுதியும் சமூகத் தொடர்பு உடையதாகவே தோன்றுகிறது. வேட்டை யாடல் தொழிலே இதற்கு அடிப்படை உணர்வைக் கொடுத் திருக்க வேண்டும். பின்னர் சமய உணர்வு அதனுடன் கலந்திருக்கலாம்.

## பகல் வேடம்

சாதாரண மக்களின் தொழில் முறைக்கலையாகப் பகல் வேடம் உள்ளது. இது வட மாவட்டங்களில் மிகப் பரவலாக நடைபெறுகிறது. பலவிதமான வேடங்களையும் புனைந்து ஏழை மக்கள் வீடுவீடாகச் சென்று பரிசுகளையும் பொருள் களையும் பெற்றுச் செல்வது வழக்கம். பலர் பல வேடங்களைப் பூண்டு கூட்டமாகச் செல்வர். கடைகளுக்கு முன்னால் பலர்காண இவர்களுடைய ஆடல் நடைபெறும். ஆண்களே பெண் வேடம் புனைவர் இவர்கள் பல வேடங்களைப் பூணுவதால் சில இடங் களில் இவர்களைப் பலவேடக்காரரா என்று கூறுவர். பரிசில் தரும் வீட்டாரைப் பலவாறு புகழ்ந்து பாடுவது இவர்களுடைய வழக்கம்.

கலையை விடவும் கலைஞருடைய பிழைப்பே முக்கியமான தாகக் கருதப்படும். ஆகையினால் இக்கலையின் சிறப்பு மிகவும் குன்றி விட்டது. இப்பொழுது இத்தகைய கலை மங்கி மறையத் தொடங்கி விட்டது.

## உறுமிக் கோமாளி ஆட்டம்

பொங்கல் அல்லது அதனை அடுத்த இருதினங்கள் உறுமிக் கோமாளி ஆட்டம் நடத்தப் படும் இதில் வரும் ஒரு கோமாளி யின் ஆடல் மிகவும் முக்கியமானது. அவன் பளபளப்பான வண்ண ஆடைகளைக் கட்டிக் கொண்டு நகைச் சுவை ததும்ப ஆடுவான். அவனுடைய ஆடையின் பலபகுதிகளில் குஞ்சங்கள் அழகாகத் தொங்கிக் கொண்டிருக்கும். தலையில் ஒரு வண்ணக் குல்லா வைத்திருப்பான் அதன் நுனி நீண்டு காணப்படும். அதில் ஒரு குஞ்சம் தொங்கும். அவன் விதவிதமாகச் செய்யும் வேடிக்கை கள் மக்களைக் குலுங்கக் குலுங்கச் சிரிக்க வைக்கும்.

கோமாளிக்குத் துணையாகச் சிலர் ஆடுவர். அவர்கள் இடுப்பில் பாவாடை கட்டிக் கொண்டு மேலே சட்டை அணிந்து இருப்பர். உறுமாறும் கட்டிக் கொண்டு வருவர். கழுத்தில் ஒரு நீண்ட அங்கவஸ்திரத்தைச் சுற்றிப் போட்டிருப்பர். அது அங்குமிங்கும் பறந்து கொண்டிருக்கும். இவர்களுடைய இசைக் குழுவில் ஐந்து பேர் இருப்பர். ஐந்து துளைகளுடைய புல்லாங் குழலும் தாதாப் பலகையும் (கஞ்சிரா) அவர்கள் பயன் படுத்தும் முக்கிய இசைக் கருவிகள். அதில் ஒரு வளைந்த கம்பியை உரசி ஒலி எழுப்புவர். உறுமி உறுமி ஒலிப்பதால் அது உறுமி மேளமாகியது. அதன் இசையை முக்கியமாகக் கொண்டு

ஆடுவதாலும் அதில் கோமாளியின் பங்கு சிறப்புடையதாக இருப்பதாலும் இந்த ஆடலை உறுமிக் கோமாளி ஆட்டம் என்று கூறுகின்றனர் இவர்கள் இரண்டு புல்லாங்குழல்கள், தப்பு, உறுமிமேளம், இரு கம்புகளால் அடித்து முழக்கப் படும் ஒரு முகப் பேரிகை ஆகிய இசைக் கருவிகளையும் துணையாகப் பயன் படுத்துவது உண்டு.

முதன் முதலில் கோமாளி தோன்றி அறிமுகமாக 'கோமாளி தாசரி ஒச்சேனையா' என்று பாடியவாறு வருவான் பின்னர் 'விஷ்ணு பக்தனான கோமாளி நான் இதோ வந்து விட்டேன்' என்று கூறுவான். ஆட்டம் தொடங்கி விடும். இந்தக் குழுவினர் அழகாக ஒப்பனை செய்து இரண்டு காளைகளையும் கொண்டு வருவர். காளைகளில் வண்ணத் துணிகள் போடப்பட்டிருக்கும். அவர்களுடைய பாடல் பெரும்பாலும் வாழ்த்தும் பாராட்டு மாகத்தான் இருக்கும் மக்களின் நலம் வேண்டும் பாடல்களாகவும் பாடப்படும் இதற்குச் சமயச் சிறப்பை விடவும் சமூகவுணர்வுச் சிறப்பே அதிகமாக உள்ளது. உறுமிக் கோமாளி ஆட்டத்தினர் வீடுகளுக்குச் சென்று பரிசுகள் பெறுவர். இந்தக் கலை வட ஆர்க்காடு, தென் ஆர்க்காடு, செங்கல்பட்டு, திருச்சி, சேலம் மாவட்டங்களில் மிகுதியாக நடைபெறுகிறது.

## குறவன் குறத்தி நடனம்

குறவர் குல மக்கள் முற்காலத்திலிருந்தே நாட்டுப் புற மக்களைப் பெரிதும் கவர்ந்திருக்க வேண்டும். அவர்களுடைய குறி சொல்லும் பழக்கம் காரணமாக இருக்கலாம். அவர்களைக் கொண்டு தமிழ் நாட்டில் பல கலைகள் உருவாகி இருக்கின்றன. திருச்சி. தஞ்சை, பெரியார், தர்மபுரி மாவட்டங்களில் குறவன் குறத்தி நடனம் மிகப் பரவலாக நடை பெறுகிறது. இது மிகவும் எளிமையான ஆடலாகும். இவர்கள் பச்சை குத்திக் குறி சொல்வது போல் நடிப்பர். இருவர் குறவன் குறத்தி வேடமிட்டு வருவர். பலவிதமான குறத்திப் பாடல்களைப் பாடிக் கொண்டு வீட்டுக்கு வீடு வருவது இவர்களது பழக்கம். மக்களையும் ஊர்த் தலைவரையும் வாழ்த்துவர் நாட்டாண்மைக் காரரின் புகழைப் பாடுவர். வயிற்றுப் பிழைப்பை நோக்கமாகக் கொண்ட கலையாகவே உள்ளது. விழாக் காலங்களில் இத்தகைய ஆடலை மக்கள் நடத்திக் காண்பதும் உண்டு.

## வீரக் கலைகள்

மனிதன் தன்னைப் பகைவரிடமிருந்து காத்துக் கொள்ள வேண்டிய நிலையுடையவன். உடல் வலிமை, அறிவுக் கூர்மை, ஆயுதத்துணை ஆகியவற்றால் தன் போராற்றலைக் காட்டித்

தன்னைப் பகைத் தாக்குதலிலிருந்து காப்பாற்ற மனிதன் முயல்கிறான். முற்காலத்தில் மனிதனை மனிதன் புரியாமல் ஒருவரை ஒருவர் எதிர்த்துப் போராடியிருக்கின்றனர். குழுக்களும் இனங்களும் ஒன்றுடன் ஒன்று முரண்பட்டு மோதியழிந்துள்ளதை உலக வரலாறு படம் பிடித்துக் காட்டும். காலத்தின் இயல்பு மனிதனைப் போர்ப் பயிற்சியில் ஈடுபடத் தூண்டியுள்ளது. ஒருவனுடைய உயர்வும் பெருமையும் அவனுடையப் போராடும் திறமையைக் கொண்டு கணிக்கப் பெற்ற காலநிலையும் இருந்தது. அந்தக் காலப் பகுதியை வீரயுகமாகக் குறிப்பிட்டனர். வீரனை அனைவரும் மதித்துப் போற்றினர் வீரச்செயல் புரிந்தவன் இறைநிலைக்கு உயர்த்தப் பட்டான். அவனுடைய வீர மரணம் அனைவராலும் மதிப்புடன் போற்றப் பட்டன. போரில் மடிந்தவன் 'வீரசுவர்க்கம்' புகுந்து சிறப்படைவான் என்று அனைவரும் நம்பினர்.

தமிழ் நாட்டில் மாத்திரமன்றி உலகில் பல இடங்களில் வீர வணக்கம் நடைபெற்றன. ஐரோப்பாவின் ஸ்காண்டி நேவியாவில் வீர வணக்கம் 'ஒடின்' (Odin) என்ற பெயரில் நடைபெற்றன. இறந்த வீரர்கள் 'வல்ஹல்லா' என்று அழைக்கப் படும் வீரர்கள் வாழும் துறக்கத்துக்குச் சென்று பலவகையான வசதிகளுடன் வாழ்வதாக மக்கள் நம்பினர். அவர்களை வழிபட்டு வணங்கினர். அவர்கள் நினைவாக வீரக்கல் நட்டுச் சிறப்பித்தனர். ஆண்டு தோறும் கல்நிறுத்திய இடத்தில் விழாவெடுத்து அவர்களுடைய புகழைப் பாடினர். தமிழ் நாட்டில் அத்தகைய வீரர் நினைவுக் கற்களை நடுகல் என்று அழைத்தனர். அதிலிருந்துதான் இறந்தோருக்குக் கல்லெடுக்கும் வழக்கம் வந்திருக்க வேண்டும். வீரச்செயல் புரிந்து தன் ஆண்மையினை உலகுக்கு அறிவிக்க அனைவரும் விரும்புகின்றனர்.

உலக வீரர்கள் பல முறைகளில் தங்கள் திறமையைக் காட்ட முயல்கின்றனர். உடல் வலிமையுடையவர் அடிபிடியிலும், குத்துச் சண்டையிலும் காட்டுகிறார்கள். இந்தத் திறமையிலிருந்து மல்யுத்தம், மல்லாடல் ஆகியவை கலைகளாக வளர்ந்துள்ளன. பலவிதமான உத்தி முறைகளைக் கையாண்டு இந்தக் கலையைத் திறமையுடன் மக்கள் வளர்த்துள்ளனர். மற்போர் போட்டிகளும் மல்லாடல் நிகழ்ச்சிகளும் பல இடங்களில் நடந்து மக்களைக் கவர்ந்துள்ளன.

## சிலம்பாட்டம்

ஆயுதங்களைக் கொண்டும் பலவிதமான வீரப் போட்டிகள் நடந்துள்ளன. கம்பு, வாள், ஈட்டி, கத்தி, கதை ஆகியவற்றைக் கொண்டு வீர விளையாட்டுகள் நடத்துவதை இன்றும் பல இடங்களில் காணலாம். வீர முறுக்குடைய மக்களே இத்தகைய வீர ஆடல்களை விரும்பிக் காண்பர். தமிழர்களுடைய நாட்டுப் புறக்கலைகளும் மிகச் சிறப்பாக விளங்கும் 'சிலம்பம்' ஒரு முக்கியமான வீர விளையாட்டாகக் காணப்படுகிறது. நாட்டில் பல பகுதிகளில் பரந்து காணப்படும் சிலம்பக்கலை தமிழ் மக்களின் வீர முனைப்பைச் செவ்வனே விளக்கிக் காட்டுகிறது. தமிழ் நாட்டின் தென் பகுதியில் கலைத் திறனுடன் அது வளர்ந்து சிறந்துள்ளது.

'சிலம்பு' என்பது பலபொருள் ஒரு சொல்லாக உள்ளது. 'ஒலித்தல்' என்ற பொருளைச் சிறப்பாகக் கொண்டு கம்புகளை அடித்து ஒலியெழுப்பும் விளையாட்டுக்கு அப்பெயர் வந்ததாகக் கொள்ளலாம். இந்த ஒலியைத் தவிர இரும்பு ஆயுதங்கள் மோதும் ஒலியும் இந்த ஆடலில் கேட்கும். ஒழுங்கு முறையாக அடித்தால்தான் தேறிய எதிரியை வீழ்த்த இயலும். ஆகையினால் போர் முறைகளுக்கு உரிய சில விதி முறைகளுக்கு உட்பட்டு சிலம்படி அமைகிறது. அவ்வாறு அமைவதனால் கம்படிகள் ஒருவகை ஒழுங்குக்குக் கட்டுப்பட்டு எழும் அது கேட்பதற்குச் சுவையாக இருக்கும். இக்காரணம் பற்றியும் இந்த ஆடலில் ஒலிக்குச் சிறப்பிடம் கொடுக்கப் பட்டிருக்கலாம். போராடுவோரை உணர்ச்சியைத் தட்டி எழுப்பி அவர்கள் உயிர் மறந்து செயலில் ஈடுபடச் செய்வது முரசு ஒலியாகும். அது வீர வேகத்தை எழுப்பி நரம்புகளை முறுக்கேற வைத்து போராடும் துணிவைக் கொடுக்கிறது. இத்தகைய தோல் கருவியின் ஒலித் துணையுடன் தான் சிலம்பாட்டமும் நடைபெறுகிறது. பல நிலைகளில் ஒலி சிலம்பாட்டத்துடன் தொடர்பு பட்டுள்ளதைக் கவனித்து இப்பெயரின் பொருத்தத்தைச் சிந்திப்பது நலம்.

மனித வாழ்வில் போராடல் தவிர்க்க முடியாத ஓர் இயல்பாக அமைந்துள்ளது. 'ஒருவனை ஒருவன் அடுதலும் தொலைதலும் புதுவதன்று; இவ்வுலகத்து இயற்கை' என்று கூறப் பட்டுள்ளதைப் பார்க்கலாம். மனிதன் முதலில் கம்புகளைக் கொண்டு போராடியிருக்க வேண்டும். அவை அவனுக்கு மிக மிக எளிதாகக் கிடைக்கக் கூடிய ஆயுதங்கள். போரில் வெற்றி

பெற்றோர் தங்கள் கையுள்ள கம்புகளைத் தட்டி ஆர்ப்பரித் திருப்பார்கள். அது வெற்றி விழாவாக உருவாகியிருக்கலாம். நாளாக நாளாக அது சீர்திருத்தி ஒரு கலையாக வளர்ந்திருக்கும்.

போருக்கு வேண்டிய பயிற்சியைப் பெறும் போது பலவித மாக அடித்து ஒழுங்கு முறைகளைச் சீராக்கி இருப்பான். ஒருவன் அடித்து அடுத்தவன் தடுத்துப் பழகியிருப்பர். அவ்வாறு அடிப்பதில் ஒருவித கலைநயத்தை மனிதன் உணர்ந்து சிலம்பாட்டக் கலையை உருவாக்கி வளர்த்திருக்கலாம். போராடும் உணர்ச்சியில் தோன்றி போராடும் முறையில் வளர்த்து ஒழுங்கு முறைகளால் சீர்ப்பட்டு கலைத்தன்மைகளில் வளம்பெற்று வளர்ந்த கலையாகச் சிலம்பாட்டம் விளங்குகிறது.

இன்றைய நிலையில் சிலம்பக்கலை மிகவும் சிறப்பாக வளர்ந்துள்ளது. உடற்பயிற்சி, தற்காப்பு, போராட்டம் ஆகிய முக்கிய நோக்கங்களைக் கொண்டு விளங்குகிறது. 'நடசாரி' என்று கூறப்படும் ஓலைப் பட்டயச் செய்தியில் சிலம்பாட்டத்தின் தோற்றம் ஒரு புராணக் கதையாகக் கூறப் பெற்றுள்ளது. பரமசிவனின் முன்பு பீமன் பலவிதமான அடவு முறைகளுடன் (அடிமுறைகள்) ஆடினானாம். அதைப் பாராட்டுகிறார். ஆகையினால் மற்றவர்களும் பின்பற்றிச் சிலம்பக் கலையை வளர்த்துள்ளனர். தேவதைகளுக்கு உரியதாகவும் இந்தக் கலை கூறப்படுகிறது. தனிமனிதன் தன் கலைத் திறனை விளக்கவும் இக்கலையில் இடமுள்ளது. கம்பை வேகமாகச் சுழற்றுவதில் கலை நயத்தைக் காட்டிப் பிறரைக் கவர்ந்துவிடுகிறான். வேகம், திடீரென சுழற்சி மாற்றல், முன்பின் திரும்பி ஆடல் ஆகியவற்றில் கவர்ச்சியும் வியப்பும் உள்ளன.

சிலம்பாட்டத்தில் பலவிதமான சுவடுமுறைகள் கையாளப் படுகின்றன.[14] தட்டு வர்மச்சுவடு அவற்றில் ஒன்று, இது 64 ஆசனங்களை உடையது. இது உடலிலுள்ள வர்ம நாடியிடங் களை நோக்கி அடிப்பதாகும். இன்னும் 64 ஆசனங்களை உடைய அங்கச் சுவடு முறைகள் உள்ளன. இதனை இப்பொழுது யாரும் கையாண்டு விளையாடுவதில்லை, ஆடுவதற்கு மிகுந்த நுட்பத் திறன் வேண்டும். ஒன்றைச் சுவடு

(14) சிலம்புக் கலையின் சுவடு முறைகளை விளக்கிக் கூறிய ஆசான் திரு எல். சுகுமாரன், இளந்தோட்டம் விளை, கிள்ளியூர், குமரி மாவட்டம்.

முறை பார்ப்பதற்கு வியப்பாகவும் கையாள்வதற்குக் கடின மாகவும் இருக்கும். ஒரு காலை இருப்பில் பலமாக வைத்து (தரையில் ஊன்றி) மற்ற காலாலும் கைகளாலும் மிகத்துரித மாகச் செயல்பட்டு அடிக்க வேண்டும் இவை தவிர 12 நிலையங்கம், 12 அமத்தங்கமும் உள்ளன கர்னாடகச் சுவடு முறையும் சிலம்பாட்டத்தில் கையாளப் படுகிறது. கைதேர்ந்த வர்களே இதைச் செய்ய முடியும்.

இருவர் ஒருவரை ஒருவர் அடித்தலும், அடித்து அடித்துப் பிரிதலும் நல்ல திறமைக் காட்சிகளாகும். ஒருவர் இடம் பார்த்து அடிக்க வேண்டும். அடுத்தவர் அந்த இடத்தில் அடி விழாமல் தடுக்க வேண்டும். இதனை 'அடிச்சுப் பிரிவு' என்று கூறுவர். இன்னொரு வகைக்குப் 'பூட்டுப் பிரிவு' என்று பெயர். ஒருவர் கைகொண்டு அடுத்தவரைப் பூட்டிப் பிடிக்கவும் அவர் திறமையாக அந்தப் பூட்டிலிருந்து பிரிந்து தன்னை விடுவித்துக் கொள்ள வேண்டும்.

கத்தி, கம்பு, வாள் முதலிய ஆயுதங்களைக் கொண்டு விளையாடுவதை 'ஆயுதப் பெருக்கம்' என்று கூறுவர். எந்த ஆயுதத்தைக் கொண்டு எப்படித் தாக்கினாலும் அதிலிருந்து தப்பி எதிர் தாக்குதல் செய்வதே இந்த ஆடல். மிகத் திறமையும் கவனமும் இல்லையானால் கூர்மையான ஆயுதங்களுக்குப் பலியாக நேரிடும். வாய்ப்பாடு சொல்லிக் கொண்டு காலத்தைக் குறித்தவாறு கம்பு கொண்டு அடிப்பதற்குச் 'சிரமம்' என்று பெயர். மிகவும் நுட்பமான விளையாட்டாக இது உள்ளது. கணக்குத் தவறினால் காலும் கையும் தப்பாது. தலை போனாலும் போய்விடும். கணிதமாகவும் கலையாகவும் சிலம் பாட்டம் விளங்குகிறது.

தமிழ் நாட்டில் பல பகுதிகளில் சிலம்பக் கலை நடைபெறு கிறது. ஆயினும் குமரி மாவட்டத்தில் குறிப்பாக அதன் வடமேற்குப் பகுதியில் நடப்பது போன்று சிறப்பாக வேறு எங்கும் நடப்பதில்லை. மிகச் சிறந்த 'சிலம்படி ஆசான்கள்' அப்பகுதியில் இன்றும் வாழ்ந்து வருகிறார்கள். நன்றாகக் கலை அறிந்தவர்கள் அதைப் பயன்படுத்தி 'முன்னடி' அடிப்பதில்லை. தன்னைக் காக்கும் கலையாகவே அதனைப் பலர் பயன் படுத்து கின்றனர். ஒரே அடியில் எதிரியை வீழ்த்தும் கலைஞரும் உள்ளனர். நன்றாகக் கலை தெரிந்தோர் மிகவும் பொறுமை யுடையவர்களாகவே காணப்படுகின்றனர். ஆனால் அவர்

களைப் புரியாமல் தான் தோன்றித்தனமாக எதிர்த்தவர்கள் தப்பவே முடியாது. 'சாவடி' என்பது அவர்கள் எதற்கும் முடியாத நிலையில் கடைசியாகப் பயன்படுத்தும் அடிமுறை யாகும்.

தேவையான கலையானாலும் பண்புடையவர்களே பயில வேண்டிய கலையாக உள்ளது. மனிதவுணர்வு இல்லாத முன் கோபக்காரர் இக்கலையைப் பயிலவே கூடாது என்று ஆசான்களே கூறுவர். அவர்களுக்கு எல்லா அடவு முறை களையும் பயிற்றுவிப்பதும் இல்லை.

விழாக்களில் சிலம்பாட்டம் வைத்து அதனை மக்கள் கண்டு களிப்பர். ஒருவருடைய தலையிலோ நெற்றியிலோ ஒரு வாழைக்காயை வைத்து ஒரு வாளால் இரண்டு துண்டாக வெட்டிக் காட்டுவது உண்டு. காயை வைத்திருப்பவருக்கு ஒரு சிறிதும் காயம் படாது. சுருட்டுவாள் வீசுதலும் அதில் ஒரு பகுதியாக நடைபெறும் பயிற்சியும் தேர்ச்சியும் உடையவர்கள் மாத்திரமே மக்கள் முன்னர் கம்பெடுத்து ஆட வருவர். சிறிது தவறினாலும் வரும் ஆபத்தோ மிகப் பெரிதாக இருக்கும். அஞ்சாமை, வீரம், நுட்பம், துரிதம், கவனம் ஆகிய தன்மை யுடையவர்களே தேர்ந்த சிலம்பக் கலைஞர்களாக வெளிவர முடியும். தமிழரின் உண்மையான வீரத்துக்கும் நுட்பமான செயல் திறனுக்கும் வியக்கத் தகும் போராற்றலுக்கும் எடுத்துக் காட்டாகச் சிலம்பக் கலை விளங்குகிறது.

## மஞ்சு விரட்டு அல்லது சல்லுக் கட்டு

தமிழ் மக்களின் வீர விளையாட்டுகளில் ஒன்றாக ஏறு தழுவு தலைக் கூறலாம். பழக்காது வளர்த்த முரட்டுக்காளையைப் பிடித்து ஓர் ஆண்மகன் அடக்குவதே இந்தக் கலையாகவும் விளையாட்டாகவும் கருதலாம். காளைகளைப் பிடிப்பதற்குச் சில தந்திர உத்திகளைப் பயன் படுத்துகின்றனர். வீரமும் உடற் பலமும் இல்லாதவர் இதில் கலந்து கொள்ள முடியவே முடியாது. ஏறு தழுவல் பண்டைக் காலத்தில் இருந்து இன்று வரைத் தமிழ் நாட்டில் பழகத்தில் உள்ளது. முல்லைக் கலியில் இது பற்றிய குறிப்பு இருப்பதினால் சங்க காலத் தமிழரின் பழக்கம் நமக்குத் தெரிய வருகிறது. இப்பொழுது நாட்டுப் புறங்களிலுள்ள ஆலய விழாக்களின் போது இத்தகைய நிகழ்ச்சி நடத்தப் படுகிறது. பொங்கல் போன்ற பண்டிகை நாட்களிலும் இது சில இடங்களில் நடை பெறுகிறது. இப்பொழுது இதனை மஞ்சு அல்லது சல்லிக் கட்டு என்று கூறுவர்.

மஞ்சு விரட்டுக்காகவே காளைகள் தனியாக வளர்க்கப்படும். கொம்புகள் கூர்மையாகச் சீவிவிடப்பட்டிருக்கும். சுற்றிலும் பாதுகாப்புள்ள பரந்த வெளியில் காளையை விட்டு விடுவர் அதனை ஓர் ஆண் மகன் அடக்கவேண்டும். சில ஊர்களில் காளையை ஒரு நீண்ட வடத்தால் கட்டிப் பிடித்திருப்பர். காளைகளைப் பட்டுத் துணியால் ஒப்பனை செய்தும் இருப்பர். காளையை அடக்கி விட்டால் பணம் பரிசாகக் கொடுக்கப்படும். காளையின் கொம்பில் பணத்தைப் பையில் வைத்துக் கட்டிவிடும் பழக்கமும் உண்டு. நாணயத்தைச் சல்லி என்று கூறும் பழக்கத்தைக் கொண்டு இதற்குச் 'சல்லிக்கட்டு' என்ற பெயர் வந்திருக்கலாமா என்பதைச் சிந்திக்கலாம்.

காளையை அடக்குபவர் மிகத் திறமையாக அதன் பக்கத்தில் சென்று கூர்மையான கொம்புக்குத் தப்பிப் பிடிக்க வேண்டும். மாட்டின் திமிலைப் பற்றி முகத்தை வளைத்து அதை நிலை தடுமாறச் செய்து வீழ்த்தி விடுகிறார்கள், பிடிதவறி விட்டால் மாட்டின் கொம்பு குடல் மாலை சூடி அந்த இடத்தைக் குருதி குளமாக மாற்றிவிடும். அவ்வாறு பலியாகும் வீரர்கள் பலர் உள்ளனர். வீர விளக்கக் கலையாகவே சல்லிக்கட்டு நடைபெறு கிறது. பண்டைக் காலத்தில் கன்னியரின் காதல் கரம் பற்றவும் இத்தகைய வீர நிகழ்ச்சிகள் நடந்துள்ளன.

பண்டை நாளில் ரோம், ஸ்பெயின் போன்ற நாடுகளில் வீரர்கள் சிங்கத்துடன் போராடும் காட்சிகளை மக்கள் கண்டு களித்துள்ளனர். வீரர்களை கிளாடியேட்டர்ஸ் (Gladators) என்று அழைத்துள்ளனர். தமிழ் நாட்டில் புலியுடன் மல்லாடி அதைக் கொன்று தன் வீரத்தை நிலை நாட்டிய தீரர்கள் உண்டு. புலியைத் தன் திறமையால் கொன்று தன் வீரத்தை நிலை நாட்டிய ஒருவரை இன்றும் மக்கள் புலியடி இராமசாமி (தெங்கம்புதூர், குமரிமாவட்டம்) என்றே சிறப்பாக அழைக் கின்றனர். புலி போன்ற மிகக் கொடிய மிருகங்களுடன் போராடுவதை மகிழத் தக்க நிகழ்ச்சியாகத் தமிழ் நாட்டில் எந்தப் பகுதியிலும் நடத்தியதாகத் தெரியவில்லை. காளை வலிமையுடையது. ஆனால் கொடியது அல்ல. மனிதனின் வலிமையையும் வீரத்தையும் கண்டறியும் வீர நிகழ்ச்சியாகச் சல்லிக் கட்டைத் தமிழ் மக்கள் நடத்தி வருகின்றனர்.

## சேவல் போர்

மனிதனின் வெறி கொண்ட ஆவலினால் சில இடங்களில் சேவல் போர் நடத்தப் படுகிறது. போர்க் கோழிகளைத் தனியாகத் தெரிந்தெடுத்து குறிப்பிட்ட இரை கொடுத்து

தட்டுப் பாட்டுடன் வளர்க்கின்றனர். கோழியின் நிறத்தையும் போர் நடக்கும் நேரத்தையும் குறிப்பாகக் கொண்டு நாளும் கோளும் பார்த்துச் சேவலைச் சண்டையிடுவதற்காக வெறி யேற்றிக் களத்தில் விடுகின்றனர். சேவலின் கால்களில் கூர்மை யான கத்தியைக் கட்டியிருப்பார்கள். இரண்டு சேவல்களும் வெறிகொண்டு கழுத்திலுள்ள முடிகளைச் சிலிர்த்தவாறு ஒன்றை ஒன்று எதிர்த்து வேகமாகத் தாக்கும். காலிலுள்ள கத்தி ஏதாவதொன்றைக் கீறியதும் அது பின்வலித்து ஓடும். உடனே அதன் காலை முறித்து வெற்றி பெற்ற கோழியின் உரிமையாளரிடம் கொடுத்து விடுவர். இத்தகைய சேவல் போரை மக்கள் சூழ்ந்து நின்று வேடிக்கை பார்ப்பர். சில சமயம் வெற்றி தோல்வி இன்றி வெகு நேரம் இரண்டு சேவல்களும் சண்டையிடும். இதைப் பார்க்க மக்கள் சலித்து விடுவர். உடனே 'விராசி' (சமாதானம்) என்று கூறி இரண்டு கோழி களையும் உரியவர்களிடம் கொடுத்து விடுவர். அடுத்து இரண்டு சேவல்கள் போர்க்களத்தில் ஏவப்படும்.

இத்தகைய கொடுமையான சேவல் போரைப் பலர் இரக்க வுணர்வுடன் வெறுத்தனர். தடை செய்யவும் முயன்றனர். இப் பொழுது இத்தகைய சண்டை மிகவும் அருகிய நிலையில்தான் நடைபெறுகிறது. திருநெல்வேலி மாவட்டத்திலுள்ள காடு வெட்டி என்ற ஊரில் இப்பொழுதும் வாரந்தோறும் சேவல் போர் நடைபெறுகிறது. பல சமயம் சேவல் போர் மனிதர்களின் சண்டையில் போய் முடிந்து விடுவதும் உண்டு. பந்தயம் கட்டிக் கொண்டு சேவல்களைக் களத்தில் இறக்கி விடுவர். பெரும் பாலும் அது மக்களின் சண்டையில்தான் முடியும். ஆகையினால் அதை மக்கள் வெறுத்து ஒதுக்கி விட்டனர்.

## ஆட்டுக் கடாச்சண்டை

வீர முனைப்புக்குப் பெயர் பெற்ற ஆட்டுக்கடாக்களை மோத விட்டு வேடிக்கை பார்ப்பதும் சில இடங்களில் நடக்கிறது, அவை மோதும் போது படார் படாரென ஒலி கேட்கும் அதைக் கேட்டு கைகொட்டி ஆர்ப்பரிப்போரும் உள்ளனர். போரில் சில சமயம் கொம்புகள் முறிந்து தொங்கும். குருதி கொட்டும். ஆனாலும் அவை பின்னடையாது போரிடும் இரக்க முடையோர் இந்தக் காட்சியைப் பார்க்கவே முடியாது மக்களின் வீரவுணர்வா அல்லது வெறிப்போக்கா இத்தகைய விளையாட்டுக்குக் காரணம் என்று கூற முடியவில்லை. கடாக்களை மோத விடுதலும் இக்காலத்தில் அருகி விட்டது.

மக்களின் எதிர்ப்புணர்வே இத்தகைய களிப்பு ஆடல்களுக்குக் காரணம் என்று கூறலாம். தன்னுடைய ஆற்றலைக் காட்ட விரும்பும் மனிதன் பிற உயிரினங்களின் ஆற்றலையும் அறிய விரும்புகிறான். மரணப்பிடி வரையிலும் தான் சென்று வீரம் விளக்குவது போன்று அவற்றையும் அந்த எல்லைவரை விரட்டி வேடிக்கை பார்க்க ஆவலுறுகிறான்.

வீரக் கலைகளால் விளக்கம் பெறும் மனிதன் சமூகத்தில் ஒரு மதிப்பைப் பெறுகிறான். பெண்களைக் கவரும் தன்மையாகவும் அது விளங்குகிறது. அவனுடைய போராற்றல் கலைக்கும் மக்களின் பாதுகாப்புக்கும் பயன்படுவது நன்று. அத்தகைய இயல்புடன் விளங்கும் வீரக்கலைகளே அனைவராலும் வரவேற்கப்படும். அவையே நிலைத்து வளரும். போர் உணர்வு குறைந்துள்ளதினால் வெறித்தன்மையுடைய பல கலைகள் மங்கி மறைந்து வருகின்றன. பழங்குடி மக்களிடம் சில ஒதுங்கிய இடங்களில் வெறிக்கலைகள் இன்றும் விறுவிறுப்பு வேகமுடன் நடப்பதாகக் கூறப்படுகிறது. அவை போர் வெறியைத் தூண்டும் தன்மையுடையன. இந்தியாவைப் பொறுத்தவரை இத்தகைய வெறித்தன்மை குன்றிய கலைகளே உள்ளன. பீலர், தோகட், கோண்ட் சவரர் ஆகிய பழங்குடியினரிடம் அவை பழக்கத்தில் உள்ளன.

### போட்டியாடல்கள்

மனிதனின் வீர முறுக்கமே பலவிதமான போட்டி பந்தயங்களுக்கு காரணமாக அமைகிறது. அதன் காரணமாகப் பகையைத் தேடி அல்லல் படுவது பல இடங்களில் கேட்கப் படும் செய்திகளாகும். போட்டிகள் விளையாடலாகத் தான் நடத்தப் படுகின்றன அவற்றிலும் கலைத்தன்மைகள் உள்ளன.

### தேங்காய்ப் போர்

உயிருள்ள சேவல் ஆட்டுக்கடா முதலியவற்றை மோதவிட்டு இன்பம் காண்பது போன்று தேங்காயை உருட்டி மோத விட்டு இன்பம் காண்பதும் மக்களுக்குச் சில இடங்களில் பழக்கமாக உள்ளது. உரித்த தேங்காயைத் தெரிந்தெடுத்து மோத விடுவர். அத்தகைய தேங்காயை ‘வேட்டுத் தேங்காய்’ என்று கூறுவர். இத்தகைய போர் பெரும்பாலும் பொங்கல் பண்டிகை நாளில் வெகு விமரிசையாய் நடக்கும் மக்கள் இரு கூறாகப் பிரிந்து இத்தகைய போரில் ஈடுபடுவர் சாக்கு மூட்டையில் போர்த் தேங்காய்கள் இரு பக்கத்திலும் கட்டி வைக்கப் பட்டிருக்கும் ஒரு

(கொட்டங்கச்சி அல்லது சிரட்டை) பலமாக இருக்கும் தேங்காயே போருக்குப் பயன் படுத்தப்படும். பல நாட்களாக அத்தகைய தேங்காயே போருக்குப் பயன் படுத்தப்படும். பல நாட்களாக அத்தகைய தேங்காயைச் சேகரிப்பார்கள். குறிப்பிட்ட மரத்திலுள்ள காய்களையே பயன் படுத்துவார்கள். தேங்காயை உருட்டுவதற்குத் தேர்ச்சி பெற்றவர்கள் உண்டு. உடைந்த தேங்காய் எதிர் பக்கத்துக்கு உரிமையாகிவிடும். நெல்லை மாவட்டத்திலுள்ள மாவடி, மலையடிப் புதூர் ஆகிய ஊர்களில் ஆண்டு தோறும் நடக்கும் தேங்காய்ப் போர் ஆயிரக் கணக்கான மக்களுக்கு நல்ல காட்சியாக இன்றும் விளங்குகிறது.

## வண்டிப் பந்தயம்

மாட்டு வண்டி பந்தயம் பல இடங்களில் நடக்கின்றன. விரைவான காளைகளை வண்டியில் பூட்டி பந்தயம் கட்டிப் போட்டிகள் நடக்கும். குறிப்பிட்ட தூரத்தைக் குறிப்பிட்டு வண்டிகளை விரட்டுவர். ஆண்டு தோறும் குமரி மாவட்டத்தில் கொட்டாரம் ஊரிலிருந்து கன்னியாகுமரி வரையிலும் நவராத்திரி (பூசையெடுப்பு) நாளில் நடக்கும் வண்டிப் பந்தயம் மிகவும் சிறப்புடையது. நெடுஞ்சாலையில் நடக்கும் இந்தப் பந்தயத்துக்கான அனுமதியை அரசிடம் முன்பே பெற்றுவிடுவர்.

மனிதனின் வீர உணர்வின் அடிப்படையாகவே இத்தகைய போட்டிகள் நடக்கின்றன. தங்கள் ஆற்றலைப் பல முறையில் காட்டி விளக்கம் பெற மனிதன் முயல்வதற்கு இவை சான்றுகளாக அமைகின்றன. கலைச் சிறப்பு குன்றியவையாக இவை அமையினும் கலைவுணர்ச்சியின் பயனாகவே உருவாகியுள்ளன என்பது தெளிவு.

# வழிபாட்டுக் கலைகள்

## வழிபாடும் கலைகளும்

இறையுணர்வு உடையவர்கள் கடவுளுக்கு வழிபாடு செய்ய விரும்புவது இயல்பு. ஒவ்வொருவரும் தங்கள் தங்கள் விருப்பத்துக்கும் நம்பிக்கைக்கும் தக்கவாறு வழிபாடு செய்து வருகிறார்கள். தனது அறிவும் உணர்வும் இழுத்துச் செல்லும் முறைகளில் எல்லாம் இறைவனை நினைத்து வழிபட மனிதன் முயல்கிறான். கலைகள் மனிதனின் நுண்ணறிவின் கண்டுபிடிப்புகளாக விளங்குகின்றன. அவற்றைக் கொண்டும் வழிபாடு செய்யலாம் என்று மனிதன் கருதுகிறான். அனைத்துக் கலைகளையும் அவ்வாறு பயன்படுத்தினாலும் சிலவற்றை அதற்காகவே இயற்றியுள்ளதாகத் தோன்றுகிறது. அவற்றை வழிபாட்டுக் கலைகளாகக் கருதி விளக்கம் காணலாம்.

## காவடியாட்டம்

முருகக் கடவுளை வழிபடும் நிகழ்ச்சியாகத் தமிழ் நாட்டில் காவடியாட்டம் மிகச் சிறப்பாக நடைபெறுகிறது. முருகனை வாழ்த்தியே காவடியெடுத்து ஆடுவர். பலவிதமான நோன்புகள் செய்து முருகன் கோயிலுக்குக் காவடியெடுத்துச் செல்வர். காவடி ஒரு குறுந்தடியால் செய்யப்பட்டிருக்கும். அதன் இரு முனைகளையும் இணைத்து மேல் நோக்கி வளைந்த அமைப்பில் கட்டியிருப்பர். அதனை மயிற்பீலி, மலர் மாலைகள் ஆகியவற்றால் ஒப்பனை செய்திருப்பர். நடுப்பகுதியில் ஒரு வேல் மேல் நோக்கிக் கட்டப் பெற்றிருக்கும். வண்ணத் துணிகளையும் சுற்றியிருப்பர். சிலர் முருகனின் படங்களை இரண்டு பக்கங்களிலும் பொருத்திக் கட்டியிருப்பர். பலவிதப் பொருட்கள் காவடியின் இருமுனைகளிலும் கட்டித் தொங்கவிட்டிருப்பதையும் காணலாம். ஒப்பனை செய்யப் பட்டுள்ள காவடி அழகின் கொலுவிருப்பாகவே இருக்கும்

நையாண்டி மேளம் போன்ற வாத்திய இசை முழக்கப்படும். காவடி தூக்குவோருக்குத் தன்மேல் இறையேறிய உணர்வு தோன்றும். அவர் அத்தகைய உணர்வு மிக்கவராக மாறித் தன்னை மறந்து ஆடத் தொடங்குவார். மேள இசை உச்சநிலை அடைய அடைய அவரது ஆட்டமும் கூடிக் கூடி வேகநிலை அடையும். அனைவரும் முருகனை நினைத்து 'அரோகரா,

முருகனுக்கு அரோகரா, வேல் வேல் முருகனுக்கு அரோகரா' என்ற ஒலிகளை எழுப்புவர். அங்கே ஒருவகை இறைத்தோற்ற நிலை உருவாகி விடும்.

காவடி எடுத்து ஆடுவோர் தங்கள் நாக்கிலும் உதடுகளிலும் சிறிய வேல்களைக் கொண்டு அலகு குத்திக்கொள்வதும் உண்டு. அவர்களால் வாய் திறந்து பேசவோ உணவு உட்கொள்ளவோ முடியாது. சில சமயம் முதுகில் செடல் குத்தி அதில் ஒரு தேரை இணைத்து இழுத்துக்கொண்டு வருவர். நோவைப் பற்றிச் சிறிதும் வருந்தாது இத்தகைய செயல்களில் ஈடுபடுகின்றனர். இச்செய்கைகளை நோக்கும்போது இது ஒரு கடினமான வழி பாட்டு முறையாகவே உள்ளது. தன்னை வருத்தி நோவைத் தானே வருவித்து இறையருளை வேண்டும் கடுமையான வழி பாட்டுச் சடங்காக இது நடைபெறுகிறன.

இடும்பாசுரன் இரண்டு மலைகளைக் கட்டித்தூக்கி முருகனை வழிபடும் புராண நிகழ்ச்சியைப் பின்பற்றிக் காவடி எடுக்கும் வழக்கம் வந்ததாகக் கதை கூறுவர். குன்றுகளின் உச்சியில் பெரும்பாலும் முருகனுக்குக் கோயில்கள் அமைக்கப் பெற்றிருக்கும். இந்தக் கடவுளைக் 'குன்றுதோறும் ஆடும் முருகன்' என்று புகழ்ந்து கூறுவர். குன்றக் குரவையும் முருகனை வழிபடும் கலையாகவே உள்ளது. காவடியெடுத்து மலைமேலிருக்கும் கோவிலுக்குச் செல்வர். பழனி மலைக்கு ஆண்டு தோறும் ஆயிரக் கணக்கான காவடிகள் எடுத்துச் செல்லப்படும். நெல்லை மாவட்டத்திலிருக்கும் கழுகுமலை முருகன் கோயிலுக்குக் காவடியெடுக்கும் வழக்கம் பன்னெடுங் காலமாக இருந்துள்ளது. அவர்களுக்காகவே அண்ணாமலை ரெட்டியார் காவடிச்சிந்து பாடல்களைப் பாடியுள்ளார். பாண்டிச்சேரியை அடுத்த மயிலம் முருகன் கோயில், குமரி யிலுள்ள குமார கோயில் போன்ற பால கோயில்களுக்குக் காவடி எடுக்கும் பழக்கம் இன்றும் உள்ளது. சந்தனக்காவடி, சர்ப்பக் காவடி என்று பலவகை உண்டு. மேலும் சேவல் காவடி, மச்சக் காவடி, வேல்காவடி, என்று பல உண்டு. ஒவ்வொன்றும் வேறு பாடுடைய வழக்க முறைகளையுடையன. வேல்காவடி எடுப் போர் உடம்பில் ஆயிரத்து எட்டு, நூற்றி எட்டு என்ற கணக்கு களில் வேல்களைக் குத்திக் கொள்வர். காவடியெடுப்போர் அணியணியாக மலையில் ஊர்ந்து செல்வது கண்கொள்ளாக் காட்சியாக இருக்கும்.

இன்றைய வளர்ச்சி நிலையில் பல இடங்களில் காவடியாட்டம் தொழில் முறையில் நடத்தப்படுகிறது. பக்திப் பரவசம் இதில் இருப்பதில்லை. ஆனால் கலைத்திறமும் ஆடல் நுட்பமும் மிகுதியாக இருக்கும். கலைச்சிறப்பு காட்டும் பலவிதமான உத்திகளைக் கையாண்டு கலைஞர் மக்களைக் கவர்ந்து இழுப்பர். முதலில் காவடியைத் தோளில் தாங்கி மெதுவாக ஆடத்தொடங்குவர் இசையின் வேகம் மேலோங்குவதற்குத் தக்கவாறு ஆட்டத்தின் விறுவிறுப்பும் வேகமும் கூடிக்கொண்டே போகும். தோளிலிருக்கும் காவடியை கழுத்துக்கும், முதுக்கும் கைபிடிக்காமல் மாற்றி மாற்றி ஆடுவர் சில சமயம் காவடியைத் தலை உச்சி, நெற்றி, மூக்கு நுனி ஆகியவற்றில் நிறுத்திக் காட்டுவர். முன்னும் பின்னும் சுழலச் செய்வர். உடம்பின் பல பகுதிகளில் காவடியை ஊர்ந்து வரச் செய்து தங்களுடைய திறமையைப் புலப்படுத்திக் காட்டுவர். உடற்பகுதியில் காவடி ஒட்டிச் சுழல்வது காந்தக் கவர்ச்சியில் ஒட்டி அசையும் இரும்பின் தோற்றம் போல் இருக்கும். கலைஞர் உடலை வளைத்தும், தரையில் குனிந்தும், மேலே எழும்பியும் ஆடுவது அவரது திறமைக்கு நல்ல சான்றுகளாக அமையும். அவர்கள் காலில் சதங்கை கட்டியிருப்பர். ஆடும்போது அவை அசைந்து இனிய தாள ஒலியை எழுப்பும். காவடியைப் பிடிக்காது கை, கால்களை அசைத்து ஆடுவது கலைக்காட்சியாக இருக்கும்.

காவுதடியே 'காவடியாகி' இருக்க வேண்டும். 'காவுதல்' என்பது கட்டித் தொங்கவிட்டுச் சுமத்தல் என்ற பொருளைத் தருவதாகும். ஒரு கம்பின் இருமுனைகளிலும் தண்ணீர் சேத்தும் தோண்டிகளைக் கட்டித் தொங்க விட்டிருப்பதைப் பல இடங்களில் காணலாம். அதனைக் 'காவட்டுத் தோண்டி' என்றே கூறுவர். இதே போன்று காவடித் தண்டின் மூலம் இருமுனைப் பாரம் சுமக்கும் வழக்கத்தை ஆந்திரம், கர்னாடகம், ஒரிசா, தமிழ்நாடு போன்ற மாநிலங்களில் பெருவாரியாகக் காணலாம். பல இடங்களில் கலையாக வளராத காவடிச் சுமை தாங்கி தமிழ் நாட்டில் மிகச்சிறந்த ஆடல் கலையாக வளர்ந்து பொலிந்துள்ளது சிந்திக்க வேண்டிய செய்தியாகும்.

முருகன் கோயில்கள் பெரும்பாலும் மலைகள் மீது இருப்பதை அறிவோம். அங்கு இறை வழிபாட்டுக்குச் செல்வோர் பலவகையான படையல் பொருட்களையும் தங்களுக்கு வேண்டியவற்றையும் சுமந்து செல்ல வேண்டிய தேவை ஏற்படுகிறது.

மலைமீது நடக்கும் போது பொருட்களை ஒரு கம்பில் தொங்க விட்டவாறு தோளில் தூக்கிக் கொண்டு செல்வது வசதியாகவும் எளிதாகவும் இருக்கும். காவு தடியைக் கையால் பிடிக்க வேண்டிய தேவை இல்லை. அதைச் சமன்படுத்திச் சுமந்தால் கையை வீசியவாறு மலைமீது ஒய்யாரமாக நடந்து செல்லலாம். சுமைப் பளுவும் குறையும். நடைவேகமும் கூடும். ஆகையினால் இத்தகைய வசதியை நினைத்து முதலில் மனிதன் காவு தடியைப் பயன்படுத்தி இருக்கவேண்டும்.

மலைமீது செல்லும் மக்கள் முருகனை வழிபடும் ஒரே நோக்கத்துடன் செல்வதால் அவனை வாழ்த்திப் புகழும் பாடல்களைப் பாடிக்கொண்டு சென்றிருப்பர். இன்று சபரிமலைக்குச் செல்லும் பக்தர்கள் ஐயப்பன் புகழைப் பாடிச் செல்வதை இங்கு நினைத்துப் பார்க்கலாம். முருகப் பக்தருக்காக வழி நடைப் பாடல்கள், காவடிச் சிந்துகள் பல இயற்றப்பட்டுள்ளன. அப்பாடல்களைப் பாடும்போது உணர்ச்சி ததும்ப ஆடிக்கொண்டே நடந்திருப்பார்கள். பாடலும் ஆடலும் பிறருடைய பாராட்டுக்கு உட்பட்டிருக்க வேண்டும். இதனை ஊக்க உந்தல்களாகக் கொண்டு திறமையுடையோர் சில கலை உத்திகளைக் கையாண்டு பலரைக் கவர்ந்து காவடியாட்டக் கலையை உருவாக்கி இருக்க வேண்டும்.

காவடியாட்டம் சமயவுணர்வில் தோன்றிய கலையாகும் சமயம் மனிதனைக் கட்டுப் படுத்தித் தான் விரும்பியவாறு செயல்படாமல் தடுக்கும் ஆற்றலுடையது. அத்தகைய கட்டுப்பாட்டிலிருந்து விடுபட்டுத் தன் திறமைகளை முழுமையாகக் காட்ட கலைஞன் விரும்பியதினால் காவடியாட்டம் சமயப் பிடியிலிருந்து நழுவி உரிமைக் கலையாகப் பிரிந்திருக்க வேண்டும். இன்று அதுவே தொழில் முறைக் கலையாக வளர்ந்துள்ளது. இன்றுள்ள நிலையில் காவடியாட்டம் சமயச் சார்புடனும் கலைச் சார்புடனும் நடைபெறுகிறது.

**காவடியாட்டத்தின் வளர்ச்சி நிலைகள்**

சுமை தாங்கல்

↓

சுமைதாங்கல் + பாடல் + ஆடல்

↓

வழிபாடு

↓ ↓

வழிபாடு | கலைத்தொழில் செய்தல்

எளிதாக சுமக்க உதவிய காவடி இறைவழிபாட்டு முறை களுடன் இணைந்து வழிபட உதவும் சாதனமாகிப் பின்னர் கலை முனைப்பால் தொழிற் கலைக்கு உதவும் பொருளாகி இன்று இருவிதக் கூறுகளுக்கும் துணையாகும் கலைக் கருவியாக விளங்குகிறது. இறையுணர்வும் கலையுணர்வும் இவ்விரு பிரிவு களுக்கும் காரணமாக அமைகின்றன.

காவடியாட்டம் நாட்டுப் புறக் கோயில்களில் நடக்கும் திருவிழாக்களில் மற்ற கலைகளுடன் இணையாக நடத்தப்படும் தனியாகவும் ஆடுவது உண்டு. நையாண்டி மேளத்தின் இசை இதற்கு மிகப்பொருத்தமாக அமையும். கலையாகக் காவடி யாட்டம் நடக்கும் போதும் அதை பக்தியுடன் ஏற்றுள்ள நிகழ்ச்சிகளும் உள்ளன. ‘வள்ளி திருமணம்’ போன்ற நாடகக் காட்சிகளில் இடம் பெறும் காவடியாட்ட நிகழ்ச்சிகள் நாடக மேடையில் நடைபெறும் போது அதைக் கலைக்காட்சியாகக் கருதாது பக்தி வழிபாடாக மதித்து ‘அரோகரா’ ஒலியுடன் கற்பூர ஆராதனை செய்துள்ளனர். கலைக்காட்சிகளுடன் உண்மையான உணர்வுடன் ஒன்றிக் கலந்துவிடும் நாட்டுப் புற மக்களின் இயல்பை இது தெளிவாகக் காட்டுகிறது.

## கரக ஆட்டம்

‘கரகம்’ என்ற சொல் கமண்டலம், ஆலங்கட்டி, நீர்த்துளி, கங்கை, பூங்குடம் ஆகிய பொருள்களைத் தருகிறது. மலர்களைக் கொண்டு அழகாக ஒப்பனை செய்யப்பட்ட குடத்தைத் தலையில் வைத்து ஆடும் ஆடலுக்குக் கரக ஆட்டம் என்று பொருத்தமாகப் பெயர் கொடுத்துள்ளனர். இதைத் தென்மாவட்டங்களில் ‘கும்பாட்டம்’ என்று கூறுகின்றனர்.

நெல்லை, குமரி, மதுரை, இராமநாதபுரம், தஞ்சை ஆகிய மாவட்டங்களில் கரக ஆட்டக் கலைஞர்கள் பலர் உள்ளனர் இந்த ஆட்டத்தைத் தமிழ் நாட்டிலுள்ள அனைத்து மாவட்ட மக்களும் விரும்பிப் பார்க்கின்றனர். மாரியம்மன் கொடை விழாக்களில் மிகப் பரவலாக இந்த ஆட்டம் நடத்தப் படுகிறது. இறை வழிபாட்டு நிகழ்ச்சியுடன் இவ்வாடல் தொடர்புடைய தாகக் கருதப்படுகிறது.

கரகம் நீரால் நிரப்பப் பெற்றிருக்கும். இந்த நீர் மாரியை யும் ஏழு புண்ணிய நதிகளையும் குறிப்பிடுவதாக மக்கள் நம்பு கின்றனர். இறைவழிபாட்டுடன் நடத்தப்படும் கரக ஆட்டக்

குடங்கள்பூக்களாலும் வேப்பிலையாலும் அழகு செய்யப் பட்டிருக்கும். மாரிசொரிந்து நாட்டில் வளம் கொழிக்க வேண்டும் என்ற கருத்தில் அம்மன் கொண்டாடிகள் குடமெடுத்து ஆடுவார்கள். ஒரு கைப்பிரம்பு கொண்டு அதைத் தட்டியவாறு ஆடுவர். ஊர் சுற்றி வருவர். மக்கள் பற்றுடன் அவர்களை வரவேற்று மஞ்சள் அரைத்துப் பூசி அவர்களுடைய காலில் நிறைகுடத்து நீர் ஊற்றி வணங்கி நிற்பர். மழை வேண்டும் கடப்பாடாக இந்த ஆடல் நடைபெறுகிறது.

கரக ஆட்டமும் கலையழகு சிறக்கத் தொழில் முறையாகப் பல இடங்களில் நடைபெறுகிறது. வழிபாட்டுக் கரகத்துக்கும் கலைத்தன்மைக் கரகத்துக்கும் சில வேறுபாடுகள் உள்ளன. முனனது தண்ணீரால் நிரம்பி இருக்க பின்னது அரிசியால் நிரப்பப்பட்டிருக்கும். மலராலும் வண்ணக் காகிதத்தாலும் ஒப்பனை செய்திருப்பர். கரகத்தின் உச்சியில் ஒரு பொம்மைக் கிளி பொருத்தப் பட்டிருக்கும். பெண்கள் மிகப் பெரும்பாலாக ஆடுவார்கள். ஆண்களும் சில இடங்களில் ஆடுவதைக் காணலாம். இருபாலரும் இணைந்து ஆடுவதும் உண்டு.

கரகத்தைக் கையால் பிடிப்பது இல்லை. தலையில் அதைச் சமனப் படுத்தி மிக வேகமாகக் குதித்தும் சுழன்றும் ஆடுவர். பெரும் பாலும் தொழில் முறைக் கலைஞர் வெண்கலக் குடத்தையே வைத்து ஆடுவார்கள். காலில் சதங்கை கட்டி இருப்பர் அடையை இறுக்கமாக அணிந்து கொள்வர். நையாண்டி மேளத்தின் இசை கரக ஆட்டத்துக்கு மிகவும் பொருத்தமாக அமையும். இசைக்கும் தாளத்துக்கும் தக்கவாறு ஆட்டம் நடக்கும். படிப்படியாக உயர்ந்து உச்சகட்டத்தை அடைத்து பின் திடீரென்று நிறுத்தப்படும். அவ்வாறே ஆட்டமும் வேகம் பெற்று விறுவிறுப்படைந்து திடீரென நிற்கும் பேரொலியின் திடீர் நிறுத்தமும் ஆட்ட முடிவும் ஒரு வியப்பான அமைதியை ஏற்படுத்தி மக்களின் ஆரவாரக் கைதட்டலைப் பெறும் சில சமயம் ஒன்றிய உணர்வில் ஒலியற்ற அமைதியுடன் அனைவரும் வியந்து நின்றுவிடுவர். இவ்வாடல் அம்மன் கோயில் முன்புள்ள வெளியிடத்தில் நடக்கும். அம்மன் வீதிவுலா வரும்போது தெருவைச் சுற்றியும் நடைபெறும். ஊர் மக்கள் தங்கள் கையிருப்புக்குத் தக்கவாறு ஆடுபவருக்கு பணமும் பரிசும் கொடுப்பது வழக்கம்.

சில சமயம் ஆட்டத்துக்கு நடுவில் பல விதமான தந்திர வித்தைகள் கரக ஆட்ட கலைஞர்களால் காட்டப்படும்.

தரையில் வீசப்படும் பணத்தைக் கை கொண்டு எடுக்கும்போது தலையிலிருக்கும் கரகம் இருப்பு நழுவாது தாங்கப்படுவது வியப்பாகத் தோன்றும். குடத்துக்கு மேல் குடமாகப் பல குடங்களை அடுக்கி ஆடுவதும் உண்டு. தலையில் ஓர் உலக்கையை நிலையாக நிறுத்தி அதன் உச்சியில் தீச்சட்டி வைத்தும் ஆடுவர். தலைமுடியில் தீப்பந்தங்களைக் கட்டிச் சுழன்று ஆடும் காட்சி கண்ணுக்கு இனிய விருந்தாகும். அது அச்சம் மூட்டுவதாகத் தோன்றும். வேகமே அதன் வெற்றிக்குக் காரணமாக அமையும்.

கரகம் தலையிலிருக்கும் போது இரண்டு ஏணிகளைத் தரையில் நிறுத்தி அவற்றில் கால்களை ஊன்றிச் சமன்படுத்திய வாறு மேலேறிக் கீழிறக்குவதும் உண்டு. கரகமின்றி நிறுத்தப் பட்டுள்ள ஏணியின் ஊடே நுழைந்து மேலும் கீழும் வருவதையும் காணலாம். தரையில் ஒரு குடத்தைக் கவிழ்த்து வைத்து அதன் மேலேறிக் கரகமாடுவதும் களிப்புறு காட்சியாகும். இத்தகைய வித்தைக் காட்சிகள் மக்களை வியப்பிலாழ்த்தி மகிழச் செய்வதற்கும் தங்களுடைய தனித் திறமையைப் புலப்படுத்துவதற்கும் கலை மாதர்களால் செய்யப்படுவனவாகும்.

இரண்டு பெண்களோ அல்லது பலர் கூடியோ கரகம் ஆடும் காட்சிகளும் தற்காலத்தில் நடைபெறுகின்றன. ஆட்டத்தின் இடையில் வித்தைக் காட்சிகளைக் காட்டுவது கரக ஆட்டத்தின் கலைத் தன்மையைக் குன்றச் செய்வதாக உள்ளது. கலையுடன் மக்களுக்கு ஏற்படும் ஒன்றிய உணர்வு சிதறி விடுவதாகத் தோன்றுகிறது. அவற்றை நடுவில் காட்டாது இறுதியில் காட்டினால் கலையுணர்வும் கெடாது; திறமையும் மறையாது.

கரக ஆட்டத்தின் கூறுகள் சிலப்பதிகார காலத்தில் இருந்ததாகக் கூறலாம். மாதவி ஆடிய 11 ஆடல்களில் ஒன்று 'குடக்கூத்து' என்று கூறப்பட்டுள்ளது. அது கண்ணன் ஆடிய கூத்தாகும். பாணாசுரன் கண்ணனின் பேரனான அநிருத்தனைச் சிறை வைத்து விடுகிறான். அவனை விடுவிப்பதற்காக மண்ணாலும் வெண்கலத்தாலும் செய்த குடங்களைத் தலையில் வைத்துச் சோ நகர வீதியில் கண்ணன் ஆடுகிறான். விநோதக் கூத்துக்களில் ஒன்றாகக் 'குடம்' குறிப்பிடப் பெற்றுள்ளது. நாட்டுப் புறத்துச் சாமியாடிகள் இன்றும் மண்குடங்களைத் தலையில் வைத்து ஆடுவதைப் பார்க்கலாம்.

கரகமெடுத்து ஆடுவோர் சில பாடல்களைப் பாடுவதைக் கேட்கலாம். பாடல்கள் நாட்டுப்புறப் பாடலிசை அமைப்பில் இருக்கும். ஒன்று முதல் பத்து வரை எண்கள் அமைந்த பாடலொன்றைப் பார்க்கலாம். முத்துமாரி அம்மனை அழைத்தே பாடப்படுகிறது.

**'ஒண்ணாம் கரகமாடி எங்க முத்துமாரி**
**ஒசந்த கரகமாடி எங்க முத்துமாரி**
**ரெண்டாம் கரகமாடி எங்க முத்துமாரி**
**ரத்தின கரகமாடி எங்க முத்துமாரி**

இவ்வாறு பத்துவரை எண்களைக் குறிப்பிட்டுப் பாடுவர். பாட்டின் மொழி பொருள், இசை எல்லாம் இனிமையாகவும் எளிமையாகவும் இருக்கும். ஆனால் சுவை மிகுதியாகக் காணப் படும். அது நாட்டுப்புற மக்களைக் கவரக் கூடியது.

இன்று தெய்வ வழிபாடாகவும் கலை வெழிப்பாடாகவும் கரக ஆட்டம் நடக்கிறது. இதன் தொடக்கம் எவ்வாறு இருந் திருக்கும் என்பதைச் சிந்திக்கலாம். முற்காலத்தில் குடி தண்ணீர் எடுக்க வேண்டுமானால் பெண்கள் தூர இடத்து ஆற்றுக்கோ அல்லது குளத்துக்கோ சென்றிருக்க வேண்டும் நீர் நிறைந்த குடங்களைத் தலையில் வைத்து நடந்திருப்பர் பழக்கத்தின் காரணமாகக் கையைக் கொண்டு குடத்தை பிடிக் காமல் நடந்திருப்பர். அந்த நடையில் ஓர் அழகு மின்ன விட்டிருக்கும். அதைக் கலையாக மனிதன் கண்டு களித்திருக் கலாம். அதை விளக்கம் பெறச் செய்து கரக ஆட்டக்கலை சீர்பட்டு வளர்ந்து இருக்கலாம். மனிதனின் இயல்பான தேவை அவனைச் செயல் பட வைத்து அதன் மூலம் மகிழ்ந்த கலைத் தன்மை சீர்பட்டுக் கலைகளில் சில தோன்றியிருக்கலாம். அத்தகைய கலைகளில் ஒன்றாகக் கரக ஆட்டத்தைக் கருதலாம். நீருடன் மாரியை அடையாளம் கண்ட மனிதன் அதனை இறையருளுடன் கலந்து அந்தக் கலைக்கு வழிபாட்டுத் தன்மை யைத் தடவி அதனைச் சமயவுணர்வுக் கலையாகக் கருதியிருக் கலாம். இயல்பான மனிதச் செயலில் தோன்றி இறையுணர்வில் வளர்ந்து கலையாகக் கரக ஆட்டம் வாழ்கிறது. சமயக் கட்டுக்குள் தன்திறமையை அடக்க இயலாத கலைஞன் அதனை வேறு முறையில் வளர்த்திருக்க வேண்டும். இன்று இறை வழிபாடாகவும் சமயவுணர்வுக்கலையாகவும் கரக ஆட்டம் வளர்ந்துள்ளது.

**கோலட்டம்**

கோலாட்டம் தமிழ் நாட்டில் பல பகுதிகளில் மிகவும் கோலாகலமாக ஆடப் பெற்று வரும் ஆட்டமாகும். இதில் இரண்டு கோல்கள் அல்லது கொம்புகளைப் பயன்படுத்தி ஒன்றுடன் ஒன்றை மோதி ஒலி எழுப்புவர். அடிக்கப்படும் கோல்களின் சிறப்பு பற்றியே இந்த ஆடலுக்கு இப்பெயர் கொடுக்கப் பெற்றுள்ளது. ஆண்களும் பெண்களும் கோலாட்டம் ஆடுவர். கால்களில் சதங்கையும் கட்டி இருப்பர்.

கோல்கள் இருவண்ணமுடையவையாக இருக்கும். பொதுவாகச் சிவப்பும் பச்சையும் பூசி இருப்பார்கள். பெண்களே இதனைச் சிறப்பாக ஆடுவர் என்று கருதப்படுகிறது. இறைவனை வாழ்த்தி வணங்கும் பாடல்களைப் பாடுவதற்காகவே இவ்வாடல் முதன்முதலில் பயன் பட்டது. தீபாவளியைத் தொடர்ந்து வரும் அமவாசை நாளன்று கோலாட்டம் தொடங்கப்படும். அதைத் தொடர்ந்து பத்து நாட்கள் நடைபெறும். வீட்டுக்கு வீடு பல பெண்கள் சென்று கோலாட்டம் ஆடுவர். ஆட்டம் வீட்டு முற்றத்தில் நடைபெற்றுப் பலருடைய பார்வைக்கு வசதியாக அமையும்.

பெண்கள் வட்டமாகச் சுற்றி நின்று கோலடித்து ஆடுவர். ஆட்டம் தொடங்கிய பின்பும் பெண்கள் வந்தவாறு இருப்பர். அவர்கள் வரவர வட்டம் பெரிதாகிக் கொண்டே இருக்கும். பாடல்களையும் பாடி ஆடல்களையும் ஆடுவர். கோல்களை அடிப்பதும் முன்னும் பின்னும் திரும்பி மாறி மாறி அடிப்பதுமாக ஆட்டம் நடைபெறும். சில சமயம் குனிந்தும் நிமிர்ந்தும் ஆடுவர். கைகளை உயர்த்தியும் தாழ்த்தியும் கோல்களை அடிப்பதைப் பார்க்கலம். தன் கையில் இருக்கும் கோல்கள் அடிப்பதுடன் முன்பின்னுள்ளவர்களின் கோல்களையும் தட்டி ஒலி எழுப்புவர். வட்டத்தில் அனைவரும் சுற்றிச் சுற்றி வந்தவாறு ஆட்டம் நடைபெறும். அனைவரும் ஒரு ஒழுங்கைப் பின்பற்றிப் பாடலின் தாளத்துக்குத் தக்கவாறு கோல்களைத் தட்டி ஒலி எழுப்பதே இந்த ஆட்டத்தின் சிறப்புக் கூறாகத் தோன்றுகிறது.

கண்ணனின் சிறப்புகள் பற்றியே பெரும்பாலான கோலாட்டப் பாடல்களும் இருக்கும். பின்பு பல கடவுள்கள் பற்றிய பாடல்களும் இடம்பெற்றன. இப்பொழுது சமூகத்தைப் பற்றிய பாடல்களும் பாடப்படுகின்றன. கோலாட்டத்துக்கு

ஒரு புராணக் கதைக்கும் தொடர்பு இருப்பதாகக் கூறப்படுகிறது. தேவர் உலகில் பந்தாசுரனை எதிர்த்து ஒரு கடும்போர் நடக்கிறது. போரைத் தேவர்களுக்கு வாய்ப்பாகத் திருப்ப பார்வதி தேவி ஒன்பது நாட்கள் கடும் தவம் செய்கிறாள். தவத்தின் கடுமையால் தேவியின் முகம் பொலிவிழந்து கருமையாகி விடுகிறது. சிவபெருமானாலும் அதனைப் பார்க்க முடியவில்லை. அவ்வளவு கோரமாக முகம் மாறிவிடுகிறது. பார்வதியின் தோழியருக்கு அதைத் தாங்க முடியவில்லை. அவர்கள் வேகமாக ஓடி நந்தி தேவருக்கு முன்பாகச் சென்று அவருடைய அருளை வேண்டிக் கோலாட்டம் ஆடுகின்றனர் ஆட்டம் இங்கு நடந்து கொண்டிருக்கும் போதே பார்வதியின் முகம் படிப்படியாகப் பொலிவு பெற்று விடுகிறது. அவள் அருள்வடியும் அழகுடன் தோன்றுகிறாள். கோலாட்டத்தின் சிறப்பு இக் கதையின் மூலம் விளக்கப் படுகிறது. கதை கற்பனையாயினும் கருத்து கோலாட்டத்தின் உயர்வைப் புலப்படுத்த உதவுகிறது.

பல இடங்களில் இன்றும் அம்மன் சாத்திரையின் (விழா) போது நடைபெறும் கோலாட்டம் பஸவன் (நந்தி) சன்னதியில் தான் தொடங்கப்படும். இவ்வாறு ஆடும் போது நந்தி தேவருக்குக் களிமண்ணாலான ஓர் உருவம் செய்து வைப்பர். அதற்கு முளைப்பாலிகை கொண்டு வருவர். ஒரு சிறுவனை நந்தி தேவனாகக் கருதி அவனுக்குப் பலவகையில் படையல் செய்யப்படும். விழா முடிவுற்றதும் களிமண் நந்தியையும் முளைப்பாலிகையையும் ஆற்றிலோ குளத்திலோ விட்டுவிடுவர்.

காஞ்சி புராணத்தில் 'செவ்வாய்ச்சியர் கோலாட்டம்' என்று கூறப்பட்டுள்ளது. இதிலிருந்து அக்காலத்திலேயே இத்தகைய ஆடல் நடைபெற்றதாகவும் அதில் பெண்களே கலந்து கொண்டதாகவும் அறியலாம். ஆனால் இக்காலத்தில் ஆண்களும் கோலாட்டம் ஆடுவதைப் பார்க்க முடிகிறது. இந்தியாவின் பிற பகுதிகளிலும் கோலாட்டம் சிறுசிறு மாறுதல்களுடன் நடப்பதைக் காணலாம். வடமொழியில் இந்த ஆடலை 'தண்டலாஸ்யா' என்று கூறுவர். 'தண்டம்' என்றால் 'கோல்' என்றும் 'லாஸ்யா' என்றால் 'ஆடல்' என்றும் பொருள் கொள்ளலாம். இராஜஸ்தானில் 'சுண்டியராஸ்' என்ற பெயரில் ஒருவகை ஆட்டம் இன்றும் நடைபெறுகிறது. இந்த ஆட்டத்தில் பயன் படுத்தப் பெறும் கோல்கள் பருமனாக இருக்கும். தமிழ் நாட்டில் கோல்கள் சிறியதாகவும் குட்டையாகவும் இருக்கும்.

பின்னல் கோலாட்டம் என்ற ஒருவகை ஆட்டம் தமிழ் நாட்டில் நடக்கிறது. ஆடுவோரின் கரங்கள் கயிறுகளால் கட்டப்பெற்று உயரே ஓரிடத்தில் முடியப்பட்டிருக்கும். கோலாட்டம் ஆடி அவர்கள் சுற்றி வரவர வித விதமான பின்னல்கள் கயிறுகளில் போடப்படும். மறு ஆட்டத்தில் அவை பிரிக்கப்பட்டுவிடும். இவ்வாறு பலவிதமாக ஆடுவதைப் பின்னல் கோலாட்டம் என்று கூறுவர்.

மேலும் கோயில் ஊர்க்கோலம் நடக்கும் போதும் இத்தகைய பின்னல் கோலாட்டம் ஆடப்படும். ஆனால் இது வேறு வகையாக அமையும். பின்னலிடுவதும் அவிழ்ப்பதும் இதில் முக்கிய இடம்பெறும். கலைச் சிறப்புடைய கோலாட்டம் வகை வகையாகப் பிரிந்துள்ளது அதன் முக்கிய நோக்கம் ஆடிப்பாடி இறைவனை வழிபடுவதே யாகும்.

### களியலடித்தல்

குமரி, நெல்லை ஆகிய மாவட்டங்களில் களியலடித்தல் இன்றும் மிகச்சிறப்புடன் நடைபெறுகிறது. கோலாட்டம் போன்றே இந்த ஆட்டத்திலும் இரண்டு கம்புகளைப் பயன்படுத்தி அடிக்கின்றனர். கம்புகள் மிகச் சிறிதாக இருப்பதினால் அவற்றைக் களியல்குச்சிகள் என்றே கூறுகின்றனர். மேலும் இதன் சிறப்பு குச்சிகளில் இல்லாமல் ஆட்டத்தின் களிப்பில் இருப்பதை ஆட்டத்தின் பெயரைக் கண்டே அறியலாம். 'களி' என்ற சொல்லுக்கு 'இன்பம், ஆட்டம்' என்ற இரு பொருள்கள் உள்ளன. மலையாள மொழியில் ஆட்டத்தைக் 'களி' என்று தான் குறிப்பிடுகிறார்கள். கதகளி, திருவாதிரைகளி போன்ற ஆடற்பெயர்களால் இதனை நன்கு அறியலாம். ஆட்டத்தால் மக்கள் பெறும் களிப்பிலிருந்து இந்தச் சொல் உருவாகி இருக்க வேண்டும்,

இரண்டு குச்சிகளை ஒன்றுடன் ஒன்றை அடித்து தாளயொலி எழுப்பி அதற்குத் தக்கவாறு ஆடுவர். பாடலும் இடம் பெறும். குச்சிகள் குட்டையாகவும் கைபிடிக்க வசதியாகவும் அமைந்து இருக்கும். அடிபடும் இடம் சிறுத்துக் காணப்படும். ஆடுவோர் ஒற்றை வட்டமாகவோ இரட்டை வட்டமாகவோ நின்று ஆடுவர். ஒரு பாடகர் வட்டத்தின் மத்தியில் நின்று பாடுவர். அவரைப் பின்பற்றி வேறு இருவர் கூடிப் பாடுவதும் உண்டு. களியலடிப்போர் பாடுவது வழக்கமில்லை. இரண்டு தாளமும் ஒரு மிருதங்கமும் இணைந்து தாள இசை கூட்டும்.

ஆடுவோர் காலில் சதங்கை கட்டி இருப்பார்கள். தாளத்துக்குத் தக்கவாறு குச்சிகளை அடித்து முன்னும் பின்னுமாகத் திரும்பி யும் குனிந்து நிமிர்ந்தும் ஆடுவார்கள். கோலாட்டம் போன்றே சுற்றிச் சுற்றி வருவர்.

வழிபாட்டுப் பாடல்களே முன்பு பாடப்பட்டன. ஆலய விழாக்களில் தான் ஆடப்பெற்றது. ஆனால் இன்று சமூக விழாக்களில் அதற்குத் தக்க பாடல்களுக்காகவும் களியல்ஈட்டம் நடத்தப்படுகிறது. அறுவடை பற்றிய செய்திகள், வரலாற்று நிகழ்ச்சிகள், புராணக் கதைகள் ஆகியவற்றை விளக்கியும் இவ்வாடல் சில இடங்களில் நடத்தப் பெறுகிறது. தற்பொழுது கிருஸ்தவ பண்டிகைகள், பள்ளி விழாக்களிலும் களியலடித்துப் பாடுகிறார்கள். களிப்பை அள்ளித் தரும் இந்த ஆடலில் சிறுவர் சிறுமிகள் பங்கு கொண்டு களிப்பதைக் கண்டு பெரியவர்கள் மகிழ்கிறார்கள். இதன் பெருமையை நாட்டுப்புற மக்கள் நன்றாக உணர்ந்து களிக்கிறார்கள்.

**பொடிகழியாட்டம்**

தமிழ்நாட்டில் கீழ்க் கடைற்கரையோரம் வாழும் மீனவர்கள் பொடிகழியாட்டம் ஆடிக் களிக்கின்றனர். பெரும் பாலும் பாண்டிச்சேரி, நாகப்பட்டினம் ஆகிய இடங்களை அடுத்தக் கரையோரப் பகுதி மக்களே இந்த ஆடலை மிகுதியாக நடத்துகின்றனர். சிறிய கம்புகளைப் பயன்படுத்துவதினால் இந்த ஆட்டத்தைப் 'பொடிகழி' என்று கூறுகின்றனர். எட்டு முதல் பதினாறு ஆண்கள் இதில் கலந்து ஆடுவர். பெண்கள் பாட்டுப் பாடுவார்கள். முருகக் கடவுளை வழிபடுவதாகவே பாடல்கள் அமையும்.

ஆடுவோர் இரண்டிரண்டு பேராக இணைந்து ஒருவரை ஒருவர் பார்த்து வட்டமாக நிற்பர். ஒருகையை இடுப்பில் வைத்து மறுகையிலிருக்கும் கம்பினால் அடுத்தவருடைய கையிலிருக்கும் கம்பில் அடிப்பார்கள். காலைத் தரையில் உதைத்துத் தாளமிடுவர். சதங்கை கட்டுவதும் உண்டு. பாடலுக்குத் தக்கவாறு தாளமிட்டு கம்புகளை அடிப்பர். கோலாட்ட ஒழுங்குகளே இந்த ஆடலில் காணப்படும். ஒரு பாடல் முடிந்து அடுத்த பாடல் தொடங்கும் போது ஆடல் திடீரென்று நிறுத்தப் படுவது சிறப்பாகத் தோன்றும். சில சமயம் ஆண்களும் பெண்களும் இணைந்து பாடுவதையும் காணலாம்.

வண்ண வண்ண ஆடைகள் அணிந்திருப்பர். அரைக்கு வேட்டியும் தலைக்குத் தலைப்பாகையும் அணிந்து அழகாகத் தோன்றுவர். கழுத்திலும் இடுப்பிலும் பூமாலைகள் அணிந் திருப்பர். உடல் முழுவதும் சந்தனம், குங்குமம் ஆகியவற்றைப் பூசியிருப்பர். சங்கு, பவளமாலைகளும் கழுத்தில் பூண்டு கொள்வர். அவர்கள் இறைவழிபாட்டுக்குரிய தோற்றங் கொண்டு இறையருளை வேண்டி பக்திப் பாடல்களையே பாடு கின்றனர்.

இசைப் பாடலுக்குத் துணையாகப் பலவிதமான வாத்திய கருவிகளையும் இசைக்கின்றார்கள். உடுக்கை, டோலக், மத்தளம், சுருதி, தாளம் ஆகிய கருவிகள் தாள இசைக்கு உதவு கின்றன. அவற்றைக் கூட்டாக முழக்கி இசைப் பாடல்களைப் பாடி பொடிகழியாட்டம் ஆடி இறைவனை இந்த மக்கள் வழிபட்டு அருள் வேண்டுகின்றனர். இதில் கலையும் உள்ளது. பயனும் உள்ளது. இயல்பாவ இன்பக் களிப்பு மிகுதியாகக் கிடைக்கிறது.

## கும்மி

தமிழ் நாட்டு ஆடல்களில் கும்மிக்கு உறுதியாக மிக முக்கிய மான இடம் உள்ளது. ஆந்திரநாட்டுக் கொப்பிக்கும் கேரள நாட்டுக் கைகொட்டிக் களிக்கும் மிகவும் சிறந்த தொடர்பு உண்டு. கன்னட நாட்டிலும் இத்தகைய ஆடல் நடைபெறு கிறது. இதை நோக்கினால் திராவிடப் பண்பாட்டுடன் கலந்த கலையாகக் கும்மியைக் கருத இடம் உள்ளது. ஆயினும் குஜராத் நாட்டில் நடக்கும் கர்பா நடனமும் ராஜஸ்தானில் உள்ள கும்மார் ஆடலும் கும்மியுடன் தொடர்புடையதாகக் காணப்படுகிறது. இது பண்பாட்டுக் கலைப்பாட்டால் ஏற்பட்ட கலைப் பரிமாற்றமா என்று சிந்திக்க வேண்டும்.

தமிழ் நாட்டில் ஆண்கள் கலந்து கொள்ளும் கும்மியும் பெண்களுக்கு உரிய கும்மியும் வேறு வேறாக உள்ளன. ஆயினும் பெண்கள் கும்மிக்கே உயர்வும் சிறப்பும் கொடுக்கப் பெறு கின்றது. பெண்கள் வட்டமாக ஒரு விளக்கைச் சுற்றி நின்று கும்மியடித்துப் பாடுவது கண்ணுக்கும் காதுக்கும் மிக்க இன்பம் தருவதாக அமைகிறது. அதனையே மக்கள் மிகவும் விரும்பி வரவேற்கின்றனர்.

மாரியம்மன், முத்தாலம்மன், பகவதியம்மன் முதலிய பெண் தெய்வங்களின் கொடை விழாக்கள் நடைபெறும் பொழுது பத்து நாட்கள் தொடர்ந்து கும்மி பெண்களால் நடத்தப் படுகிறது: தமிழ் நாட்டில் பல ஊர்களில் இது நடைபெறுகிறது பூப்பெய்திய பெண்கள் வீட்டிலும் சில நாட்கள் நடக்கும். பொங்கலுக்கு மறுநாளைக் காட்டுப் பொங்கலாகவும் காணும் பொங்கலாகவும் மக்கள் கொண்டாடுகின்றனர். அன்று கும்மியடித்து மகிழும் வழக்கம் பல ஊர்களில் உள்ளது. நெல்லை மாவட்டத்திலுள்ள மாவடியில் ஆண்டு தோறும் காட்டுப் பொங்கல் ஊர் மக்களால் மிகச்சிறப்பாகக் கொண்டாடப் படுகிறது. அன்று ஊர் மக்கள் குடும்பம் குடும்ப மாகப் பக்கத்திலிருக்கும் மலைப் பகுதிகளான நம்பிக்கோவில் மலை, தண்ணீர்த் தொண்டு, நெல்லித் தோப்பு, பனங்காய் உருளி ஆகிய இடங்களுக்குச் செல்வர். அங்கு பொங்கலும் விருந்தும் மிகச் சிறப்பாக நடக்கும். பெண்கள் ஒன்று கூடிக் கும்மியடித்து பாடுவது வழக்கம். கலைநலம் கவின கும்மியடித்து அனைவரையும் மகிழ்விப்பார்கள். அவர்கள் பாடும் பாடல்கள் மிகுதியும் இறை வாழ்த்தாகவே இருக்கும். சில சமயம் நகைச் சுவைப் பாடல்களைப் பாடுவதும் உண்டு. இன்பக் களிப்பாக நடைபெறும் கும்மி ஊர்மக்களை உவகையில் ஆழ்த்தும்.

அம்மன் கோயில் திருவிழாக்களில் 'முளைப்பாரி' என்ற ஒரு சிறப்பு நிகழ்ச்சி நடத்தப்படும். மக்கள் 18 வகைத் தானியங்களை முளையிடச் செய்வர். அது பத்து நாள் பருவம் அடைந்ததும் கோயிலுக்கு எடுத்து வருவர். புனிதமாகக் கருதி விழா நடக்கும் இடத்தில் ஒரு வெளியிடத்தில் முளைப்பாரி வைக்கப்படும் முதல் 9 நாட்கள் அதைச் சுற்றிப் பெண்கள் கும்மியடித்து பாடுவார்கள். அவர்களுடைய பாடல் இனிமையாகவும் பொருள் சிறப்புடையதாகவும் இருக்கும்.

> 'ஒண்ணாங் கிழமை யன்னிக்கு ஓரிலையாம் — முளைப்பாரி
> இரண்டாங் கிழமை யன்னிக்கு இரண்டிலையாம் - முளைப்பாரி
> மூன்றாங் கிழமை யன்னிக்கு மூன்றிலையாம் — முளைப்பாரி
> நாலாங் கிழமை யன்னிக்கு மூன்றிலையாம் — முளைப்பாரி

என்றவாறு ஒன்பது நாளைக்கும் பாடுவர் இறுதியாகப்

> 'பத்தாங் கிழமை யன்னிக்குப் பதமே யடைந்திடுமே'

என்று பாடி முடிப்பர் பாடல் மெட்டு 'தானானே தானானே' என்ற அமைப்பில் இருக்கும். பத்தாம் நாள் விழா நடந்தேறும்

போது அனைவரும் முளைப்பாரியை எடுத்து ஆற்றில் அல்லது குளத்தில் விட்டுவிடுவர்.

கும்மியடிக்கும் போது பாட்டின் முதலடியைத் தலைவி பாடுவாள். மற்றவர்கள் அவளைத் தொடர்ந்து கூடியாடிப் பாடுவர் சில சமயம் எதிர் பாட்டும் பாடுவது உண்டு. மனிதனுக்கு முனைப்பு மிஞ்சி எதிர்ப்பாற்றல் எழுவது இயற்கை என்பதற்குச் சான்றாகவே இத்தகைய எதிர் பாடல்கள் எழுகின்றன. அடுத்தவரை மிஞ்சி தான் தலை நிமிர வேண்டும் என்று கருதுவது மனிதனின் இயல்பு உணர்ச்சியாகவே உள்ளது.

கதைப் பாடல்கள் பல பாடப்படும். கும்மிப் பாடல் வழி பாடு கருதியே உருவாக்கப் பட்ட கலையாகும். கால மாற்றம் பலவிதமான வளர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது குறிப்பிட்ட தெய்வக் கதைகள் விளக்கப்படும். தனிப்பாடல்கள் இசைக்கப் படும். அவையே மிகுதியாக இடம் பெறும். கதைகளில் வரும் பாத்திரங்களுக்குத் தக்கவாறு ஆடை அணிகள் பூண்டும் கும்மியில் ஈடுபடுவது உண்டு.

ஆடும்போது வட்டமாகச் சுற்றி நின்று கைகளைக்கொட்டிப் பாடுவர் கையடியில் விரல் தட்டு, உள்ளங்கைத் தட்டு, அஞ்சலித் தட்டு, முழுக்கைத்தட்டு என்று பல விதம் உள்ளன. கால்களில் சதங்கை கட்டித் தாளவொலி காட்டுவர். தாளங் களைக் கட்டத்துக்குக் கட்டம் மாற்றிச் சுவையைப் பெருக்குவர் அவ்வாறு செய்யும் போது முழுப்பாதம் தரையில் படல், கட்டை விரல் மாத்திரம் படல், முன்னங்கால் படல், என பலவிதம் உண்டு. ஆடும் போது மேலும் கீழும், இடமும் வலமும் இடையுமாகக் கையை நீட்டியும் சுருக்கியும் கும்மி யடிப்பர். அவர்கள் குனிந்தும் நிமிர்ந்தும் வளைந்தும்;திரும்பியும் ஆடுவது பார்ப்பதற்குக் கவர்ச்சியாக இருக்கும் சில சமயம் குதிக்கவும் துள்ளவும் செய்வர்.

கால ஓட்டத்தில் கும்மிப் பாடல்கள் தமிழில் ஒருவகையான தனி இலக்கியப் பிரிவாகவே வளர்ந்துள்ளன. அரிச்சந்திரன் கும்மி, வள்ளியம்மன் கும்மி, சிறுத்தொண்ட நாயனார் கும்மி, பஞ்சபாண்டவர் வைகுந்தர் கும்மி என்று பல கும்மிப்பாடல் நூற்கள் எழுதப்பட்டுள்ளன. இவை தவிர நபியுல்லாக் காரணக் கும்மி, ஞானவுபதேசப் பேரின்பக் கும்மி போன்ற இஸ்லாமியக் கிறிஸ்தவக் கும்மிப் பாடல்களும் உள்ளன. சமூகத்தைச் சித்திரித்துக் காட்டும் விலைமாதர் கும்மி

அரசியலை அடிப்படையாகக் கொண்ட இண்டியா சக்கரவர்த்தினி விக்டோரியா இராஜாத்தியின் திருமுடி, ஜூபிலித் திருநாள் கும்மிப் பாடலும் பாடப் பெற்றுள்ளன. இத்தகைய கும்மி இலக்கியங்களை கும்மியாகிய நாட்டுப் புறப் பாடல்களின் வளர்ச்சியால் கிளைத்துச் சீர்திருந்திய வடிவங்களாகக் கருதலாம். நாட்டுப் புறப்பாடலில் தோற்றக் கருவும் இலக்கியத்தில் வளர்ச்சியின் வடிவம் அமைந்துள்ளன.

கும்மிப் பாடல் பெண்களுக்கு உரிய கலையாகவே இருந்துள்ளது.

> 'வாருங்கடி தோழிப் பெண்களா
> மகிழ்ந்து கும்மி யடித்தாடச்
> சேருங்கடி பெண்களெல்லாம்'[1]

என்ற பாடலில் பெண்களை மட்டும் கும்மியடிக்க அழைப்பதைக் காணலாம்.

> 'சித்தம் மகிழ்ந்திந்த சரிதை கேட்டிருந்த
> தேவிமார் வாழத் தினம் வாழி'[2]

என்ற பாடலில் பெண்களே கும்மிப் பாடலைக் கேட்டு இன்புற்ற குறிப்பு காணப் படுகிறது.

'சண்டைக் கும்மி' என்ற ஒரு வகைக் கும்மியும் உள்ளது. இது இன்பத்தைத் தருவதுடன் பெண்களுக்கு உடற்பயிற்சி முறைகளையும் விளக்கிக் காட்டும் பாடல்களாகும். கும்மிப் பாடல்கள் அன்றாட வாழ்க்கையில் நிகழும் நீரிறைத்தல், பாத்திரம் துலக்குதல், சோறு சமைத்தல், அரிசி அரைத்தல் முதலியவற்றையும் பாடலாகவும் ஆடலாகவும் விளக்கிக் காட்டுகின்றன. கோலமிட்டுக் களிக்கும் பெண்களும் கும்மிப் பாடலைப் பாடுவதாகக் குறிப்பு கிடைக்கிறது.

> 'கும்மி யடிப்போம் கும்மி யடிப்போம்
> கோலத்தைச் சுற்றிக் கும்மி யடிப்போம்
> அழகிய கோலத்தைப் போலவே நாமும்
> ஒன்றாகச் சேர்ந்து கும்மி யடிப்போம்.'[3]

(1 சுபத்திரை மாலையிடு நாடகம், பதி.பி. இரத்தின நாயகர் அண்ட் ஸன்ஸ், (சென்னை. ஆண்டுகுறிப்பில்லை) பக்.9.

(2) சிறுத்தொண்ட நாயனார் சரித்திரக் கும்மி, பதி. ஆர்.ஜி.பதி கம்பெனி, (சென்னை, 1974) பாடல் 148

(3) ஸ்ரீமகள் கோலச்சித்திரம், (சென்னை 1963) பக். 1

## கிருஷ்ணன் ஆட்டம்

கடவுளரைப் போன்று வேடமிட்டு அவரைத் தெய்வமாகக் கருதி வழிபடும் வழக்கமும் தமிழ் நாட்டில் இருந்துள்ளது. இது பற்றிய குறிப்பைச் சிலப்பதிகாரம் வேட்டுவ வரியில் மிகத் தெளிவாகக் காணலாம். அங்கு பாலை நில மக்கள் ஒரு பெண்ணுக்குக் கொற்றவைக் கோலமிட்டு வணங்குவதைப் பார்க்கலாம். அவள் குறி சொல்லும் திறமுடையவள் என்ற குறிப்பும் காணப்படுகிறது. மனிதரின் மேல் தெய்வமேறுவதை நம்பும் மக்கள் இவ்வாறு கோலமிட்டு வழிபாடு செய்கிறார்கள்.

தமிழர் வணங்கிய முக்கிய கடவுள்களில் ஒருவராகக் கண்ணனைக் குறிப்பிடலாம். அவர் போன்று வேடமணிந்து ஆடுவதை நாட்டுப்புறங்களில் காணலாம். கண்ணன் புல்லாங் குழல் ஊதுவது போன்று அந்தக் கலைஞர் ஆடுவார். அவருடைய தலையலங்காரம் கண்ணனைப் போன்றிருக்கும். தலையில் ஒரு மயில் பீலி அசைந்து கொண்டிருக்கும். பட்டு பீதாம்பரத்தைப் பஞ்சகச்சமாகக் கட்டியிருப்பார். கழுத்தில் பூமாலையும் பவள மாலைகளும் புரளும். கண்ணனே தங்கள் மத்தியில் தோன்றி யிருப்பதாகக் கருதி வணங்குவர்.

கண்ணன் ஆடும்போது சில கோபிகை மாதரும் அவருடன் இணைந்து ஆடுவதாகவும் ஆடல் நடக்கும். இப்பொழுது இந்த ஆடலின் மதிப்பு குறைந்துவிட்டது. விழாக் காலத்தில் அம்மன் தெருவலம் வரும்போது நடைபெறும் ஆலியாட்டம், மயிலாட்டம் போன்றவற்றுடன் கிருஷ்ணன் ஆட்டமும் இணைந்து நடைபெறுகிறது. சிலப்பதிகாரத்தில் குறிப்பிடப் படும் ஆய்ச்சியர் குரவையின் தொடர்ச்சியாகக் கிருஷ்ணன் ஆடல் வழிவழியாக நடத்தப்பெற்று இந்த நிலைக்கு வந்திருக்கலாம். இன்று இந்த ஆடல் சிறப்பிழந்து விட்டதாகத் தோன்றுகிறது.

## தீ மிதித்தல்

நெருப்பைத் தூய்மையின் அடையாளமாக மக்கள் கருது கிறார்கள். தீதும் பாவமும் அழிய நெருப்புக் குளிக்க வேண்டும் என்ற கருத்தும் உள்ளது. தூய்மையை உலகுக்கு அறிவிக்க நெருப்பு மூழ்கி வெளிவர வேண்டும் என்ற குறிப்பு பழங்கதை களில் இருப்பதைச் சிந்திக்க வேண்டும். கற்பு நிலையில் தடம்புரண்டுவிட்டதாக ஐயப்பட்ட பெண்களின் உண்மை

நிலையைச் சோதிக்க அவர்களை நெருப்பில் இறங்கச் செய்துள்ளதைக் கதைகள் வாயிலாக அறியலாம். பாவப் பிடியால் கீழ் குலத்திலுதித்ததாக நம்பப்பட்ட நந்தனாரைத் தூய்மைப்படுத்தி மேற்குலத்தினர்குரிய உரிமைகளைப் பெற்றிடச் செய்ய நெருப்புக் குளிக்கச் செய்த நிகழ்ச்சியையும் இங்கு பொருத்திக் காணலாம். வினை மிஞ்சிய நகரைத் தீக்கிரையாக்கியச் செய்தியைச் சிலப்பதிகாரம் விளக்கிக் கூறும். இவற்றை ஒப்ப நோக்கினால் ஒரு சமுதாய நம்பிக்கை புலனாகும். தூய்மையடைய தீமிதிக்க வேண்டும் என்பது சமுதாயக் கோட்பாடாக இருந்திருக்கிறது.

கோயில் திருவிழாக்களில் தீமிதிக்கும் நிகழ்ச்சி மிகச் சிறப்பாக நடைபெறுவவைத் தமிழ் நாட்டில் பல இடங்களில் இன்றும் காணலாம். வட ஆர்க்காடு மாவட்டம் ரெட்டிக் குப்பம் ஊரிலுள்ள திரௌபதியம்மன் கோவிலில் சித்திரை வைகாசி மாதங்களில் நடக்கும் விழாவில் 18 நாட்கள் பாரதம் வாசிப்பார்கள். இறுதி நாளன்று துரியோதனனைக் கொண்டு பாண்டவர்களுக்குப் பட்டம் கட்டி மகிழ்வர். இரவு தீமிதி விழா மிகவும் சிறப்பாகக் கொண்டாடப்படும்.

கோயிலின் பக்கத்தில் தீக்குண்டம் அழகாகக் கட்டப் பட்டுள்ளது. அது இரு பகுதிகளாக அமைந்து உள்ளது. ஒரு பகுதி யில் நெருப்பும் இன்னொரு பகுதியில் நீரும் இருக்கும், குழல் முடிக்காத திரௌபதியம்மனின் உருவத்தை நெருப்புக் குண்டத்தின் பக்கத்தில் வைத்திருப்பர். தெய்வமேறிய சிலர் ஆடியவாறு நெருப்புக்குள் இறங்கி நடந்தவாறு நீர்நிரம்பிய பகுதிக்குள் வந்து குளித்து விட்டு வெளியேறுவர். அப்பொழுது கூடியிருக்கும் மக்கள் அனைவரும் ஒரே குரலில் 'ராதா ரமண கோவிந்தம், கோவிந்தா! கோவிந்தா!' என்று முழங்குவர். அந்த ஒலியால் அமையும் பக்திக் கதகதப்பில் தீமிதிச் சடங்கு புனிதமாக நடைபெறும். இதன் மூலம் செய்வினை தீர்ந்து தூய்மையடைந்து விட்டதாக நம்புகின்றனர். பின்னர் அம்மனைக் குழல் முடித்த அலங்காரத்துடன் ஆலயத்துக்குள் எடுத்துச் சென்று பூசனைகள் செய்து வணங்குவர். ஆண்டு தோறும் இவ்வாறு தீக்குளிக்கும் விழா நடக்கிறது.

இதே போன்று தென்னார்க்காடு மாவட்டத்திலுள்ள பாதிரிக்குப்பம் ஊரிலும் திரௌபதியம்மன் கோவில் விழாவின் போது தீமிதித்தல் நடைபெறுவதாக அறியலாம். செங்கல்பட்டு

மாவட்டத்தைச் சேர்ந்த ஆலந்தூரிலும் தீமிதி விழா மிகச் சிறப்பாக நடந்து வந்துள்ளது. நெருப்புக் குண்டம் உயரமாக வும் உறுதியாகவும் கட்டப் பெற்றுள்ளது. மக்கள் அதனைப் புனித இடமாகக் கருதுகின்றனர். வடக்கிலுள்ள மாவட்டங் களில் திரௌபதியம்மன் திருவிழாவில் நடைபெறும் தீமிதிச் சடங்கு தென் மாவட்டங்களில் மாரியம்மன் கோயில் விழாக் களில் நடக்கிறது. திருநெல்வேலி மாவட்டத்திலுள்ள ஸ்ரீ வில்லிபுத்தூரில் தீமிதிக்கும் சடங்கு ஆண்டு தோறும் பங்குனி சித்திரை மாதங்களில் அங்குள்ள மாரியம்மன் கோயிலில் நடந்து வருகிறது. நெருப்புக் குண்டத்தை அங்குள்ள மக்கள் சிறப்பாகப் 'பூக்குழி' என்று அழைக்கிறார்கள். நெருப்பில் நடப்பதற்கு முன் பக்தர்கள் பலவித நோன்புகள் செய்து ஒரு மஞ்சள் கயிற்றைக் கையில் கட்ட வேண்டும். அவர்கள் கோயிலுக்கு வரும் போது உறவினர்களால் மஞ்சள் நீர் ஊற்றப் பெற்று புனிதமாக்கப்படுவர். கோயிலுக்கு முன்னுள்ள பூக்குழியில் நெருப்புத் துண்டுகள் இருக்கும் அதன் மேல் அவர் கள் நடந்து செல்வர். அதை மிகவும் புனிதமாக அனை வரும் கருதிக் காண்பர்.

தீமையின் பலனைத் துன்பப் பட்டே துடைக்கவேண்டும். என்ற கருத்து இந்தச் சடங்கின் மூலம் நிறுவப்படுவதை உணர வேண்டும். பாவிகள் செல்லும் நரகத்தில் அவர்களை எதிர்த்துக் கரைக்கும் நெருப்பு இருப்பதாக மனிதன் கற்பனை செய்வதையும் இந்தக் கருத்தையும் ஒப்பிட்டுக் காணலாம். தீமிதிக்கும் சடங்கில் கலந்து கொள்வோர் பலவிதக் கட்டுப்பாடுகளுடன் நோன்பு இருக்க வேண்டும். நம்பிக்கையும் மனவுறுதியும் தீமித்தலுக்கு அடிப்படைக் காரணங்களாக உள்ளன.

பங்குனி உத்திர நாளில் குன்றக்குடியில் தீமிதித்து இறை வாழ்த்தும் வழக்கம் உள்ளது. காவடி சுமந்து வரும் பக்தர்கள் குடும்பம் குடும்பமாகத் தீயை மிதித்துக் கொண்டு கோயிலுக்குச் செல்வர். நோன்பு முறைப்படி சிறுவர்களும் இறையை நாடி இன்முகத்துடன் அவ்வாறு செய்வது அவர்களுடைய இறைப் பற்றைக் காட்டும். அடுத்தவர்களுக்கு இது வியப்பாகவே இருக்கும்.

**தாலியறுப்பு விழா**

தென்னார்க்காடு மாவட்டம் கொத்தட்டை என்ற ஊரில் கோயில் கொண்டுள்ள கூத்தாண்டவரை வழி படுவதாகத் தாலியறுப்பு விழா நடைபெறுகிறது இந்தத் தெய்வத்தை அரவான் என்றும் கூறுகின்றனர். இவரைப் பெரும்பாலும் திருமணமாகதவர்களே வழிபடச் செல்வர். அலிகள் தேவர் களுக்கு உரிய மனைவியர் என்று நம்பி அவர்களும் கூத்தாண்ட வரை வணங்கச் செல்வார்கள்.

கோயில் கடற்கரையை ஒட்டிய இடத்தில் உள்ளது பௌர்ணமி நாட்களில் மணமாகாத ஆண்கள் பெண்கள் போன்று ஆடையணிந்து கையில் வளையணிந்து கோயிலுக்குச் செல்வர் கூத்தாண்டவர் திருமணமாகாத தெய்வர். இவர்கள் அந்தத் தெய்வத்தை மணந்து கொண்டதற்கு அறிகுறியாகத் தாலி கட்டிக் கொள்வார்கள் இரவு 12 மணிக்குக் கூத்தாண்டவர் இறந்து விடுவதாக ஒரு நிகழ்ச்சி நடக்கும். உடனே தாலி கட்டிய அனைவரும் அதனை அறுத்தெறிவர். கையிலுள்ள வளையலை உடைப்பர். விதவையராகத் தாங்கள் ஆகி விட்டதாகக் கருதிக் கூத்தாண்டவரின் இறப்புக்காக வருந்தி மாரடித்து அழுவார்கள். இத்தகைய நிகழ்ச்சியில் கலந்து கொண்டால் தங்களுக்கு விரைவில் திருமணம் நடந்தேறும் என்று மக்கள் நம்புகின்றனர். வழிபாடுகள் நம்பிக்கையின் காரண மாகப் பலவித வினோதங்களுடன் நடப்பதைத் தாலியறுப்புவிழா போன்றவற்றால் அறியலாம் இது பற்றிய விளக்கத்தைக் காண்பது நலம்.

மகாபாரதத்தில் இடம் பெறும் களப்பலி நாயகனான அரவானையே கூத்தாண்டவராக கொத்தட்டை ஊரில் வழிபடுகின்றனர். இவ்வூர் கடலூருக்கு அண்மையில் உள்ளது. அரவான் களப்பலியில் இறக்கப் போவதால் தனக்கு உடனே திருமணம் செய்து விடவேண்டும் என்று கண்ணனிடம் தன் ஆவலைக் கூறுகிறான். அதைக் கேட்டதும் கண்ணன் மோகினி உருவமெடுத்து அந்த இடத்திலேயே அரவானை மணந்து கொள்கிறார். அடுத்து வரும் அமாவசை நாளில் களப்பலி செய்யப்பட்டு இறந்து விடுகிறான். அலிகளும், வேண்டுதல் செய்வோரும் தாங்கள் கட்டியுள்ள தாலிகளை அறுத்து எறிந்து விடுகிறார்கள். அரவானின் சாவுக்காக மாரடித்து அழுகிறார்கள். பின்னர் கடலில் குளித்துத் தங்கள் தீவினை தொலைந்ததாக நம்பி வீடுகளுக்குத் திரும்புகிறார்கள்.

அவர்கள் மாரடித்து அழும்பாடல் சுவையாக இருக்கும். தங்கள் கணவன் இறந்ததாக நினைத்தே ஒப்பாரி வைப்பர்.

'ஆலின் நீ வருவேன்னு ராசா
இந்த ஆசைப் பெண்ணு காத்திருந்தேன்.
வீரன் நீ வருவேன்னு என்ராசா
விடியுமுட்டும் காத்திருந்தேன்.
பஞ்சி மெத்த போட்டு வச்சேன் என்ராசா
பாய் போட்டு காத்திருந்தேன்.
ஆசை வச்சி மாலையிட்டேன் என்ராசா
ஆளாயி காத்திருந்தேன்.
கொண்டையிலே பூமுடிச்சேன் என்ராசா
கைகளுக்கு வளையலிட்டேன்
எங்கொண்டப்பூ வாடலியே என்ராசா
கைவளையும் நோகல்லியே!

இவ்வாறு மாரடித்து அழுவதும் கீழே விழுந்து புரழ்வதும் அங்கு காணும் காட்சிகள். இழவு எடுத்தல், எட்டாம் நாள் துக்கம் கொண்டாடல் ஆகியவையும் உண்டு.

பதினெட்டு நாட்கள் நடத்த பாரத போரில் களப்பலியான அரவான் வீரப்போர் செய்ததாகக் கதை கூறும். ஆகையினால் அவன் 'கூற்றை ஆண்டவன்' என்று போற்றப் படுகிறான். கூற்றையாண்டவன் என்பதே கூத்தாண்டவராக மாறியுள்ளது. அவருக்காக நடத்தப் படும் விழாவே தாலியறுப்புக் கலையாக வளர்ந்துள்ளது. நாட்டுப்புற மக்கள் தொன்மக் கதைகளை நம்பியுள்ளனர். உணர்ச்சியுடன் அவற்றை உண்மை தோன்ற நடித்தனர். அவை தங்களுடைய வாழ்க்கையில் நன்மைகளைத் தரும் ஆற்றலுடையவை என்று நம்பினர்.

## வரவழைப்புப் பாட்டு

வட ஆர்க்காடு மாவட்டத்திலுள்ள சோளிங்கர், வேலூர் போன்ற இடங்களில் தெய்வங்களை வழிபட்டு அவர்களை வர வழைத்துத் தங்களுக்கு வேண்டியவற்றை அவர்களிடமிருந்து அருளாகப் பெற வேண்டும் என்ற விருப்பத்தில் வரவழைப்புப் பாட்டு பாடப் பெறுகிறது. தெய்வ ஒப்புதல் இல்லாமல் அங்குள்ள நாட்டுப் புற மக்கள் காது குத்துவதோ மொட்டை அடிப்பதோ இல்லை. தெய்வங்களை மனிதன் மேல் வரச் செய்

வதற்காக உடுக்கை, பம்பை முதலிய கருவிகளை முழக்கிப் பூசனை செய்வர். ஆண்களும் பெண்களும் கூடி ஆடுவார்கள். மிகுதியாகப் பெண்களே ஆட்டத்தில் கலந்துகொள்வர். இறையருள் தங்களுக்கு வாய்க்க வேண்டும் என்பது அனைவரின் விருப்பம். ஒருவரின் மேல் தெய்வமேறி அவர்கள் முன்னால் ஆடுவது வரை வரவழைப்புப் பாட்டு பாடப் பெறும். மேள மடிப்பவர்களே மூன்று அல்லது நான்கு பேராகச் சேர்ந்து வரவழைப்புப் பாடல்களைப் பாடுவர். வேண்டிக் கொள்வோர் ஆவலுடன் தெய்வ வரவை எதிர்பார்த்துக் கொண்டிருப்பர். நம்பிக்கையின் அடிப்படையில் இத்தகைய வழிபாட்டு முறை நடைபெறுகிறது.

## பாகவத நடனம்

கண்ணனை வழிபடுவோர் பாகவத நடனத்தை ஆடுவர். பாகவதர், ஹரிபக்தர் இதில் கலந்து கொள்வர். கிருஷ்ணன் கோபிகையருடன் ஆடுவது இந்த நடனத்தின் வாயிலாக விளக்கப் படும். இராதா கிருஷ்ணன் ஆடலும் இடம்பெறும். கோயில் அறையில் ஒரு விளக்கை ஏற்றி வைத்து அதைச் சுற்றி ஆடுவது வழக்கம். ஒரு கையை அல்லது இரு கைகளையும் தூக்கியவாறு வலமாகச் சுற்றி வந்தவாறு ஆடுவர் இராமநவமி, கோகுலாஷ்டமி நாட்களில் சிறப்பாகப் பாகவத நடனம் ஆடப்படுவதைக் காணலாம். ஆன்மா இறைவனுடன் ஒன்றுவதை இந்த ஆடல் விளக்கும். இதனைக் கிருஷ்ண சைதன்யர் ஓர் இயக்கமாக நடத்தியதாக அறிய முடிகிறது. அவ்வாறாயின் இதனை நாட்டுப்புறக் கலைகளுக்குள் அடக்குவது பொருத்தமாக அமையாது. இருப்பினும் இந்த நடனம் பெரும்பாலும் நாட்டுப் புறங்களில் மக்கள் விரும்பும் கலையமைப்பில் நடைபெறுவதினால் அந்த இயல்புகளைப் பெற்று விளங்குகிறது. திருத்தம் பெற்ற நடனங்களின் தன்மை இதற்கு இல்லை. நாட்டுப்புற மக்களே பெரும்பாலும் இதை ஆடுகின்றனர். இறை வழிபாடே பாகவத நடனத்தின் முக்கியமான நோக்கமாக உள்ளது.

## திரு நடனம்

திரு நடனத்தை நெல்லை, குமரி மாவட்டங்களில் வாழும் வைகுண்ட சுவாமி பக்தர்கள் இன்றும் ஆடி இறைவனை வழிபடுகின்றனர். வைகுண்டமடைய நாராயணரை வேண்டி உலகினர்

வழிபடுவதாக இந்த நடனம் ஆடப் படுகிறது. வைகுண்ட சுவாமியை வழிபடுவோர் பல பதிகளையும் நிழல்தங்கல்களையும் (எணத்தாங்கோயில் என்பது சிதைந்த வழக்கு) இந்த இரண்டு மாவட்டங்களிலும் பல இடங்களில் கட்டியிருக்கிறார்கள். அவற்றிலிருக்கும் கருவறையின் முன்பிரிக்கும் இடத்தில் திரு நடனம் ஆடுவது வழக்கம். கொடிமரம் இருக்கும் கோயில்களில் அதைச் சுற்றியும் ஆடுவர்.

நடனத்தில் கலந்து கொள்ளும் பக்தர்கள் அரையிலும் தலையிலும் காவியாடை கட்டியிருப்பர். நெற்றியில் நேர் நாமம் இட்டிருப்பர். கழுத்தில் உருத்திராக்க மாலைகளை அணிந்திருப்பார்கள். கையில் ஒரு நீண்ட பிரம்பைப் பிடித்துக் கொண்டு வலப்புறமாகச் சுற்றிச் சுற்றி வந்தவாறு ஆடுவர். இறைவனை வேண்டிப் பாடுவார்கள். சரவிளக்கு இயற்றப் பட்டிருக்கும். இறைவனை மாத்திரமே நினைத்து ஆடுவதினால் இதனைத் திருநடனம் என்று சிறப்பாக அழைக்கிறார்கள். நடனம் ஆடுவோர் பலவிதமான நோன்பு முறைகளைக் கைக் கொண்டவர்களாக இருப்பர்.

இந்த ஆடல் முறைக்கு வழிவகுத்த பெரியார் குமரியைச் சேர்ந்த முத்துக்குட்டி சுவாமியாவார். தன்னுடைய இறை யுணர்வில் பல அனுபவங்களைப் பெற்று இந்த முறையில் திருநடனம் ஆட வேண்டும் என்று குறிப்பிட்டுள்ளார். ஒரு விளக்கை மத்தியில் வைத்து ஆடும் வழக்கமும் உண்டு. இது பாகவத நடனம் போன்றே நடைபெறுகிறது. இந்த நடனத்தை ஆடும் மக்கள் நாட்டுப்புறத்தைச் சேர்ந்தவர்கள். எளிய வாழ்க்கை வாழ்கிறவர்கள். ஆனால் உறுதியான நம்பிக்கை கொண்டவர்கள். இறையருள் வேண்டலைத் தவிர வேறு எந்த விதமான நோக்கமும் இந்த ஆடலுக்கு இல்லை.

இவ்வாறு வட்டமாகச் சுற்றி ஆடி வழிபாடு செய்யும் வழக்கம் இமாசலப் பிரதேசம், பஞ்சாப், மத்திய பிரதேசம், வங்காளம், ஒரிசா, ஆசாம், திரிபுரா, கர்னாடகம் ஆகிய மாவட்டங்களிலும் உண்டு. அங்கு நாட்டப் பெற்றுள்ள கம்பைச் சுற்றி ஆடியுள்ளனர். திருநடனத்தில் கொடிமரத்தைச் சுற்றி ஆடும் பழக்கம் இதனுடன் ஒப்பிட்டுக் காணத்தக்கது இக்காலத்தில் வட மாநிலங்களில் தண்டேஸ்வரி அல்லது தனலெஷ்மி போன்ற தெய்வ உருவங்களைச் சுற்றி வழிபாட்டு

நடனங்களை ஆடுகின்றனர். மேல் நாடுகளில் மேபோல் (Maypole) என்று அழைக்கப்படும். நடப்பெற்றுள்ள கம்பைச் சுற்றி ஆடும் வழக்கம் உள்ளது. வழிபாடு நடத்த இவ்வாறு சுற்றிச்சுற்றி வலமாக வந்து நடனம் ஆடும் வழக்கம் உலகத்தின் பல பகுதிகளில் இருப்பதைக் காண முடிகிறது.

## பொய்க்கால் குதிரை ஆட்டம்

விலங்கினங்களின் உருவைத் தாங்கி ஆடும் பலவிதமான ஆடல்கள் தமிழ் நாட்டில் உள்ளன. அவற்றில் பொய்க்கால் குதிரை ஆட்டத்தை மிகச் சிறப்பாகக் கூறலாம். அதைப் புரவி யாட்டம் என்றும் சில இடங்களில் அழைக்கிறார்கள். கோயில் திருவிழாக்களில் பெரும்பாலும் இந்த ஆடல் நிகழ்ச்சிகள் நடத்தப்படும். சமூகச் சிறப்புடைய சில கொண்டாட்டங்களி லும் பொய்க்கால் குதிரை ஆட்டத்தை இக்காலத்தில் நடத்து கிறார்கள்.

ஒரு குதிரையின் உருவத்தை அட்டைகளாலும் மூங்கில் கீற்றுக்களாலும் செய்து அதைப் பல வண்ணத் துணிகளால் ஒப்பனை செய்வார்கள். கால்களை இணைப்பது இல்லை. அட்டைக் குதிரையின் முதுகுப் பகுதியில் ஒரு மனிதன் நிற்கும் அளவுக்குக் கூடாக இடம் விட்டு வைப்பர். அதற்குள் ஆட்டம் ஆடுபவர் புகுந்து நின்று குதிரையைப் பிடித்திழுத்து ஆடுவார். மரக்கட்டையால் செய்த கால்களைத் தன் கால்களுடன் இணைத்துக் கட்டிக்கொள்வார். அதைக் கொண்டு தரையில் உதைக்கும்போது குதிரையின் குழம்பு ஒலி கேட்கும். குதிரையைக் கடிவாளத்துடன் பிடித்து சவுக்கால் அடித்தும் ஆடுவதைக் காணலாம். ஆட்டத்தில் மெய்ம்மை காட்டும் நோக்கத்துடன் இவ்வாறு செய்யப்படுவதாகக் கருதலாம். ஆடுபவரின் காலில் சதங்கை கட்டியிருப்பதால் அதன் இனிய வொலி தாள இசை எழுப்பியவாறு இருக்கும். சில சமயம் ஒரு வாளை கையில் பிடித்தவாறும் குதிரையில் அமர்ந்திருப்பர்.

பொய்க்கால் குதிரையாட்டமாடுவதற்காக முன்பு குந்தளம் என்ற கருவியால் இசை எழுப்பியுள்ளனர். இக்காலத்தில் பெரும்பாலும் பாண்டு மேளம் கொட்டப்படுகிறது. சில சமயம் நையாண்டி மேளமும் அடிக்கப் பெறுகிறது. ஆனால் அது அவ்வளவு பொருத்தமாக இந்த ஆட்டத்துக்கு அமையவில்லை. மேள இசைக்கு ஏற்றவாறு குதிரைத் துள்ளுவது போன்ற நிலையில் அட்டைக் குதிரையை ஆட்டி அசைத்து ஆடுவர்.

இது ஊமை நடனமாகவே நடத்தப்படுகிறது. புராணக் கதைகள் வரலாற்று நிகழ்ச்சிகளையும் புரவியாடல் மூலம் நடித்துக் காட்டுவதும் உண்டு.

தமிழ் நாட்டில் முதன்முதலாகத் தஞ்சாவூரில் மராட்டிய கலைஞர்களால் பொய்க்கால் குதிரையாட்டம் நடத்தப் பட்டதாக அறியலாம். இந்த ஆட்டத்துக்குத் தஞ்சாவூர் மன்னர்களின் சிறந்த ஆதரவு இருந்துள்ளது. சிவாஜியின் வீர வரலாற்றை விறுவிறுப்புடன் நடத்திக் காட்டியுள்ளனர். சிவாஜி மன்னன் பவானி தேவியைப் பணிந்து வழிபடும் காட்சியும் பகைவர்களை முறியடிக்கும் வீரகாட்சிகளும் சிறப்பாகக் காட்டப்படும். பவானி அன்னை சிங்க வாகனத்தில் வந்து சிவாஜிக்கு அருள் செய்யும் காட்சி இணைந்து நடை பெறுவது மிக நன்றாக இருக்கும்.

ஓரிடத்தில் குதிரையில் அமர்ந்திருப்போர் சிவபெருமானின் வேடம் தாங்கி வந்து ஆட நடித்தார். சிவனுக்கும் குதிரைக்கு முள்ள தொடர்பு அறிய முடியவில்லை எந்த நிகழ்ச்சியையும் இந்த ஆடல் வாயிலாகக் காட்டலாம் என்றும் கருதியிருக்கலாம். கேரள நாட்டுக் 'கதகளி' பஞ்சாப் நாட்டுக் 'கதக்' ஆகிய வற்றின் நடனக்கூறுகளும் பொய்க்கால் குதிரை ஆட்டத்தில் காணப்படுவதாகக் கூறப்படுகிறது. ஆந்திராவில் நடக்கும் குதிரை நடனத்துக்கும் பொய்க்கால் குதிரை ஆட்டத்துக்கும் தொடர்பு இருப்பதாகக் கூறமுடியவில்லை. இரண்டும் நிறைய வேறுபாடுகளுடன் நடத்தப் படுகின்றன. ஆந்திர நாட்டுக் குதிரை நடனத்தில் உண்மையான குதிரைகள் பயன்படுத்தப் படும். திருமணவிழாவில்தான் இந்த ஆடல் நடைபெறும். ஒரு பெண்ணே முக்கிய பங்கு ஏற்று ஆடுகிறாள். பொய்க்கால் குதிரையாட்டத்தைப் பெண்களும் தமிழ் நாட்டில் ஆடுவது உண்டு. இரண்டு குதிரைகளில் ஒன்றைப் பெண்வேடதாரி அமர்ந்து ஆட்டுவார்.

தஞ்சை மராட்டிய மன்னர்கள் ஆதரவு கொடுத்து வந்ததால் வீர சிவாஜியை நினைவு படுத்துவதற்காக இந்த ஆடல் ஏற்பட்டதா என்பது சிந்திப்பதற்கு உரியது. அவ்வாறாயின் ஆலய விழாக்களில் வழிபாடு நடைபெறும் போது இவ்வாடல் மிக முக்கியமானதாகக் கருதப்படுவது ஏன் என்ற வினா எழு கின்றன. கலைச்சிறப்பு கருதி இவ்வளவு சிறப்பு கொடுக்கப் படுமா என்பதையும் ஆராயவேண்டும். குதிரைக்கும் சமயத் துக்கும் உரிய தொடர்பைப் பற்றிச் சிந்திக்கலாம்.



நீலகிரி தோடரின் களிமண்ணுரு (ப. 7)
(நன்றி : சென்னை அருங்காட்சியகம்)



கரக ஆட்டம் (ப. 72)
(நன்றி : தமிழ்நாடு இயல் இசை நாடகமன்றம்)



பின்னல் கோலாட்டம் (ப. 82)
(நன்றி : தமிழ்நாடு இயல் இசை நாடகமன்றம்)



பொய்க்கால் குதிரை ஆட்டம் (ப. 95)
(நன்றி : தமிழ்நாடு இயல் இசை நாடகமன்றம்)



கரகம், நையாண்டி மேளம் (ப. 76, 72)
(நன்றி : தமிழ்நாடு இயல் இசை நாடகமன்றம்)



கோலாட்டம் (ப. 80)
(நன்றி : தமிழ்நாடு இயல் இசை நாடகமன்றம்)



அடுக்குக் கரக ஆட்டம் (ப. 72)
(நன்றி : தமிழ்நாடு மக்கள் தொடர்பு செய்தித்துறை)



காவடி ஆட்டம் (ப. 72)
(நன்றி : தமிழ்நாடு இயல் இசை நாடகமன்றம்)

வளத்தின் முக்கிய அடையாளச் சின்னங்களில் ஒன்றாகக் குதிரை மதிக்கப்பட்டுள்ளது.[4] ஆரியருடைய வருகைக்கு முன்பே பழக்கப் பட்ட குதிரைகளை 'ஹராப்பாவிலுள்ள மக்கள் சிறப்பாகக் கருதியுள்ளனர். அங்கு கிடைத்துள்ள மண் குதிரை உருவங்களிலிருந்து இந்த உண்மையை அறியலாம்.[5] பீலர் என்ற பழங்குடியினர். மனிதனுடைய உயிர் குதிரையின் மீதேறி மேலுலகம் செல்லும் என்று நம்பினர். அதை குறிக்கும் உருவங்களை வடித்துள்ளனர். குதிரையை ஒரு புனிதமான விலங்காகக் கருதினர். மண்ணுலகை விண்ணுலகுடன் இணைக்கும் விசைக் கருவியாகக் குதிரையைப் பீலர்கள் மதித்துள்ளனர். இதை நிரூபிக்கும் பழங்கதைகளும் அவர்களிடையே உலவுகிறது. தமிழர்கள் சிறப்பாக மதித்து வழிபடும் தெய்வமான ஐயனாருக்கும் குதிரைக்கும் மிக நெருக்கமான தொடர்பு உள்ளதை அனைவரும் அறிவர். ரிக் வேதத்திலும் குதிரை புனிதமாகக் குறிப்பிடப்பெற்றுள்ளது. தீமையிலிருந்து காக்கும் ஏழு கன்னியருக்கும் குதிரை செய்து கொடுக்கும் வழக்கம் இருந்துள்ளது. மழைவளம் தரும் வருணனுக்கு ஆரியர்கள் குதிரைப் பலி கொடுத்துள்ள குறிப்புகளும் காணப்படுகிறது. சில பழங்குடியினர் குதிரைகள் இல்லாமல் சமயச் சடங்குகளை நடத்துவதில்லை. அந்த அளவுக்குக் குதிரை அவர்களுடைய மனத்தில் சிறப்பும் உயர்வும் பெற்றுள்ளது. குதிரை வளத்தையும் வாழ்வையும் தருவதாக முன்காலத்திலிருந்தே மக்கள் நம்பியுள்ளனர். நினைத்தவை நடப்பதற்காகவும் குதிரைவுருவை வழிபட்டிருக்கின்றனர்.

வங்காளத்தில் நடைபெறும் கம்பீரா விழாவில் சிவபெருமானின் பூதகணங்கள் குதிரைகளில் ஊர்ந்து வருவதாகவே ஊர்வலம் நடைபெறும். நாட்டுப்புறத் தெய்வங்கள் ஆணானாலும் பெண்ணானாலும் அவர்களுக்குக் குதிரைகளைக் கொடுப்பது இந்நாட்டாரின் தொன்று தொட்ட வழக்கம் என்று கூறப்பட்டுள்ளது.[6] தென் இந்தியாவில் குறிப்பாக மலபாரில்

---

(4) Maria Leach Ed, Folklore Mythology and Legend, New English Library, (London, 1975) p. 504

(5) Stella Kramrisch Unknown India, Rural Art in Tribe aud Village, (Philadelphia, 1968) p. 51

(6) A. Bhattacharya, "The Cult of the Village Gods of West Bengal", Man in India, XXXV, (Calcutta, 1955) p.19-33.

தீய ஆவிகளைத் துரத்துவதற்காகவும் தொத்துநோய்களைத் தடுப்பதற்காகவும் தெய்வங்களுக்கு வழிபாட்டுக் கொடையாகக் காளை, குதிரை ஆகிய விலங்குருவங்களை நாட்டுப்புற மக்கள் மிகுதியாகக் கொடுத்துள்ளனர்.[7] இவை அனைத்தையும் இணைத்துக் காணும் போது குதிரைக்கும் சமயவுணர்வுக்கும் மிகுந்த தொடர்பு இருப்பதை அறியலாம். இவற்றைக் கொண்டு பொய்க்கால் குதிரை ஆட்டத்துக்கும் நெருக்கமான சமயத் தொடர்பு இருப்பதாகக் கருதலாம்

இந்திய நாட்டில் மாத்திரமன்றி மேனாடுகளிலும் குதிரைக்குச் சமயச் சிறப்புள்ளதாகத் தோன்றுகிறது. இடைக் காலத்தில் கொண்டாடப்படும் மேநாள் (May Day) கார்னிவல் விழாக்கள் (Carnival Festival) ஆகியவற்றில் குதிரைகள் கொண்டுவந்து சிறப்பித்துள்ளனர். மொரீஸ்கஸ் விழாவிலும் இவ்வாறு நடைபெறுகிறது. சாண்டியாகோ (Santiago) குதிரையேறி மூர்களை முறியடித்த நிகழ்ச்சியை லாஸ் மோரொஸ் (Los Moros) மக்கள் கொண்டாடுவர். இது வாடையைக் கோடை வென்றதையும், தீமையை நன்மை வென்றதையும் குறிப்பாக உணர்த்தும் உருவகக் கற்பனை என்று அறிஞர் கருதுகின்றனர்[8] இங்கும் குதிரைக்குச் சிறப்பிடம் கொடுக்கப்பட்டுள்ளது. உலகின் பல பகுதிகளிலும் குதிரையைச் சமயத் தொடர்புடன் சிறபித்துள்ளதைக் காணலாம். தமிழ் மக்களும் அவ்வாறு உயர்வு கொடுப்பதினால் தான் புரவி யாடலை மதித்துச் சமய விழாக்களில் மிகுதியாக நடத்தி மகிழ்ந்துள்ளதாகக் கூறலாம்.

**மயிலாட்டம்**

மயிலாட்டம் பெரும்பாலும் பொய்க்கால் குதிரை ஆட்டம் நடக்கும் இடங்களிலெல்லாம் நடக்கும். மயில் போன்ற உருவை அட்டையில் செய்து மயிலின் வால்முடிகளைக் கட்டி அதன் மேல் நின்று ஆடுவார்கள். காலில் சதங்கை கட்டியிருப்பர். கையில் ஒரு வேல் வைத்திருப்பதும் உண்டு. முருகக் கடவுள் போன்று வேடம் புனைந்திருப்பர்.

---

(7) E.K. Gough, "Cults of the Dead among the Nayars", Traditional India, Ed. M. Singer (philadelphia, 1959), p. 260.

(8) Maria Leach Ed, Folklore Mythology and Legend New English Library (London, 1975) p.279-280.

பான்ட் மேளத்துக்குத் தக்கவாறு ஆடுவர். மயில் வாயைத் திறப்பது போன்றும் கழுத்தை அங்கும் இங்கும் திருப்புவது போன்றும் அமைத்திருப்பர். மயிலுருவம் முன்னும் பின்னும் பார்ப்பதாக அசைவு ஏற்படுவது நல்ல காட்சியாக இருக்கும். ஆட்டத்தின் உயிர்த் துடிப்புக்கு அது உதவுவதாக அமையும். கயிறுகள் வெளியில் தெரியாதவாறு கட்டப்பட்டிருப்பதால் அந்த இயக்கம் தானாக நடப்பது போன்று தோன்றும். ஆடுபவரின் கால்கள் சில சமயம் மயிலின் கால்கள் போன்று ஒப்பனை செய்யப்பட்டிருக்கும்.

மயிலில் இருந்தவாறு ஆடுபவர் பலவிதமான வித்தைகளைச் செய்து மக்களைக் கவர முயல்வார். மயில் மிரண்டு ஓடுவது போன்றும் வெகுண்டு பாய்வது போன்றும் ஆட்டப்படும். இந்த ஆடலை மக்கள் புனிதமாகக் கருதுவதைக் காணலாம். இதற்கும் முருகக் கடவுளுக்கும் தொடர்பு படுத்துவதே காரணம்: முருக வணக்கத்தின் அடிப்படையில் மயிலாட்டம் தொடங்கப் பட்டிருக்கலாம் இயல்பாகவே மயிலின் தோகையின் அழகு மக்களை மிகவும் கவரக் கூடியதாக உள்ளது.

### சிம்ம ஆடல்

சிங்கத்தின் உருவை அட்டையில் அதன் மேலிருந்து ஆடும் ஆடலாகச் சிம்ம ஆடல் அமைகிறது காளியின் வாகனம் சிங்கம். ஆகையினால் சிம்ம ஆடல் ஆடுபவர் பெரும்பாலும் காளியின் வேடத்தைப் புனைந்தே ஆடுவார். அவர் கோபங் கொண்ட பார்வையுடன் காளி மகிடாசுரனைக் கொல்லப் பாய்வது போன்று இடையிடையே பாய்வார் கையில் ஒரு வாளிருக்கும். முடி தலையில் பரப்பப் பட்டிருக்கும் சில சமயம் அசுரனாக ஒருவர் நடிப்பார். காளிக்கும் அசுரனுக்கும் நடக்கும் சண்டை நடித்துக் காட்டப்படும். அசுரன் வீழ்ந்ததும் ஆட்டம் முடிவுறும் சூலம் தாங்கியும் காளி வருவது உண்டு. சூலத்தால் குத்தப் பட்டு அசுரன் விழுவதை மக்கள் மகிழ்ச்சியுடன் வரவேற்று மகிழ்வர்.

தனியாக சிம்ம ஆடல் பெரும்பாலும் நடப்பது இல்லை மயிலாட்டம் போன்றவற்றுள் இணைந்தே நடக்கும். காளியின் சீற்றப் பார்வையில்தான் இந்த ஆடலின் சிறப்பு இருக்கிறது. சிங்கம் வாயைப் பிழப்பது போன்றும் காட்டுவர். இத்தகைய ஆடல் இப்பொழுது மிகவும் குறைந்து வருகிறது. சில இடங்

களில் சிங்க முகத்தைக் கட்டிக் கொண்டு ஒரு மனிதன் ஆடுவதையும் காணலாம். நரசிங்க அவதாரத்துக்கும் இதற்கும் தொடர்பு இருக்கின்றதா என்பதை அறிய வேண்டும்.

## அனுமன் ஆட்டம்

இராமாயணத்தில் வரும் அனுமன் போன்று வேடம் புனைந்து ஆடும் அனுமன் ஆட்டம் தென் மாவட்டங்களில் முன்பு நடந்துள்ளது. இப்பொழுது யாரும் அவ்வாறு ஆடுவதைக் காண்பதற்கு இல்லை. தற்பொழுது வீட்டுக்கு வீடு பிச்சையெடுக்க வரும் குளுவர்கள் உண்மையான குரங்கை அனுமன் என்ற பெயரில் ஆடச் செய்வதைப் பார்க்கலாம். அதன் கையில் ஒரு கம்பைக் கொடுத்து ஆடச் சொல்கிறார்கள். அது கம்பில் ஏறியும் இறங்கியும் பல விதமான வித்தைகள் செய்யும் அந்த மாதிரி அதை நன்றாகப் பழக்கி இருக்கிறார்கள் அதற்குப் பட்டுச் சட்டை, பாசிப் பவள மாலைகள் இட்டு அழகு படுத்தி இருப்பர்.

உண்மையான அனுமன் ஆட்டத்தில் ஒருவருக்குக் குரங்கு போன்று முகமூடியும் வாலும் கட்டி விடுவர். உடல் முழுவதும் மயிர் நீண்டு இருப்பது போன்று ஆடை அணிவர். அவருடைய ஆட்டம் குரங்கினுடைய செயலால் நிறைந்திருக்கும். பல்லை இளிப்பதும் கண்ணை உருட்டுவதும் அதிகமாக இருக்கும் என்று கூறுவர். கூடியிருக்கும் மக்கள் அம்மாதிரிச் செயல்களைக் கண்டு மகிழ்வர். சிலசமயம் குரங்குபோன்று குரலெழுப்பி அங்கு மிங்கும் குதித்து ஓடுவர். அதைக் கண்டு மக்கள் ஆரவாரித்து ஒதுங்கி ஓடுவதும் உண்டு.

ஒரு இடத்தில் அனுமன் ஆடுபவர் ஆட்டம் நடந்த இடத் துக்குப் பக்கத்தில் நின்ற தென்னையில் ஏறி ஒரு தேங்காயைப் பறித்துப் பல்லினால் உரித்து வேடிக்கை காட்டிய நிகழ்ச்சியும் நடந்துள்ளது. எதையும் உண்மையாக, நடப்பதை நடப்பது போன்று காட்டவேண்டும் என்ற ஆவலே அவரை அவ்வாறு செய்யத் தூண்டியிருக்கும். ஆட்டமும் நன்றாகக் கலைத் தன்மையுடன் இருக்கும் என்று கண்டவர் கூறினர்.

தெய்வமேறி அனுமனாக ஆடும் சாமியாடிகளும் இருந்தனர். அவர்கள் அனுமன் வேடம் புனைவதில்லை. ஆனால் இராமாயண அனுமனின் வீரச் செயல்களை ஆட்டத்தினூடே புலப்படுத்துமாறு நடித்துக் காட்டுவர். சுமார் 70 ஆண்டுகளுக்கு

முன்னால் குமரி மாவட்டத்திலுள்ள உசரவிளை ஊரில் இவ்வாறு அனுமன் ஆட்டம் ஆடிய நாராயண வடிவுச் சாமியார் வியப்பான செயல்களை மக்கள் முன் செய்து காட்டியதாகச் சொல்லினர். கருட வாகனத்தில் திருமால் தெருவலம் வந்து கொண்டிருக்கும்போது இவர் அனுமன் ஆட்டம் ஆடி இருக்கிறார். உணர்ச்சியுடன் ஆடிய அவர் தன்னை மறந்து அனுமனாக மாறிப் பக்கத்தில் நின்ற அரச மரத்தில் துள்ளி ஏறி அதன் உச்சிக்கே போய் விட்டாராம். குரங்கைத் தாங்கும் கொம்பால் மனிதனைத் தாங்க முடியாது என்பதை மறந்து விட்டார். மிகவும் சிரமப்பட்டு அவரைக் கீழே விழாதவாறு இறக்கியிருக்கின்றனர். ஆட்டத்தை நினைத்து ஆயுளை மறந்த நாட்டுப்புறக் கலைஞரின் கலையார்வத்தை நினைத்துப் பாராட்டலாம். கலையுடன் உண்மையான உணர்வுடன் ஒன்றி விட்ட உயர்நிலையை உய்த்து உணர்வதே சிறப்பு.

இத்தகைய குரங்கு ஆடல்கள் போர்னியோவில் மக்காகு (Macaque) என்ற பெயரில் நடக்கிறது. ஆப்பிரிக்க நாடுகளில் சிலவற்றிலும் குரங்குத் தோற்ற ஆடல்கள் நடத்தப் படுகின்றன ஜவரா நடனம் (Javara) குரங்கின் செயல்களைக் காட்டும் ஆடலாக நடைபெறுகிறது. ஜப்பானில் நடக்கும் சிறப்புடைய நோ நாடகங்கள் (Nō Drama) சரு காகு (Saru - gaku) என்ற குரங்குத் தோற்ற ஆடலிலிருந்தும் டென் காகு (Den - gaku) என்ற கர்ண வித்தை ஆடலிலிருந்தும் திருந்திய வடிவமாக ஏற்பட்டுள்ளது என்று கூறப்பெற்றுள்ளது[9]. இவற்றை நோக்கும் போது அனுமனாடலின் பெருமை புரியலாம்.

**கரடியாட்டம்**

கரடி போன்ற முகமூடியணிந்து கரடியின் தோலை உடம்பில் முழுநிலையாகப் போர்த்திக் கொண்டு ஆடுவதைக் கரடியாட்டம் என்று கூறுவர். கண்பக்கம் திறந்து இருக்கும். ஆகையினால் கூட்டத்தை நன்றாகப் பார்த்து ஆடுவர். பெண்களும் சிறுவர்களும் கூடியிருக்கும் பக்கத்தில் நெருங்கி அவர்களை அச்சுறுத்துவதும் உண்டு. கரடியின் முன்னங்கால் பகுதியில் கைகளைப் புகுத்தி அதை ஆட்டி அசைத்து பயம் கொள்ளச் செய்வதும் வழக்கம். கூர்மையான பற்களும் நகங்களும் அச்சவுணர்வை மிகுவிக்கும்.

(9) Ibid, P. 285.

கோயில் விழாக்களில் பிற ஆடல்களுடன் இணைந்து கரடியாட்டம் நடைபெறும். சிலர் கரடி ஆடையுடன் பகலில் வீடு வீடாக வந்து பணங்காசு வாங்குவதும் உண்டு. கலையை விடவும் கரடித் தோற்றமே மக்களைக் கவரும் தன்மையதாக உள்ளது. சேலம் மாவட்டத்தில் கரடியாட்டம் தெய்வத் தொடர்புடன் நடத்தப் படுகிறது. இராமநாதபுரம் மாவட்டத்தார் வழிபடும் கரடிப் பெருமாள் தெய்வத்துக்கும் கரடி ஆட்டத்துக்கும் தொடர்பு இருப்பதாகத் தோன்றவில்லை. இராமாயணப் பாத்திரமான ஜாம்பவான் கரடிவுருவம் உடையவன். அவனுக்கும் இந்த ஆடலுக்கும் உள்ள தொடர்பைப் பற்றிச் சிந்திக்கலாம்.

இந்திய நாட்டில் கரடிகள் நோய் தடுப்புக்கு உதவும் ஆற்றல் மிக்க மிருகமாகக் கருதப்படுகின்றன. குழந்தைகளின் நோயைப் போக்குவதற்காகக் கரடிகளின் முதுகின் மீது அவர்களை இருத்தி இறக்கும் பழக்கம் இருந்ததாகக் கூறப்படுகிறது.[10] கரடிகள் சூரியனிலிருந்து ஆற்றல் பெற்று அதை மண்ணுலகுக்குத் தருவதாகவும் நம்பியுள்ளனர். இந்தியாவிலுள்ள சில வீர இனத்தினரின் சின்னமாகவும் கரடி விளங்குகிறது கரடியின் இத்தகைய சிறப்புகளை நம்பிய மக்கள் இந்த ஆடலை விரும்பினரா என்பதையும் சிந்திக்கலாம்.

**ரிஷப ஆடல்**

காளை போன்று முகமூடியணிந்து ரிஷப ஆடல் ஆடும் வழக்கமும் தமிழ் நாட்டில் இருந்துள்ளது. இப்பொழுது இந்த ஆட்டம் மறைந்து விட்டதாகத் தோன்றுகிறது. நந்தி தேவருக்கும் இந்த ஆடலுக்கும் தொடர்பு இருக்கலாம்.

இக்காலத்தில் உண்மையான காளைக்கு பல வண்ண ஆடைகள் போர்த்தி மணிகளும் மாலைகளும் பூட்டி வீடுகளுக்கு அழைத்து வருவதைப் பார்க்கலாம். அவற்றைக் கோயில் மாடுகள் என்று கூறுவர் மாட்டுக்கு உரிமையானவன் எதைச் சொன்னாலும் அது தலையை ஆட்டி ஒப்புதல் கூறும். ஆகையினால் மக்கள் அதனைத் 'தலையாட்டி மாடு' என்று அழைப்பர். சிலர் இடங்களில் 'பூம் பூம் மாடு' என்று கூறுவர். மதுரை இராமநாதபுரம் மாவட்டங்களில் 'அழகர் கோயில் மாடு' என்று குறிப்பிடும் வழக்கம் உள்ளது. வீடுகளில் பணம் வாங்கிப்

(10) Ibid, P. 124.

பிழைப்பதற்காகவே இவ்வாறு தலையாட்டி மாடுகளை அழைத்து வருகிறார்கள். இதில் கலைத்தன்மை ஏதும் இருப்பதாகத் தோன்றவில்லை.

## ஆலியாட்டம்

அச்சமூட்டும் பூதவுருவங்களைத் தாங்கி ஆடும் வழக்கமும் தமிழ் நாட்டில் உள்ளது. தீய தேவதைகளைப் பெருந் தோற்றங்களாகக் கற்பனை செய்து கதைகளை உருவாக்கியுள்ளனர். கற்பனை செய்ததை உருவமாகச் செய்து ஆடுகின்றனர். முகமூடிகள் மூலமும் அச்சம் தரும் பூதவுருவைக் காட்டியுள்ளனர். பூதவுருவங்களில் கொடிய ஆவிகளையும் பேய்களையும் கற்பனை செய்துள்ளதாகவும் கருதலாம். புராணக் கதைகளில் பூதவுருவமுடைய கொடிய பாத்திரங்கள் இடம் பெற்றுள்ளதைக் காணலாம். அவற்றை உருவாக்கிக் காட்ட மரங்களினால் அச்சுத் தோற்றமுடைய மிகப் பெரிய முகமூடிகளைச் செய்கின்றனர் அவற்றின் பற்கள் நீண்டும் மூக்கு அகன்று மிக நீளமாகவும் செதுக்கப் பட்டிருக்கும் புள்ளிகளிட்டு அவற்றைக் கோரமாக்கிக் காட்டுவதும் உண்டு. அச்ச உணர்வை மிகுதிப் படுத்துவதே அத்தகைய உருவங்களின் முக்கிய நோக்கம்.

தென் மாவட்டங்களில் அம்மன் கொடை விழாக்கள் நடக்கும் போது ஆலியாட்டம் வெகு விமரிசையாக நடக்கும். மூங்கில் கீற்றுக்களை இணைத்து ஒரு பெரிய மனித உருவம் செய்வர். வைகோலைப் பரப்பி அதற்கு மேல் ஆடை அணிவர். நீண்ட அங்கிபோன்று ஆடையிருக்கும். தலை தனியாகச் செய்யப் பெற்று அந்த உருவில் பொருத்தப்படும். ஆலியின் உட்பகுதி ஒரு மனிதன் நிற்கும் அளவுக்குக் கூடாக இருக்கும். அதன் மார்புப் பகுதியில் இரண்டு துளைகள் இருக்கும். அவற்றின் வழியாக ஆலி சுமப்பவன் வெளியே பார்க்க முடியும்.

ஒரு மனிதன் அதைத் தூக்கி ஆடுவான். அதன் பருவ உருவமும் கோர முகமும் அச்சமூட்டும் மூன்று அல்லது நான்கு ஆலிகள் கூட்டாக ஆடும். அவற்றில் ஒன்றைக் குறவன் என்று கூறுவர். இன்னொன்று பெண்ணுருவாக இருக்கும். அது குறத்தி என்று அழைக்கப்படும். கொட்டு அடிப்பது போலவும் குழல் ஊதுவது போலவும் மற்ற ஆலிகள் செய்யப்பட்டிருக்கும். ஆண் ஆலி கையை அகல விரித்து ஆடவும் பெண் ஆலி அதைத் தொடர்ந்து பின்னால் ஆடும். இரண்டும் ஊளை இட்டு அலறும். சிறுவர் அதைக் கேட்டு அஞ்சி ஓடுவர்.

நாதசுவரம் அல்லது நையாண்டி மேளம் இசைக்கப்படும் அம்மன் தெருவலம் வரும் போது கூடவே ஆலிகள் தெருவில் ஆடிக்கொண்டு வரும். சில சந்திகளில் நின்று சுற்றிச் சுற்றி ஆடுவர். அச்சம் தரும் ஆலி ஆட்டத்தை நாட்டுப்புற மக்கள் விரும்பிக் காண்பர். இத்தகைய கோரமான உருவமைப்புடைய ஆடல்கள் இந்தியாவில் சில பகுதிகளில் நடப்பதாகக் கூறப் படுகிறது. அருணாசலப் பிரதேசம் இவ்வாறான ஆட்டம் நடத்துவதில் புகழ் பெற்றுள்ளது.

## வேதாள ஆட்டம்

மரத்தினாலான வேதாளத்தின் கோர முகமுடியை ஒருவர் தன்னுடைய முகத்தை மறைக்கும் படி கட்டிக்கொண்டு ஆடுவார். ஆடுவோருடைய கையில் ஒரு தீச்சட்டி இருக்கும். அது கனந்து எரியும். முகமுடியில் கண்கள் ஓட்டையாக இருப்பது ஆடுபவரின் பார்வைக்கு உதவும். இந்த ஆடல் அமைதியாக ஒரே தாளகதியில் நடப்பதைத் தான் காண முடிகிறது. வேதாள முகத்தில் கோரைப் பல்லும் நாக்கும் நீண்டு அச்சவுணர்வை ஏற்படுத்தும். ஒரு கையில் வேப்பங் குழையை வைத்துச் சட்டியிலுள்ள நெருப்பை வீசி பெருக்கிய வாறு ஆடுவர்.

வேதாளத்தைச் சுற்றிச் சூழ்ந்து நாலைந்து சிறுவர்கள் ஆடுவார்கள் அவர்கள் முகத்தில் செம்புள்ளி கரும்புள்ளி குத்தி யிருக்கும். அரையைச் சுற்றி வேப்பங் குழை கட்டியிருப்பர் கையிலும் குழை வைத்துக் சுழற்றிச் சுழற்றி ஆடுவார்கள். அவர்களைக் 'கொள்ளியாப்பை' என்று நாட்டுப்புற மக்கள் கொச்சையாகக் கூறுவர் உண்மையில் அந்த சொல் கொள்ளி வாய்ப் பேய் என்பதின் மருவாக உள்ளது.

திருநெல்வேலி, குமரி மாவட்டங்களில் நடக்கும் கொடை விழாக்களில் வேதாள ஆட்டம் மிகுதியாக நடைபெறும். ஆலியாட்டத்தைத் தொடர்ந்தே இது நடக்கும். வேதாள ஆட்டத்துக்கு ஆடம்பரமோ ஆரவாரமோ கிடையாது. கொடுந் தெய்வங்களின் குறியீடாக வேதாள ஆட்டம் நடை பெறுவதாகக் கருதலாம். பருமனாகவும் குட்டையாகவும் இருக்கும் மனிதனையே இந்த ஆட்டம் ஆடத் தெரிந்தெடுக் கின்றனர். நாட்டுப்புற மக்கள் நல்லதையும் கெட்டதையும்

உருவகித்துக் காணும் இயல்புடையவர். வேதாள ஆட்டம் கொடுந்தன்மையின் குறியீடாகவே நடத்தப் படுகிறது. அம்மனின் துணைப் படையாக வேதாளங்களைக் கருது கின்றனர். அவர் ஊர்வலம் வரும் போது பூதகணக்கள், வேதாளங்கள், பேய்கள் ஆகியவை துணையாக வருவதாகக் கூறப்படும். இந்தக்கருத்தைக் கொண்டே இத்தகைய கோரமான ஆடல்கள் நடத்தப் படுவதாகக் கூறலாம்.

## வர்ணக் கோடாங்கி ஆட்டம்

அம்மன் கோயிலின் தெருக்களில் வர்ணக் கோடாங்கி ஆட்டம் நடைபெறுகிறது. இதை ஆடுவதற்காகக் குறிப்பிட்ட இன மக்கள் உள்ளனர். வழிபாட்டுப் பாடல்களைப் பாடி உடுக்கு அடிப்பர். இடையிடையே ஊராருக்குக் குறியும் சொல்வர் இதைக் கேட்பதற்காகவே பலர் அவர்களைச் சுற்றிக் கூடுவர். இரண்டு அல்லது மூன்றுபேர் வர்ணக் கோடாங்கி ஆட்டம் ஆடுவர். நெல்லை மாவட்டத்தில் இந்த ஆடலுக்கு இன்றும் நல்ல மதிப்பு உள்ளது. அவர்களுடைய ஆடையணி களும் வினோதமாக இருக்கும். வழிபாட்டுப் பாடலைக் கோடாங்கி இசைமுறையில் பாடுவதற்காகவே இவர்களை மக்கள் அழைப்பர்.

# தெய்வமேறிய கலைகள்

## தெய்வமேறிய நிலை

மனிதன் தெய்வ நம்பிக்கையுடன் அவற்றை வழிபட்டு வணங்குகிறான். தன்னைக் கொண்டே தெய்வங்களை அடையாளம் காண முயல்கிறான். தெய்வ அருள் சில மனிதருக்கு ஏற்பட்டு அவர்கள் தெய்வச் செயல் புரியும் ஆற்றலைப் பெறுகின்றனர் என்று நம்புகிறான். மனிதனின் இயல்பான ஆற்றலை விடவும் அது மிக்காது எனக் கருதி மதிக்கிறான். ஒவ்வொரு தெய்வமும் வேறுவேறு இயல்புகளையும் ஆற்றலையும் உடையன என்று மதிப்பிடுகிறான். தெய்வக் கதைகளைக் கொண்டு அவற்றின் வாழ்க்கையின் போக்கைக் கணிக்கிறான், தெய்வமேறியவர்களைச் சிறப்பாகக் கருதி உயர்வளிக்கிறான். மக்கள் மத்தியில் மதிப்பு இருப்பதால் தெய்வமேறி ஆடும் ஆடல்கள் மிகுந்து வளர்ந்தது. ஊருக்கு ஊர் இத்தகைய ஆடல்கள் வணங்கும் தெய்வங்களின் தன்மைகளுக்கும் வழங்கும் கதைகளில் போக்கும் தக்கவாறு மாறிமாறி அமைகின்றன. அவற்றில் கலைத் தன்மை அதிகமில்லை. இருப்பினும் கருவி இசைக்குத் தக்கவாறு நடைபெறுவதிலிருந்து ஓரளவு கலைத் தன்மை இருப்பதாகக் கருதலாம். மக்கள் தெய்வமேறிய ஆடல்களைக் கலையாகக் கருதாது தெய்வத்தின் அருள் வருகையாகவே மதிக்கின்றனர். அவற்றின் பல்வேறு அமைப்பையும் நிலைகளையும் கண்டறிவது நாட்டுப்புற ஆடற்கலையின் பொதுத்தன்மையை அறியத் துணை செய்யும்.

இத்தகைய இறையாடலைப் பல இடங்களில் 'சாமியாட்டம்' என்று கூறுகின்றனர் அது தொடங்கும் போது உடல் அசைவாகக் காணப்படும். 'ஆராசனை' என்று கூறுவர். இது 'ஆராதனை' என்பதின் வழக்கச் சொல்லாக இருக்க வேண்டும். இறைக் கதைகள் கூறி மேளங்களை அடித்து முழக்கும் ஆட்டம்கூடும். பின்னர் எழுந்து ஆடுவார்கள். குறிப்பிட்ட தெய்வத்தின் அருளாவி அந்த ஆட்டக்காரரின் மேலேறித் தங்கள் முன் தோன்றியுள்ளதாக மக்கள் கருதுவர். பலவிதமரியாதைகள் செய்வர். பணிந்து வணங்குவர். பயந்து பணி புரிவர். இத்தகைய ஆடல்கள் நாட்டுப்புறக் கூத்துக்கலைக்குத் துணை செய்திருக்கும் என்று நம்பலாம் தெய்மேறிய ஆடல்கள் பலவிதமாகத் தமிழ்நாட்டில் நடக்கிறது. இடத்துக்கு இடமும் தெய்

வத்துக்குத் தெய்வமும் ஆட்டத்தில் மாற்றமுள்ளது. அவற்றில் முக்கியமானவற்றைத் தனித்தனியாகப் பிரித்துக் காண்பது நாட்டுப்புறக் கலைத்தன்மை நன்கு அறியத்துணை செய்யும்.

## முக்கிய தெய்வங்களும் வழிபாட்டு முறைகளும்

நாட்டுப்புற மக்கள் வழிபடும் தெய்வங்களைக் கணக்கெடுப்பது மிகமிகக் கடினம். தமிழ் நாட்டில் ஆயிரக்கணக்கான தெய்வங்கள் வணங்கப்பட்டிருப்பதைக் காணலாம். ஊருக்கு ஊர் தெய்வங்களின் பெயர்கள் மாறுகின்றன. சிறுசிறு மாற்றங்களுடன் கதைகள் கூறப்படுகின்றன. புதிது புதிதாகத் தெய்வங்கள் தோன்றுகின்றன. பல காலத்தால் மறக்கப்பட்டு வழிபாடிழந்து நினைவுச் சின்னங்களாக நிற்கின்றன. நெடுங்காலமாக நிலைத்து வழிபாடு பெறும் தெய்வங்கள் சிலவாகவே உள்ளன. ஒரு இடத்தில் சிறப்பிக்கப்படுவது அடுத்த இடத்தில் குறைத்து மதிப்பிடப்படுகிறது. தெய்வங்களுக்குள்ளும் ஏற்றத் தாழ்வு கற்பிக்கப்படுவதைக் காணலாம். குல தெய்வங்களும் உள்ளன. பொது தெய்வங்களும் விளங்குகின்றன. உறவு முறை விளக்கப்படும். தெய்வங்களும் மிகுதியாகக் காணப்பெறுகின்றன. அச்சம் தருபவை, அருள் செய்பவை என்ற நிலைகளிலும் தெய்வங்கள் உள்ளன. சிலவற்றைக் கொடுமை செய்யாது தடுக்கவும் சிலவற்றை அருள்பாவித்துக் காக்கவும் மக்கள் வழிபடுவதாகத் தோன்றுகிறது. தெய்வங்களில் ஆண்கள், பெண்கள், பூதங்கள், பேய்கள் போன்றவையும் காணப்படுகின்றன. தொன்மக் கதை மாந்தர், குறிப்பிட்டுக் கருதத் தக்கவாறு இறந்தோர், முன்னோர், அச்சவுணர்வில் கற்பிக்கப் பட்டோர் ஆகிய பல நிலைகளில் நாட்டுப்புறத் தெய்வங்களைப் பிரிக்காலம்.

சேலம், கோவை, பெரியார், தர்மபுரி ஆகிய மாவட்டங்களில் ஐயனார், முனியாரப்பன், கருப்பனார், வேட்டைராயன், கிருஷ்ணரப்பன், காளியாத்தாள், பிடாரி, பத்திரகாளி, திரௌபதியம்மன், வீரமாத்தி, சாமுண்டேஸ்வரி ஆகிய தெய்வங்கள் முக்கியமானவை. கர்நாடக நாட்டுக்கு உரிய சாமுண்டேஸ்வரி இம்மாவட்டங்கள் அதை அடுத்து இருப்பதினால் இங்கு வணங்கப் பெறுகிறாள். தெய்வ பரிமாற்றம் இடத்துக்கு இடம் ஏற்பட்டுள்ளதை இதனால் அறியலாம். சேலத்திலுள்ள அயோத்தியா பட்டினம் என்ற ஊரில் தெய்வ மேறிப் பலிகொடுக்கும் விலங்குகளின் குருதியைக் குடிக்கும்

பழக்கம் உள்ளது. இத்தகைய பழக்கம் நெல்லை, குமரி ஆகிய மாவட்டங்களில் சுடலைமாடன், இயக்கி ஆகிய தெய்வ ஆடல் களிலும் உண்டு. சேலத்திலுள்ள ஆதனூர் அம்மன் எருமைப் பலி ஏற்பது வழக்கம். கண்ணியாம் பட்டியில் பெரியாண்டவர் என்ற தெய்வம் ஆடிக் குறி சொல்வதைக் காணலாம்.

தென்னார்க்காடு, வடஆர்க்காடு, செங்கல்பட்டு முதலிய வட மாவட்டங்களில் அங்காளம்மன், ரேணுகாதேவி, காளியம்மன், திரௌபதியம்மன், மாரியம்மன், பாவாடைராயன், கூத்தாண்ட வர், முனீஸ்வரன், கருமாரியம்மன், நாகம்மன் முதலிய தெய்வங் கள் வணங்கப் படுகின்றன. அங்காளம்மன் 'சாமியாடி' அலகிட்டு கையில் வாளைவைத்து ஆடுவதைக் காணலாம். நோயைப் போக்கும் ஆற்றலுடைய தெய்வமாக அதைக் கருதி மக்கள் வழி படுகின்றனர். நோயுற்றவர் வயிற்றில் கையிலிருக் கும் வாளைச் செருகியதும் நோய்த் தணிந்து விடுவதாக மக்கள் நம்புகின்றனர். இந்த வழக்கம் தென்னார்க்காட்டிலுள்ள குறிஞ்சிப்பாடி ஊரில் இன்றும் நடைபெறுவதாக அறிய முடிகிறது. சாமியாடிக் கொண்டு தெருவலம் வரும் போது மக்களுக்கு மஞ்சள் கொடுக்கும் பழக்கமும் உள்ளது. குறிஞ்சிப் பாடியிலுள்ளது புற்று மாரியம்மன் கோயிலில் ஆடுபவர் செடல் குத்திக் கொள்வர். அவர்கள் விரதமிருந்து வேப்பிலை மஞ்சள் துணி ஆகியவற்றைக் கட்டிக் கொண்டு ஆடுவர்.

கிளியானூர், தைலாபுரம், கொத்தட்டை, திருப்பாதிரிப் புலியூர் போன்ற ஊர்களில் அரவான் அல்லது கூத்தாண்டவர் வணக்கம் மிகவும் சிறப்பாக நடத்தப்படுகிறது. அங்கு நடக்கும் தாலியறுப்பு நிகழ்ச்சி முன்பே விளக்கப் பட்டுள்ளது. திண்டி வனத்துக்கு அருகிலுள்ள இறையானூர் காளிகோயிலில் பௌர்ணமி நாட்களில் இறையருள் கொண்டு ஆடிக் குறிசொல்லும் வழக்கம் உள்ளது. செங்கல்பட்டு மாவட்டத்தி லுள்ள சோத்துப் பாக்கத்தில் அமாவசை நாட்களில் குறி சொல் கின்றனர். இறையேறி ஆடுபவர் இரும்பு ஆணிகள் அடிக்கப் பட்ட ஒரு பலகையின் மீது ஏறி நின்று ஆவேசமாகக் குறிசொல் வதை மக்கள் வியப்புடன் பார்த்து அச்சத்தோடு கேட்பார்கள். குமரி மாவட்டம் ஒற்றைத் தென்னம் பிள்ளைத் தட்டு ஊரில் அவ்வாறு குறி சொல்லுபவர் ஆணியடிக்கப்பட்ட கட்டைச் செருப்பை அணிந்திருப்பதைக் காணலாம். மற்றும் பூசைப்புரை விளை, குண்டல், ஈசான்தெங்கு, பெத்த பெருமாள் குடியிருப்பு முதலிய ஊர்களிலும் இறையருள் பெற்றுக் குறிசொல்லும் பழக்கம் உள்ளது. சில சமயம் வீடுகளிலும் சிலர் தெய்வமேறி

ஆடுவதையும் குறி சொல்வதையும் காண முடிகிறது. வட ஆர்க்காடைச் சேர்ந்த சோளிங்கரிலுள்ள கருமாரியம்மன் கோயிலில் வேப்பிலையை ஆட்டியவாறு மந்திரம் சொல்லுதலும் குறி சொல்லுதலும் வழக்கமாக உள்ளன.

வேலூரிலுள்ள முனீஸ்வரன் கோயிலில் ஆண்களும் பெண்களும் சேர்ந்து ஆடுவர். ஆடு கோழிகளைப் பலியிட்டு மரத்தடியிலிருக்கும் தெய்வப்பீடங்களில் அவற்றின் குருதியை திருப்பாதிரிப்புதூர் நாகம்மன் திருவிழாவில் செடல் குத்திக் கொண்டு ஆடுவார்கள். ஆடு மாடு கோழி ஆகியவை நோயுற்றால் அவற்றுக்கும் செடல் குத்தி கோயிலைச் சுற்றிக் கொண்டு வருவர். மனிதர் நோயுற்றால் கோயிலுக்கு வேண்டுதல் செய்வர். நோய் தீர்ந்தபின் அவரைப் பச்சை ஓலைப் பாடையில் ஏற்றி கோயிலைச் சுற்றி இழுத்து வந்து செடல் குத்தி வேண்டுதலை நிறைவேற்றுவர்.

பேய் பிடித்தவர்களையும் கோயிலுக்குக் கொண்டு வந்து தீய ஆவிகளை ஓட்டும் வழக்கமும் பல இடங்களில் உள்ளது. தெய்வமேறி ஆடுபவர் பேய் பிடித்துள்ளவர்களைப் பிரம்பினால் அல்லது வேப்பிலையால் நோவும்படி அடித்து வதைப்பர். பின்னர் மந்திரங்களைக் கூறுவார். குமரி மாவட்டத்திலுள்ள ராசாவூரில் இருக்கும் கிருஸ்தவ ஆலயத்தில் இவ்வாறு பேயோட்டும் செயல் இன்றும் நடந்து வருகிறது. பேய் பிடித்தவர்கள் பலவாறு ஆடியும் பேசியும் திரிவர். அவர்களைப் பல வழிகளில் முயன்று குணமடையச் செய்கிறார்கள். நெல்லை மாவட்டம் ஏரலில் இருக்கும் சேர்மன் அருணாசலசாமி கோயிலிலும் பேய் விரட்டல், குறி சொல்லல், நோய் தீர்த்தல் ஆகியவை செய்யப்படுகிறது. அங்குள்ள மண்ணை எடுத்துச் சென்று புனிதமாகக் கருத குணமடைவதாகக் கருதுகின்றனர். அங்கு நடைபெறும் ஆஞ்சநேயர் ஆட்டம் ஆற்றலும் வேகமும் உடையது. ஆட்டம் இன்றியும் நோயைப் போக்கும் மந்திர வழியை மக்கள் செய்வதை வட ஆர்க்காடு மாவட்டத்திலுள்ள பெண்ணாத்தூரில் காணலாம். இதற்குப் 'பச்சைபோடுதல்' என்று பெயர் சொல்கிறார்கள். நண்பகலில் ஓர் அலரிச்செடி அல்லது வேப்பமரத்தடியில் நின்று எலுமிச்சைப் பழத்தை நசுக்கித் துண்டுபடுத்தி நாலாபக்கமும் வீசி எறிவர். இதனால் நோய் தீர்ந்து விடுமென நம்பி இன்று செய்கின்றனர். இவை அனைத்தும் ஒரு மந்திரவாதியின் கருத்துக்கும் வழிமுறைக்கும் ஏற்றவாறே செய்யப்பெறும்.

கோவை மாவட்டத்தில் கருப்புராயன், மாரியம்மன், செல்லாண்டியம்மன், காட்டேரி முதலிய தெய்வங்களை வணங்கி வருகிறார்கள் அவிநாசியின் பக்கத்திலுள்ள அரசூர் கருப்புராயன் கோயில் மிகவும் புகழ் வாய்ந்தது. இங்கு நடைபெறும் விழாவும் ஆடலும் தனிச் சிறப்புடையன. கருப்புராயன் கோயிலிலிருந்து பலர் ஆடிக்கொண்டு சற்று தூரத்திலிருக்கும் கந்தசாமி கோயிலுக்கு வருவர் அங்கு பெண்கள் அனுமதிக்கப் படுவதில்லை செண்டை மேளம் அடிக்கப்படும். ஆடிக்கொண் டிருப்பவர். கந்தசாமிக்குக் கோபமூட்டும் முறையில் பல வற்றைச் சொல்லி ஆடிக்கொண்டிருப்பார், பத்திலிருந்து இருபது பேர் வரை கையில் வாளை வைத்து ஆடுவது பார்க்க நன்றாக இருக்கும். தங்களைத் தாங்களே வாளினால் வெட்டிக் கொள்வர். தனித் தனியாகப் பலதைக் குறையாகக் கூறிக் கந்தசாமிக்குச் சினம் வரச் செய்து எழுப்புவர் பின் அனைவரும் மண்டியிட்டு உட்காருவர். ஒருவர் சாட்டையால் ஒவ்வருவரையும் அடிப்பார். அடிபட்டவர் எழுந்து செல்வார். சாட்டையடி முடிந்ததும் பூசை செய்பவருக்கு அருள் வந்து ஆடுவார். பல குறிகளைக் கூறுவார். இவ்வாறு அவ்வூரில் சிவராத்திரி விழாவில் ஆட்டம் நடக்கும்.

கருப்புசாமிக்கு மிருகங்களைப் பலியாகக் கொடுப்பார்கள் மக்களுக்குப் பல தானியங்களின் கூட்டுச் சேர்க்கையான 'பள்ளையம்' என்ற பொருளைப் 'பிரசாகமாகக்' கொடுப்பார் கள். விழா முடியும் போது பக்கத்திலிருக்கும் நீர்க் குண்டத்தி லிருந்து தீர்த்தம் (புனித நீர்) கொடுத்து அனுப்புவர். நீர்க் குண்டம் கற்களால் மூடப்பட்டிருக்கும். ஊரினர் அனைவரும் தங்களுடைய பகை, வெறுப்புகளை மறந்து ஒற்றுமையாக அக்கோயிலுக்கு விழாவெடுப்பது தனிச் சிறப்பாகும். அவ் வூருடன் இணைந்து தொடர்பாக விளங்கும் அனைவரும் தங்களுக்குப் பிறக்கும் முதல் குழந்தைக்குக் கருப்புசாமி அல்லது கருப்பாத்தான் என்று பெயரிடுவது இன்றுவரைப் பழக்கத்தில் இருக்கிறது.

நரசிம்மபுரம் மாரியம்மன் கோயிலில் நோன்பு சாட்டுதல் விழா எட்டு நாட்கள் மிகவும் சிறப்பாக நடைபெறும் ஆண்கள் ஆளுக்கு ஒரு கலசம் கொண்டு வருவர். அதில் வேப்பயிலை இருக்கும் பெண்கள் தீச்சட்டியுடன் வந்து கோயிலில் தீபமேற்றுவர். மாவிளக்கும் வீட்டிலிருந்து கொண்டு வருவர். விழாவின் போது அனைவரும் மஞ்சள் நீராடி பலவித கேளிக்கை

விளையாட்டில் ஈடுபடுவர். சந்திலாபுரம் செல்லாண்டியம்மன் விழாவும் இவ்விதமே கலைச் சிறப்புடன் நடக்கும். தெய்வங்களின் பெயர்கள் ஊருக்கு ஊர் மாற்றமுடன் காணப்பட்டாலும் நடைமுறை வழக்கங்கள் ஒன்று படுவதினால் அத்தெய்வங்கள் ஒரே அடிப்படைத் தோற்றங்களாக இருக்குமோ என்ற சிந்தனை எழுகின்றது

வட ஆர்க்காடு மாவட்டத்தைச் சேர்ந்த இரகுநாத சமுத்திரம் உரிலுள்ள மாரியம்மன் கோயிலில் ஆடிமாதம் நடைபெறும் விழாவைக் கூழ்வார்த்தல் விழா என்று சிறப்பாகக் கூறுவார்கள். இறையருள் கூடியாடுபவர் மூன்று நாட்களாகக் காப்புக் கட்டி நோன்பு இருப்பர். மாரி அம்மன் கரகம், பொன்னியம்மன் கரகம், புறடையார் கரகம் என்று மூன்று கரகம் என்று மூன்று கரகங்களை எடுத்து ஊர்ச் சுற்றி வருவார்கள். தலைத் தெய்வம், புறத்தெய்வம், எல்லைத் தெய்வம் என மூன்று வகையில் பூசனைகள் நடைபெறும். தெய்வங்களின் தகுதியும் பணியும் வேறுவேறாகக் கருதப் படுகிறது. சல்லடை விளக்கெடுத்து வழிபடும் வழக்கம் அங்கு உள்ளது. உருண்டவாறு பலர் 'அங்கப் பிராணம்' (தெருச் சுற்றல்) செய்வதைப் பார்க்கலாம். உடுக்கை, பம்பை முதலிய பலவிதக் கருவிகளை அடித்து முழக்கி இறையருளை ஒரு மனிதன் மேல் வரச் செய்வதை 'வன்னித்தல்' என்று கூறுகிறார்கள்

நண்பகலில் கூழ வார்த்து அனைவருக்கும் கொடுப்பார்கள். முன்னிரவில் கரக ஊர்வலமும் அதன் பின்னர் பாரதக்கதை தொடர்பான கூத்தும் நடைபெற்று விழா இனிது முடிவுறும்.

இராமநாதபுரம் மாவட்டத்தின் வட பகுதியில் கொப்புடையம்மன் வழிபாடு மிகச் சிறப்பாகவும் பெரும் நம்பிக்கையுடனும் நடக்கின்றது. கோனாபட்டில் நடைபெறும் விழா மிகவும் முக்கியமானது. ஆத்தங்குடி அந்தரநாச்சியம்மன், நெடுமரம் மலையரசி, குளத்துப்பட்டி பொன்னழகி, பலாவான்குடி செங்கமலத்தம்மன், வைரவன் பட்டி பூமலைச்சியம்மன், வேலங்குடி பெரிய நாயகியம்மன், பள்ளத்தூர் வயல் நாச்சியம்மன் ஆகிய பெண் தெய்வங்கள் முக்கியமானவை அக்காள் தங்கையராக எழுவர் இருந்து அவர்கள் இறந்து ஏழு பெட்டிகளில் ஆற்றோடு மிதந்து வந்ததாகக் கதை கூறுவர். பெட்டிகள் வைத்த இடங்கள் ஏழு சமாதி மேடுகளாக இருப்பதைக் காணலாம்.

இவைதவிர பள்ளத்தூர் சோலையாண்டவர், கல்லூர்ராய வரம் ஐயனார், வேலங்குடி கருப்பர், வலையப்படி செங்கிடாக் கருப்பபன், கீழ்காய் (ெ) நல்லிக் கோட்டை பெத்த பெருமாள் போன்ற ஆண் தெய்வங்களும் வணங்கப் பெறுகிறார்கள்.

அங்குள்ள அம்மன் கோயில்களில் ஏழு அல்லது எட்டு நாட்கள் கூத்து வழிபாட்டுடன் தொடர்புள்ள நிலையில் நடத்தப்படுகிறது. இப்பொழுது மூன்று நாட்களாகி அதைக் குறைத்து விட்டதாகக் கூறப்படுகிறது. ஆத்தங்குடி, கல்லூர் ராயவரம் போன்ற ஊர் விழாக்களில் மஞ்சு விரட்டு மிகவும் சிறப்பாக நடைபெறுகிறது. சுமார் ஆயிரம் காளைகள் வரை யிலும் மஞ்சு விரட்டில் கலந்து கொள்வதாக அறிய முடிகிறது. அம்மன் பொட்டலிலிருந்து சாமியழைத்து மஞ்சு விரட்டுப் பொட்டல் வரைச் சுமார் ஒரு கல் தொலைவு வருவது நல்ல விழாக் காட்சியாக அமையும். கோட்டையூர், கொத்தடி முதலிய இடங்களில் பால்குடம் எடுத்துத் தெய்வத்தை வழிபடுவர் இதை 'மதுயெடுத்தல்' என்று அழைக்கிறார்கள். வேலங்குடி கருப்பர் கோயிலுக்கு ஏழுஊர்களிலிருந்து ஊருக்கு மூன்று மண்பானைகள் வீதம் இருபத்தொரு பானைகளைத் தலையில் எடுத்துவரும் வழக்கம் உள்ளது. கருப்பர் என்ற பெயருடன் பல காவல் தெய்வங்கள் உள்ளனர். அவர்கள் அரிவாளைக் கையிலெடுத்து வெறியுடன் ஆடுவது அனைவரையும் அச்சமுற்று ஒதுங்கச் செய்யும்.

இராமநாதபுரம் மாவட்டத்தின் தென்பகுதியிலிருக்கும் சிவகாசியில் காச்சக்கார அம்மன் கோயிலிருக்கிறது. இந்த அம்மன் காய்ச்சல் நோய் தீர்க்கும் ஆற்றலுடையவள் என்று மக்கள் நம்புகின்றனர். வெள்ளிக்கிழமைகளில் அங்கு சுண்ட வற்றல் ரசம் வைத்து வழிபடுவது வழக்கத்தில் உள்ளது. அதற்குக் காரணமான ஒரு வரலாறும் கூறப்படுகிறது.

சுமார் அறுநூறு ஆண்டுகளுக்கு முன்னர் கன்னியாகுமரிப் பகுதியிலிருந்து பொதிமாட்டின் மூலம் வாணிபம் செய்வதற் காகச் சிவகாசிக்கு மக்கள் வருவது வழக்கம். அவ்வாறு வாணிபப் பொருட்டாக வந்த ஒருவருக்குக் காய்ச்சல் நோய் (சுரம்) கண்டது. மனைவி மிகவும் வருந்திப் பகல் முழுவதும் கண்ணீருடன் பத்திரகாளி அம்மனின் அருளை வேண்டி அழுதாள் இரவில் அம்மன் அவளுடைய கனவில் தோன்றிக் காலையில் பொங்கலுடன் சுண்டவற்றல் ரசம் கலந்து உண்வூட்டி நோயக லும் வழிகாட்டி மறைந்தாள். அந்தப் பெண் அவ்வாறு செய்ய வும் 'கணவனுடைய காய்ச்சல் காற்றாகப் பறந்துவிட்டதாம்,

அதை வியப்புடன் அனைவருக்கும் கூறி அந்த இடத்தில் பத்திரகாளி அம்மனுக்கு ஒரு கோயில் கட்டி வணங்கியுள்ளனர். காய்ச்சல் போக்கிய அம்மனைக் காய்ச்சக்கார அம்மன் என்று அழைக்கிறார்கள். அது இன்று மக்களுடைய வாயில் காச்சக்கார அம்மனாக நிலைத்துள்ளது.

அக்கோயிலில் இன்றும் சிவகாசி மக்களால் விழாக்கள் மிகச் சிறப்பாக நடைபெறுகின்றன. நோய்தீர வேண்டுகின்றனர். ஆடலும் பாடலும் நடத்தி விழாவைக் கொண்டாடுகின்றனர். கதையில் வரும் வரலாற்றை விளக்கும் முறையில் முன்பு தெய்வ மேறிய ஆடல் நடை பெற்றதாகவும் கூறினார்கள். வியப்பான செய்திகள் நாட்டுப்புறத் தெய்வங்களைச் சுற்றிப் படர்ந் துள்ளமைக்கு இது ஒரு நல்ல சான்றாக உள்ளது.

பலவிதமான நம்பிக்கைகளுடன் இவ்வித விழாக்களும் ஆடல்களும் நடக்கின்றன. தெய்வக் கதைகளுக்கும் அவர்களுக்கு மக்கள் விதித்திருக்கும் ஆற்றலுக்கும் தக்கவாறு தெய்வமேறிய வர்களில் ஆடல் நடக்கிறது. அதையே மக்கள் ஏற்றுக் கொள் கின்றனர். மீறினால் கலை குலைந்து கொலையில் போய் முடிந் தாலும் வியப்படைய வேண்டியதில்லை.

மதுரை மாவட்டத்தில் கண்ணாத்தாள் சிறந்த தெய்வமாக வணங்கப்படுகிறது. அது கண்ணகியின் மாற்றுப் பெயராக இருக்கலாம். திருச்சி தஞ்சாவூர் மாவட்டத் தெய்வங்கள் வடக்கு மாவட்டங்களில் விளக்கப்பட்டுள்ள தெய்வங்களாகவே பெரும் பாலும் காணப்படுகின்றன. வணக்கமுறையும் அவ்வாறு அமை கின்றது. ஐயனார், கருப்பர். அங்கு மிகுதியாக உள்ளனர். புதுக் கோட்டையிலும் பெரும்பாலும் அப்படியே உள்ளது. திருச்சி மாவட்டத்தில் கருமாரியம்மன் விழா மிகவும் சிறப்புடையது. தெய்வமேறியோர் தலையிலிருந்து கால்வரையும் கொக்கிகளை உடலில் கோர்த்து அதில் ஒரு கம்பை இணைத்து வருவது வியப் பாக இருக்கும். தன்னை வருத்தி வழிபடுவதே நோக்கம். காவேரிக் கரையோரமாகப் பலருக்குக் குடும்பத் தெய்வக் கோயில்கள் இருக்கின்றன. இது முன்னோர் வழிபாட்டின் அடிப்படையில் தோன்றியிருக்க வேண்டும். இது போன்று தஞ்சை மாவட்டத்திலும் வழிபாடுகள் நடைபெறுகின்றன. இராமநாதபுரம் மாவட்ட வணக்கமுறைக் கலப்பு காணப்படு கிறது. உடலை வருத்தி நோன்பிருந்து வழிபட்டால்தான் இறை யருளைப் பெறமுடியும் என்று மக்கள் நம்பியுள்ளனர்.

நெல்லை, குமரி மாவட்டங்களில் நாட்டுப்புறத் தெய்வங்கள் பெரும்பாலும் ஒன்றாகவே உள்ளன. தெய்வக் கதைகளும் இரண்டு மாவட்டங்களிலும் இணைந்து நடந்ததாகவே உள்ளன. தனித்தனி மாவட்ட இயல்புடைய தெய்வங்களும் இருக்கின்றன. நெருக்கமான சமுதாயத் தொடர்பாலும் பக்கத்திலிருக்கும் நெருக்கத்தாலும் இவ்வாறு. இரண்டு மாவட்டங்களிலும் நாட்டுப்புற இயல்புகள் பெரும்பாலும் ஒன்றாகவே அமைந்திருக்கின்றன.

சுடலைமாடன் ஆண் தெய்வங்களில் மிகவும் முக்கியமானவனாகக் கருதப்படுகிறான். கொடூரமான இயல்புகளும் குரூரமான இயல்புகளுமுடைய இந்தத் தெய்வத்தின் செயல்களைக் கதைப் பாடல்களில் கேட்டு அஞ்சிப் பணிவர். அனைத்து ஊர்களிலும் அவனுக்குக் கோயில்கள் உண்டு. இந்தத் தெய்வமேறி ஆடுவோர் உடலை வளைத்து முறித்து ஆடுவது அஞ்சும் தரமாக இருக்கும். அரையில் சல்லடமும், தலையில் பல வண்ணத் தொப்பியும், கையில் அரிவாளும் கொண்டு ஆடுவர். ஈட்டி போன்ற அமைப்புடன் ஐந்து மணிகள் தொங்கும். ஐந்து மணி வல்லயமும், ஒரு பருத்த தடியும் எடுத்து ஆடுவதையும் காணலாம். தீப்பந்தம் ஒன்றை கையில் பிடித்தோ, அரையில் செருகியோ ஆடுவர். சிலர் பல பந்தங்களைப் பிடித்து ஆடுவதும் உண்டு. ஆயுதங்களைக் கொண்டு தலையில் அடிப்பதும் உடம்பில் வெட்டுவதும் அவர்களுடைய ஆடலின் ஊடே நடைபெறும் செயல்கள். பொங்கல் பானையில் கையிடுவதும் குளிப்பதும் வியப்பான நிகழ்ச்சிகள். ஆடிக்கொண்டே சிலர் சுடலைக்குச் சென்று எலும்புகளை எடுத்து வருவர். ஆடிக்கொண்டே ஆடு கோழிகளைப் பலி ஏற்கும் காட்சிகள் காண விரும்பாதவை ஆட்டு ஈரலைப் பிடுங்கி வாழைப் பழத்துடன் கடித்துத் தின்னும் சுடலைமாடர்களையும் பார்க்கலாம்.

அங்கியணிந்து கொண்டு ஆடும் சுடலைமாடனின் கதை சிறிது வேறுபடுகிறது. ஆட்டத்தில் வெறி குறைவாக உள்ளது. இடம் மாற்றத்தால் இந்த வேறுபாடா அல்லது அது வேறு தெய்வமா என்று தெரியவில்லை. பெயர் ஒன்றாகவே உள்ளது. கதையில் கூறியிருப்பதற்குத் தக்க ஆடலாக அமைகிறது. நெல்லையை அடுத்துள்ள சீவலப்பேரி சுடலைமாடனைச் சிறப்பாகக் கருதி வழிபடுகின்றனர். தெய்வம் ஒன்றானால் ஏன் இந்தத் தனிச் சிறப்பு என்பது சிந்தனைக்கு உரியது.

மாசானசாமி சுடலைமாடனைப் போன்றே ஆடும் தெய்வம். சுடுகாட்டைக் காக்கும் பொறுப்புடையதாக நம்புவர். ஆகையினால் அதன் பெயர் 'மயானசாமி' என்றுதான் இருந்திருக்க வேண்டும். சுடலைமாடனுக்கும் இந்தத் தெய்வத்துக்கும் இடையிலுள்ள அணுக்கத் தொடர்பால் அவனுடைய அண்ணன் என்று உறவுமுறை மக்களால் கற்பிக்கப்பட்டுள்ளது. அங்கி, தொப்பி, அரிவாள் பருந்தடி முதலியன இத்தெய்வத்துக்கு உண்டு- பலர் இந்தக் கோயிலுக்குச் செல்லமாட்டார்கள். இதே போன்று சந்திமாடன், பலமாடன், வண்ணாரமாடன், சங்கிலிமாடன் முதலிய தெய்வங்களையும் வணங்குகிறார்கள். அனைவரும் தனித்தனிக் கதைகளுடையவர். வேறுவேறு ஆடல் முறை கொண்டு தெய்வமேறி வெளிப்படுவர்.

கபாலக்காரன் தீச்சட்டியைக் கையில் ஏந்தியவாறு ஆடும் தெய்வம், கொதிக்கும் எண்ணெயில் கையிட்டுப் பலகாரங்களை எடுக்கும் ஆற்றலுடன் ஆடுவதைக் காணலாம். சங்கிலிப் பூதம் சூடான சங்கிலியைத் தோளில் தூக்கிப்போட்டு ஆடும் தெய்வம். சங்கிலி மாடனும் இதுவும் ஒன்றாக இருக்கலாம். வெள்ளைக் காரன் சாமி சாராயத்தைக் குடித்து புகைபிடித்து வெடியைக் கையில் தூக்கி ஆங்கிலத்தில் பேசி ஆடும் தெய்வம். இந்தக் கோயில் குமரியில் பூவியூர், பூசைப்புரைவிளை ஆகிய ஊர்களில் இருக்கிறது. இந்தத் தெய்வம் ஒரு வரலாற்று நாயகன் என்பதை அனைவரும் அறிவர். வில்லுப்பாட்டும் அதையே உணர்த்தும். இருப்பினும் மக்கள் வழிபடுகின்றனர். அதே போன்று வாழ்ந்து கொல்லப்பட்ட பிச்சைகாலனையும் சேர்வைக்காரனையும் தெய்வமாக வழிபடுகின்றனர். பிச்சைகாலன் ஆட்டம் மிகுந்த கோபத்தோற்றத்துடன் நடக்கும். மக்கள் அவனை நெருங்க அஞ்சி ஒதுங்கி நிற்பர். கோயில் சூரன்குடியிலிருக்கிறது. அவன் வாழ்ந்த ஊர் அதுவே. சேர்வைக்காரன் சாத்தாங்குளம் பகுதியைச் சேர்ந்தவன். கோயில் குமரியை அடுத்த குண்டல், எட்டுக்கூட்டன் தேரிவிளை ஆகிய ஊர்களில் உள்ளது. ஆட்டம் துடிப்பாக நடக்கும். குஞ்சன்விளையில் மிக அண்மைக் காலத்தில் திருட்டுத் தொழில் நடத்திய கொடியவனான விருது (மக்கள் அழைக்கும் பெயர்)கொல்லப்பட்டு இன்று தெய்வமாக வணங்கப் படுகிறான். வில்லுப்பாட்டும் சாமி ஆட்டமும் சிறப்பாய் நடக்கிறது. கொடுமையாகக் கொல்லப் பட்டவர்களைக் கோயில் வைத்து நாட்டுப்புற மக்கள் கும்பிட்டு அருள் வேண்டியிருப்பதை இந்தத் தெய்வங்களின் வணக்கம் வாயிலாக அறிந்து கொள்ளலாம்.

திருநெல்வேலி மாவட்டத்தைச் சேர்ந்த நாங்குநேரியில் பக்கத்திலிருக்கும் பரப்பாடி ஊரிலுள்ள தென்கரை மகாராசா கோயில், கதைக்கும் ஆடலுக்கும் சிறப்புடையது

ஆற்றில் தண்ணீர் நிறைந்து வருகிறது. ஒரு பெண் வடகரையிலிருந்து தென்கரையில் நிற்கும் தன் பசுவைப் பிடிக்க வருகிறாள். ஆற்றைக் கடக்க முடியாத இயலாமையால் வருந்தும்போது ஒருவர் தென்கரையில் குதிரைமீது வருகிறார். அவரைக் கூவியழைக்கிறாள்.

'ஆற்றுக்குத் தென்புறம் நிற்கும் ராசாவே
என்பசுவை வடபுறம் துரத்தி விடுவாய்'

என்று அவள் கூறியதும் அவர் பசுவை அவளிடம் சேர்த்து விடுகிறார். பின்னர் அங்கு வந்தது தெய்வமே என்று நம்பி அனைவரிடமும் வியப்புடன் சொல்கிறாள். அன்று முதல் அந்தக் கோயிலுக்குத் தென்கரை மகாராசா கோயில் என்ற பெயர் ஏற்படுகிறது. பின் ஒருநாள் அந்தக் கோயிலில் நான்கு சகோதரர்கள் திருடுகிறார்கள். அது ஊராருக்குத் தெய்வ அருளால் அறிவிக்கப்படுகிறது. உடனே ஊர் மக்கள் திரண்டு அவர்களைக் கையுங்களவுமாகப் பிடிக்கின்றனர். ஊர்த் தலைவன் திருடர்களுக்குத் தண்டனையாக,

'கள்ளரின் கண்ணைக் கட்டி மறைத்து
ஓடவிட்டு வீசு வெட்டு'

என்று ஆணையிடுகிறான். அவ்விதமே நால்வரும் ஊரின் நாலா பகுதிகளில் வெட்டப்படுகின்றனர். பணம் தேடி வருவோம் என்று சொல்லிச் சென்ற அண்ணன்மாரைத் தேடி அவர்களுடைய ஒரே தங்கை உணவுடன் வருகிறாள். இங்கே நால்வரும் வெட்டுண்டு கிடப்பதைக் கண்டதும் அழுது புலம்பி ஊருக்குச் சாபம் கொடுக்கிறாள்,

'கொன்றொழித்த வூரிலே
கூவுவதுக்குக் கோழியும்
குலைப்பதுக்கு நாயும்
இல்லாமல் போகுமே'

அவளிட்ட சாபம் பலித்ததோ இல்லையோ அறியமுடியாது. கோயிலிருக்கும் சித்தூர் என்ற சிற்றூர் அழிவுற்றிருப்பதை இன்றும் தடமழியாது காணமுடிகிறது. திருடர்கள்

கோயிலுக்குள் செல்ல சுவரை இடித்துள்ளனர். அது திரும்ப அடைக்கப் பெற்றிருப்பதையும் காணலாம். நால்வரையும் வெட்டிய இடங்களில் பீடமும் பூசனையும் உள்ளன. இப்பொழுது மக்கள் பரப்பாடி ஊரில்தான் வாழ்கிறார்கள். இந்தக் கதையை வில்லுப்பாட்டாக அந்தக் கோயிலில் இன்றும் பாடுகிறார்கள். உடனே நான்கு ஆண்களும் ஒரு பெண்ணும் தெய்வமேறி ஆடுவார்கள். ஆண்கள் ஆவேசமாக ஆடுவர். திருடர்களுக்குரிய ஆயுதங்களை வைத்து ஆடுவர். கண்ணைக் கட்டிய நிலையில் திசைதெரியாது தடுமாறுவர். அவர்கள் வெட்டப்படும் பகுதியை வில்லில் பாடும்போது ஒவ்வொருவராகக் கீழே விழுந்து விடுவர். சிறிது நேரத்தில் பற்றிய தெய்வப்பிடி நீங்கிய நிலையில் எழுந்து செல்வர் பெண் தெய்வம் பின்னரும் அவலத் தன்மையும் அழும் முகமும் காட்டி ஆடுவதைக் காணலாம். சாபம் கொடுப்பதைப் பாடும் பொழுது அவள் வேகமாகச் சாடுவது அச்சமடையச் செய்யும் கடுமைத் தோற்றமாக இருக்கும். பின் அவளும் தெய்வம் நீங்கப் பெறுவாள். அதை ‘சாமி மலையேறுதல்’ என்று கூறுவர்.

அந்தக் கோயிலுக்கு அருகில் வீரமணி என்ற தெய்வத்துக்கு வணக்கம் செலுத்தப்படுகிறது. அது மிகவும் உணர்ச்சியுடன் மனிதனை ஆட்டுகிறது. குறித்தும் கொதித்தும் ஆடுவர். அங்கு பேய் விரட்டல், ‘கணக்குச் சொல்லல்’ (குறிசொல்லல்) அனைத்தும் நடக்கின்றன. ஆடுவோர் ஒரு பிரம்பை எடுத்துத் தன்னை அடித்தும் ஓங்கி வீசியும் ஆடுவதைக் காணலாம். இந்தத் தெய்வ ஆடலுக்குக் கொட்டு மேளம் மிகப் பெரியதாக முழக்கப் பட வேண்டும்.

வில்லுப் பாட்டில் விளக்கப்படும் கதைக்குத் தக்கவாறு தெய்வமேறியோரின் ஆடல் நடிப்பாகவும் துடிப்பாகவும் அமைவதை நோக்க வேண்டும். சொல்லுங் குரலும் வில்லுப் பாட்டிலிருக்கின்றன. நடிப்பும் உணர்வும் தெய்வமேறியோரிடம் உள்ளன. இரண்டும் இணைவது கூத்துக்கலையாகும்.

தெரிசனம் கோப்பிலுள்ள ஔவையாரம்மன் சங்கப் புலவரான ஔவையாரைக் குறிப்பிடும் வணக்கமாக உள்ளது. பூவியூரிலுள்ள கட்டையேறும் பெருமாளும் இடலாக்குடியிலுள்ள வண்டிமலையன் வண்டிமலைச்சியம்மனும் ஆடல் பாடலுடன் வணங்கப்படும் தெய்வங்கள். பூவியூரில் ஒருவர் தெய்வமேறி

ஆடுவது வேகமாகவும் துடிப்பாகவும் இருக்கும் இடலாக்குடிக் கோயிலில் பலர் மாலையிட்டுக் கூடியாடுவர். அதில் ஒரு ஒழுங்கு இருப்பதைக் காணலாம். அவர்கள் வரிசையாக நின்று சில சமயம் ஆடுவது தேவராட்டத்தை நினைவு படுத்தும். மேள தாளத்துக்கு ஒத்தவாறு அவர்கள் ஆடுவர். குமரி மாவட்டத்தி லுள்ள சாத்தான் கோயில்களில் நாகப்பாம்பின் உருவம் வணங்கப்படுகிறது. ஆனால் வில்லுப்பாட்டில் ஐயன்கதையைப் பாடுகிறார்கள். ஐயனாரும் சாத்தானும் கதை வரலாற்றில் ஒன்றாகக் காணப்பட்டாலும் உருவத்திலும் வழிபாட்டு முறை களிலும் வேறாகத் தோன்றுகின்றனர்.

ஐவர் ராசாக்கள் குமரியை அடுத்த பொத்தையடியில் (பரமார்த்தலிங்கபுரம்) தெய்வமாக வழிபடப் படுகின்றனர். உண்மையில் இவர்கள் வள்ளியூரை ஆண்ட குலசேகரப் பாண்டியனும் அவனுடைய தம்பியரும் ஆவர். வில்லுப்பாட்டு விளக்குவது போன்று ஆட்டம் நடக்கும். அவர்களுடைய தூதனான் ஓட்டக்காரன் அங்கும் இங்கும் ஓடிஓடி ஆடுவதைக் காணலாம். வரலாற்றிலிருப்பதை நடித்துக் காட்டும் ஆடலா கவே இது அமைகிறது. அதைத் தெய்வ அருள் இறங்கி நடப் பதாக நாட்டுப்புற மக்கள் நம்பி ஏற்றுக் கொள்கின்றனர்.

சேத்திரபாலன், மன்னன் கருங்காலி போன்ற தெய்வங்களை பூதங்கள் என்றும் வாதைகள் என்றும் மக்கள் கூறி அச்சவழிபாடு செய்கிறார்கள். ஏரலில் இருக்கும் சேர்மன் சாமி, சுவாமி தோப் பிலிருக்கும் வைகுண்ட சாமி ஆகியோர் மக்களுக்காக வருந்தி பாடுபட்ட பெரியார்கள். இன்று அவர்கள் அடக்கமாகி இருக்கும் இடங்கள் புகழ் பெற்ற ஆலயங்களாகி விட்டன. ஆடலும் பாடலும் நடைபெறுகின்றன. தேரும் திருவிழாவும் சிறப்பாக அமைந்துள்ளன. அந்த இடங்களில் அருளும் ஒளியும் நிறைந்திருப் பதாக ஆயிரமாயிரம் ம்க்கள் நம்பிக் கூடுகின்றனர். அவர் களுடைய வேண்டுதல் நிறைவேறுவதாகக் கூறுகின்றனர்.

செட்டியா பத்திலுள்ள தெய்வமும் குரங்கணி அம்மனும் அருளாற்றலுடைய தெய்வங்கள் என்று நெல்லை, குமரி மாவட்ட மக்களில் பலர் நம்பிக்கையுடன் அங்கே செல்கின்றனர். கலைகள் பல நடத்திக்களிக்கின்றனர். தோட்டுக்காரி, குமரப் பராசா கதை கன்னியாகுமரியின் பக்கத்தில் நடந்த ஒரு நிறை வேறாத காதல் நிகழ்ச்சி. அவர்கள் தீயில் குதித்து எரிந்து சாம் பலான இடம் இன்றும் நினைவாக இருக்கிறது. ஆனால் அவர்கள் இருவரும் மக்கள் மனத்தில் தெய்வமாக நிலைத்து விட்டனர்

சொத்தவிளை ஊர் தோட்டக்காரி அம்மன் கோயில் புகழுடையது. தெய்வமேறி ஆடுவது கதைப் போக்கை ஒட்டியே இருக்கும். காதல் ஈடேறாத இரு தெய்வங்களும் ஆடும்போது ஒருவரை ஒருவர் தொடுவதே இல்லை. துரத்துவதும் ஓடுவதுமாக இருக்கும். வணங்கும் இடத்தில் மக்கள் அவ்வாறு ஆடுவதை ஒரு நாடக மேடைக் காட்சியாகக் கருதுவதில்லை,

இசக்கியம்மன் மிக முக்கியமான பெண் தெய்வம். இயக்க சக்தியாகிய உமாதேவியின் கோர உருவாகக் காளியைப் படைத்தது போன்று 'இயக்கி என்றே சரியாக அழைக்கப்பட வேண்டிய இசக்கியை மனிதன் உருவாக்கினானா என்பதை அறிவது நலம். காளிக்கும் இசக்கிக்கும் நிரம்ப வேறுபாடுகள் காணப்படுகின்றன. கதை மிக மிகக் குரூரமாக உள்ளது. கணவனைக் கொன்று ஊரையழித்துக் கொடுமை செய்த கடுமனத்தளாக இசக்கி படைக்கப் பட்டுள்ளார். நெல்லை குமரி மாவட்டங்களில் ஆயிரக்கணக்கான இசக்கி கோயில்கள் இருக்கின்றன. ஒவ்வொரு கோயிலிலும் நூற்றுக் கணக்கான இசக்கி உருவங்கள் மண்ணால் செய்து அடுக்கப்பட்டுள்ளன. ஆண்களும் பெண்களும் தெய்வமேறி ஆடுவர். மிக்க வெறியுடைய ஆட்டமாகக் காணப்படும். மக்களிடம் இரக்க மின்றி பேசி அவர்களை அச்சுறுத்துவதைக் காணலாம். மிருகப் பலி கொடுத்து இந்தத் தெய்வத்தை அமைதிப்படுத்த வேண்டும் என்று மக்கள் கருதுவர். சூலமேந்தி நாக்கை நீட்டியபடி ஓலமிட்டு ஆடுவதை யாராலும் அச்சமின்றி அருகில் நின்று காணமுடியாது. நெற்றியில் சிவந்த மஞ்சணை பூசி அரையில் சிவந்த ஆடை கட்டி கழுத்தில் சிவந்த மாலை அணிந்து ஆடுவது வழக்கம்.

பழவூர், முப்பந்தல், கள்ளிக்காடு (பெருமாள்புரம்), சுக்குப் பாறை, ஓடக்கரை (தெங்கம்புதூர்), நடுக்காடு (நாகர் கோவில்) பொன்னார்மடை, நெருஞ்சிவிளை ஆகிய இடங்களிலுள்ள இசக்கி கோயில்கள் சிறப்புமிக்கவை. 'புறஞ்சிறை மூதூர்ப் பூங்கண் இயக்கி' (15, 116) என்று சிலப்பதிகாரம் குறிப்பிடும் இயக்கிக்கும் குண்டலகேசி குறிப்பிடும் பழையனூர் நீலிக்கும் தெய்வமாகியிருக்கும் தென்மாவட்ட இசக்கிக்குமுள்ள தொடர்புகளைச் சிந்திக்கலாம். குமரி மாவட்டத்திலுள்ள பொட்டல் ஊரிலுள்ள இசக்கியை நீலி என்றும் அவளுடைய தம்பியை நீலன் என்றும் கூறுவர். இசக்கியம்மன் வில்லுப்பாட்டில் அவள் கணவனால் கொல்லப்பட்டு பின் பேயுருவில் பெண்ணாகிக்

கொடுஞ்செயல்களைச் செய்ததாகக் கூறப்பட்டுள்ளது. பெண்களில் பலர் இசக்கியைத் தங்களின் அருந்துணைத் தெய்வமாகக் கருதி வேண்டிக் கொள்வதைப் பார்க்கலாம்.

பத்திரகாளியம்மன் கோயில்கள் பெரும்பாலாக மணல் நிறைந்த கடற்கரைப் பகுதியில் வரிசையாக இருப்பதைக் காண முடிகிறது. அந்த இடங்கள் முன்பு பாலை நிலம் போன்று மரங்களின்றி இருந்தவைகளாக கூறுகின்றனர். மாத்திரமன்றி சில பத்திரகாளியம்மன் கோயில்களைச் சுற்றிக் காரை, கள்ளி, எசலை முதலிய முட்செடிகளே நிறைந்துள்ளன. இத்தெய்வம் பாலைக் கடவுளாகிய கொற்றவையை நினைவுபடுத்துவதாகவே உள்ளது. கோயில்கள் ஈசன் தெங்கு, ஈத்தாமொழி, பள்ளம், உசரவிளை, மணக்குடி, ஒவரி ஆகிய இடங்களில் இருக்கின்றன. சிங்க வாகனத்தில் பத்திரகாளி தெருவலம் வர வாணவேடிக்கைகளுடன் விழா சிறப்புற பல கோயில்களில் நடக்கிறது. பெண்களே தெய்வமேறி ஆடுகின்றனர். ஆண்கள் ஆடுவது அரிது. திரிசூலம் ஏந்தி ஆடுவர்.

மாரியம்மன் ஆட்டம் ஊருக்கு ஊர் நடக்கிறது. பங்குனி கார்த்திகை ஆகிய இருமாதங்களிலும் விழா நடக்கும்போது ஆடுவர். மாரியம்மன் ஆடுவோர் கொதித்து வழியும் மஞ்சள் தண்ணீரில் குளிப்பர். கும்பத்தைத் தலையிலெடுத்து ஆடுவர். ஒரு பிரம்பு, திரிசூலம் ஆகியவை ஆயுதங்கள். சிலர் சிவப்புத் துணியை அரையில் கட்டியிருப்பர். ஊர் சுற்றி வருவர். வேப்பங் குழையால் வீசுவர். மக்கள் அவர்களுடைய கால்களில் மஞ்சள் பூசி நிறைகுடம் தண்ணீரை ஊற்றுவர். மழைக் குறி கூறுவதும் உண்டு. தெய்வம் குளித்து மிஞ்சிய மஞ்சள் நீரைப் புனிதமாகக் கருதிய மக்கள் அதைக் குழந்தைகளின் தலையில் தெளிப்பர்.

கொட்டாரம் ஊரில் ஜெகதீஸ்வர அம்மன் கோயில் உள்ளது. அந்தத் தெய்வமேறி ஆடுபவர் கால்களைப் பின்னி வைத்துக் கொண்டு தொத்தித் தொத்தி ஆடுவதைக் காணலாம். அந்தத் தெய்வத்துக்குக் கால்கள் பின்னப்பட்டிருப்பதாகக் கதை கூறும். அவ்வாறு சாமியாடி ஆடுவது வியப்பாக இருக்கும். பயிற்சி ஏதுமின்றி கதை நிகழ்ச்சியைக் கொண்டு இவ்வாறு நடித்து ஆடுவதைக் கண்டு மக்கள் இறையாற்றலை வியந்து பாராட்டுவர்.

மைலாடி, அச்சன் குளம் ஆகிய ஊர்களில் கூட்டாகப் பலர் தெய்வமேறி ஆடுவது வழக்கமாக உள்ளது. சில கோயில்களில் ஒருவருக்கு மேல் இருவர் ஒரே சமயம் ஆடிவிட்டால் போட்டியும் பூசலும் ஏற்பட்டு விடுகிறது. கூட்டு ஆட்டத்தில் தெய்வ உறவு முறை தெளிவாக விளங்க ஆட்டம் நடைபெறும். அது திருத்தமுறாத நாடகக் காட்சியாகவே தோன்றும். இந்தத் தெய்வங்களைத் தவிர கருங்கிடாக்காரன், செங்கிடாக்காரன், ஒற்றை மாராப்பு, காவக்காரன் முதலிய காவல் தெய்வங்களும் உண்டு. அவர்களும் சில இடங்களில் மனிதர்கள் மேலேறி ஆடுவதைக் காணலாம். காலசாமி, காலகன்னி ஆகியவை ஆண் பெண் சாவுத் தெய்வங்கள். முன்னதன் ஆட்டம் கீழக் கிருஷ்ணன் புதூரிலும் பின்னதன் ஆட்டம் கோயில்விளை ஊரிலும் முன்பு நடைபெற்றதைக் காண வாய்ப்பு கிடைத்தது. வீடுகளில் கன்னித் தெய்வங்களும் காடுகளில் பேய்களும் படையல் பெறுகின்றன. கன்னியர் அமைதியாகவும் பேய்கள் ஆவேசமாகவும் ஆடுவதாகக் கூறுவர். பெரும்பாலும் கன்னித் தெய்வ ஆட்டம் நடப்பதில்லை. தெய்வமேறி ஆடுவதில் வியப்பும் உள்ளது. போலியும் உள்ளது. கதையுணர்வு சிறிது உள்ளது. கலையுணர்வு மிகக் குறைந்து உள்ளது.

## தெய்வ ஆடலும் கலையும்

தெய்வ ஆடலில் கலையுணர்வு அதிகம் இல்லையாயினும் அவை கலைவளர்ச்சிக்குத் துணை நின்றன என்று கூறலாம். தெய்வவுணர்வுடன் மக்கள் தெய்வமேறியவர்களைக் காண்பதால் அவர்கள் வியப்புக்கு இடம் அதிகம் ஒதுக்கிக் கலையுணர்வைக் கட்டுப்படுத்த வேண்டியதாகிறது. தெய்வக் கதைகளைக் கலையாக நடித்துக் காட்டத் திறமையுடையவர்களுக்கு உணர்வை ஊட்டும் பங்கு ஓரளவு தெய்வ ஆடலுக்கு உண்டு. கூத்துக்கு அது வழி வகுத்திருக்கலாம். அத்தகைய கூத்துக்களை இறைப்பற்றுணர்வுடன் மக்கள் கண்டு களித்துள்ளனர்.

வியப்புறும் செயல்களைக் கலைத் தன்மையுடன் காட்டவும் தெய்வ ஆடல்கள் உதவி இருக்கவேண்டும். தெய்வமே தங்கள் முன் உருப்பெற்று வந்ததாகக் கருதும் வில்லுப்பாட்டுக் கலைஞர், மேளதாளமிடும் கலைஞர் ஆகியோர் தங்கள் முழுத் திறமையையும் காட்ட முயன்றிருப்பர். கதைக்கும் ஆடலுக்கும் தக்கவாறு சிறப்பாகத் தங்கள் கலைகளில் உணர்வைச் சிறப்பாக விளக்க விரும்பி இருப்பர்.

வடமாவட்டங்களுக்கும் தென்மாவட்டங்களுக்கும் இடையே வணக்க முறை, விழாவெடுக்கும் முறை ஆகியவற்றில் ஒருவகையான வேறுபாடு இருப்பதைக் காணலாம். வடக்கே தெய்வ வரலாற்றைக் கதையாகக் கூறிக் கூத்தாக நடித்து வந்துள்ளனர். தெற்கே அவற்றை வில்லுப்பாட்டாகப் பாடிக் கேட்டுள்ளனர். ஆகையினால் பார்த்து மகிழும் கூத்துக் கலை வடமாவட்டங்களில் சிறந்து வளர்ந்துள்ளது. தெற்கே கேட்டுச் சுவைக்கும் இசைக்கலை புகழ் பெற்றுச் செரித்துள்ளது. கூத்து நடக்காத நாட்டுப்புற விழாக்கள் வடக்கே நடப்பது இல்லை. அதுபோல் வில்லுப்பாட்டு இல்லாத விழாக்கள் தெற்கே நடப்பது இல்லை. குமரியும் நெல்லையும் வில்லுப்பாட்டுக் கலையை அன்றும் இன்றும் வளர்த்து வருகின்றன. மதுரையிலிருந்து வடக்கிலிருக்கும் மாவட்டங்கள் கூத்துக் கலலயைச் சிறப்பாக வளர்த்துள்ளன. இராமநாதபுரம் மாவட்டம் இரண்டையும் கண்டுகளிக்கும் பேறுடன் உள்ளது.

குமரி மாவட்டத்திலுள்ள அகத்தீசுவரம் அம்மன் கோயிலில் நடக்கும் கொடை விழாக்களில் தொடர்ந்து கூத்துக்கள் முன் காலத்திலிருந்தே நடத்தப்படுகின்றன. ஆனால் வடக்கே எந்த ஊரிலும் வில்லுப்பாட்டு போன்ற இசைக்கலை நடந்ததாகத் தெரியவில்லை. வடஆர்க்காடு, செங்கல்பட்டு, தென்ஆர்க்காடு போன்ற மாவட்டங்களில் திரௌபதி அம்மன், அரவான் போன்ற பாரதக் கதைப் பாத்திரங்கள் வணக்கத் தெய்வங்களாக இருப்பதினால் பாரதக் கதையைப் படித்துக் கேட்டும், அதன் காட்சிகளை நடித்துக் கண்டும் மக்கள் வழிபாடு செய்துள்ளனர். ஆனால் நெல்லை, குமரி மாவட்டங்களில் அவற்றுக்குரிய வட்டாரத் தெய்வங்களை வணங்கி, அவர்களின் கதைகளை வில்லுப்பாட்டாகக் கேட்டு மகிழ்ந்துள்ளனர். குமரிமாவட்டத்தில் பாண்டவர்களை வணங்கும் வல்லவர் கோயில் ஒன்றே ஒன்று சொத்தவிளை ஊரில் உள்ளது. அதில் பாரதக்கதையை வில்லுப்பாட்டாகக் கேட்டுச் சுவைத்துள்ளனர். மற்றபடி அங்குள்ள நச்சுப் பொய்கை கோயிலிலும் பாரதக் கூத்து நடந்ததாகத் தெரியவில்லை. பரந்த வழக்குடைய பாரதம் போன்ற இதிகாசப் புராணக் கதைகளைக் கூத்தில் கண்டு களித்துள்ள நாட்டுப்புற மக்கள் சுருங்கிய வழக்குடைய வட்டாரத் தெய்வக் கதைகளைப் பாட்டாகக் கேட்டு மகிழ்ந்துள்ளனர். பாரதம் போன்ற கதைகளுக்கு நாடளாவிய சிறப்பும் சுடலைமாடன் போன்ற கதைகளுக்குத் தோன்றிய இடத்தில் மட்டிலுமுள்ள சிறப்பும் உள்ளன. பரந்து வளர்ந்தவை இசையாலும் கூத்தாலும் சுவைக்கப் படுவதுடன் சிறந்த இலக்கியமாகவும் படைக்கப்

பட்டுள்ளன. வட்டாரச் சார்புடையவை இசையாகிப் பின் எழுத்தாகி ஏடேறியுள்ளன. இன்னும் மேடையேறவில்லை.

வட மாவட்டங்களில் நடைபெறும் தெய்வமேறிய ஆடல் களில் நெருப்பைக் கையால் வாரி எடுப்பது போன்ற அரிய செயல்களுடன் கதை நிகழ்ச்சிகளைக் கலையாக நடித்துக் காட்டும் போக்கும் இருந்துள்ளது. இதற்கு எடுத்துக்காட்டாக வட ஆர்க்காடு மாவட்டத்தைச் சேர்ந்த ரெட்டிக் குப்பத்தில் நடக்கும் திரௌபதியம்மன் திருவிழா நிகழ்ச்சிகளைக் காணலாம். அங்கு விவசாயிகளுக்கு ஒய்வான சித்திரை வைகாசி மாசங்களில் திருவிழா நடக்கும். அமாவாசை நாளில் கொடியேற்றி 18 நாட்கள் பாரதம் வாசிப்பார்கள். மாலை இரண்டு மணிமுதல் ஆறுவரை இது தினமும் நடக்கும். இறுதி 8 நாட்கள் பாரதக் கதையிலுள்ள முக்கியமான நிகழ்ச்சிகள் கூத்தாக நடத்தப்படும். இறுதி நாளில் பாண்டவர்கள் ஒரு பக்கமும் துரியோதனன் ஒரு பக்கமுமாக ஒரு கயிற்றுக்கு இரு பக்கங்களிலிருந்து சண்டையிடுவர். கண்ணன் திரௌபதை ஆகிய தெய்வங்கள் அங்கு இருப்பர். சண்டை ஊரில் பரந்து நடைபெறும்.

சுமார் 40 அடி நீளத்தில் ஒரு துரியோதனன் உருவம் செய்யப் பட்டிருக்கும். கண்ணன் பீமனிடம் சைகை மூலம் துரியோதன னின் உயிர்மூலமான தொடையில் கதாயுதத்தால் அடிக்கச் சொல்வார். உடனே உருவத்தின் தொடையில் ஓங்கி பீமன் அடிப்பான். அது முறிந்துவிழும். அதிலிருந்து குருதி குபுகுபு வென்று கொட்டும். மக்கள் தீயவன் மடிந்தான் என்ற மகிழ்ச்சி யில் ஆரவாரம் செய்து களிப்பர். இவ்வாறு குருதி கொட்டு வதற்காகத் தொடைக்குள் ஒரு மண்பானை வைத்து அதற்குள் மஞ்சளும் சுண்ணாம்பும் கலந்த சிவந்த நீரை நிறைத்திருப்பர். இக்காட்சியின் பொய்மையை அறிந்தும் அதை மறந்து மெய்ம் மையாக நினைப்பதே நாட்டுப்புற மக்களின் இயல்பான கலைத் தன்மை ஆகும். இது பகல் 11 மணிக்கு நடக்கும்.

பின்னர் திரௌபதி, கண்ணன் ஆகியோர் தெய்வம் ஏறிய நிலையில் நெருப்பு குண்டத்துக்கு வருவர். அங்குத் தெய்வச் சிலைகளும் இருக்கும். தீயது அழிந்ததை அறிவிக்க ஒருபிடி நெருப்புக் கங்குலைக் கையால் அள்ளித் திரௌபதியின் பட்டாடையில் கட்டுவர். கையும் கனிவதில்லை. பட்டும் எரிவதில்லை. கூத்தும் ஆடலும் முடிந்து அனைவரும்

கோயிலுக்குச் சென்று வழிபடுவர். இம்முறையான வணக்கம் கூத்துக்குத் துணைபுரியும் தன்மையை நன்றாகப் புரிந்து கொள்ளலாம்.

குமரி மாவட்டத்தில் ஊருக்கு ஊர் நடக்கும் சுடலைமாடன் வணக்கத்தைக் காணலாம். தெய்வப் பீடத்தில் மலரும், பல் வகைப் பொருளும் படைக்கப்படும். சுடலைமாடன் கதையை வில்லில் அடித்துப்பாடுவர். பொங்கல் பானைக்கு நெருப்பு வைப்பர். கதை ஒரு உச்சகட்டத்தை எட்டியதும் கொட்டு மேளம் முழங்கப்படும். ஒருவர்மேல் தெய்வமேறி ஆட்டம் தொடங்கும். பீடத்திலிருக்கும் ஆயுதங்கள், மலர்மாலைகளை எடுத்துக்கொண்டு ஆடுவர். ஆட்டம் ஒரே குறிப்பாகவும் ஊழையிடுவதாகவும் தோன்றும். தீப்பந்தம் பிடிப்பர். அவை வியப்பாக இருக்கும். ஆனால் கதை நிகழ்ச்சிகள் ஆடல் மூலம் விளக்கப் படுவதே இல்லை. வில்லுப் பாட்டில் கேட்கும் விளக்கத்தால் புரிந்து கொள்ளவேண்டும். பல தெய்வங்களின் ஆடல்கள் இவ்வாறுதான் நடைபெறும்.

வடமாவட்டங்கள் தென்மாவட்டங்கள் ஆகியவற்றில் நடைபெறும் விழாநிகழ்ச்சிகளை இந்த விளக்கங்கள் மூலம் நன்கு அறியலாம். கலைக்கு அவை எந்த அளவுக்கு உதவியிருக்கும் என்பதைச் சிந்தித்து உணரலாம். இவற்றைக்கொண்டு வடக்கில் கூத்துக்கலை வளர்ச்சிக்கும் தெற்கில் வில்லுப் பாட்டுக் கலை வளர்ச்சிக்கும் உரிய காரணங்களை நன்கு அறியலாம். ஒரே வீதமான பண்பாடும் பழக்க வழக்கமும் உடைய தமிழ் நாட்டில் ஏன் இப்படியொரு வேறுபாடு உள்ளது என்பதைப் பற்றிச் சிந்திப்பது நலம். வடக்கில் உள்ள தெய்வக் கதை களுக்கும் தெற்கிலுள்ள கதைகளுக்கும் உள்ள வேறு பாட்டை அறிய வேண்டும். பிற பண்பாட்டுக் கலப்பு வடக்கே ஏற்படுவது போன்று பல காரணங்களைக் கருத்தாகக் கண்டு பொருத்தமான ஒரு முடிவுக்கு வருவது நலம்

## மந்திரத் தன்மையுடைய ஆடல்கள்

மந்திர ஆற்றலுடன் தெய்வமேறி ஆடுவதாகப் பலர் ஆடு வதைக் காணலாம். அவர்களும் மனிதன் சாதாரண நிலையில் செய்ய இயலாத செயல்களை அனைவரும் வியப்புறுமாறு செய்து காட்டுவதைப் பார்க்கலாம். தங்களைத் தாங்களே

அடிப்பதும் வெட்டுவதையும் காணலாம். பலவிதமான நோய் களைக் குணப்படுத்தல், பேயோட்டுதல் ஆகியவற்றை மந்திர ஆற்றலினர் செய்து காட்டுவர்.

**மாயத் தெய்வ ஆடல்கள் (Mystic Dance)**

மாயத் தன்மையுடைய ஆடல்கள் கடுமையானதாக இருக்கும். நோயகற்றும் மாயத்தையும் இத்தகைய ஆடலர் செய்வதாக மக்கள் நம்புகின்றனர். கொட்டு மேளம் முழங்க இவர்கள் சுற்றிச் சுழன்று உருண்டு புரண்டு ஆடுவர். மந்திர ஆற்றலினரின் ஆடல் போன்றே இருக்கும். தெய்வமேறியிருப்ப தாகவே மக்கள் கருதுவர். இத்தகையோர் சைபீரியாவில் போலியாக வலித்து வலித்து ஆடுகிறார்கள். இதனைச் சைபீரியாவிலும் கில்பர்ட் தீவுகளிலும் எபிலெப்டிக் ஆடல்கள் (Epileptic Dance) என்று கூறுகின்றனர். எஸ்கிமோக்கள் அங்கோகாக் (Angakok) என்ற ஆடலை ஆடி இவ்வாறு செய் கின்றனர். பாலியில் நடக்கும் சங்குயாங் ஆடலும் (Sanghyang) அல்ஜீரியாவில் நடைபெறும் ஐஸவ்வா (Aissaoua) ஆடல்களும் இவ்வகையைச் சேர்ந்தவை. ஆப்பிரிக்க நாடான கோல்ட் கோஸ்டில் (Gold coast) மடியூப் (M'Deup) ஆடல்கள் மாயத் தன்மையுடையதாகவே காணப்படுகிறது.

தமிழ் நாட்டைப் போன்று உலகிலுள்ள பல இடங்களில் மாயத் தெய்வ ஆடல்கள் நடைபெறுவதைப் பார்த்து சில உண்மைகளை அறிய வேண்டும். எந்த இடத்தில் வாழ்ந்தாலும் நாட்டுப்புற மக்கள் எதையும் எளிதில் நம்பிவிடக் கூடியவர் களாகக் காணப்படுகின்றனர். அவர்களுடைய அச்சவுணர்வே இதற்குக் காரணமாக உள்ளது. மனிதன் மந்திர வேலைகளையும் மாயச் செயல்களையும் செய்யும் ஆற்றலை நம்பியதுடன் பல வியப்பான செயல்களைச் செய்வதிலும் வல்லவர்கள் என்று கருதுகின்றனர்.

மாயத் தன்மையுடன் ஆடுவோர்கள் தங்களுக்கும் சில ஆவி களுக்கும் தொடர்பு இருப்பதாகக் கூறுகின்றனர். இறை யாற்றலைப் பெறும் திறமை உள்ளதாக நடிக்கின்றனர். தங்களுடைய உடலில் வேற்று ஆவி புகுந்து தங்களுக்கு ஆற்றலைத் தந்து வியப்பான செயல்களைச் செய்வதாக மக்களை நம்ப வைக்கின்றனர். பண்டைக் காலத்தில் கிரேக்கர் சிலர் ஆர்கியா (Orgia) என்ற தெய்வ ஆற்றல் தங்களிடம்

இருப்பதாகக் கூறி அரசியலில் கூடத் தலையிட்டுப் பலவற்றைச் செய்துள்ளனர் மெக்சிக்கோவிலுள்ள அஸ்டெக் (Aztec) மக்களிடம் தெய்வமேறியாடும் பழக்கம் இருந்துள்ளது. அமெரிக்காவிலுள்ள செவ்விந்தியர் பேயோட்டி (Peyote) என்ற ஒருவகை வெறியாடலை ஆடுகின்றனர். இது மெக்சிக்கோ விலிருந்து வந்து இவர்களை ஒட்டிக்கொண்ட வழக்கம் என்று கூறப்படுகிறது. நியுயார்க்கிலும் தீய ஆவிகளை மாய ஆடல் களால் துரத்தும் வழக்கம் இருப்பதாக அறிய முடிகிறது. ஹெயிற்றி (Haiti) பிரேசில் (Brazil) ஆகிய இடங்களிலும் வோடன் வணக்கத்தில் (Vodun cult) தெய்வமேறி ஆடும் வழக்கம் உள்ளது. நைஜீரியா நாட்டில் யோருபாஸ் (Yorubas) என்ற தெய்வ ஆடல் நடப்பதையும் அறியலாம். தீபத்திலும் ஸ்ரீலங்காவிலும் பேயோட்டம் நடக்கின்றன. ஜப்பானில் சூரிய தேவதையான அமதரசு (Amaterasu) என்ற தெய்வத்தை அழைப்பதற்காக யுமி - நோ யுத்சமி (ume - no - utsame) என்ற ஆடல் நடத்தப்படுவதாக அறியலாம்.

தமிழ் நாட்டைப் போன்று தெய்வமேறி ஆடலாகவே இவை தோன்றுகின்றன. இத்தகைய பழக்கமும் நம்பிக்கையும் உலகத்தில் பல்வேறு நாடுகளில் இருப்பது மக்களின் சிந்தனைப் போக்கும் செயல்பாடுகளும் நாட்டுப்புறத் தன்மையில் ஒத்து இருப்பதை மிகத் தெளிவாகக் காட்டுகிறது. பல நிலைகளில் தமிழ் மக்களின் போக்கு மெக்சிக்கோவில் வாழும் அஸ்டெக் மக்கள், தென் அமெரிக்காவில் பிரேஸில் நாட்டில் தென் பகுதியில் வாழும் மக்கள், ஆப்பிரிக்காவில் மேற்குப்பகுதி நாட்டு மக்கள் ஆகியோரிடம் பெரும் அளவில் இருப்பதைக் காணமுடிகிறது. இவற்றை இன்னும் தெளிவாக ஆராய்ந்தால் வியப்பான செய்திகள் வெளிபட வாய்ப்பு உள்ளது.

# தொன்ம விளக்கக் கலைகள்

## தொன்ம விளக்கம்

பழமையான தெய்வக் கதைகளை விளக்கும் போக்குடைய நாட்டுப்புறக் கலைகள் பலவாறாகத் தமிழ் நாட்டில் வளர்ந்துள்ளன. இதிகாசம், புராணம், தெய்வ வரலாற்றுக் கதைகள் ஆகியவற்றைத் தொன்மமாகக் கருதலாம். அவற்றில் உலக இயல்புகளும் அவற்றிற்கு அப்பாற்பட்ட இயல்புகளும் இடம் பெறும். வாழ்வுக்குப் பயன்படும் செய்திகளும் இன்பமளிக்கும் சுவைப் பகுதிகளும் இருக்கும். மெய்ம்மையும், பொய்ம்மையும் கலந்து நன்மைக்கு வழி வகுப்பதாக இருப்பின் ஏற்றுக் கொள்வதில் தவறில்லை. மக்களைத் திசை மாற்றிச் செல்லும் கதைகளும் இருக்கலாம். முறைப்படுத்தும் திறமுடைய நல்லவையும் காணப்படலாம். எவ்வாறு இருப்பினும் பழமையுடையதாக இருப்பதைத் தொன்மம் என்று கூறுகின்றனர்.

வழி வழியாக மக்களிடம் வழங்கி வரும் கதைகளை மக்கள் விரும்புவது இயல்பு. அவற்றை வாய்மொழிக் கதைகளாகக் கேட்பதைவிடவும் இசைக்கலையாகவோ கூத்துக்கலையாகவோ மெருகேற்றப்பட்டு சுவைப்பது சிறப்பாக அமையும். கதைப் பாடலாகியிருந்த பல கதைகள் குறிப்பிட்ட கலைகளுக்குத் தகுந்தவாறு இசைப் பாடல்களாகவும் கூத்துக்கு உதவும் அமைப்புகளாகவும் மாற்றப்பட்டுள்ளன. அதனால் ஒரே கதையைப் பல கலைகள் மூலம் சுவைக்கும் வாய்ப்பு மக்களுக்குக் கிடைத்துள்ளது. எந்த நிலையிலும் கலையை விடவும் கதைகளுக்கே சிறப்பிடம் கொடுக்கப்படுகின்றன. கலைக்காகக் கதைகளை மாற்றும் பழக்கம் நாட்டுப்புற மக்களிடம் பெரும்பாலும் இருப்பதில்லை. தெய்வக் கதைகள் என்ற நினைப்பில் அவற்றைப் பெரிதும் மதிக்கின்றனர். மாற்றங்களை விரும்புவதும் இல்லை. ஏற்றுக் கொள்வதும் இல்லை.

தெய்வக் கதைகளை உண்மையாக நம்பி உணர்ச்சியுடன் சுவைத்து மகிழும் போக்கை நாட்டுப்புற மக்களிடம் பரக்கக் காணலாம். ஆகையினால் அத்தகைய கதைகளும் மறையவில்லை. கலைகளும் வழக்கிழக்கவில்லை. அவற்றிலுள்ள உண்மைகளைச் சோதிக்கவும் கருத்துக்களை அலசவும் மக்கள் முற்படுவது இல்லை. வழக்கமான கதைகளைப் பழக்கமான

கலைகளின் வாயிலாகக் கண்டும் கேட்டும் சுவைப்பதில் நாட்டுப் புற மக்கள் இன்பமும் பயனும் காண்கின்றனர். தமிழ் நாட்டில் பலவிதமான தொன்ம விளக்கக் கலைகள் உள்ளன.

### தேவராட்டம்

தேவராட்டம் மதுரை மாவட்டத்தில் குறிப்பிட்ட சில குழுவினரால் மிகச் சிறப்பாக ஆடப்பெற்று வருகிறது. விஜய நகரப் பேரரசைச் சார்ந்து தமிழ்நாட்டில் குடியேறிய கம்பளத்து நாயக்கர்களால் இன்று பல இடங்களில் தேவராட்டம் நடத்தப் படுவதைக் காண்கிறோம். தேவாரம் எனும் வரலாற்று முக்கிய மான ஊரிலும் அதன் சுற்றுப்புற பகுதிகளிலும் கம்பளத்து நாயக்கர்கள் வாழ்ந்துவருகின்றனர். இப்பகுதியில் இன்றும் தேவராட்டம் மிகச் சிறப்பாக நடத்திக் கொண்டு வருகின்றனர். இக்குழுவினர் சக்கம்மா தேவியை வழிபடும் வழக்கமுடையவர். அந்தத் தேவியை வழிபடாமல் எந்த இடத்திலும் ஆட்டத்தைத் தொடங்குவதில்லை. கண்ணன் கோவர்த்தன கிரியைத் தாங்கிக் காப்பாற்றிய சிறுவர்களின் வழிவந்தவர்களாகத் தங்களைக் கூறிக் கொள்கிறார்கள். அவ்வாறு வழிவந்த பெருமையை ஆட்டத்தின் ஊடே புலப்படுத்தி மகிழ்கின்றனர், இந்தக் கலை இவர்களுக்கே உரியது என்ற எண்ணமும் இவர்களிடம் உறுதி யாக உள்ளது.

ஆண்கள் மட்டுமே இந்த ஆட்டத்தில் கலந்து கொள்வர். வரிசையாக நின்று ஆடுவர். தலையில் தலைப்பாகை போல் மினுமினுப்பான ஒரு துண்டைக் கட்டியிருப்பதுடன் ஒரே மாதிரியான ஆடைகட்டியிருப்பர். முன்னால் நிற்கும் ஆடல் தலைவர் போலித் தாடியும் மீசையும் வைத்திருப்பார். சிலர் சிறு சிறு சோழிகளை அடுக்கி அவற்றைப் பல்வரிசையாக முகத்தில் பொருத்தி இருப்பர். அவரைப் பார்க்க முகமூடி அணிந்திருப்பவர் போன்று தோன்றும். அவரே பாடலைத் தொடங்கிப் பாடுவர். மற்றவர் ஆடியசைந்து தாளத்துக்குத் தக்கவாறு கையை ஆட்டிப் பாடுவார்கள். பல பாடல்களைப் பாடி இவ்விதமாக ஆடுவர். பாட்டுக்குப் பாட்டு இசையும் தாளமும் மாறி அமையும். தொன்மைக் கதை விளக்கமே இந்த ஆடலில் சிறப்பாகக் காணப் படுகிறது.

கண்ணனின் கதைகள் பெரும்பாலும் இவர்களால் பாடப் படும். பல புராணக் கதைகளையும் பாடுவர். உள்ளூர் வீரர் களின் வரலாற்றுக் கதைகளும் இடம்பெறும். கோவையில்

முருகன் வள்ளி திருமணக் கதையும் மதுரையில் மதுரை வீரன் கதையும் அதிகமாகப் பாடப்படுவது உண்டு. இவை தவிர காத்தவராயன், கட்டப்பொம்மன் கதைகளும் பாரத இராமாயணக் கதைகளையும் பாடி ஆடுவர். ஒரு நீண்ட புல்லாங்குழல், உறுமி மேளம் 'ஆகியவற்றைப் பயன்படுத்தி ஆடுவதையும் காணலாம். சமயத் தொடர்புடைய பழமையான கதைகளைப் பாடியாடுவதால் மக்கள் தேவராட்டத்தை விரும்பிப் பார்க்கிறார்கள்.

## ஒயிலாட்டம்

திருச்சி, கோவை, மதுரை போன்ற மாவட்டங்களில் ஒயிலாட்டம் சிறந்து விளங்கி திருவிழா நிகழ்ச்சிகளுக்குப் பெருமையும் பொலிவும் ஊட்டுகிறது. திருநெல்வேலி மாவட்டத்துச் சிற்றூர்களிலும் இது நடைபெறுகிறது. ஆனால் கலைஞர்கள் அங்கு அதிகம் இல்லை. மதுரை, கோவை முதலிய மாவட்டங்களில் இருந்தே வருகின்றனர். இந்த ஆட்டத்தில் பெரும்பாலும் 12 முதல் 20 கலைஞர்கள் கலந்துகொண்டு நிகழ்ச்சியை நடத்துவர். சில சமயம் 40 பேரும் வரிசை வரிசை யாக நின்று ஆடுவார்கள்.

ஆட்டத்தில் கலந்து கொள்வோர் வெள்ளை ஆடையை ஒன்றுபோல் கட்டியிருப்பர். சில இடங்களில் பல வண்ண ஆடைகளுடனும் ஆடுகிறார்கள். கழுத்துப் பட்டை அகன்று இருக்கும். கால் சட்டைகளும் அணிந்திருப்பர், விதவிதமான அணிகலன்களைப் பூண்டு வருவர். காலில் சதங்கை கட்டியிருப்பர். கையில் ஆளுக்கு ஒரு கைக்குட்டையை நுனியில் பிடித்து அதை அழகாக வீசி வீசி ஆடுவார்கள்.

இவர்களுக்குத் தலைவராக ஒரு வாத்தியார் உண்டு. ஆடுபவர்கள் ஒரு வரிசையில் அல்லது இணையான இருவரிசையில் நிற்பார்கள். வாத்தியார் வரிசையின் முன்னாலோ அல்லது இணை வரிசையின் இணைப்பகுதியிலோ, நின்று பாடுவார். மற்றவர்கள் அவரைப் பின்பற்றி அழகாக இணைந்து பாடுவர் டோலக், ஜலரா முதலிய தாள வாத்தியக் கருவிகள் அடிக்கப் படும். ஆட்டம் திறந்த வெளியில்தான் நடக்கும். இடையிடையே உரையாடல் உரைநடையில் நடைபெறும். நகைச் சுவைக்காகச் சமூகக் குறிப்புகளும் இடையிடையே சுட்டப்படும்.

இதிகாச, புராண, வரலாற்றுக் கதைகளே ஒயிலாட்டத்தில் பாடப்படும். மாவட்ட மக்கள் விரும்பும் கதைகளையே முக்கியமாகப் பாடுவர் நெல்லையில் கட்டப்பொம்மனும் மதுரையில் மதுரை வீரனும் கோவையில் வள்ளி திருமணமும் பெரும்பாலாகப் பாடப்படும் கதைகள். காத்தவராயன் கதையும் சுவையாக இவர்களுடைய பாடலில் அமையும். இதிகாசங்களைப் பல இரவுகள் தொடர்ந்து பாடிக்காட்டுவதும் உண்டு. கதைகளுக்குத் தக்கவாறு ஆடலும் மாறும். காலமும் நீளும். கதைக்குத்தான் முதற் சிறப்பேயன்றி ஆடலுக்கில்லை என்பது இதனால் விளங்கும்.

ஒயிலாட்டத்துடன் சில விநோத நிகழ்ச்சிகளைச் செய்து பல விதமாக ஆடுவதும் உண்டு. கோவையில் அதனைச் சதிராட்டம் என்று கூறுவர். இதே ஆடல் சில இடங்களில் சிறிது மாறுதலுடன் நடப்பதால் அதனை 'ஒயில் கும்மி' என்று அழைக்கிறார்கள், நடைபெறும் முறைகளில் வேறுபாடுகள் அதிகம் இல்லை. ஒயில் கும்மியின் சிறப்பை ஒரு பேசும்படப் பாட்டு விளக்குவதைக் காணலாம்.

'தேரோடும் மெங்கள் சீரான மதுரையிலே
ஊரார்கள் கொண்டாடும் ஒயிலாட்டம்!

## சக்கையாட்டம்

சக்கையாட்டம் முதன்முதலில் தஞ்சாவூர் மாவட்டத்தில் தொடங்கிப் புகழ் பெற்று பின் திருச்சி மாவட்டத்தில் பரவியுள்ளது. இந்த ஆட்டம் ஆடுபவர் நாலு தேக்குமரத் துண்டுகளை விரல்களுக்கிடையில் வைத்துக் கட்டியிருப்பர். அதைக் கொண்டு அடித்து ஒலியெழுப்பியாடுவதால் இந்த ஆட்டம் இப்பெயர் பெற்றுள்ளது. 'சக்கை' என்றால் மரத் துண்டுகள் என்று பொருள்படும். ஒவ்வொரு மரத்துண்டும் 7 அங்குலம் நீளமும் $\frac{3}{4}$ அங்குலம் அகலமும் உடையதாக இருக்கும்

எட்டு முதல் பன்னிரண்டு பேர் வட்டாரமாகவோ இணை கோட்டு வரிசையிலோ நின்று இந்த ஆட்டத்தை ஆடுவர். அனைவரும் ஒரே மார்திரியான உடைகள் அணிந்து காணப்படுவர். ஒரு அரைக்கால் சட்டையும் தோளில் ஒரு சதுரமான துண்டும் காணப்படும். தலையில் ஒரு கைக்குட்டை கட்டப் பெற்றிருக்கும். சதுரத் துண்டில் சிறுசிறு மணிகள் அழகாகத்

தொடுக்கப்பட்டு அவை குஞ்சங்கள் போன்று தொங்கும். தோற்றப் பொலிவுக்காக இவை அணியப்படுகின்றன. ஜலரா போன்ற இசைக்கருவிகள் ஒலிக்கப்படும்.

மாரியம்மன், முருகன் போன்ற கோயில் ஊர்வலங்கள் நடக்கும்போது சக்கையாட்டம் ஆடுவது வழக்கம். அந்த அந்தத் தெய்வக் கதைகளைப் பாடிக் கதையை வளர்த்துக் கூறுவர். இக்காலத்தில் தேசியப் பாடல்கள், வீரர்களின் வரலாறுகள், நீதி விளக்கக் கதைகள், சமூக நிகழ்ச்சிகள் ஆகியவை இடம் பெறுகின்றன. இன்பமும், அறிவும், சமய வுணர்வு இவ்வாடல் பாடல்களின் முக்கிய நோக்கங்களாக அமைகின்றன.

ஆட்டம் தொடங்கும்போது மக்களைப் பார்த்துப் பணிவர். பின் தங்களை அறிமுகப்படுத்தும் வாயிலாக ஒரு பாட்டைப் பாடுவர். அது ஓர் அன்பான வேண்டுதலாக அமையும். அவை யடக்கமாகவும் அப்பாடலைக் கருதலாம்.

'பாருங்கள் பாருங்கள் பாருங்களே—பாலர் நாங்கள்
ஆடும் விதத்தைப் பாருங்களே
பார்புகழும் இந்தச் சக்கையாட்டத்தைப்
பாரெங்கும் போற்றிட ஆடும் விநோதத்தைப்—பாருங்களே.'

பாடலில் வரும் 'பாலர்' என்ற சொல் சிந்தனைக்கு உரியது. உண்மையில் தங்களைச் சிறியவர்களாக மக்கள் கருத வேண்டும் என்று கூறினார்கள்ா அல்லது முன்னர் இளையவர்கள்தான் இந்த ஆட்டத்தை ஆடியுள்ளனரா என்பதை அறிய வேண்டும். இப்பொழுது இளைஞர்களும் நடுத்தர வயதினரும் ஆடுகிறார்கள். சிறியவர் ஆடுவதற்கும் உரிய ஆடலாகவே உள்ளது. சக்கைகளைத் துடிப்புடன் அடித்து விரைவுடன் பாடினால் இவ்வாடல் சிறப்பாக இருக்கும். நீளமான மரத் துண்டுகளைச் சிறுவர்களின் விரல்களில் இறுக்கமாகக் கட்டியிருக்க முடியுமா என்பதும் கருதுவதற்கு உரியது. இளமைத் துடிப்புடன் பாடியாடும் இவர்கள் தங்களைப் பாலர் என்று கூறியதைத் தவறாகக் கருத முடியாது, பணிவுக் கூற்றாகக் கொள்வது சரியே.

## வைந்தனை ஆட்டம்

வட ஆர்க்காடு தென் ஆர்க்காடு போன்ற மாவட்டங்களில் வைந்தனை ஆட்டம் நடைபெறுகின்றது. இதைச் சில வளந்தனையாட்டம் என்று கூறுகிறார்கள். இது ஆண்களே

ஆடுகிற ஒரு வகையான கோலாட்டமாகும். ஆட்டம் ஆடுவோர் காலில் சதங்கை கட்டியிருப்பார்கள். டோலக், தாளம் முதலிய கருவிகள் இசைவொலி எழுப்ப இந்த ஆட்டம் நடைபெறும். தாளக்கட்டுடன் மிகச் சிறப்பாக ஆடவேண்டிய கலையாக இது உள்ளது. வள்ளி திருமணம், பாரதக் கதை களைப் பாடியாடுவர். பாடல்கள் பெரும்பாலும் காவடிச்சிந்து அமைப்பில் இருக்கும். விழாக்களில் இது பெரும்பாலும் நடத்தப் படுகிறது.

## கைச் சிலம்பு ஆட்டம்

கையில் சிலம்பை வைத்துத் தாளத்துடன் ஆடுவதால் கைச் சிலம்பு ஆட்டம் என்ற பெயருடன் விளங்குகிறது. இதில் நாலு ஆடவர் இரண்டு பாடகர் ஆகியோர் இடம் பெறுவர். கால் களில் இவர்கள் சதங்கை கட்டியிருப்பர் காஞ்சீபுரத்தில் கைச் சிலம்பு ஆட்டம் பெருவழக்காக உள்ளது. சென்னையைச் சுற்றியுள்ள இடங்களிலும் இது நடைபெறுவதைக் காணலாம். பிற மாவட்டங்களில் அதிகம் நடைபெறாத கைச்சிலம்பு ஆட்டத்தைச் செங்கல்பட்டு மாவட்டத்துக்கு உரியதாகக் கருதுவது தவறில்லை. இந்த ஆடலுக்குப் பல்லவ மன்னர்களின் பேராதரவு இருந்துள்ளதாகத் தெரிகிறது.

சில கிளைக் கதைகளைப் பாடல்களால் விளக்குவதைக் கைச்சிலம்பு ஆட்டத்தில் காண முடிகிறது. முக்கியமாகப் பொம்மி கலியாணம் கதைவுருவில் மிக அழகாக ஆடிக் காட்டப் படுகிறது. கதைப் பாடலைக் குழுவின் தலைவன் முதலில் பாடுகிறான். பின்னர் அதைத் தொடர்ந்து மற்றவர் பின்பாட் டாகப் பாட ஆட்டம் நடைபெறும். கதைகளிலுள்ள உணர்ச்சிக் கூறுகளைச் சுவையுடன் புலப்படுத்துவது இந்த ஆடலில் காணப்படும் முக்கியமான சிறப்பாகும். மக்கள் இவ்வாடலை மிகவும் நன்றாகச் சுவைத்து மகிழ்வதைக் காண முடியும்.

அம்மன் விழா. நவராத்திரி விழா ஆகியவற்றில் இரவு நேரத்தில் கைச்சிலம்பு ஆட்டம் கவின்கலையாக நடக்கும். முன்பு உடுக்கு, பம்பை முதலிய இசைக் கருவிகளைப் பயன் படுத்தியுள்ளனர். இப்பொழுது மிருதங்கம், தபேலா, கடம் டோலக் முதலியவற்றை அடித்துத் தாள இசை பெருக்குகின்ற னர். கையில் வைத்திருக்கும் சிலம்பின் ஒலியைத் தனியாக ஒலித்துக் காட்டியும் மக்களை மகிழ்விப்பார்கள்.

## உடுக்கடிப் பாட்டு

இராமநாதபுரம், மதுரை புதுக்கோட்டை பகுதிகளிலுள்ள பல ஊர்களில் உடுக்கடிப் பாட்டு நல்ல முறையில் கலைத்தன்மை சிறக்க நடக்கிறது. இதற்கு இரண்டு தவலை (தகரப் பானை) ஒரு சாப்ளாக் கட்டு, ஓர் உடுக்கு ஆகிய கருவிகள் தேவையுள்ளன. ஐந்து பேர் இதில் கலந்து பாடுகின்றனர். பெரும்பாலும் மழையின்றி தவிக்கும் பஞ்ச காலத்தில் உடுக்கடிப்பாட்டு பல ஊர்களில் நடத்தப்படுகிறது.

காத்தவராயன் கதைபாடுவதே இந்தக் கலையில் பெரு வழக்காக உள்ளது. பாடல்கள் மிக எளிமையாகவும் பெருஞ் சுவையுடையவையாகவும் காணப்படுகின்றன. பாடும் இசையும் பாடகரின் குரல் இனிமையும் தாளத்தின் அமைப்பும் அனைவரையும் மெய்மறந்து கேட்கச் செய்யும். உடுக்கடிப் பாட்டின் அமைப்பையும் போக்கையும் காத்தவராயன் கதைப் பாடல் மூலம் அறிய முயலலாம்.

### காப்பு

'முந்தி முந்தி விநாயகனே விநாயகனே
முருக நல்ல சரஸ்வதியே சரஸ்வதியே
கந்தனுக்கு முன்பிறந்த கணபதியே—
முன்நடவாய் முன்நடவாய்
வேலனுக்கு முன்பிறந்த விநாயகனே—
முன்நடவாய் முன்நடவாய்'

(காத்தவராயனின் மாமன் மகள் கருத்தழகி மோர் விற்பது)

'பாலுதான் வாங்கலியோ ? பாலுதான் வாங்கலியோ ?
பாலோ அம்மா பாலோ !
தயிருதான் வாங்கலியோ ? தயிருதான் வாங்கலியோ ?
தயிரோ அம்மா தயிரோ !
மோருதான் வாங்கலியோ ? மோருதான் வாங்கலியோ ?
மோரோ அம்மா மோரோ !'

(ஆரியமாலாவுக்குக் காத்தவராயன் பாடிய பாடல்)

'யானை நரம்பெடுத்து ஆட்டிவிட்டார் கிண்ணரத்தை
அப்போதும் பேசவில்லை அண்ணாரோடக் கிண்ணரந்தான்
பூனை நரம்பெடுத்துப் பூட்டிவிட்டார் கிண்ணரத்தை
அத்தாலும் பேசவில்லை அண்ணாரோடக் கிண்ணரந்தான்

முழங்கை நரம்பெடுத்து மூட்டிவிட்டார் கின்னரத்தை
அப்போது பேசுதுபார் அண்ணாரோடக் கின்னரந்தான்
என்ன சொல்லிப் பாடுதுபார் எங்களையாக் கின்னரந்தான்.

அடி ! மரத்தடியில் நானிருக்க ஆரியமாலா—உனக்கு
மாளிகையில் கூட்டமென்ன ?
அத்தைமகன் இங்கிருக்க
அரண்மனையில் கூட்டமென்ன ?
மாமன்மகன் இங்கிருக்க
மாளிகையில் நாட்டமென்ன ?
இப்படியாய் பாடுதுபார் எங்களையாக் கின்னரந்தான்.
நடந்துவா மயிலே ! ஓகோ ! நங்கை யிளங்குயிலே !
செய்யாஞ் சிறையிலிருக்கும் செங்கழனி ஓடைதனில்
நடந்துவா மயிலே ! ஓகோ ! நங்கை யிளங்குயிலே !'

(காத்தவராயனின் தாய் அவனைத் தடுத்துக் கூறல்)

'தாயினும் பத்தினிடா ! தாரமுன்னு சொல்வாரடா !
என்னிலும் பத்தினிடா ! இடும்பு நினைக்காதேடா !'

இவ்வாறு பலபடிகளாய் உடுக்கடிப் பாட்டு காத்தவராயன் கதையை மிகவும் இனிமையாக வளர்த்துச் செல்லும். இதை மானகிரியைச் சேர்ந்த கருப்பன் பாடுவது மிகவும் சிறப்பாக இருக்கும் என்று கூறுவர்.

கருவிகளை அடித்து முழக்கிப் பாடலில் இளையோடும் கதையை விளக்குவதும் இசையை இனிமையாகப் பெருக்குவதும் சுவைமிக்கதாய் கலைத்தன்மை சிறந்ததாய் அமையும். தரையில் அமர்ந்தே இவர்கள் பாடுவர். நடிப்பது இல்லை. உணர்ச்சிகளை ஒலியாலும் முகக் குறிப்புகளாலும் எளிதாக விளக்கிக் காட்டி விடுவர். வேடப் புனைவு கிடையாது. குரலை மாற்றிப் பாத்திர வேறுபாட்டைப் புலப்படுத்துவர். உணர்ச்சி மிக்க இசைப் பாடல்களும் இனிமை மிக்க உடுக்கின் தாள ஒலியும் உடுக்கடிப் பாட்டின் கலைத் தன்மைக்கு அடிப்படையாக அமைகின்றன. சுவையாகக் கதைகளைக் கூறுவதே இந்தக் கலையின் முக்கிய நோக்கம்.

## வில்லுப் பாட்டு

நாட்டுப்புறக் கலைகளில் மிகச் சிறந்த ஒரு கலையாக வில்லுப்பாட்டை உறுதியாகக் கூறலாம். திருநெல்வேலி, கன்னியாகுமரி மாவட்டங்கள் வில்லுபாட்டின் தாயகமாக

விளங்குகின்றன. இக்கலை இல்லாமல் இங்குள்ள ஊர்த் தெய்வங்களுக்கு விழா நடப்பது இல்லை என்றே கூறலாம். இராமநாதபுரம் மாவட்டத்தின் தென்பகுதியிலுள்ள சில சிற்றூர் களிலும் வில்லுப்பாட்டு நடைபெறுகிறது. ஆனால் கலைஞர்கள் (அவர்களைப் 'புலவர்' என்றே கூறுவர்) நெல்லையிலும் குமரியிலும்தான் மிகுதியாக இருக்கிறார்கள்.

வில்லுப்பாட்டுக்குக் குறைந்தது ஐந்துபேர் வேண்டும். ஏழுபேர் பாடுவது மிகச் சிறப்பாக இருக்கும். வில் கூந்தல் பனங்கம்பு அல்லது மூங்கிலால் சீவிச் செய்யப்பட்டிருக்கும். அதன்மேல் பல வண்ணத் தாள்களை ஒட்டி அழகுபடுத்தி இருப்பர். அதன் இரு முனைகளையும் தோல் அல்லது நரம்பினால் ஆன நாண்கயிற்றால் வளைத்துக் கட்டி இருப்பர். அதில் அடித்ததும் இனிய நாணொலி பிறக்கும். வில்லில் வெங்கலத்தினால் செய்யப்பட்ட இனிய ஒலிமிக்க மணிகளை இடைவெளிவிட்டு ஒரு கம்பியில் கட்டி இணைதிருப்பர். இரண்டு குட்டையான வீசுக் கோல்களைக் கொண்டு வில்லின் நாணில் அடித்ததும் மணிகள் குலுங்கி அசைந்து ஒலிக்கும். வீசுக் கோலிலும் வீசுமணிகளைக் கைப்பிடிக்கு மேல் பொருத்தி யிருப்பர்.

வில்லிசைக்குத் துணையாக உடுக்கு, குடம், தாளம், கட்டை ஆகிய கருவிகள் பயன்படுத்தப்படும். குடத்தின் வாயில் ஒரு பத்தையைத் தட்டியும் குடத்தின் மேல் இடக்கையால் கொட்டி யும் நல்ல தாள ஒலியை எழுப்புவர். பம்பையும் முன்னால் இணைக்கப்பட்டிருந்ததாகக் கூறுவர். இப்பொழுது சிலர் அர்மோனியம், புல்லாங்குழல் ஆகியவற்றையும் சேர்த்துக் கொள்கின்றனர். இந்தக் கருவிகள் கூட்டொலியும் புலவர்களின் பாட்டொலியும் பாடுகின்ற கதைப் பொருளும் இணைந்து நாட்டுப்புற மக்களைக் கிறுகிறுக்கச் செய்து விடும். அனைவரும் இரவெல்லாம் விழித்து வில்லிசையில் ஒன்றி விடுவதைக் காணக்காண வில்லுப்பாட்டின் உண்மையான சிறப்பும் உயர்வான கலைத்தன்மையும் உள்ளவாறு விளங்கும்.

வில்லின் வலது பக்கம் தலைமைப் பாடகர் வீசுக்கோலும் கையுமாக இருப்பார். அவரை 'மூத்த புலவனார்' அல்லது 'மூத்த பாட்டாளி' என்று கூறுவர். அவர்தான் முதன் முதல் பாடலைப் பாடிவிடுவார். அவருக்குத் துணையாக வலப்புறம் இருப்போரை 'வலத்த பாடுவோர்' என்றும் இடப்புறம் இருந்து

குடமடிப்போருடன் இரண்டாவது முறை பாடல்களைப் பாடு வோர்களை 'இடத்த பாடுவோர்' என்றும் நாட்டுப்புற மக்கள் நயமுடன் அழைப்பர். சில சமயம் வலம் பாடுவோர் பாடிய அடி முழுவதும் பாடாமல் இறுதிப் பகுதியை மட்டும் நீண்ட இசையுடன் இடம்பாடுவோர் பாடுவதும் உண்டு. வில்லுப் பாட்டைப் படித்துக் கொடுக்கும் ஆசிரியரை 'அண்ணாவியார்' என்று அன்புடன் அழைப்பர். பாடும்போது தொடக்கத்தில் குரு வணக்கமாக 'அண்ணாவியார் பாதம் பணிந்து வில்லினில் பாட' என்று கூறாமல் யாரும் பாடுவதில்லை.

முதலில் காப்பு, வாழ்த்து, வணக்கம் ஆகியவற்றை ஐயன் கதையைத் தொடங்குவர். முத்தாலம்மன், சுடலைமாடன், இசக்கியம்மை, மாரியம்மை, கருங்கிடாக்காரன், தோட்டுக்காரி, பூலங்கண்டாள், வெங்கலராசன், சேத்திரபாலன், பிச்சைகாலன், சேத்திரபாலன், ஐவர்ராஜா, வெள்ளைக்காரன், வல்குனி யம்மன், ;சேர்வைக்காரன், உச்சினி மாகாளியம்மன், பத்ரகாளி முதலிய தெய்வக் கதைகள் தென் மாவட்டங்களில் புகழ் பெற்ற வில்லுப்பாட்டுக்கள். முத்துப்பட்டன், மதுரைவீரன், காத்தவராயன், கட்டப்பொம்மன், மந்திர மூர்த்தி, சின்னத்தம்பி ஆகியவை வீரக்கதைப் பாடல்கள். இவை தவிர இராமாயணம், பாரதம், சிலப்பதிகாரம் ஆகியவற்றின் சில பகுதிகளையும் வில்லில் பாடுவது உண்டு. இக்காலத்தில் தேசிய உணர்ச்சிப் பாடல்கள், சமூகச் சீர்த்திருத்தப் பாடல்களும் பாடப்படு கின்றன.

வில்லுப் பாட்டை ஒரு பழந்தமிழ் இசைக்கலை என்று பெருமையாகக் கூறலாம். அதன் எளிமையும் இனிமையும் அனைவரையும் கவரவல்லது. போர்க் 'கருவியாகிய வில்லே இக் கலையின் தோற்றத்துக்குக் காரணமாக இருந்திருக்க வேண்டும். வில்லின் நாணைச் சுண்டும்போது எழும் ஒலி முதலில் மனிதனைக் கவர்ந்திருக்க வேண்டும். போரில் வெற்றி பெற் றோர் வில்லைத் தட்டி இன்பக் களியாட்டம் நடத்தியிருப்பர். வீரப் பாடல்களைப் பாடி மகிழ்ந்திருப்பர். அதற்குத் துணை யாகப் போர் முரசுகளையும், கிணைப் பறையையும், மதுக்குடங் களையும் அடித்து தாளம் போட்டு மகிழ்ந்திருக்கலாம். அதனை யும் போர்களத்தில் எளிதில் கிடைக்கக் கூடியவை. பின்னர் வில்லில் இசைபெருக்க மணிகளையும் பலவித இசைக் கருவி களையும் பொருத்தங் கண்டு இணைந்திருப்பர். போர் செய்யும் வில்லின் இரு முனைகளிலும் பூண்கட்டி வீரமணிகளைக் கட்டி யிருந்தனரா என்பதையும் அறிய முயலலாம்.

வில்லுப் பாட்டின் பெருமை பன்னெடுங் காலமாகத் தென் மாவட்டங்களில் பதுங்கிக் கிடந்தது. அதை வெளியுலகுக்குக் காட்டிய பெருமை கலைவாணர் என். எஸ். கிருஷ்ணனையே சேரும். அவர் காந்திமகான் சரித்திரத்தை வில்லுபாட்டாக எழுதித் தமிழ்நாடு முழுவதும் பரப்பினார். திருவிதாங்கூர் தமிழ் நாட்டுக் காங்கிரஸ் நடத்திய தாய்த் தமிழ் நாட்டுடன் இணையும் போராட்ட வரலாற்றைத் தோப்பூர் சுப்பிரமணியம் வில்லில் பாடிக் குமரி மக்களைக் கவர்ந்தார். இன்று வில்லுப் பாட்டை வானொலி, தொலைக்காட்சி, பத்திரிகை, பேசும்படம் ஆகியவை நல்ல விளம்பரத்துடன் மக்களுக்கு அறிமுகப்படுத்து கின்றன. தமிழ் நாடு இயல் இசை நாடக மன்றம், மக்கள் தொடர்பு செய்தித்துறை ஆகியவற்றின் நல்ல ஆதரவும் அதற்குக் கிடைத்துள்ளது. தெய்வக் கதை பாடுவதற்கே பயன் பட்ட வில்லிசை இன்று அறிவுக்கும் அரசியலுக்கும் நல்ல முறையில் உதவுகிறது.

சென்ற நூற்றாண்டில் வில்லுப் பாட்டுப் புலவராக உசரவிளை அப்பாவுநாடார் (கம்பினிப்புலவர்) நெல்லை, குமரி மாவட்டங்களில் பேரும் புகழும் பெற்றார். அவர் பாடும் போதே தலையில் கும்பம் வைத்து ஆடியவாறு வில்லில் அடிப் பாராம். வாய்க்குள் பலவண்ணப் பவளங்களை இட்டு அவற்றை நூலில் கோர்த்து மாலையாக்குவாரம். இடத்துக்குத் தக்கவாறும் சமயத்துக்கு தகுந்தபடியும் பாடலை அந்த இடத் திலேயே கட்டி அழகாகப் பாடி மக்களின் பாராட்டுதலைப் பெறுவாராம். அவர் பாட இயலாத வயதடைந்தபின் அவரின் திறமைக்குக் காணிக்கையாகப் பின்னால் பாடிய புலவர்கள் அவருக்குப் பணம் கொடுத்துப் பாதம் பணிந்து விடைபெறு வதைக் காணும் வாய்ப்பு கிடைத்து. இந்த நூற்றாண்டில் தோவாளை சுந்தரம்பிள்ளை நாஞ்சில் நாட்டில் ஒப்பற்ற வில்லிசை மன்னராக விளங்கினார் பின்னர் பொட்டல் பொன்னு முத்துநாடார், அகத்தீசுவரம் அரிராமன்நாடார், நாகமணி நாடார், தங்கையா, கடுக்கரை கோலப்பிள்ளை, பிச்சை குட்டிப் புலவர், சேவல்குளம் தங்கையா ஆகியோர் புகழ் பெற்று விளங்கினர். நெல்லை மாவட்டத்தில் காரிகோயில் சுயம்பு புலவர், ஐயம்பிள்ளை, அழகம்மாள், ஆகியோர் நல்ல கலைஞர் கள். தவிரவும் கோயில்பட்டி, தூத்துக்குடி, ஆறுமுகநேரிப் பகுதிகளிலும் பலர் வில்லுப் பாட்டுக்கலையில் திறமையுடைய வர்களாக விளங்குகின்றனர். கொத்த மங்கலம் விசு அக்கலையை நவீனப் படுத்தினார். பாடல்களைப் புதுமையுடன் பாடியதுடன்

அமையாமல் கருவிகளையும் வசதியுடன் அமைய மாற்றியுள்ளார் அம்மாற்றங்கள் வில்லுப்பாட்டின் நாட்டுப் புறப்பண்பை மாற்றாமல் இருக்குமேயானால் நன்று.

முன்பு ஆண்கள் மட்டுமே வில்லில் பாடி வந்தனர். இப்பொழுது பெண்களும் நன்றாகப் பாடித் தங்கள் திறமைகளைக் காட்டுகின்றனர். பலர் குடும்பக் கலையாக வில்லுப்பாட்டைப் பழகி வைத்திருந்தனர். பல வீடுகளில் பழைய வில்லுகள் இருப்பதைக் காணலாம். பல கோயில்களில் ஊர்க்குழுவினரே பாடியிருக்கின்றனர். முன்பு சில கோயில் விழாக்களில் இரு குழுவினரை ஒரே சமயம் போட்டியாகப் பாடச்செய்து அவர்களுடைய திறமையைத் திறனாய்வு செய்துள்ளனர். அதற்கு 'மந்திரப்பாட்டு' என்று மக்கள் பெயர் கூறுவர். வில்லுப்பாட்டின் பெருமையை நன்றாக அறிந்தவர்கள் நாட்டுப்புற மக்களே ஆவர். தென்மாவட்டங்களில் அம்மன் கோயில்கள் இருப்பது வரை வில்லுப்பாட்டுக்கலை நாடுப்புற அமைப்பில் வாழ்ந்து கொண்டே இருக்கும்.

வில்லுப்பாட்டு தமிழில் ஒரு தனி இலக்கியப் பிரிவாகக் கருதத் தக்க நிலையில் உள்ளது. அவற்றைப் பற்றிய ஆய்வுகளும் செய்யப் பெற்று வருகிறது. கோமதிநாயகம் எழுதியுள்ள வில்லுப்பாட்டு ஆய்வு நூல் திறனாய்வுச் சீர்மையுடன் அவற்றை விளக்குகிறது. அகத்தீசுவரம் ஆறுமுகப் பெருமாள் நாடார் சுவடிகளில் பதுங்கிக் கிடந்த பல வில்லுப் பாட்டுக் கதைகளை அச்சிட்டு வெளியிட்டதைக் கலைக்கும் தமிழுக்கும் செய்த சேவையாகக் கருதலாம். நா. வனமாலை மதுரை காமராஜ் பல்கலைக் கழகச் சார்பில் சில வில்லுப் பாட்டுகளை ஆய்வுத் திறன் மிக்க முன்னுரையுடன் வெளியிட்டுள்ளார். அவரால் பதிப்பிக்கப் பெற்ற 'வீணாதி வீணன் கதை' ஆட்சிச் சீர் கேட்டால் விளையும் தீமைகளை நகைச்சுவையுடன் விளக்கும் தரமாக உள்ளது. இன்பக் கலையாகவும் இலக்கியச் செல்வமாகவும் வில்லுப் பாட்டு விளங்குகிறது.

## பாவைக் கூத்து

பாவைகளை மரத்தாலும் தோலாலும் செய்து நூல்களைக் கட்டி ஒரு திரைக்குப் பின்னாலிருந்து ஒருவர் ஆட்டியசைத்து கதைகளை விளங்கச் செய்யும் நாட்டுப் புறக் கலைக்குப் பாவைக் கூத்து என்று பெயர். மரத்தால் ஆனவை மரப்பாவைக் கூத்தாகவும் தோலானவை தோற்பாவைக் கூத்தாகவும் வேறு

படுகின்றன. அட்டைத் தாளிலும் பாவைகளைச் செய்து சிலர் கூத்து நடத்துவர். ஆடு அல்லது மானின் தோல்களை $\frac{1}{32}$ அங்குலக் கனத்தில் பயன் படுத்துவது மிகவும் சிறப்பாகும். தலை, கண்டம், கை, கால் ஆகியவற்றிற்குத் தனித்தனித் துண்டுகளைப் பயன்படுத்தி நூலினால் கட்டுவது பாவைகளின் பொருத்தமான நடிப்பிற்குப் பெரிதும் உதவும். பலவிதமாகத் துளைகளிட்டு அணிகள் பூண்டிருப்பது போன்று காட்டுவர். இரசாயன முறையில் பாவைகளுக்கு வண்ணம் திட்டுவர். பாவைகள் ஒன்றரை அடியிலிருந்து இரண்டடி வரை நீள முடையவைகளாக இருப்பது நலம்.

பாவைக் கூத்தாடும் குழுவில் மூன்று முதல் ஆறு கலைஞர் வரை இருப்பர். பாவைகளை இருவர் ஆட்டுவர். இருவர் பாடுவர். ஒரு பெண்ணும் துணையாக இருப்பாள். ஒரு துணைப் பாடகரும் உதவுவார். ஜலராவும், மரத்தால் செய்யப்பட்ட தாளக்கட்டைகளும் இருக்கும். சிலர் தபேலா அடித்து இசை கூட்டுவதும் உண்டு. பாவைக் கூத்து முன்பு மன்னர்களால் ஆதரிக்கப்பட்ட புகழ் வாய்ந்த கலையாக விளங்கியது. இப் பொழுது சிற்றூர்களில் ஓலையரங்குகளில் மிக எளிய முறையில் நடத்தப் படுவதையே பார்க்க முடிகிறது. கலையரங்கின் முன் பக்கம் ஒரு வெள்ளைத் திரை கட்டப் பட்டிருக்கும். உள்ளே ஒரு விளக்கைத் தொங்க விட்டிருப்பர். விளக்குக்கும் திரைக்கும் இடையில் பாவைகள் இயக்கப்படும்.

படங்களை ஒரு கொம்புடன் கட்டியிணைத்து ஆட்டுவது வசதியாக இருக்கும். மரப்பாவைகளை நூலினால் கட்டி ஆட்டுவதுதான் முறை. பாவையை ஆட்டும் கலைஞரைச் சூத்திரதாரி என்று கூறுவர். அவர் காலில் கட்டைச் செருப்பு களை அணிந்து ஒரு பலகையின் மீது அடித்து பலவிதமான தாள ஒலிகளையும் உணர்ச்சி ஒலிகளையும் எழுப்புவார். அம்பு வீசுதல், கைகொண்டு குத்தல், கீழே விழல் ஆகியவற்றைத் தடார் ஒலியின் வாயிலாகக் காட்டுவார். பலபல குரலில் பேசும் பாத்திர வேறுபாட்டைப் புலப்படுத்துவார். பாடல் களைப் பாடி, உரையாடல்களைப் புலப்படுத்திக் காட்டுவதில் அவர் மிகத் திறமையுடையவராக இருந்தால்தான் கலை சிறக்கும்.

நாட்டுப்புறத்தில் ஒரு பொது இடத்திலோ அல்லது ஊர்த் தலைவரின் வீட்டு முன்போ இக்கூத்து நடத்தப்படும். சில இடங்களில் ஊரார் மொத்தமாகப் பணத்தைப் பிரித்துக்

கொடுத்து விடுவர். அனைவரும் உரிமையாகக் கூத்தைக் கண்டு களிக்க இம்முறை வசதியாக இருக்கும். சில இடங்களில் கூத்து நடக்கும் நாளில் வசூல் செய்யப்படும். அதற்காகக் கூத்து நடக்கும் இடத்தைச் சுற்றி கீற்று அல்லது கிடுகினால் வளைத்துக்கட்டி மறைத்திருப்பர். பாவைக் கூத்து பல நாட்கள் தொடர்ந்து நடைபெறும். பெரும்பாலும் இராமாயணக் கதையை முழுமையாகக் காட்டுவர். பாரதமும் சில இடங்களில் நடத்தப்படுகிறது. அரிச்சந்திரன் போன்ற நாடறிந்த கதைகளையும் பாவைக் கூத்தாக நடத்தியுள்ளனர். இதிகாசப் புராணக் கதைகளை விளக்குவதுடன் மக்களின் வாழ்க்கைக்கு வேண்டிய அறிவுரைகளையும் நல்ல முறைகளில் கூறிவிடுகின்றனர். சில நகைச்சுவை பாத்திரங்கள் வாயிலாகப் பல்வற்றைக் கூறிச் சிரிப்பு மூட்டுகின்றனர். கொப்புளான், உச்சிக்குடும்பன், முளவத்தக் கண்ணன் ஆகிய நகைச்சுவைப் பாத்திரங்களைத் தமிழ்நாட்டுப் பாவைக் கூத்தில் காணலாம். கர்நாடகாவிலுள்ள தார்வார் மாவட்டப் பாவைக் கூத்தினர் அனுமநாயகா என்ற நகைச்சுவைப் பாத்திரத்தைப் பயன்படுத்துகின்றனர்.

முதன்முதலில் பாவைக் கூத்து சைனாவில் நடத்தப்பட்டதாகவும் பின் அங்கிருந்து இந்தோச்சைனா வழியாக இந்தியாவுக்கு வந்ததாகவும் கூறப்படுகிறது. பன்னிரண்டாம் நூற்றாண்டு முதல் இந்தியாவில் பாவைக்கூத்து நடத்தப்பட்டதாகத் தெரிகிறது. தமிழ்நாட்டில் பெருவாரியாக மராட்டிய கலைஞர்களே இந்தக் கூத்தை நடத்தியுள்ளனர். இராமநாதபுரம், நெல்லை, குமரி, மதுரை, தஞ்சை ஆகிய மாவட்டங்களில் பாவைக்கூத்து பெருவாரியாக நடைபெறுகிறது.

சிறுசிறு பொம்மைகளைக் கைவிரல்களில் கட்டி அவற்றை ஆட்டுவதும் உண்டு. இக்காலத்தில் அது வழக்கிழந்த நிலையில் உள்ளது. தோற்பாவைக் கூத்தில் பல புதுமைகளைச் செய்து காட்டக் கலைஞர்கள் முயன்று வருவதினால் அது இன்றும் நிலைத்து வாழ்கிறது.

கும்பகோணத்தில் மணி ஐயர் மிக்வும் புகழ்பெற்ற பாவைக் கூத்துக் கலைஞராக விளங்குகிறார். அவருடைய பாவைகள் மூன்றடி வரை உயரமுள்ளனவாக இருக்கும். அவர் பாவைகளை ஆட்டுவதில் வல்லவர். தலையில் ஒரு வட்டமான அட்டையைப் பொருத்தி அதில் நூல்களை இணைத்து கர்நாடகாவிலுள்ள

பாவைக் கூத்துக்களில் பாவைகளின் வாயிதழ்கள் அசையும் முறை உண்டு. இராஜஸ்தானத்தின் முறை வேறாக உள்ளது· அங்கு பாவைகள் சிறிதாகக் காணப்படுகின்றன.

குமரி மாவட்டத்தில் கொட்டாரம் கோபாலராவும் ஏழு சாட்டுப்பத்து செல்லையா நாடாரும் பாவைக் கூத்துக் கலையில் வல்லவர்கள். ஊர்த்திருவிழாக்கள் நடக்கும்போதும், வளர் பிறையாக இருக்கும் காலங்களிலும் பாவைக் கூத்தை நடத்துவர்.

மேனாடுகளிலும் பாவைக் கூத்துக் கலை சிறிது வேறுபட்ட அமைப்புகளுடன் நடத்தப்படுகிறது. இங்கிலாந்திலும் அமெரிக்காவிலும் சிறுவர் நிகழ்ச்சியாகக் காட்டப்பெறுகிறது. கீழை நாடுகளான சைனா, இந்தோனேசியா, ஸ்ரீலங்கா ஆகியவற்றிலும் இக்கலைக்குச் சிறப்பு உள்ளது. சைனாவில் 1953 ஆம் ஆண்டில் பாவைக் கூத்து அரங்கம் அரசாங்கத்தால் கட்டப் பெற்று அதில் அரசின் ஆதரவுடன் இந்தக் கூத்து கலைச் சிறப்புடன் நடத்தப்பட்டு வருகிறது. பத்தாம் நூற்றாண்டிலிருந்தே ஜாவாவில் நடைபெற்று வந்த பாவைக் கூத்து இப்பொழுது புகழ் மங்கிக் காணப்படுகிறது. ஸ்ரீலங்காவில் மூன்று முதல் நான்கு அடி உயரமுள்ள பாவைகளைப் பயன் படுத்துகின்றனர். அரங்கமும் மிகச் சிறப்பாகவும் வசதியாகவும் அமைக்கப்பட்டுள்ளது.

இந்தியாவின் தென்பகுதி நாடுகளான ஆந்திரபிரதேசம், கர்நாடகம், தமிழ்நாடு, கேரளம் ஆகிய மாநிலங்களில் இன்றும் பாவைக் கூத்து புகழ் பெற்று மிகச்சிறப்பாக நடைபெறுவதைக் காணலாம். பாவைகளில் இடத்துக்கு இடம் பலவகை மாற்றங்கள் இருப்பதைக் காண முடிகிறது. ஆந்திரபிரதேசப் பாவைகளில் நல்ல பாத்திரங்களும் தீய பாத்திரங்களும் ஒன்றுபோல் தோன்றுகின்றன. இராமனும் இந்திரஜித்தும் பார்வைக்கு வேறுபாடில்லாத பாவைகளாகவே காணப்படுகின்றனர். தமிழ் நாட்டில் சகுனி, இராவணன், சூர்பநகை, கடோத்கஜன் முதலிய தீயவர்களின் பாவைகள் கோரவுருவத்துடனும் கோரைப் பல்லுடனும் தோன்றுகின்றனர். பார்த்தவுடன் வேறுபாடு அறியத் தக்க முறையில் இவை வரையப்பட்டுள்ளன பாவைக் கூத்து தொன்மக் கதைகளைக் கலையுணர்வுடன் வளர்ப்பதையே நோக்கமாகக் கொண்டுள்ளது.

**காமண்டி கொளுத்தல்**

திருச்சி, தென் ஆர்க்காடு, தஞ்சை, புதுக்கோட்டை போன்ற மாவட்டங்களில் காமண்டி கொளுத்தல் ஒரு சிறப்பான கலை நிகழ்ச்சியாக நடத்தப் படுகிறது. குறிப்பாகத் திருச்சியில் அதன் பெருமை கூறத் தக்கதாய் உள்ளது. விழாக்காலங்களில் இது நடைபெறுகிறது. சிவபெருமான் காமனைத் தன் நெற்றிக் கண்ணைத் திறந்து எரித்த காட்சியை விரிவாக நடித்துக் காட்டு கின்றனர். இதற்கென்று கலைக் குழுவோ அரங்கமோ கிடையாது. நாட்டுப்புற மக்கள் தங்களுக்குள்ளே எரிந்த கட்சி, எரியாத கட்சி என இரு பிரிவுகளை ஏற்படுத்தி வேடமிட்டு வாதிட்டவாறு நடித்துக் காட்டுவார்கள். காமன் ஆடிக் கொளுத்தப்படுதலே காமண்டி கொளுத்தலாக மாறியிருக்க வேண்டும். காமன் பண்டிகை 'காமண்டியாகி' இருக்குமா என்பதையும் சிந்திக்கலாம்.

காமன், ரதி ஆகியோர் இதிலுள்ள முக்கியமான பாத்திரங் கள். ஊர் மக்கள் இரு கூறாகப் பிரிந்து காமனைக் கொளுத்துவது முறையென்றும் முறையில்லை என்றும் பல காரணங்களைக் கூறி வாதமிடுவர். இது மூன்று அல்லது நான்கு நாட்கள் வரை சுவையாக நடக்கும். இறுதியில் காமனின் உருவத்தைச் செய்து ஊர்வலமாகக் கொண்டு சென்று ஊர் புறத்தில் தீவைத்துக் கொளுத்தி விடுவர் வாதம் சூடேறிவிடுவதும் உண்டு. இந்த நிகழ்ச்சியில் கலந்து நடிப்பவர்கள் வீட்டுக்கு வீடு பணம் பிரிப் பதும் உண்டு. இக் கூத்தைச் சில இடங்களில் 'மன்மதன் கூத்து என்ற பெயருடன் சிலவித மாற்றங்கள் செய்து நடித்துக் காட்டு வதையும் காணலாம்.

**உறியடித்தல்**

கண்ணன் ஆயர்பாடியில் வெண்ணெய் திருடுவதைச் சித்திரிக்கும் காட்சியாக 'உறியடித்தல்' பல மாவட்டங்களில் நடைபெறுகிறது. குமரி மாவட்டத்தில் திக்கணங்கோடு முதலிய வடபகுதி ஊர்களிலும் செங்கல்பட்டு மாவட்டத்தில் சில ஊர்களிலும் உறியடித்தல் மிக முக்கிய விழா நிகழ்ச்சியாக நடப்பதைக் காண முடியும். வட ஆர்க்காடு மாவட்டத்தில் திரெளபதியம்மன், தருமராஜா கோயில்களில் விழா நடக்கும் போது இக்காட்சி நடித்துக் காட்டப்படுகிறது. பத்து நாட்கள் நடக்கும் விழாவில் ஒரு நாள் தீமிதியும், ஒருநாள் உறியடித்தலும் நடைபெறுகின்றன. தென்மாவட்டத்தில் நடப்பதற்கும் இதற்கு

மிடையில் இடவேறுபாட்டால் சிலவித மாற்றங்கள் காணப்படு கின்றன. ஆனால் இரண்டின் நோக்கும் போக்கும் ஒத்து உள்ளன.

பொதுவாக ஆலயத்தின் முன்புறமுள்ள வெளிப்பகுதியில் உறியடித்தல் நடைபெறும். பக்கத்திலிருக்கும் மரத்தில் ஒரு பானை கட்டித்தொங்க விடப்படும். கண்ணனைப் போன்று வேடமிட்ட ஒருவர் கையில் நீண்ட கம்புடன் ஆடிக்கொண்டு வருவார். பானையை நோக்கிக் கம்பை அவர் வீசும்போது பானையை மேலே இழுப்பர். இவ்வாறு பலமுறை இழுப்பதும் இறக்குவதுமாக நடக்கும். கண்ணன் அதை அடித்து உடைக்க முயல்வதும் முடியாமல் போவதும் காண்போருக்கு நல்ல காட்சி யாகும். இறுதியில் பானை கம்பினால் அடிக்கப்பட்டு உடைந்து விழும். ஆட்டமும் இனிது முடிவுறும். இத்தகைய சமயச் சார்புடைய காட்சியைப் பின்பற்றியே பள்ளியில் போட்டியாக நடத்தப் பெறும் 'பானையுடைப்பு' விளையாட்டு தோன்றி யிருக்கவேண்டும். கண்ணனின் விளையாடலாக இது இருப்ப தினால் திரெளபதியம்மன் கோயில், திருமால் கோயில்களில் இது நடத்தப்படுகிறது.

தொன்மக் கதை நிகழ்ச்சியாகவே இது உள்ளது. கடவுளை நினைத்துக் காட்சியை மக்கள் கண்டு களிப்பர். இது கலை யுணர்வுடன் அமைவதையும் காணலாம்.

### சூரன் பாடு

முருகக் கடவுள் ஆணவம் கொண்ட சூரனை வேலால் கொல்லும் கதையைப் புராணத்தில் காணலாம். சில முருகன் கோயில்களில் சூரனைக் கொல்லும் காட்சி ஆண்டுதோறும் கலைச்சிறப்புடன் நடத்தப்படுகிறது. வைக்கோல் மூங்கில் ஆகியவற்றால் சூரனின் பேருருவத்தைச் செய்து அதற்கு மரத்தாலான கோரச் சிரிப்புடைய முகத்தைப் பொருத்தித் தெருவில் இழுத்து வருவர். மயில் வாகனத்தில் முருகனை வைத்து சூரனுக்கு எதிராகக்கொண்டு வருவர். போர் நடக்கும் முன்னும் பின்னுமாகச் சூரனின் உருவம் தள்ளப்படும். சிறிது நேரம் கழித்து சூரன் திரும்பிச் சென்று விடுவான். பின்னர் இரண்டவது வருகை தொடங்கும். முதல் வருகையில் சிரிப்புடன் இருந்த சூரனின் முகம் இரண்டாவது வருகையில் கோபமாக மாறும். போர் நடப்பதாகக் காட்டுவர். திரும்பவும் சூரன் பின் வலித்து ஓடுவதாகக் காட்சிப் படுத்துவர். மூன்றாவது வருகையில் சூரனின் முகம் சோகமாக அழுது வழியும். போர்

கடுமையாக நடைபெறும் முருகனின் வேல் எறிப்படும். அது சூரனின் மார்பில் குத்தி அவன் செத்து விழுவதாகக் காட்டுவர். இதுவே சூரன்பாடு திருவிழா. சூரன் வேல் பட்டு இறப்பதால் இப்பெயர் பெற்றுள்ளது. 'பாடு' இறத்தல் என்று பொருள் பெறுகிறது. சூரன் படுதலினால் அது சூரன்பாடாகி உள்ளது.

மூன்று முகங்களால் மூவேறு உணர்ச்சிகளைப் புலப்படுத்து கின்றனர். முன்பின் நகர்வில் போராடலைக் காட்டுகின்றனர். திரும்பித் திரும்பிச் செல்வது சூரனின் வலிமை குறைந்து கொண்டு வருவதை விளக்குகிறது. சூரன் வேல்பட்டு விழுந்ததும் அவனுடைய உருவத்தை கிடந்த நிலையில் இழுத்துக் கொண்டு ஒரு வெளியிடத்துக்கு வருவர். அங்கு அனைவரும் காண அவனுடைய உருவம் தீயினால் கொளுத்தப் படும். மக்கள் தீயவன் அழிந்தான் என்று கருதுவர். இறை யாற்றல் வலிமையுடையது என்பதை நம்புவர். முருகனை அனைவரும் வாழ்த்தி வணங்கி வீடுகளுக்குத் .திரும்புவர். இவ்வாறு சூரன்பாடு தமிழ்நாட்டில் பல முருகன் கோயில்களில் நடைபெறுவதாகக் கூறுகின்றனர். குமரியிலுள்ள மருங்கூரில் மிகச் சிறப்பாக இது கோயில் இருக்கும் குன்றின்மீது ஆண்டு தோறும் புரட்டாசியில் நடைபெறுகிறது. ஆயிரக் கணக்கில் மக்கள் கூடி சூரன் எரிந்து சாம்பலாகும் காட்சியைக் காண்பர். அந்தச் சாம்பலைப் புனிதமாகக் கருதி வீடுகளுக்கு எடுத்துச் செல்லும் வழக்கமும் உள்ளது.

நல்லதின் ஆற்றலால் தீயது அழிக்கப்படுவதை உருவகப் படுத்திக் கதையாகப் புராணம் கூறும். அக்கதையைக் கலைத் தன்மையுடன் காட்சிப்படுத்திக் கண்முன் கண்டு மக்கள் களிக் கின்றனர்- இறையுணர்வும் கலையுணர்வும் கலந்த கலைக் காட்சிகள் பலவற்றை நாட்டுப்புற மக்கள் உருவாக்கி மகிழ் கின்றனர். கலையின் துணையால் இறையுணர்வை ஊட்டுவதே இதன் நோக்கம். புதைந்த கருத்தை அகழ்ந்து காண வியலாதோர் இக்காட்சியால் கண்ணிற்கு மாத்திரம் விருந்து பெற்று கருத்தை வறுமையாக்கித் திரும்புவர். நாட்டுப்புற மக்களில் பலர் இதனைக் காட்சியாகக் கருதாது இறை யாற்றலாகவே நம்புவதினால் இறையுணர்வு மிக்கவராக வீடு திரும்புகின்றனர்.

## கணியான் ஆட்டம்

சுடலைமாடன், இசக்கியம்மன், பிச்சைக் காலன், செங்கிடாக்காரன் ஆகிய கோயில் விழாக்களில் கணியான்



அனுமன் ஆட்டம் (ப. 100)
(நன்றி : சென்னை அருங்காட்சியகம்)



முகமூடியணிந்த ஆடல் (ப. 104)
(நன்றி : சென்னை அருங்காட்சியகம்)



கணியான் ஆட்டம் (ப. 144)
(நன்றி : தமிழ்நாடு மக்கள் தொடர்பு செய்தித்துறை)



தெருக்கூத்து (ப. 162)
(நன்றி : தமிழ்நாடு இயல் இசை நாடகமன்றம்)



பொம்மலாட்டம் (ப. 138)
(நன்றி : சென்னை அருங்காட்சியகம்)



தோற்பாவைக் கூத்து (ப. 138)
(நன்றி : சென்னை அருங்காட்சியகம்)



தேவர் ஆட்டம் (ப. 128)
(நன்றி : தமிழ்நாடு மக்கள் தொடர்பு செய்தித்துறை)



வில்லுப்பாட்டு (ப. 134)
(நன்றி : தமிழ்நாடு இயல் இசை நாடகமன்றம்)

ஆட்டம் தனியாகவும் சாமியாட்டத்துடனும் நடத்தப்படுகிறது. குமரி, நெல்லை மாவட்டங்களில் இந்த ஆட்டம் சிறப்புடைய தாகக் கருதப்படுகிறது. சுடலைமாடனுக்கும் கணியானுக்கும் மிக தொடர்பிருப்பதாகக் கதை கூறுகிறது. சிவபெருமான் இரண்டு முரடர்களைப் பிறப்பித்து பூவுலகுக்கு அனுப்பினார். அதில் ஒருவன் சுடலைமாடனாகவும் இன்னொருவன் கணியா னாகவும் பெயர் கொண்டு அலைந்தனர். கணியான் சுடலை மாடனுக்குப் பல வழிகளில் உதவி செய்கிறான். கொடுமை களுக்கு ஆதரவாக இருக்கிறான்.

கணியான் ஆட்டத்தின் ஒருபகுதி இக்கதையின் முக்கிய கருத்தை உருவகித்துக் காட்டுகிறது. தன் குருதி சிந்தி சுடலை மாடனுக்கு உதவுவதைக் காட்ட கணியான் ஒரு வியப்பான செயலை இன்றும் ஆட்டத்தின் நடுவில் செய்வதைக் காணலாம். நள்ளிரவில் சுடலைமாடன் கொடை வறுவிறுப்பாக நடந்து கொண்டிருக்கும். கணியான் ஆடிப்பாடுவான். சாமியாட்டம் துடிப்பாக நடக்கும். சுடலைமாடன் திடீரெனச் சுடலையை நோக்கி ஓடுவான். அவன் அங்கிருந்து திரும்பி வந்ததும் கணியான் தன் நாக்கு அல்லது விரலை ஒரு கத்தியால் அறுத்து அதில் வழியும் குருதியை ஒரு இலையில் தாங்கிச் சுடலை மாடனுக்குக் கொடுப்பான். சிலசமயம் குருதியை இருபத்தொரு இலைகளில் பங்கிட்டு முறைப்படிக் கொடுப்பதும் உண்டு. சாமி யாடுவோன் குருதியை நக்கி அருந்துவான்.

'குருதி கொடுத்து மாடனுக்கு
உறுதியாக உதவும் கணியான்
பருதி யிருக்கும் காலம் வரை
இறுதி பின்றி வாழ்வானே'

என்ற பாடலையும் கேட்கலாம். இனிமை பாடல், சிறப்பான ஆடல், வியப்பான சொல் ஆகியவற்றால் நாட்டுப்புற மக்களை நாட்டமுடன் கணியான் ஆட்டம் கவர்கிறது. வெட்டிய இடத்தில் திருநீறு பூசுவர். ஆட்டமும் பாட்டும் அதற்கு மேலும் மிகச் சிறப்பாக நடக்கும்.

கணியான் ஆடுவதைத் தொழிலாகக் கொண்டுள்ள ஒரு குறிப்பிட்ட இனத்தினர் இன்றும் இந்த இனிய கலையை அழகிய முறையில் காத்துக்கொண்டு வருகின்றனர். குலத்தொழிலாக இதைச் செய்கின்றனர். கணியார் என்றே இவர்கள் தங்களை அழைக்கின்றனர். சிவபெருமானால் தோற்றுவிக்கப் பட்ட

முதற்கணியானின் குலவழித் தோன்றல்களாகத் தம்மைக் கூறிப் பெருமை கொள்கின்றனர். குமரி, நெல்லைப் பகுதிகளில் சிறு சிறு குழுக்களாக இவர்கள் வாழ்ந்து வருகிறார்கள். .நாங்குநேரி வானமாமலை, பழைய பேட்டை (திருநெல்வேலி) டேப் முருகன் ஆகியோர் கணியான் குழு நடத்துவதில் பெயரும் புகழும் எடுத்துள்ளனர். இரண்டு பெண் (வேடம்) இரண்டு ஆண், ஆகியோர் இதில் பங்கு கொள்கின்றனர். பெண்வேடமிட்டிருப் போர் ஆடிப்பாடுவர். ஆண்கள் தப்பட்டை அல்லது மகுடம் கொட்டிப் பாடுவர். நால்வர் இணைந்து பாடியவாறு ஆடுவதும் உண்டு. கணியான் ஒரு கையை முகந்துநேர் உயர்த்தி மறு கையை வீசிப் பாடுவது மிக அழகாக இருக்கும். இன்னொரு வரும் அவர்களுடன் இணைந்து பாடுவதையும் காணலாம். கணியான் குழு பொதுவாக ஐந்துபேரைக் கொண்டதாக இருக்கும். அந்த ஒருவர் ஆசிரியராகவும் தலைப்பாடகராகவும் இருந்து பாடலைத் தொடங்கி மற்றவர்களை வழி நடத்துவார். கோயில் தெய்வக் கதைகளையே பாடுவர்.

ஆட்டத்துக்கு ‘அச்சாரம்’ (அழைப்பாணை) வாங்கியதும் பதினைந்து நாட்கள் தொடர்ந்து விரதம் காப்பார்கள். இவ்வாறு காக்கும் நோன்புகள் கணியான் ஆட்டத்தின் புனித மான தன்மையை விளக்குவதாகும். உணவு, வாழ்க்கை முறைகள், உடலுறவு ஆகியவற்றில் மிகுந்த கட்டுப்பாடுகளைப் பின்பற்றுவர். விழாவின் போது ஆட்டத்தைத் தொடங்கு வதற்கு முன்பு சில சிறப்புப் பூசனைகளைச் செய்வர். மந்திரப் பாடல்களைப் பாடுவர். அத்தனையும் புனிதமான முறையில் செய்யப்படும்.

பாட்டுகளுக்குத் தக்கவாறு தாளமிட்டு ஆடுவதும், சுற்றிச் சுழன்று ஆடுவதும், பற்றிப் பிடித்துப் பம்பரமாய்ச் சுழல்வதும், துள்ளித் துள்ளிக் குதிப்பதும், திடீரென்று நிற்பதும் கணியான் ஆட்டத்தில் காணப்படும் கலைக் காட்சிகள், சாமியாடு வோருடன் சில சமயம் கணியான் ‘போட்டியாட்டம்’ ஆடுவதை யும் காணலாம். பாடல்களில் கதைகளை வளர்ப்பதுடன் மனிதவுணர்வுகளையும் புலப்படுத்திக் காட்டுவர். உச்சக்குரலில் ஓங்கிப் பாடி நள்ளிரவின் அச்சம் போக்கி அனைவரையும் இன்பப் படகிலேற்றி எழில் பயணவழி காட்டி மகிழ்விப்பதே கணியான் ஆட்டத்தின் சிறப்பாகும்.

### கதை சொல்லல்

இதிகாசப் புராண கதைகளைக் கேட்டு இன்பப்படுவது மக்களின் இயற்கை. இதிகாச நாயர்களை மக்கள் தெய்வங்

களாக மதித்துப் போற்றுவர். அவர்களின் வீர வரலாறுகளை விளக்கமாகக் கேட்க ஆவல்படுவது இயல்பே. ஆகையினால் ஆலய விழாக்களில் அவற்றை ஒருவர் படிக்கவும் இன்னொருவர் விளக்கவும் கேட்டு இன்புறுகின்றனர். இதனைக் 'கதை சொல்லல்' என்று நாட்டுப்புறங்களில் கூறுகின்றனர்.

தென் ஆர்க்காடு, வட ஆர்க்காடு, செங்கல்பட்டு போன்ற மாவட்டங்களில் திரௌபதியம்மன், தருமராஜா கோயில்கள் மிகுதியாக உள்ளன. அவற்றில் பாரதக் கதை படித்தல் முக்கிய நிகழ்ச்சியாக அமைகிறது. ஒருவர் பாடல்களை இசையுடன் பாடுவர். இன்னொருவர் அவற்றை விளக்கிக் கதை கூறுவர். பாடுவதில் இனிமையும் விளக்குவதில் அறிவும் உள்ளன. இரண்டையும் இணையாக நாட்டுப்புற மக்கள் சுவைத்து மகிழ் கிறார்கள். பாடுபவர் இனிய குரலும் இசைத்திறனும் உடைய வராக இருக்கவேண்டும். விளக்குபவர் நன்றாகக் கதையைத் தெரிந்து கருத்துக்களை விளக்கியுரைக்கும் அறிவுத்திறனும் சொல்லாற்றலும் உடையவராக இருக்க வேண்டும். இக் கலையில் சொல்லுவதற்கு முதலிடமும் சிறப்பும் இருப்பதினால் இதைக் 'கதை சொல்லல்' என்று அழைத்திருக்கிறார்கள். சொல்லுவது அறிவுரையல்ல கதையே என்ற முக்கிய குறிப்பும் உள்ளது. இருப்பினும் வாழ்வுக்கு வேண்டிய அறிவுரைகளும் சுவைப்பதற்கு இனிய நகைச் சுவையும் இடையிடையே இடம் பெறுவதைக் காணலாம்.

பாதிரிக்குப்பம் (தென் ஆர்க்காடு) ரெட்டிக் குப்பம் (வட ஆர்க்காடு) ஆலந்தூர் (செங்கல்பட்டு) போன்ற ஊர்களில் பாரதம் சொல்லல் மிகச் சிறப்பாக நடப்பதை அறியலாம். பதினெட்டு நாட்கள் தொடர்ந்து மாலையில் கதை சொல்லப் படும். இதைத் திரளான மக்கள் தினமும் கேட்டு மகிழ்வது வழக்கமாக உள்ளது. இரகுநாத சமுத்திரம் பரசுராமன் கதை சொல்வது மிகச் சிறப்பாக இருப்பதை இன்றும் காணலாம். கதை சொல்வதைப் புனிதமாகக் கருதி நோன்பு காப்பது வழக்கம். வீட்டுக்கு வராமல் கோயில் கூடாரத்தில் அமர்ந்தே நோன்பு காப்பார்கள்.

திருச்சி, தஞ்சாவூர் பகுதிகளில் பாரதம் படிப்பதுடன் சில இடங்களில் இராமாயணமும் வாசித்து விளக்கம் சொல்லப் படுகிறது. குமரி, நெல்லை ஆகிய மாவட்டங்களில் இத்தகைய கதை சொல்லல் குறைவாக உள்ளது. ஆயினும் முன்னாளி லிருந்து வழக்கத்தில் இருந்ததாக அறிய முடிகிறது. சென்ற

நூற்றாண்டின் இறுதியில் உசரவிளை பொன்னணிந்த பெருமாள் நாடார் தன் வீட்டில் பதினெட்டு நாட்கள் பாரதக் கதையைச் சுவடி வைத்து படித்து விளக்கம் சொல்வதை ஆண்டுதோறும் வழக்கமாகக் கொண்டுள்ளார். இறுதிநாளில் 'பட்டாபிஷேகம்' மிகச் சிறப்பாகக் கொண்டாடப்படும். அன்று பதினெட்டு அண்டா பாயாசம் வைத்து அனைவருக்கும் வழங்கப் படுவது இனிய செய்தியாகும். ஊர் மக்கள் ஒருங்குகூடி உவந்து பழகும் நல்ல வாய்ப்பாக அது அமைந்துள்ளது.

சமீப காலத்தில் குமரியிலுள்ள பல சிற்றூர்களில் இலைங்கையடிவிளை சிவராமப் பெருமாள் நாடாரின் இராமாயண விளக்கம் தொடர்ந்து நடைப்பெற்றது. மிக அண்மை காலத்தில் உசரவிளை வடக்கு வீட்டுப் பெருமாள் நாடார் இசையுடன் பாடல்களைப் படிக்கவும் தெங்கம்புதூர் முதுபெரும் புலவர் சாஸ்தாங்குட்டிப்பிள்ளை அரிய முறையில் விளக்கவும் இராமயணக் கதை சொல்லல் பல ஊர்களில் நடைபெற்றன. அவர்கள் இருவருடைய வாய்ப்பையும் வசதியையும் தெரிந்து ஊர் அம்மன் கொடை நாட்களைத் தீர்மானிக்கும் அளவுக்கு அவர்களின் 'கதைவாசிப்பு' சிற்றூர்களில் புகழ் பெற்றிருந்தது.

இதிகாசக் கதைகள் சொல்வதைத் தமிழகத்து நாட்டுப் புறமக்கள் மிகவும் விரும்பியுள்ளனர் என்பது தெளிவு. நாடெல்லாம் பரவியுள்ள கதைகளை நாடிக் கேட்டிருக்கிறார்கள். கதை மாந்தர்களை மதித்துப் போற்றியுள்ளனர். ஆண்டுதோறும் கேட்டாலும் அலுக்காது சலிக்காது அந்தக் கதைகளைக் கேட்க ஆவல் பட்டிருக்கின்றனர். வாழ்வுக்கு வழி காட்டும் மாந்தர் களாக இதிகாசப் பாத்திரங்களைக் கருதியதோடு தங்களுக்கு அருள் பாவிக்கும் தெய்வங்களாகவும் மதித்துள்ளனர். ஆகையினால் கதைசொல்லல் கலையாகி வளர்ந்துள்ளது.

இத்தகைய கதைசொல்லும் பழக்கத்தின் வளர்ச்சியாக அருணாசலக் கவிராயரின் இராம நாடகத்தையும் கோபால கிருஷ்ண பாரதியின் நந்தனார் சரித்திர கீர்தனையையும் கூறலாம். இவர்கள் இன்னிசைப் பொழிவாக (கதா காலச்சேபம்) இந்தக் கதைகளைக் கூறியிருக்கின்றனர். அவற்றிலிருக்கும் இசையமைப்பும் இலக்கிய அமைப்பும் சிறப்பாகக் கருதத் தக்கவை. எளிமையும் இனிமையும் நாட்டுப் புற அமைப்பின் நன்கொடைகள்.

# நாடக அமைப்புக் கலைகள்

## நாடகக் கலையின் இயல்புகள்

நடிக்கப் பெறுவது நாடகம். இயல்பாக நடப்பதைக் கலையர்கக் கண்டு விளையாட்டுணர்வுடன் பின் கண்டுகளிக்க நடித்துக் காட்டுவது நாடகக் கலையின் முக்கிய இயல்பாகும். நாட்டுப்புறக் கலைகளில் பல இத்தகைய இயல்புடன் விளங்குகின்றன. அவற்றில் சில ஆடல்களாகவும் சில கூத்துகளாகவும் உள்ளன. தனித்தனிப் பாடல்களை ஆடிக்காட்டுவதும் சிறுசிறு நிகழ்ச்சிகளையோ முழுக்கதைகளையே நீண்ட நேரம் ஆடியும் பாடியும் நடித்துக் காட்டுவதை நாட்டுப்புறக் கூத்தாகக் கொள்ளலாம். ஆடலையும் கூத்தையும் வரையறுத்துப் பிரித்துக் காண்பது கடினம். தொடரான நடிப்பு மிகுந்ததைக் கூத்தாகக் கருதுவது பொருத்தமாக அமையலாம்.

ஆடல் திருத்தமுற்று நடனமாகவும் கூத்து சீர்திருந்தி நாடகமாகவும் வளர்ந்துள்ளதாகவும் கருதலாம். ஆடல், கூத்து இரண்டையும் 'நாடகம்' என்ற சொல்லால் முன்பு குறித்துள்ளனர். அவை இரண்டையும் கூத்தாகவும் கூறியுள்ளனர். தெளிவற்று பயன்படுத்தப் பெற்றிருக்கும் இந்தச் சொற்களை தெளிவுபட உணர்வதற்காக மேலே கூறப்பெற்றுள்ள விளக்கத்தை ஏற்படுத்திக் கொள்ளலாம்.

தமிழரின் நாட்டுப்புறக் கலைகளில் ஆடலும் கூத்தும் ஓரளவுப் பிரித்துக் காணும் நிலையில் உள்ளன. வேறுபடுவதற்கும் இடம் இல்லாமல் இல்லை. கூத்துக்கள் நாடகத் தன்மையை மிகுதியாகக் கொண்டுள்ளன. இக்காலத்தவருக்குத் திருந்திய முறையில் கிடைக்கப்பெற்றுள்ள நாடக இனங்களெல்லாம் அவை தோன்றிய காலத்தில் நாட்டுப்புறக் கூத்துகளாகவே நடைபெற்றிருக்க வேண்டும். கால ஓட்டத்தில் ஏற்பட்டுள்ள கலைவளர்ச்சி அவைகளுக்குச் செம்மை வடிவம் கொடுத்திருக்க வேண்டும். முற்காலத்தில் அவை எளிமையாக நாட்டுப்புற மக்களால் திருத்தமுறாத கலைகளாகவே நடத்தப் பெற்றிருக்கும். மக்கள் இசைக்குச் சிறப்புக் கொடுத்த காலத்தில் பல அமைப்புடைய இசை நாடகங்களை மக்கள் முன் நடித்திருப்பர்.

ஆவற்றில் முக்கியமானவை என்று கருதத் தக்கவை நான்காகத் தமிழ்நாட்டில் காணப்படுகின்றன. அவை பள்ளு, குறவஞ்சி, குளுவம், நாட்டார் கூத்து 'அல்லது நாட்டார் நாடகம் (தெருக் கூத்து) என்பன ஆகும். தனி மனிதன் தன் வாழ்வின் பகுதியைத் தொடர்புபடுத்தி நீண்ட நேரம் நடிக்கும் நாடகமும் ஒன்று உள்ளது. அதனுடன் சேர்த்து நாட்டுப்புறக் கலை நாடகங்களை ஐந்தாகக் கொள்ளலாம்.

**பள்ளு நாடகம்**

பயிர்த்தொழிலைச் செய்து உயிர்வாழும் நாட்டுப்புறத்து எளிய மக்களான பள்ளர், பள்ளியரைப் பாத்திரங்களாகக் கொண்டு உழவுத்தொழில் முறைகளையும் உழவர் வாழ்க்கை முறைகளையும் பொருளாகக் கொண்டு நடித்துக் காட்டப் பெறுவது பள்ளு நாடகம். செய்தொழில்களிலெல்லாம் சீரும் சிறப்புமுடைய உயர்தொழிலான பயிர்த்தொழிலைப் போற்றிப் புகழும் நிலையில் பள்ளு நாடகம் அமைகிறது. சமுதாய உணர்வே இதில் முனைப்பாகக் காணப்படுகிறது. சமய உணர்வு கலக்கப்படுகிறது. இனிய நாட்டுப்புறப் பாடல்களில் தொழிலையும் வாழ்வையும் படம்பிடித்துக் காட்டுவதுடன் தெய்வங்களையும் தலைவர்களையும் பணிவுடன் புகழ்ந்து வாழ்வதை பள்ளு நாடகங்களில் காணலாம். எளிய ஆடலாகப் பாமர மக்களின் உணர்வுகளும் செயல்களும் நடித்துக் காட்டப்படுகின்றன. இடத்துக்கு இடம் மாறுபடும் விளக்கங்களைப் பள்ளு நாடகங்களில் காணலாம்.

விளைவெடுத்து ஓய்ந்து களிக்கும் நாட்களிலும் விழா வெடுத்து தெய்வத்தை வழிபடும் சமயங்களிலும் பள்ளு நாடகங்கள் ஊருக்கு ஊர் நடைபெற்றிருக்கும். ஊர் மக்கள் ஒன்றுகூடி உற்றார் உறவினர் மகிழ இக்களியாட்டங்களை இனிது கண்டு மகிழ்ந்திருப்பர். மிகப்பலவாகப் பள்ளு நாடகங்கள் நடத்தப் பெற்றிருக்கும் என்பதற்குச் சான்றாக,

> 'நெல்லு வகையை எண்ணினாலும்
> பள்ளு வகையை எண்ணமுடியாது'

என்ற பழமொழியைக் கூறலாம். வேடப் புனைவுகளும் காட்சி அமைப்புகளும் மேடை ஒப்பனைகளும் அதிகம் தேவை இல்லாத பள்ளு நாடகத்தைக் கோயில் முன்னாலும் தெரு முனையிலும்

வயல் வெளியிலும் அதிகச் செலவின்றி மிகஎளிதாக நாட்டுப்புற மக்களால் நடித்துக் காட்டமுடியும்.

பள்ளு நாடகத்தின் கதைப் பொருள் மிகச் சாதாரணமானதாகவே தோன்றுகிறது. வாழ்த்தும் வணக்கமும் பாடி முடித்ததும் பள்ளன் தோன்றித் தன்னுடைய பெருமைகளைத் தானே கூறி மகிழ்கிறான். தான் பின்பற்றும் சமயக் கடவுளை வாழ்த்திப் பணிவதுடன் மற்றவர்களையும் பணிந்து போற்றுமாறு வேண்டுகிறான். மாறுபடுபவர்களைச் சாடுகிறான். அடுத்து அவனுடைய இருபள்ளியரான மூத்த இளைய பள்ளியர் தோன்றுகின்றனர். அவர்கள் தனித்தனியே தங்கள் தங்கள் பிறந்தவிடத்துப் பெருமைகளை அடிக்கிக் கூறுகிறார்கள். அது போட்டியாகவும் மிகையாகவும் தோன்றும். ஆனாலும் மேடைக் காட்சிக்கு இனிமையாகவும் ஏற்புடையதாகவும் அமையும். குடிவுயர்வைக் கூறிக் களிப்பேருவகை உறுவது காண்போர்களுடைய குடி உயர்வைக் குறிப்புணர்த்திக் காட்டுவதாக அமைந்திருக்கும். அது அவர்களைக் களிப்படையச் செய்வது உறுதி. இன்பங் காணச் சென்றோர் தங்களுடைய வாழ்வு தெருக்காட்சியாக மெருகேறி வெளிப்படுவதைக் கண்டு மகிழ்ந்திருப்பர்.

பின்னர் நாட்டுவளம், நகர்வளம், குயில் கூவல், மழை வேண்டல், மழைக் குறி தோன்றல், மழை பொழிதல், ஆறு பெருகி ஓடுதல், சிற்றாறுகள் இணைந்து பேராறாகப் பெருக்கெடுத்துப் பாய்தல், ஏரி, குளம் நிறைந்து வழிதல் ஆகிய அனைத்தும் இயற்கையுடன் பொருந்த மிகையாகவும் உவமையுடன் பாடலாகிப் பாயும். இயற்கையின் நற்கொடையை நம்பி வாழும் நாட்டுப்புற மக்களுக்கு இத்தகைய பாடல்கள் இனிப்பதை விடவும் சுவையாக இனிப்பது வேறெதுவாகவும் இருக்க முடியாது. அவர்களுடைய நல்வாழ்வுக்கு நம்பிக்கை ஊட்டும் நல்ல பாடல்களாக அவை அமைவது உறுதி.

மழை பொழிய நீர்வளம் பெருகும். இனி நிலவளம் கண்டு பயிர்வளம் பெறவேண்டும். அதற்காகப் பண்ணைக்காரன் பள்ளனைத் தேடிவருகிறான். அறுவடைக்குப் பின்னருள்ள ஓய்வுக்காலம் பள்ளனை வீட்டில் முடக்கி வைத்திருப்பது இயற்கை. அவன் இளைய பள்ளியின் இன்ப உறவில் தன்னை மறந்து குடிசைக்குள் பதுங்கிக் கிடக்கிறான். அவனைக் காணாது கோபமுற்ற பண்ணைக்காரன் பலவாறு திட்டுகிறான். அதுவும் இயல்புக் காட்சியாகவே உள்ளது. அதைக் கேட்டதும் பள்ளன் வெளிவருகிறான். தனது செயலை மறைத்து

பண்ணைக்காரனின் சினத்தைப் போக்க முயல்கிறான். தன்னை நினைத்துக் கோபம் கொள்ளும் பண்ணைக்காரனின் நினைவைத் திசை திருப்பும் நோக்கத்துடன் அவள் கடிந்து பேசுவதற்கு முன்னரே பள்ளன் விரைந்து வித்துவகை, மாட்டு வகை, ஏர் வகை போன்றவற்றை அடுக்கிக் கூறுகிறான். நாடகக் காட்சிக்கும் அதைக் கண்டு களிப்போர்க்கும் அவனுடைய அடுக்குரைகள் அருமையாகப் பொருந்தி பெருமையாகக் கருதும் அளவுக்குச் சிறப்பாக அமைந்துவிடு கின்றன. அறிந்த செய்திகளையும் ஆவலுடன் வரவேற்கும் தன்மை நாட்டுபுற மக்களிடம் உண்டு. பள்ளன் கூறுபவை மக்கள் அறிந்தவையே ஆகும்.

இடையர் ஆட்டுக்கிடை கட்ட வருகின்றனர். உரமிட்டு வயல்கள் வளமாக்கப்படுகின்றன. இனி அவற்றை உழுது பயிரிடவேண்டும். தொழில் ஆயத்த நிலையில் காட்சி வாழ் வியலுக்கு மாற்றப்படுகிறது. இத்தகைய காட்சி மாற்றங்கள் கலைக்குச் சிறப்பைக் கொடுக்கும். கண்டு களிப்போரின் மனச் சலிப்பை மாற்றும். மூத்த பள்ளி பண்ணைக்காரன் முன் தோன்றிப் பள்ளனைக் குறை கூறி முறையிடுகிறாள். தன்னைப் புறக்கணித்து இளையாளிடம் இணைபிரியாது இருப்பதை வருத்தத்துடன் கூறுகிறாள். இவ்வாறு பலர் பள்ளர் குடியில் இருந்திருக்கலாம். அவ்வாறு இருத்தல் முறையன்று என்பதை அறிவுறுத்தும் நோக்கத்துடன் இப்பகுதி பள்ளு நாடகத்தில் இணைக்கப்பட்டிருக்கும் எனக் கருதலாம். மூத்த பள்ளியின் வாழ்க்கை அவலத்தை உணர்ந்த பண்ணைக்காரன் பள்ளனை முறைப்படுத்தும் நோக்கத்துடன் அவனைக் குட்டையிலிடு கிறான். கடுமையான தண்டனையை நாடகக் காட்சியாகக் காணுவோர் இத்தகைய தவறுகளைச் செய்யாது இருக்கலாம். செய்தோர் திருந்தலாம். பள்ளன் குட்டையில் மாட்டப்பட்டு வருந்துகிறான். இதைக் கண்டதும் மூத்த பள்ளி மனம் வருந்தி சினம் குறைந்து பண்ணைக்காரனை வேண்டி பள்ளனை விடுவிக் கிறாள். இதுவும் மக்களுக்குச் சிறந்த அறிவுரைக் காட்சியாக அமையும்.

பயிர்த்தொழில் காட்சிகள் மீண்டும் தொடர்கின்றன. உழுகிறார்கள், விதை தெளிக்கிறார்கள். முளை வெளிவருகிறது. நாற்றைப் பிடுங்கி நடுகிறார்கள், கருநடவாகிறது, கதிராகிறது கதிர் முற்றி விளைகிறது. அறுவடை செய்யப்படுகிறது. பள்ளன் நெற்கணக்கை ஒப்புவிக்கிறான். அத்தனையும் பாடல் காட்சி

களாகப் பள்ளியில் இடம்பெறுகின்றன. இக் காட்சிகள் சிறுவர்களுக்குப் பாடபோதனைகளாகவும் பெரியவர்களுக்கு அனுபவக் காட்சிகளாகவும் அமையும்.

பின்னரும் பள்ளியருக்கு இடையில் ஒரு சண்டைக் காட்சி நடைபெறுகிறது. ஒருவரை ஒருவர் பலவாறாக ஏசிப் பேசி மோதுகின்றனர். அது நகைச் சுவையாக இருந்தாலும் வாழ்வில் அவ்வாறு நடப்பவர்களுக்கு ஊசிக் குத்தாகி அவர்களைக் கூசிக் குறுகுமாறு செய்யும் என்ற உண்மையை உணரலாம். இறுதியில் இருவரும் மனம் பொருந்தி இணைந்து வாழ உறுதி பூண்டு இறையருளால் விளைந்த விளைவை உண்டு களிக்க கடவுளை வாழ்த்தி விரைகிறார்கள்.

நாற்று நடுகையில் பள்ளர்கள் சமூக விதிக்குப் புறம்பாகப் பள்ளியருடன் நடத்தும் காமக்களியாட்டங்கள் சில பாடல்களில் நகைச் சுவையாக விளக்கப்படும். அதற்காக அவர்கள் அடிபடுவதும் அவதிப்படுவதும் அம்பலப்படுத்தப்பெறும். அனைத்தும் இன்பக் கூத்தாகிப் பார்ப்பவர்களைத் தவறாது தடுக்கும் அறிவுரைகளாக அமைவது சிறப்பாகும். உண்மைகளை உவப்புடன்கூறி நன்மையை நயமாகச் சொல்லி விளக்கும் பக்குவமான கலையாகப் பள்ளு நாடகம் விளங்குகிறது.

பண்ணைக்காரன் பள்ளியரால் எள்ளி நகையாடப்படுவது சிந்தனைக்கு உரியது. உழைக்கும் மக்களை நிலவுரிமையுடையோர் ஆணையிட்டு வேலை வாங்குவதை அவர்கள் எதிர்க்கவும் முடியாமல் விரும்பவும் முடியாமல் தவிப்பதைத்தான் அது காட்டுகிறது. மேலாணையராகவும் தங்களுக்குத் தொழில் தந்து காக்கும் அன்பராகவும் பண்ணைக் காரனைப் பயிரிடுவோர் கருதியிருந்தால் இவ்வாறு நகைத்து எள்ளல் செய்திருக்க மாட்டார்கள். பாடல் இயற்றியோருக்கும் அத்தகைய நிலை உடன்பாடாக இருந்திருக்க முடியாது. உடன் பாடாயின் பண்ணைக்காரனைக் கேலிக்கு உரியவனாகப் படைத்திருக்க மாட்டார்கள். உருவப் பொலிவற்ற ஆணவக் காரனாகவே பண்ணைக்காரனை உருவாக்கியுள்ளனர். பயிரிடுவோர் தங்களுடைய உழைப்புக்குத் தகுந்த உரிமையும் ஊதியமும் தரப்படவில்லை என்றே கருதியிருக்க வேண்டும். சில பாடல்களில் இத்தகைய குறிப்பு நுட்பமாகப் புகுத்தப் பெற்றுள்ளது.

பதினாறாம் நூற்றாண்டிலிருந்து பள்ளு நாடகம் தமிழ் மக்களால் நடிக்கப் பட்டிருக்கும். அதற்கு முன் நாட்டுப்புற

மக்களிடம் உழத்திப் பாட்டு, பள்ளுப் பாட்டு பறைப் பாட்டு, பள்ளேசல் ஆகியவை வாய்மொழிப் பாடல்களாக இருந் துள்ளன. அவை வளர்ந்து கூத்தாகிச் சிறந்துள்ளன. பின்னர் மன்னரைப் புகழ்வதற்கும், வள்ளலை வாழ்த்துவதற்கும், இறைவனைப் போற்றுவதற்கும் தகுந்த இலக்கிய அமைப்பாக மாறியுள்ளது. பல பள்ளி இலக்கியங்கள் தோன்றியுள்ளன. அவை நடிக்கப் பெற்றும் போற்றப்பட்டும் வந்தன. இன்று பள்ளு மேடையை மறந்து அச்சுப் பதிப்பில் நிலைத்துத் தமிழுக்கு ஒரு நல்ல இலக்கிய அணியாகி விளங்குகிறது.

பாமர மக்களின் எளிய வாழ்வை இனிதாக விளக்கும் பள்ளு நாடகம் தமிழ் மக்களின் கலைத்திறனுக்கு நல்ல எடுத்துக் காட்டாகவே உள்ளது. இசையும் நடிப்பும் இணைந்த பள்ளு நாடகத்தை நாட்டுப்புற மக்கள் விரும்பியதினால் அது பல நூறாகப் படைக்கப்பட்டு பல இடங்களில் பலகாலம் நடிக்கப் பெற்றுள்ளது.

## குறவஞ்சி நாடகம்

மலையிடங்களில் வாழும் குறவர் குல மக்கள் குறிசொல்லும் ஆற்றல் மிக்கவர். பச்சை குத்தும் கலையும் அறிந்தவர். ஆகையினால் நாட்டுப்புற மக்களிடம் அவர்களுக்கு நெருங்கிய தொடர்பும் புகுத்தும் உரிமையும் இருக்க வழி ஏற்பட்டது. குறி கேட்கும் ஆவல் அனைவருக்கும் இருப்பது இயல்பு. ஆகையினால் குறமகளிர் மக்களுடன் நெருக்கமான உறவுடன் பழகியிருப்பர். அவர்களுடைய வாழ்க்கை இயல்புகளை நன்றாக அறிந்தோர் அவற்றைக் கொண்டு கதைகளைப் புனைந்ததுடன் கலைகளையும் கண்டுபிடித்தனர். குறி சொல்லுவதே அவற்றில் முக்கிய இடம் பெற்றது.

> 'இறப்பு நிகழ்வெதி ரென்னும் முக்காலமும்
> திறம்பட வுரைப்பது குறத்திப் பாட்டே'

என்று பன்னிரு பாட்டியல் விளக்குவதைக் காணலாம். அதோடு குறவர் வாழும் மலை, வணங்கும் தெய்வம், செய்யும் வேட்டைத் தொழில் ஆகியவற்றையும் இணைத்து விளக்கினர். மக்களுடைய வாழ்க்கை இயல்புகளையும் சேர்க்கக் கருதி ஒரு காதற்காட்சியும் அதனுடன் இணைந்து பின்னப்பட்டது. இறுதியில் குறவனும் குறமகளும் ஒருவரை ஒருவர் சந்தித்து மகிழ்வதும் சேர்க்கப் பட்டது. தலைவன் கடவுளாகவும் சிறப்புடைய மனிதனாகவும்

இருக்கலாம். அவன் வீதியுலா வருவதில் குறவஞ்சி நாடகம் ஒரு நல்ல சூழ்நிலையைக் கோலாகலமாக உருவாக்கித் தொடங்கப்படும். இனிய காட்சிகளைச் சுவையான பாடல்கள் வாயிலாக விளக்கி எளிய ஆடல்களாக மக்கள் முன் நடித்துக் காட்டப்படுவது குறவஞ்சி நாடகம்.

17, 18, 19 ஆம் நூற்றாண்டுகளில் குறவஞ்சி நாடகம் தமிழ் நாட்டில் மக்களால் மிகவும் விரும்பிக் காணப்பட்டுள்ளது. சங்க நூற்களில் குறமகளிரைப் பற்றிய குறிப்புகள் காணப்படுகின்றன. குறுந்தொகையில் 'வெண்கடைச் சிறுகடை அகவன் மகளிர்' (298) என்றும், அகநானூற்றில் 'நுண்கோல் அகவுனர்' (152, 208) என்றும் அவர்கள் குறிப்பிடப் பட்டுள்ளதைக் காணலாம். குறி சொல்லுவதற்காக அவர்கள் பயன்படுத்தும் சிறுகோலை அவர்களுக்கு உரிய குறியீட்டுக் கருவியாகப் புலவர் கருதி யிருப்பதிலிருந்து குறி சொல்வதில்தான் அவர்களுடைய தனிச் சிறப்பு அமைந்திருப்பதை அறியலாம்.

குறம், குறத்திப்பாட்டு ஆகியவற்றைக் குறவஞ்சி நாடகத்தின் முன்னோடிகளாகக் கருதலாம். குறம் ஒரு நெடும் பாடலாக இருக்கும். அதில் முடுகுக் கவிகள் இடம் பெற்றுள்ளன ஒருவர் இசையுடன் பாடும் நிலையில் உள்ளது குறிசொல்வது. ஒன்றே குறத்தில் சிறப்பிடம் பெற்றுள்ளது.

புகழேந்திப் புலவர் பாடியதாகக் கூறப்படும் 'அல்லி அரசாணி அருச்சுனனுக்காக மகா சாமார்த்தியமுள்ள மாறு வேஷம் கொண்டாடிய வித்துவான் குறம், மின்னொளியால் குறம்' ஆகிய இரண்டும் இன்று காணக்கிடைக்கும் நல்ல குறங்கள். அவற்றிற்கு மக்களிடம் மதிப்பு இருந்தமையால் பல பதுப்புகளாக வெளியிடப்பட்டுள்ளனர். அவை படிப்பதற்கு மாத்திரமே தகுதியுடையதாக உள்ளன. நடிப்பதற்கு உகந்தவை அல்ல. குறவஞ்சி நாடகம் குறத்தின் வளர்ச்சியாக நடிப்பதற்கு நல்ல வாய்ப்பான அமைப்புடன் உருவாகியுள்ளது.

குறவஞ்சி நாடகம் ஏனைய நூல்களைப் போன்று வாழ்த்து வணக்கத்துடன் தொடங்கப்படுகிறது. இதுவே பெரும்பாலோர் இடைக்காலத்தில் நூல் தொடங்கும் மரபு முறையாகும். பின் தலைவன் உலா வருகிறான். பலர் அதைக்கண்டு களிக்கின்றனர். ஏழு பருவத்து மங்கையரும் பார்க்கின்றனர். பருவத்துக்கு ஏற்றவாறு உணர்ச்சி பெறுவது இயற்கைக்குப் பொருந்தும் விளக்கமாக இருப்பினும் சமூக வழக்கக் கட்டுப்பாடுகளை மீறும்

உள்ளப் போக்காகக் காணப்படுகிறது. சமூகத்தால் புறத்தடைகளைத்தான் விதிக்க முடியுமே தவிர அக்வுணர்வுகளைக் கட்டுப்படுத்த இயலாது. அவை இயற்கையான இயல்புகளை உடையவை. இதனைச் சுவையாகக் காட்டிக் குறவஞ்சி நாடகம் சிறந்துள்ளது.

ஓர் இளம் வயதினள் தன் பருவ மலர்ச்சிக்கு உரிய உணர்ச்சித் தாக்குதலால் தலைவன் மீது காதலுற்றுக் கலங்குகிறாள். இத்தகைய மயக்கமும் தயக்கமும் அனைவருக்கும் பொதுவானவை என்பது இந்த நாடகத்தின் வாயிலாக மக்களுக்கு நயமாக விளக்கப்படுகிறது. காதலின் பிடியில் சிக்கிய மங்கை செயலற்று மஞ்சத்தில் சோர்வுடன் புரண்டு தவிக்கிறாள். தோழியின் ஆறுதலுரை அவளிடம் பாலைவன மழையாகப் பயனற்றுப் பொழிகிறது. தோழி தலைவனிடம் தூதாகப் போக ஒப்புக்கொள்கிறாள்.

குறமகள் வருகை அடுத்த காட்சியாக வருகிறது. அவளது குறுகுறுத்த விழிகளும் விறுவிறுப்பான மொழிகளும் தலைவியைக் கவர்கின்றன. குறமங்கை கோலெடுக்கிறாள். காதல் நங்கை கைவிரிக்கிறாள். கைரேகை பார்த்துக் கருத்துடன் குறிசொல்லும் குறமகள் நல்லது நடப்பதை நன்குணர்ந்து கூறுகிறாள். தலைவி நாணத்தால் தளைகவிழ நகை காட்டி மகிழ்கிறாள். அலைந்து வாழும் குறமகளின் உரையால் நிலைத்து வாழும் தலைவி மனம் மகிழ்ந்து பரிசுகள் அள்ளிக் குவித்து அருமையாக அவளை வழியனுப்புகிறாள். புதிராகத் தோன்றும் எதிர்காலம் இனிமையாக அமையும் என்ற குறிப்பினை அறியும் போது மனிதமனம் எவ்வாறு மகிழ்ந்து நெகிழ்கிறது என்பதற்குத் தலைவியின் தாராளத் தன்மை நல்ல சான்றாக விளங்குகிறது.

குறமகளைப் பிரிந்து வருந்தும் குறவன் அவளைத் தேடி. யலைகிறான். வேட்டைக் காட்சியின் பாட்டைக் கேட்கும் வாய்ப்பு இந்த இடத்தில் மக்களுக்குக் கிடைக்கிறது. குறமகள் பலவிதமான பரிசுகளுடன் நகைமுகங் காட்டி குறவன் முன் வருகிறாள். வியப்புடன் வினவும் குறவனுக்கு இன்பக் களிப்புடன் குறமகள் விடைகளை நயமாகக் கூறி நகைக்கிறாள். இருவரும் இணைந்து தங்கள் வாழ்விடம் நோக்கி விரைகின்றனர். அனைவருக்கும் நல்வாழ்வு காட்டிய குறவஞ்சி நாடகம் வாழ்த்துடன் நல்ல முடிவையடைகிறது.

நாட்டில் வாழ்வோரும் காட்டில் வாழ்வோரும் கலந்து உறவாடும் காட்சிகளைக் குறவஞ்சி நாடகம் கொண்டுள்ளது. வளமின்றி வாழ்வைத் தேடி அலையும் எளிய மக்களும் வளத்தி லிருந்து வாழ்வை நாடிக் கலங்கும் வசதியான மக்களும் நெருங்கிப் பழகும் காட்சிகளைப் புணைந்து காட்டுகிறது.

குறைந்த பாத்திரங்களைக் கொண்டு நிறைந்த கருத்துக் களைக் குறவஞ்சி நாடகம் மக்களுக்குத் தருகிறது. இன்பச் சுவையும் நகைச் சுவையும் மிகுதியாக விரவி எளிய மக்களை இனிமையாகக் கவர்ந்து விடுகின்றன. பல்வேறு காட்சிகள் நாடகத்துக்கு விறுவிறுப்பைக் கொடுப்பது உறுதி. இனிமை யான பாடல்கள் இசையோடு வெளிவருவது கலைச் சிறப்பாக அமையும். பலவிதமான பாடலமைப்புகள் குறவஞ்சியில் இருப் பதைச் சிறப்பாகக் கருதவேண்டும். அவை அனைத்தும் எளிய மக்களால் விரும்பப்படும் நாட்டுப்புறப் பாடல் அமைப்புகள். பாம்பாட்டி, பறை, குரவை, அம்மானை, பந்து, கழங்காடல், பகடி, பகவதி, சாழல், உந்தி, அவலிடி, குணாலை ஆகிய வகைப் பாடல்கள் குறவஞ்சியில் பாடப்படுவதை நாட்டுப்புற மக்கள் நன்கு சுவைத்திருப்பர்.

சிற்றூர்களில் எளிமையாகவே குறவஞ்சி நாடகங்கள் நடத் தப்பட்டிருக்கவேண்டும். பின்னர் புலவர்களின் இலக்கிய புலமையால் அவை மெருகு ஏற்றப்பட்டிருக்கும். இன்பக் கலையாக முளைத்த குறவஞ்சி நாடகம் தத்துவக் களஞ்சியமாக மாற்றப்பட்டு இன்று இலக்கியக் கருவூலமாக விளங்குகிறது. வாழ்வின் அடிப்படையில் தோன்றி அறிவின் பிடியில் வளர்ந்து இலக்கிய வடிவில் நிலைத்து தமிழுக்கு ஆக்கமாக விளங்கும் குறவஞ்சி நாடகம் முன்பு நாட்டுப்புற மக்களை மகிழ்வித்த இசைக் கூத்துக் கலையே என்பது உண்மை.

## நொண்டி நாடகம்

தமிழில் ஒரு தனித்த இயல்புடைய நாடக இனமாக விளங்கும் நொண்டி நாடகம் முன்பு நாட்டுப்புற மக்களை மகிழ்வித்த மேடைக் கலைகளில் ஒன்றாகும். 17, 18ஆம் நூற்றாண்டுகளில் நொண்டி நாடகம் பல இடங்களில் ஆடப் பெற்றுள்ளது. இதில் ஒரு நொண்டியின் அவல வாழ்வு அழகாகப் படம் பிடித்துக் காட்டப்படும். மக்கள் தவறு செய்யாது திருந்தி வாழவும் சமூகத்துடன் பொருந்தி வாழவும்

நொண்டி நாடகம் வழி காட்டுகிறது. இன்பச்சுவை, நகைச் சுவை மிகுந்து காணப்படுவதினால் மக்கள் இத்தகைய நாடகங் களைச் சிரித்து சிரித்து வயிறு குலுங்கக் கண்டு களித்திருப்பர்.

நொண்டி நாடகம் ஒரே ஒரு பாத்திரத்தை உடையது. அவன் காலிழந்த நொண்டியாக மேடையில் தோன்றுவான். தானே தன்னுடைய தீய வாழ்வைப் பாடலாகப் பாடி அவற்றிற்குத் தக்கவாறு ஆடுவான். அவன் நொண்டியாக நின்று ஆடுவது வேடிக்கையாகவும் வினோதமாகவும் இருக்கும். கால் வெட்டப்பட்டது போன்று ஒருகாலை மடித்துக்கட்டி அதன் மேல் சிவப்பு வண்ணம்பூசி ஒருவன் நடிப்பதாகக் கூறுகின்றனர். இத்தகைய ஆடல் நாடகம் கோயில் விழாக்களிலும் அரசன் முன்பும் சுவையாக நடைபெறும். பெரும்பாலும் ஒரு அரசன் அல்லது ஒரு கடவுள் இந்த நாடகத்தில் போற்றப்படுவதை இந்த நாடகத்தில் பார்க்கலாம்.

நொண்டி நாடகத்தின் பொருள் விளக்கம் ஒரு தீய இளைஞனின் வரலாறாக அமையும். நொண்டி அதனை விளக்கிப் பாடுவதை மக்கள் சுவைத்துக் காண்பர். ஒரு மணமாகாத வாலிபர் தாய் தந்தையரின் அறிவுரைக்கு அடங்காது ஆணவம் கொண்டு வீட்டைவிட்டு வெளியேறிச் செல்கிறான். அவன் திருட்டுத் தொழிலில் ஈடுபட்டு பணம் திரட்டி வாழ்கிறான். காம நாட்டம் கொண்டு பரத்தையருடன் உறவு கொள்கிறான். கைப்பொருள் தீர்ந்து வறியவனாகித் துரத்தப்படுகிறான். தெருவில் நின்று பரத்தையரைப் பழித்துப் பேசுகிறான். தன்னை நொந்து கூறுகிறான். இன்னும் பணம் தேட விரும்புகிறான்.

ஒரு அரசனுடைய அரண்மனைக்குப் பதுங்கிச் சென்று மறைந்து கொள்கிறான். இரவில் அரசனின் குதிரையைக் களவாட முயலும்போது கையும் மெய்யுமாய் பிடிபடுகிறான். காவலர் அவனைத் திருட்டுக் குற்றம் சாட்டி அரசனுக்கு முன்னால் நிறுத்துகின்றனர். அரசன் வெகுண்டு நோக்கி அவனைக் கை வேறு கால் வேறாக வெட்டிவிடுமாறு ஆணை யிடுகிறான்.

ஆணை நிறைவேற்றப்படுகிறது. திருடன் வலி தாங்காது கூக்குரலிடுகிறான். இரங்குவாரின்றித் தவிக்கிறான். பெற்ற தாய் தந்தையரை நினைக்கிறான். இறைவனை வேண்டிப் பாடுகிறான். முன்பு செய்த தீய செயல்களை ஒவ்வொன்றாகக்

குறிப்பிட்டுக் கூறி வருந்துகிறான். இறைவனின் புகழைப் பாடிப் பாடிப் பணிகிறான். இரக்கவுரைகளாக இவை அமைகின்றன. இனிமேல் இவ்வாறு தவறுகள் செய்வதில்லை என்று கூறி இறையருளை மேலும் மேலும் வேண்டிக் கெஞ்சுகிறான்.

கடவுளின் அருளால் கை கால்களைத் திரும்பப் பெற்றுத் திருந்திய வாழ்வில் நிலைக்கிறான். இவ்வாறு நொண்டி நாடகம் முடிவடையும் இளைஞர்களிடம் சாதரணமாகக் காணப்படும், பெற்றோர் மதியாமை, வீட்டை விட்டு நீங்கள், திருட்டு, பரத்தையர் உறவு ஆகியவற்றை வலிமையாக நொண்டி நாடகம் கண்டித்துக் கூறுகிறது. இறையருளின் ஆற்றலை விளக்கி இறையுணர்வை ஊட்ட முயல்கிறது. சமுதாயச் சீர்கேடுகளைப் போக்கி இறையுணர்வை வளர்த்து மக்களுக்கு இன்பத்தைக் கொடுக்க வேண்டும் என்ற உயரிய நோக்கத்துடன் நொண்டி நாடகம் மக்கள் முன்னால் நடிக்கப் பெறுகிறது.

சமயத்துக்குத் தக்க கருத்துக்களும் தலைவனுக்குத் தகுந்த விளக்கங்களும் நொண்டி நாடகங்களில் இடம் பெறுவதைக் காணலாம். சீதக்காதி நொண்டி நாடகம் சீதக்காதி மன்னனைப் புகழ்த்து இஸ்லாம் சமயக் கருத்துக்களை விளக்குகிறது, திருச்செந்தூர் நொண்டி நாடகம் முருகக் கடவுளைப் புகழ்ந்து பாடிப் பரவுகிறது. ஞான நொண்டி நாடகம் கிருஸ்தவச் சமயக் கருத்துக்களை விளக்க முயல்கிறது. இவற்றை மக்கள் காணும் போது திருந்தும் வழியைக் காண முயல்வர். இறையுணர்வுடன் தீயதைச் செய்யாது திருந்துவர். தண்டனையைக் கடுமையாகக் கொடுப்பதால் தீமை செய்ய பெரிதும் அஞ்சுவர்.

பரந்த வெளிகளில் இந்த நாடகங்கள் நடத்தப்பட்டுள்ளன. கோயில் விழாவின்போது இது பெரும்பாலும் ஆடப்பெற்றுள்ளதாகக் கூறுவர். பல சமயத்தவர் இந்த நாடக அமைப்பைப் பின்பற்றி நூலெழுதியதிலிருந்து நொண்டி நாடகத்தின் உண்மையான சிறப்பு புலனாகும். மக்களின் சுவைத் தன்மை புதுமைகளை வேண்டுவதினால் இக்கலை இன்று வழக்கொழிந்து காணப்படுகிறது. நொண்டி நாடகம் கால உணர்வில் கரைந்து மறைந்த கலையானாலும் அது ஒரு காலத்தில் மக்களை நல்ல முறையில் மகிழ்வித்து நல்வாழ்வுக்கு வழிகாட்டிய ஒரு வகை நாடகக் கலை என்பதை யாராலும் மறுக்க முடியாது.

## குளுவ நாடகம்

குளுவ நாடகம் இராமநாதபுரம், நெல்லை மாவட்டங்களின் சில பகுதிகளில் நாட்டுப்புறக் கலையமைப்பில் நடத்தப்பெற்ற ஒருவகை நாடக இனமாகும். இது 18 ஆம் நூற்றாண்டில் சிறப்பாக நடிக்கப்பெற்றுள்ளது. பல குளுவ நாடகப் பாடல்களை இன்றும் சிலர் வாய்மொழியாகப் பாடி மகிழ்வதைப் பார்த்தால் முன்பு அவற்றிற்கு நல்ல மதிப்பு இருந்துள்ளதாகத் தெரிகிறது.

பறவை வேட்டையாடும் மலைவாழ் குளுவரின் தொழிலை விளக்கிக் காட்டுவது குளுவநாடகம். ஒரு மானிடத் தலைவனையோ அல்லது இறைவனையோ புகழ்ந்து பாடும் குறிப்புகளுடன் நாடகப் பாடல்கள் புனையப்படும். இத்தகைய நாடகங்களைக் குறுநில மன்னர் அல்லது வள்ளல் முன்பு நடித்துக்காட்டிப் பரிசு பெறுவர். விழாக்களின்போது நடித்து மக்களை மகிழ்விப்பதும் உண்டு. குளுவன், சிங்கி, சிங்கன் ஆகிய மூன்று பாத்திரங்களைக் கொண்ட மிகச் சிறிய நாடகமாகவே இது காணப்படுகிறது. இதை நடத்துவது மிகவும் எளிது. பாட்டும் நடிப்பும் சுவையுடன் அமைவது.

குளுவ நாடகத்தில் இறை வாழ்த்தும் அவையோர் பணிதலும் விரிவாகக் காணப்படுகிறது. கொடை வழங்கும் வள்ளலை ஓர் அகவல் பாட்டால் நெடுநேரம் பாடிப்புகழ்வது வழக்கம். பின்னர் வேடப் புனைவுடன் பறவை வேட்டையாடும் கண்ணி, சுண்டு வில் முதலிய கருவிகளுடன் அவைமுன் தோன்றித் தன்னை அறிமுகப் படுத்தும் பாடலைப் பாடி ஆடுவான். அவனைத் தொடர்ந்து சிங்கன் வந்து பாடியாடுவான். இருவரும் தங்களுடைய சித்து வேலைகள் மருத்துவத் திறமைகள் பற்றி விளக்கிப் பாடுவர். நீர்நிலைகள் நிறைந்த வயல் வெளிப் பரப்புக்கு வருகிறார்கள். பறவைகள் கூட்டம் கூட்டமாகப் பறந்து வருகின்றன. அவற்றில் ஒலிகள் பலவகையாகக் கேட்கின்றன. அவற்றைப் பிடிக்கும் முயற்சிகளைக் குளுவனும் சிங்கனும் செய்கிறார்கள்.

வலை விரிக்கப்படுகின்றன. கண்ணிகள் ஊன்றப்படுகின்றன. அவற்றில் இரையைத் தூவி இருவரும் பதுங்கி நிற்கின்றனர். பறவைகள் பலவாறு பறந்து வலையில் சிக்கிக் கொள்கின்றன. அவற்றை வகை பிரித்து தொகையெண்ணிச் சேர்த்துக் காட்டுகிறார்கள். காவடியில் தூக்கிச் சுமக்கிறார்கள்.

இறைவருக்கும், மன்னருக்கும், மற்றவர்களுக்கும் தகுதிக்குத் தக்கவாறு பங்கிட்டுக் கொடுத்து மீதியைத் தங்களுக்காக ஒதுக்கி மலைக்குச் செல்கிறார்கள்.

சிங்கன் சிங்கியைத் தேடியலைகிறான். சிங்கி குறி சொல்லிய தற்காகப் பெற்ற பரிசுகளுடன் திரும்பி வருகிறாள். அவளைக் கண்டதும் சிங்கன் மகிழ்ச்சியால் துள்ளிக் குதிக்கிறான். இருவரும் அன்புடன் இணைந்து இன்பமாகப் பாடுகிறார்கள். அனைவரையும் நீடுவாழ வாழ்த்தி அரங்கத்தை விட்டு நீங்குகிறார்கள். குளுவ நாடகம் முடிகிறது.

வேட்டையாடும் தொழிலையும் எளிய மலைவாழ் மக்களின் இனிய வாழ்வையும் விளக்கி குறிப்பிட்ட தெய்வத்தையோ வள்ளலையோ வாழ்த்துவதற்காகக் குளுவ நாடக அமைப்பு தோற்றுவிக்கப் பெற்றுள்ளது. குறவஞ்சியின் பிற்பகுதியின் வளர்ச்சியாக இதனைக் கூறலாம். இது நாடகப் பண்புகளை மிகுதியாகக் கொண்டுள்ளது.

சிங்கன் அரங்கில் தோன்றி,

சிங்கனும் நானே கொடிக்குரச்
சிங்கனும் நானே — சிங்கனும் நானே'

என்று பாடுவதில் இசைக்கும் ஆடலுக்கும் ஏற்ற அமைப்பு இருப்பதைக் காணலாம். குளுவனுடைய தோற்றப் பொலிவிலே அவனைச் சிறப்பித்துக் கூறுவதற்குப் போதுமானது.

'சுண்டு வில்லம்பு துலங்கு கூனளுவாள்
மண்டலம் புகழ்சிங் கனும்வரு கின்றான்
அரக்குடன் கள்ளும் மிகுதியாய் குடித்து

'வெறிக்கெனப் பார்த்து முறுக்கிய மீசையுடன்' குளுவன் வருகிறான். அவனுடைய வீரத் தோற்றம் இப்பாடலில் விளக்கப்படுகிறது. இவ்வாறு பலப்பலப் பாடல்களைக் குளுவ நாடகத்தில் பார்த்துப் பார்த்துச் சுவைக்கலாம். இத்தகைய இனிய கலை காலத்தால் மங்கி மறைந்து விட்டது. ஆயினும் சுவடிகளில் தங்கி இன்று அச்சு வாகனமேறி நமது கைகளில் நூல் வடிவில் தவழ்கிறது.

## நாட்டார் நாடகம் (தெருக்கூத்து)

மேடை அலங்காரம் இன்றி தெருவில் ஒரு வெள்ளைத் துணியை இருவர் தூக்கிப் பிடிக்கவும் தீப்பந்தங்கள் ஒளி காட்டவும் ஆடை ஒப்பனை அதிகம் இல்லாத நடிகர் முன்னால் வந்து ஆடியும் பாடியும் தெருக்களில் நடித்துக் காட்டும் நாடகங் களை மக்கள் 'தெருக் கூத்து' என்று அழைத்தனர். இசைப் பாடல்களால் ஆன இத்தகைய நாடகங்களைப் பத்தொன்பதாம் நூற்றாண்டில் மக்கள் மிகுதியாகக் கண்டு களித்தனர். வரவர சிறுசிறு பகுதிகளாய் உரைநடையில் உரையாடல் நடைபெறத் தொடங்கியது. மேடையின்றித் தெருக்களில் நடத்தப் பெற்ற நாடகங்கள் பரந்தவெளியில் கட்டப்பெற்றக் கீற்றுக் கொட்டகைகளில் நடைபெறலாயின். ஒன்றிரண்டு காட்சி மாற்றுத் திரைகள் தொங்கவிடப்பட்டன. முறையற்ற ஆடல்கள் நிறைந்த நாடகம் உணர்வுடைய நடிப்புகளால் காட்டப்படும் நிலைக்கு வளர்ந்தது. இத்தகைய நாடகங்கள் தெருக்களை விட்டு மேடைக்கு வந்தாலும் நாட்டுப்புற மக்களையே மிகவும் கவர்ந்து ஈர்த்தன. ஆகையினால் இத்தகைய நாடகங்களை மக்களுக்கு உரிய நாடகங்கள் என்னும் சிறப்புப் பொருள் தருமாறு 'நாட்டார் நாடகங்கள்' என்று உயர்வாக அழைப்பதே பொருத்தமாகவும் சிறப்பாகவும் உள்ளது.

நாட்டுப்புற மக்கள் கடின உழைப்பும் குறைந்த ஊதியமும் உடையவர்கள். வருமானத்துக்குத் தக்கவாறு எளிமையாகவும் மலிவாகவும் களியாட்டங்கள் நடத்தித் தங்கள் உழைப்பின் களைப்பைக் களைந்து இன்புற விரும்பினர். நாட்டார் நாடகங் கள் எளிதாக நடத்தப் பெறுவன. செலவும் குறைவு. ஊரார் கூடி அனைத்துச் செலவுகளையும் மொத்தமாக ஏற்று பரந்த வெளிக் கலையாகவே இத்தகைய நாடகங்களை விழா நாட்களில் நடத்தி வந்துள்ளனர். பல ஊர்களில் இன்றும் அவற்றைக் 'கூத்து' என்ற பெயரால்தான் நடத்துகின்றனர். உண்மையில் இவையே நவீன நாடகங்களின் தாயாக விளங்குகின்றன. புதுமைப் பொலிவில் நாட்டார் நாடகங்களை இகழ்ந்து ஒதுக்குவது பெற்ற தாயை இகழ்வதற்கு ஒப்பாகும். இன்று அரசும், நகரமும் நாட்டார் நாடகங்களுக்கு உரிய மதிப்பையும் பெருமையையும் கொடுப்பது மகிழ்வைத் தரும் கலைச் சேவையே ஆகும்.

மேடை ஒப்பனையும் ஆடை ஒப்புடைமையும் அதிகம் இல்லாத நாட்டார் 'நாடகங்கள் நடிப்பை விடவும் பாடலுக்கே

சிறப்பு கொடுத்துள்ளன. உச்சக் குரலில் இனிய பண்ணின் இயல்பாகப் பாடும் பாடகர்களே நாடக மேடைமேறி நடிக்க முடியும். 'இரவல் குரல்' என்றே பேச்சுக்கே அங்கு இடமில்லை. பீடுயர் தோற்றப் பொலிவுடையவர்கள் நடிப்பதையே மக்கள் விரும்பினர் பெரும்பாலும் எல்லா நாடகங்களிலும் அரசனும் அரசியும் முக்கிய பாத்திரங்களாக வருவர் ஆகையினால் நாடகத் தலைவனையும் தலைவியையும் முறையே 'அயன் ராஜபார்ட், அயன் ஸ்திரிபார்ட்' என்று காரணம் சிறக்க அழைத்தனர். மிகுதியாது பாடலும் மிகையான நடிப்பும் அவர்களுடைய தாகவே இருக்கும். நகையும் அழுகையும் ஆரவாரமாகத் தோன்றும். சிரிப்பு மூட்டுவதற்காகத் தனியான பாத்திரங்களும் கதையுடன் இணைந்தும் இணையாதும் பல துணை நிகழ்ச்சிகளும் இடையில் நுழைக்கப்படும்.

புராணக்கதைகளே பெரும்பாலும் நடிக்கப்படும். ஆகையினால் கதை அனைவருக்கும் நன்றாகத் தெரிந்ததாகவே இருக்கும். அதை எப்படி நடித்தாலும் மக்கள் புரிந்து கொள்வர் உரக்கப் பாடுவதிலும் சிறக்க நடிப்பதிலும் தான் நாடகத்தின் வெற்றி அமைந்திருக்கும். ஒரு ஊரில் நாடகம் நடக்கும் என்றால் பல ஊர் மக்கள் அங்கு வந்து கூடுவர். பல கல் தொலைவை கால் நடையாகக் கடப்பதற்கு அவர்கள் தயங்குவதே இல்லை. நாடகம் நடப்பதற்குப் பல மணி நேரத்துக்கு முன்பே அங்கு வந்து கூடுவர். பாயுடன் வந்து அமர்வதும் வழக்கம். பெரும்பாலும் இரவு பத்து மணிக்கு மேல்தான் நாடகம் தொடங்கும். பின் விடியவிடிய நடக்கும். மக்கள் தூங்காது இருக்க பல விதமான பொருட்களைக் கொண்டு வருவர் அவற்றில் முக்கியமானவை சீடைமுறுக்கு, கடலை; வெற்றிலை பாக்கு, பீடி முதலியன தூக்கம் வராமலிருக்கக் கண்ணில் வெங்காயத்தைப் பிழிந்து தடவிக் கொள்வதும் உண்டெனக் கூறுவர்.

நாட்டார் நாடகங்கள் தெருக் கூத்தாக நடைபெறுவதை ஆந்திர நாட்டு வீதி நாடகங்களுடன் ஒப்பிடலாம். கலை நுட்பம் குறைந்து காணப்பட்டாலும் மக்களுக்கு மகிழ்ச்சியளிப்பதில் குறைவுபடுவதில்லை. தெருக்கூத்தில் நடிகர் திரையை விலக்கிக்கொண்டு மக்களின் முன் தோன்றி தன்னை இன்ன பாத்திரம் என்று அறிமுகப்படுத்திப் பாடுவர். பின் பலவாறு நடித்து ஆடுவார். கட்டியங்காரன் சிறிது வேடிக்கையாக அரங்கத்தில் தோன்றுவான். திரைக்குப் பின்னாலிருந்து ஆடித் தன் முகத்தைக் காட்டுவதும் மறைப்பதுமாகச் சிறிது காலம்

கடத்துவான். இவ்வாறு கண்ணாமூச்சி ஆடியபின் திடீரெனத் திரையை விலக்கிக்கொண்டு முன்னால் வந்து வேடிக்கை விளையாட்டில் இறங்குவான். அவனுடைய வருகை ஒரு விறுவிறுப்பை மூட்டி மக்களைச் சுறுசுறுப்படையச் செய்யும்.

நடிகரின் பாடல்களை வரிக்குவரி பின்பாட்டுக்காரர் திரும்பத் திரும்பப் படிப்பர். மத்தளம், அர்மோனியம், கிஞ்சிரா முதலிய பின்பாட்டுக் கருவிகள் துணையாக இணைக்கப்படும். அரிதாரம், செந்தூரம், கரி ஆகியவற்றால் ஒப்பனை செய்வர். அத்திப்பாலால் மீசை, தாடி ஆகியவற்றை ஒட்டுவர். சிலசமயம் அவை ஒட்டகன்று தொங்கி மக்களின் கேலிக்கு நடிகர்களை ஆளாக்கி விடுவதும் உண்டு. நாட்டுப்புற நாடகங்களில் இது போன்ற நிகழ்ச்சிகள் மிகச் சாதாரணமாக நடக்கும்.

பல நாட்கள் தொடர்ந்து நடைபெறும் நாட்டார் நாடகங்க்ள் உண்டு. அவற்றில் முக்கியமாக அரிச்சந்திரன், பாரதம். இராமாயணம், பிரகலாதன் ஆகியவற்றைக் கூறலாம். சில நிகழ்ச்சிகளை நீண்ட நேரம் நடித்து நேரத்தைப் போக்குவர். வள்ளிக்கும் முருகனுக்கும் இடையிலுள்ள வாதம் ஒன்றரை மணி நேரம் நடக்குமாம். அந்தச் சமயங்களில் மக்கள் பாத்திரங்களை மறந்து நடிகர்களின் வாதத் திறமையைச் சுவைத்து மகிழ்வாராம். அதே மக்கள் கழுகாசலக் காட்சியில் முருகன் வரும்போது கற்பூரம் கொளுத்தி இறைவணக்கம் செய்வாராம். இருநிலை நாட்டுப்புற மக்களின் சுவை தன்மை அமைவதைக் காணலாம். புராணக்கதையில் தேசியப் பாடலைக் கேட்டுக் களிப்பதையும் பார்க்கலாம். இருநடிகர் எதிரும் புதிருமாகத் 'தர்க்கப்பாட்டு'ப் பாடி மக்களைக் கவர்வதும் உண்டு. எந்த நிலையிலும் மெலிவைக் காண நாட்டுப்புற மக்கள் விரும்புவதில்லை. பொருந்தினாலும் பொருந்தாவிட்டாலும் மேடையில் நடிகர்கள் ஆற்றலைக் காட்டித் தோற்றப் பொலிவுடன் நிமிர வேண்டும். எப்படியும் வென்றால் புகழப்படுவர்.

கதைப் பொருத்தமோ கலை ஒழுங்கோ அங்கு கருதப் பட்டதாகத் தோன்றவில்லை. எதிலும் முனைப்புடன் தோன்றி மிடுக்குடன் முன்னேறினால் பாராட்டப்படுவது வழக்கமாக உள்ளது. மக்கள் வியப்பாக இருப்பதை விரும்பி ஏற்பர். நல்லவர்களின் வெற்றிக்கு வேண்டுவர் தீயவர்களின் அழிவை வரவேற்பர். நல்லவர் வருந்தும்போது அவர்களுடன் வருந்தி யழுவர். சந்திரமதிக்காகவும் நல்லதங்காளுக்காகவும் துயருற்று

அழாத பெண்களே இருந்திருக்க மாட்டார்கள். இதிலிருந்து நாடகக் காட்சிகளை உண்மையான உணர்வுடன் சுவைக்கும் கலைத்தன்மை நாட்டுப்புற மக்களுக்கு இருந்துள்ளதை அறியலாம்.

ஒருநாள் நாடகங்களில் பாத்திரங்கள் பொதுவாகத் தொடக்க முதல் இறுதிவரை ஒரே விதமான ஆடை அணிகளையே அணிந்து இருப்பர். இராணியாக நடிப்பவர் சரிகையுடன் தைத்த பட்டுப் புடவையும் மற்றவர்கள் நூல் புடவையும் கட்டியிருப்பர். ஜிகினா, நாகத்தகடு, பாசிப்பவளம் ஆகியவற்றால் அணிகளைச் செய்திருப்பர். மேலிடப் பெண் பாத்திரங்கள் முன்கொசுவம் வைத்து ஆடை கட்டுவர். இதற்குப் 'பாப்பாரக் கட்டு' என்று பெயர் கூறுவர். கொண்டையில் பூ வைத்து 'பிச்சோடா' முடிப்பு போட்டிருப்பர். இதை 'வாழைப்பூ கொண்டை' என்றும் கூறுவர். ஏவல் பெண் பாத்திரங்கள் சந்துக் கொசுவம் வைத்துச் சேலை கட்டியிருப்பர். இதற்குச் 'சும்மாக் கட்டு' என்று பெயர். தலைமுடியை வாரி அள்ளிக் கட்டியிருப்பர். இத்தகைய வேறுபாடுகளினால் பாத்திர ஏற்றத் தாழ்வை மக்கள் கண்டு உணர்வர்.

இராசபார்ட் நடிகர் சரிகையுடைய நீண்ட மேலாடை, அட்டையில் செய்யப்பட்ட கிரீடம் மேலாக வளைந்துள்ள செருப்பு, சரிகை வேட்டி ஆகியவற்றை அணிந்து விளக்கமுடன் தோன்றுவர். மற்றவர்கள் சரிகை குறைந்த ஆடைகளையும், நகைச்சுவை பாத்திரம் வேடிக்கையான பலவண்ண ஆடைகளையும் குஞ்சமுடைய தொப்பியையும் அணிந்து வருவார்கள். பாத்திரத் தகுதிகளை ஆடையணிகளினால் அறிய இத்தகைய மாற்றங்கள் உதவுகின்றன.

தென் ஆர்க்காடு மாவட்டத்தில் வட பாங்கு தென்பாங்கு என இருவிதமாகத் தெருக்கூத்து நடத்தப்படுகிறது. இவற்றைத் தெற்கத்தி, வடக்கத்தி நாடகங்கள் என்றும் கூறுவர். இவற்றைச் ஸ்ரீலங்காவிலுள்ள மட்டக்களப்பில் நடைபெறும் வடமோடி, தென்மோடி ஆகிய நாட்டுக் கூத்துக்களுடன் ஒப்பிட்டுக் காணலாம்.

தென் ஆர்க்காட்டிலுள்ள தெற்கத்தி நாடகங்கள் இராமாயணக் கதைகளை மிகுதியாகக் கொண்டவை. அரிச்சந்திரன் போன்றவையும் நடக்கும்- வடக்கத்தி நாடகங்கள் பாரதக் கதைகளை அதிகமாகக் கொண்டவை. புராணக் கதைகள் மிகக் குறைவாகவே நடக்கும்.

இருவகைக் கூத்துகளிலும் ஒரே மாதிரி அமைப்புகள் மிகுதியாக உள்ளன. கட்டை கட்டி ஆடுதல், கட்டாமல் ஆடுதல் என இருவகைத் தெருக்கூத்துகள் நடைபெறுகின்றன. கட்டை கட்டி ஆடுதல், கட்டாமல் ஆடுதல் என இருவகைத் தெருக் கூத்துகள் நடைபெறுகின்றன. கட்டை கட்டி ஆடுதல் என்பது புஜக் கட்டை, மார்பதக்கம், காதுக் கட்டை, கிரீடம் முதலிய அணிகளைக் குறிக்கும். இத்தகைய அணிகள் கனமில்லாத கலியாண முருங்கை மரத்தால் செய்யப் பெற்றிருக்கும். இதை அவர்களே அடிக்கடிப் பாடும் ஒரு பாடலால் அறியலாம்.

'கண்ணால முருங்கைக் கட்டை
கண்ணாடி பளபளக்க......'

என்று பாடுவர்.

தெருக்கூத்தில் சண்டை, கொலை முதலிய காட்சிகள் மிகக் குறைவு. அவற்றைப் பாடலாகப் பாடி விளக்கி விடுவர். இருவரும் வில்லை ஏந்திச் சண்டையிடுவதற்காக வருவர். ஆனால் அம்புகள் பாய்வது அரிது ஆயினும் மும்முரமான போர் நடக்கும் உணர்வை பாடலாலும் சாடலாலும் காட்டி விடுவர். அது தான் அவர்களுடைய கலைத்திறன்.

தெருக் கூத்தை வழிபாட்டுக் கடனாக மக்கள் இன்றும் நடத்தி வருவதைப் பல இடங்களில் காணமுடிகிறது. மழையை வேண்டுவோர் விராட பருவத்தையும் மணம் விரும்புவோர் மீனாட்சி கல்யாணத்தையும் பிள்ளைப் பேறு வேண்டுவோர் சாவித்திரி சத்தியவான் நடத்துவதையும் வேண்டுதலாக நடத்தியுள்ளனர். உண்மையான நம்பிக்கையுடன் நாட்டார் நாடகங்களை மக்கள் நடத்தியுள்ளனர் என்பதை உணரலாம்.

மேனாட்டு நாடகக் கல்வி தெருக்கூத்து மரபை மாற்றியமைக்க வழிமுறை கண்டது. அறிஞர் பலரும் முயன்றனர். நாடகம் மாற்றமுடன் நகரங்களில் புகுந்தது. ஆயினும் பழைய மரபில்லாத நாடகங்களை நாட்டுப்புற மக்கள் பற்றுடன் விரும்பியதாகத் தெரியவில்லை. மதுரை உடையப்பா, புரசைத் தம்பிரான், பில்லமங்கலம் மணிமுத்துப் பாகவதர் போன்றோர் நாட்டார் நாடக மரபைக் காத்து வருகின்றனர். புரசைத் தம்பிரான் அண்மையில் காலமாகி விட்டாலும் அவருடைய மாணவர் அவருடைய கலைமரபைக் காக்கத் தவறவில்லை. தமிழ்நாட்டு அரசு சார்பில் இயல் இசை நாடக மன்றம் நல்ல முறையில் நாட்டுப்புற நாடகக் கலைக்கு ஆக்கமும் ஊக்கமும் தந்து வளர்த்து வருகிறது,

